
# தேன்மொழி

லதாமுகுந்தன்



CPL613041

# தேன்மொழி

லதா முகுந்தன்

செங்கைப் பதிப்பகம்
(வெள்ளைத் தாள்களில் விளக்கேற்றி வைப்பவர்கள்)
349/166, அண்ணா சாலை,
செங்கல்பட்டு - 603 002.

656/06
07

61304

894.8113
LAT


## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : தேன்மொழி |
| ஆசிரியர் | : லதா முகுந்தன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : பிப்ரவரி, 2006 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : 216 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : செங்கைப் பதிப்பகம் 349/166, அண்ணா சாலை, செங்கல்பட்டு - 603 002. |

**விலை: ரூ.60**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் சென்னை-18. ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ் சென்னை-14. |


மார் 2015
சென்னை-600 008

## பதிப்புரை

அன்புள்ள வாசக நண்பர்களே,

வணக்கம். இந்த 'தேன்மொழி' என்னும் நாவலின் மூலம் நானும், லதா முகுந்தன் அவர்களும் உங்களைச் சந்திக்கிறோம். இந்தச் சந்திப்பு நிச்சயமாக இனிமையான சந்திப்பாகத்தான் திகழும் என்பதில் ஐயமில்லை.

திருமதி லதா முகுந்தன் அவர்கள் சமீபத்திய பெண் எழுத்தாளர்களில் வேகமாக வளர்ந்து வருபவர். செங்கைப் பதிப்பகத்தின் 26-ஆவது வெளியீடு 'தேன்மொழி'. இதில், யதார்த்தங்கள் கதா பாத்திரங்கள் மூலம் கவனமாகக் கையாளப்பட்டிருக்கின்றன. நமக்கு அருகில் நிகழும் நிகழ்வுகளைப் பார்ப்பது போன்ற ஓர் உணர்வு.

செங்கைப் பதிப்பகம் தொடர்ந்து நல்ல நூல்களை மட்டுமே வெளியிட்டு வருகிறது. இதற்கு முழு முதற் காரணமே வாசகர்களாகிய நீங்கள்தான்.

எங்களைப் பொறுத்தமட்டில் நாங்கள் வெள்ளைத் தாள்களில் விளக்கேற்றி வைக்கிறோம். அந்த வெளிச்சம் நிச்சயமாக உங்கள் வாழ்க்கைக்கு உதவும்.

புதிய... புதிய... நூல்களுடன் மீண்டும்... மீண்டும்... சந்திப்போம்.

அன்புடன்

**சொர்ணவல்லி சோலையப்பன்**
உரிமையாளர்
செங்கைப் பதிப்பகம்
(வெள்ளைத் தாள்களில் விளக்கேற்றி வைப்பவர்கள்)



# தேன்மொழி

# தேன்மொழி



## 1

"தேனு... ஏய் தேனு.... தேன்மொழி" அம்மா செல்வி நீட்டி முழக்கி கூப்பிடுகிறாள். தேன்மொழி என்கிற தேன் பிளஸ்டூ முடித்து விட்டு வீட்டிலிருக்கும் பத்தொன்பது வயது அழகுப் புயல். டிவியில் ஒரு படத்தில் மூழ்கி இருக்கிறாள். நடு நடுவில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே பார்த்துக் கொண்டு இருக்கிறாள். அம்மா கூப்பிடுவது எதுவுமே அவள் காதில் விழவில்லை. டிவியில் உள்ள படத்தின் கதாநாயகி பாவம் எத்தனை வித கஷ்டப்படுகிறாள். தன்னை விட ஒரு இரண்டு வயது பெரியவளாக இருப்பாளா பாவம். எத்தனை கஷ்டம். இத்தனை தூரம் லவ் பண்ணிதானே கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறான். அப்படியும் அவளை ஏன் சரியாக வைத்துக் கொள்ளவில்லை.

கணவனை நினைத்து நினைத்து சினிமாவின் நாயகி அழ, தேன்மொழியும் சேர்ந்து அழுகிறாள். அம்மா ஐந்து முறை கூப்பிட்டும் காதில் விழவில்லை.

அம்மா கோபத்தோடு உள்ளே நுழைந்தவள் சட்டென்று டிவியை அணைக்கிறாள்.

''ஏண்டி தேனு... தேனுன்னு கத்திகிட்டே இருக்கேன். உக்காந்து டிவிலே உக்காந்துட்டு இருக்கியா? இப்படி உக்காந்துட்டா போற இடத்துலே எப்படி குப்பை கொட்டுவே.''

''ஏன் டிவியை அணைச்சீங்க போடுங்க,'' கத்துகிறாள் தேனு.

''எதுக்குடி போடணும். கல்யாணம் ஆகப் போற பொண்ணுக்கு கொஞ்சம் கூட பொறுப்பு வேண்டாமா? டிவிலே உக்காந்துட்டா எல்லாம் சரியாயிடுமா?''

''நீங்க டிவியைப் போடுங்க.'' சற்று கத்தியபடி தேன் மொழி இருக்க,

''உதைப்பேன் கழுதை. இன்னிக்கு வேலை செய்யற புவனேஸ்வரி வரலை. சாமானை நான் தேச்சு வைக்கிறேன் கழுவிப் போடு.''

''என்னால முடியாது.''

''அறைஞ்சேன்னா. எழுந்து வா.''

''மாட்டேன்'' என்றவள் கண்கள் கலங்கிப் போய் பிழிய பிழிய அழ ஆரம்பிக்கிறாள்.

செல்வி முகத்தை தோள் பட்டையில் இடித்துக் கொண்டு உள்ளே போகிறாள். தேன்மொழி செல்விக்கு ஒரே பெண் தான். வேறு வாரிசுகள் கிடையாது. அதனால்' பெண்ணை மிகுந்த செல்லம் கொடுத்துதான் வளர்த்துக் கொண்டு வருகிறாள் இருந்தாலும் ஒரு ஆத்திர



அவசரத்திற்கு கூட வேலை செய்யாமல் என்ன பெண் இது. பல நாட்கள் படும் சலிப்பு தான்.

இன்று நடந்த விவாதம் போல் என்றாவது விவாதம் நடந்து விட்டால் போதும் அவ்வளவு தான் ஒரு வாரம் ஆனாலும் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு இருப்பாள். அம்மா திட்டியதை நினைத்து அழுது கொண்டே இருப்பாள்.

ஒரு வாரம் கழித்து செல்வியின் கணவர் பரசு, தேனுவின் தந்தைதான் தேனுவை சமாதானப்படுத்த முடியும். பெண்ணைக் கடிந்ததிற்காக கணவன் தன்னை தான் கோபித்துக் கொள்வான். செல்விக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. தனக்கும் நாற்பது வயதிற்கு மேல் ஆகிவிட்டது. முன்பு செய்தது போல் விறுவிறுப் பாகவோ, சுறுசுறுப்பாகவோ வேலைகளை செய்ய முடிவதில்லை. ஒரே ஒரு நாள் வேலை செய்பவள் வரவில்லை என்றால், கூட செய்தால் என்ன குறைந்து போய்விடும்?

சட்டென்று இறந்து போன தன் மாமியார் சிரிப்பது போல் அவளுக்குத் தோன்றியது. ''வேணாம் செல்வி, பொட்டைப் பிள்ளை இந்த மாதிரி வளர்க்காதே பின்னாடி நீ வருத்தப்படப் போறே?''

''ஆரம்பிச்சிடுச்சு. மீதி மருமக வீட்டிலே போய் பேசறது தானே. இங்க தான் எல்லாம் நடக்கும்.'' திருப்பி திட்டி இருக்கிறாள், எரிச்சல் பட்டிருக்கிறாள். கணவனும் அம்மாவின் மேல் வள்ளென்று விழுந்திருக்கிறான். இப்போது அது நினைவுக்கு வந்த போது மாமியார்

மேலிருந்து சன்னமாக சிரிப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. 'அவர் சொன்னதைக் கேட்காமல் போய் விட்டோம் தவறு தான்.' மனம் அடித்துக் கொண்டது. எரிச்சலோடு வேலைகளைச் செய்கிறாள்.

"ஹாய் ஆன்ட்டி என்ன இது? இந்த வயசான காலத்தில் ஏன் இத்தனை கஷ்டம்?" அவளுடைய மூத்த அண்ணன் மகன் சிவா வந்து நிற்கிறான்.

செல்விக்கு ஒரு அக்கா, ஒரு தங்கை, இரண்டு அண்ணன்கள், ஒரு தம்பி என்று உடன் பிறப்புகள். இரண்டு அண்ணன்கள், ஒரு தம்பி எல்லோருக்கும் தலா ஒரு ஆண், ஒரு பெண் என்று குழந்தைகள் உண்டு. இந்த காலமே சுய நல வசப்பட்ட காலம். ஏழைக்கோ, பணக்காரனுக்கோ ஒரு கால கட்டத்திற்கு மேல் கூடப் பிறந்தவர்களின் சக வாசம அழிந்து தான் போய் விடுகிறது. சிறு வயதில் தான் அண்ணன், அக்காள், தங்கை என்ற உறவுகள். ஆனால் வளர வளர தான், தனது குடும்பம் என்ற நினைப்பில் போக்குவரத்தும் குறைந்து போய் ஒருவர் முகத்தைக் கூட மற்றொருவர் பார்ப்ப தில்லை. வளர்ந்த பின் உறவுகள் வெள்ள காலத்தில் இருக்கும் பாலம் போல் உடைந்து சிதைந்து உருத் தெரியாமல் போய் விடுகின்றது. இங்கேயும் செல்விக்கு இரண்டு அண்ணன் மார்களிடமும், தம்பியுடன் மட்டும் தான் பேச்சு. அக்கா, தங்கையுடன் பேச்சே வைத்துக் கொள்வதில்லை. எல்லாமே தான் என்ற அகம் பொறாமையால் விளைந்த விளைவு தான்.

மற்றவரைக் கொடுத்தது போல் செல்வியையும் சாதாரண இடத்தில் தான் கொடுத்தார் அவளின் தந்தை.



ஆனால் செல்வியின் கணவர் புத்திசாலி. பாத்திர பிசினஸ், துணி பிசினஸ் என்று செய்து பெரும் பணம் சம்பாதித்து விட்டார். மலிவாக கிடைத்த இடங்களில் நிலங்களை வாங்கிப் போட்டு, பெரிய வீடு கட்டி வங்கியில் அதிக பணம் வைத்து ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்டு நகரத்தில் அவர் இன்று மிகப் பெரிய மனிதர். அவர்களுக்கு ரொம்ப வருடங்கள் குழந்தை இல்லாமல் நேர்ந்து கொண்டு ஒரு பெண் குழந்தை பிறந்தது. பிறந்த பெண் குழந்தை மாநிறமாக இருந்தாலும், மிக மிகக் களையோடு, அழகோடு இருந்தது. படித்தவரை நன்றாகவே படித்தாள். ப்ளஸ் டூ வரை முதல் பத்து இடங்களுக்குள் வந்து விடுவாள். அம்மாவிடம் மட்டும் தான் சற்று அடம்பண்ணுவது அழுவது எல்லாம். மற்றவர்களின் முன்னிலையில் மிக மிக டீசன்டாக இருப்பாள். தானாக முன் வந்து வேலையை செய்ய மாட்டாளே தவிர எந்த வேலை செய்தாலும் மிக, மிக நேர்த்தியோடு செய்வாள். கோலம் போட்டால் ஒவ்வொரு புள்ளிகளும், ஒவ்வொரு இழை களும் அத்தனை நேர்த்தியாக, பிரிண்ட் அடிக்கப்பட்ட கோலம் போல் இருக்கும். பெரிய, பெரிய கோலங்கள் சிக்கலான கோலங்களையும் போட்டுவிடுவாள். வித விதமான தலை அலங்காரத்தை செய்வாள். அம்மா விற்கே பத்து, பதினைந்து விதமான கொண்டைகளைப் போட்டிருக்கிறாள். தெரிந்தவர்களோ, நண்பிகளோ, யார் வீட்டு விசேஷம் என்றாலும் அழகாக மேக்கப் போடு வாள். இதற்கெல்லாம் எந்த வித டிரெய்னிங்கும் அவள் எடுத்துக் கொள்ளவில்லை. எல்லாவற்றையுமே புத்தகங் களை படித்து கற்றுக் கொண்டது தான்.

சமையல் வேலைகளில் தேன்மொழியை செல்வி விடவே மாட்டாள். இருந்தும் புத்தகங்களைப் படித்து புதிது புதிதாக செய்வாள் தேன்மொழி. என்றாவது செல்விக்கு உடல் நிலை சரியில்லை என்றால் தேன் மொழி சமைப்பாள். வாசனை ஊரைக் கூட்டி விடும்.

''அ....ப்....பா இன்னிக்கொரு நாளாவது நல்ல சாப்பாடு சாப்பிடுகிறேன்.'' என்பார் அவளின் தந்தை. இந்த திறமைகள் மட்டுமல்ல மிக, மிக பெருந் தன்மையான மனதுடையவள் தேன்மொழி. யாராவது துன்பப்படுகிறார்கள் என்று தெரிந்தால் விரோதிகளாக இருந்தால் கூட வலியப் போய் உதவி செய்யும் குணம், யாரைப் பற்றியும் தப்பாக பேசத் தெரியாத குணம். இப்படி இருக்கும் ஒரு பெண் குழந்தையும் மிக மிக நன்றாகப் பிறந்ததிலும், எக்கச்சக்க செல்வத்துக்கு வாரி சாக இருப்பதும் செல்வியின் சகோதரிகளுக்கு வயித் தெரிச்சலைத் தான் உண்டு பண்ணியது. அக்காவும் தங்கையும் சேர்ந்து ஒவ்வொரு இடத்திலும் செல்வியை அசிங்கப் படுத்தி , கேவலப்படுத்தி அது போதாதென்று எந்த ஒரு சின்ன விஷயத்தையும் பெரிய விவாத மேடை யாக்கி பேசி அதில் செல்வியோடு சண்டை போட்டு, செல்விக்கு அலுத்தே போனது. அக்கா, தங்கையின் உறவை முறித்துக் கொண்டே விட்டாள்.

ஆனால் சகோதரர்களுக்கு இந்த பொச்சரிப்பு, பொறாமையை விட இருக்கும் ஒரு தங்கை மகளை தன் வீட்டு மருமகளாக்கி விட்டால் என்ற நினைப்பு தான். அது தான் மூன்று சகோதரர்களும், அவர்களின் வாரிசுகளும்



நேரம் கிடைக்கும் போதெல்லாம் இவளின் வீட்டுக்கு வந்து ஜாக்பாட் யாருக்கு விழும் என்று காத்து தான் கிடக்கின்றனர்.

செல்வியின் எண்ண ஓட்டம் இப்படி ஓட, ''என்ன மாமி நான் கேட்டுகிட்டே இருக்கேன். நீங்க ஏதோ யோசிச்சிட்டு இருக்கீங்க? ஏன் வேலைக்காரி வரலை?''

செல்வி சுதாரித்துக் கொள்கிறாள். ''அதையேம்பா கேக்கறே? நேத்தே அவளுக்கு உடம்பு சரியில்லை வரலை. இன்னிக்காவது வருவான்னு பார்த்தேன் முடியுதா சொல்லு.'' பாத்திரத்தைக் கழுவிக் கொண்டே பேசுகிறாள்.

''சரி அவ தான் வரலை. உங்க அழகிப் பொண்ணு எங்கே? செய்யச் சொல்றது தானே?''

''போதும்... எதுவும் கேக்காதே. காலையிலேர்ந்து டிவி பாத்துட்டு உக்காந்துட்டு இருக்கா. கொஞ்சம் கூட செய்யுடின்னு கூப்பிட்டா? கோபம் வருது. அழுதுகிட்டு உக்காந்துட்டு இருக்கா?''

சொன்னதும் சிவா தவித்துப் போகிறான். அவன் வருவதே செல்விக்காகத்தான். அவனும் அப்பாவிற்கு ஒரே பையன் தான். பார்ப்பதற்கும் நன்றாகத்தான் இருப்பான். செல்வி அத்தை அளவு பணம் இல்லை யென்றாலும் இவர்களும் பணக்காரர்கள்தான். மற்ற இரு அத்தை மகன்களை விட தான் சற்று அழகு என்பதால் தேன்மொழி தனக்குத்தான் என்று உறுதியாக நம்பினான்.

செல்வி அத்தை மேல் கோபம் வந்தது. 'ஒரே பெண் தானே. தனக்காவது ஒருதங்கை இருக்கிறாள். இருக்கும்

ஒரு பெண்ணை ஏன் கோபித்துக் கொள்ள வேண்டும்? மாமாவிடம் சொன்னால் கடையிலிருந்தே ஆள் அனுப்பி இருக்கமாட்டாரா? பாவம் தேனு அழுகிறாளாமே. அவளுடைய பளபளக்கும் அழகான கண்களிலுள்ள கண்ணீரைத் துடைக்க வேண்டும்.' இந்த எண்ணத்தில் விறுவிறுவென்று மாடி ஏறிப்போய் தேன்மொழி இருந்த அறைக்குள் நுழைகிறான்.

ஏற்கனவே அந்த பழைய படத்தின் சோக முடிவு மனதை உருக்க அம்மாவின் திட்டுக்கள் இன்னும் சோகத்தைக் கிளப்பிவிட உம்மென்று அமர்ந்திருக்கிறாள் தேன்மொழி என்ற தேன். கூம்பிய தாமரை மலராக தேன்மொழி உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் மனது உருகிப்போனது.

''என்னடா அம்மா சண்டை போட்டுட்டாங்களா?'' அவன் கேட்க பதில் பேசாது கலங்கிய கண்களுடன் அமர்ந்து இருந்தாள் தேன்மொழி.

அம்மாவைப் பற்றி ஒரு வார்த்தை கூட தவறாகப் பேசவில்லை. ''என்னடா சின்ன விஷயத்துக்கு கோபிச் சிப்பியா நீ. அவங்க விஷயத்தை மற. இத பாரு. உன் னுடைய பேவரைட் ஃபைவ்ஸ்டார் வேணுமா?''

நொடிப் பொழுதில் அழுகை மாறியது. ''ஹாய் தேங்க்ஸ் சிவாமாமா. அப்பாகிட்டே போன் பண்ணணும்னு நினைச்சேன். நீங்க வாங்கிண்டு வந்துட்டீங்க, தேங்க்ஸ்.'' சொன்னாள். இரண்டு சாக்லெட்டுகளையும் குழந்தை போல் பிரித்து தான் ஒன்று வாயில் கடித்தவள் இன் னொன்றை ''சிவாமாமா இந்தாங்க'' என்று தருகிறாள்.



''ம்ஹூம்... அது வேண்டாம். இதைத் தருவியா?'' வாயில் வைத்துக் கடித்துக் கொண்டிருந்த பாதி ஃபைவ்ஸ்டாரை வந்து எடுத்துக்கொள்ள,. ''ஐயையே மாமா அது எச்சி.'' தேன்மொழி பதற, ''எனக்கு அது தான் வேணும்'' என்கிறான் சிவா. ''ரொம்ப அழகா இருக்குப்பா.'' குரலைக் கேட்டு இருவருமே திடுக்கிட்டனர்.

## 2



தேன்மொழியின் தந்தை பரசு. இவர் எப்போது வந்தார். தன் பெண்ணின் அழகிற்காகவும், தன்னிடம் உள்ள பணத்திற்காகவும் செல்வியின் சொந்தங்கள் வீட்டை வட்டமிடுவது அவருக்குத் தெரியும். அவருக்கு தன் மனைவியின் சொந்தங்களைக் கண்டாலே பிடிக்காது. எரிச்சல் வரும். ஆத்திரம் வரும். மனைவியின் அக்கா, தங்கை இரண்டும் பொறாமைப் பிண்டங்கள், அண்ணன் தம்பி எல்லோரும் வடிகட்டி எடுத்த சுய நலவாதிகள். இதே தன் பெண் ஏழையாக இருக்கட்டும் ஒருத்தன் சீந்துவானா?

அதனால் தான் மனைவியின் உறவு முறை வந்தால் முகம் கொடுத்து கூட பேச மாட்டார். அவர்கள் ஏதேனும் பேசினாலும் பதிலுக்கு இடக்காக பதில் சொல்லுவார். சாதாரணமாக மாமா இருக்கும் நேரத்திலேயே யாரும் வரமாட்டார்கள். அவர் பிஸினசுக்குக் கிளம்பிய பின்

தான் ஒவ்வொருத்தராக வருவார்கள். அவர் திரும்பி வருவதற்குள் கிளம்பிப் போய்விடுவார்கள். இன்றும் சிவா சரியாக அப்படித்தான் வந்தான். ஆனால், மாமா ஏன் இந்த நேரத்தில் வந்திருக்கிறார்? அவர் வரும் நேரம் இது அல்லவே அல்ல. என்னவாக இருக்கும்? யோசித்து யோசித்து சிவாவிற்கு மண்டை காய்ந்தது.

எதையும் விளக்கி கேட்காமல் மெதுவாக கேட்க ஆரம்பித்தான்.

''என்ன மாமா இன்னிக்கு சீக்கிரம் வந்துட்டீங்க?''

''நீ வழியறதை பாக்கதான் வந்தேன்.''

''இல்லை மாமா'' அசடு வழிகிறான் சிவா.

''நான் இல்லாத போது இப்படித்தான் வந்து கண்டதைப் பேசிட்டு நிக்கறியா?''

''ஐயோ இல்லை மாமா... இன்னிக்கு தான் அம்மா பாத்துட்டு வரச் சொன்னாங்க. அடுத்த வாரம் படையல் போடறாங்களாம். அதுக்கு அத்தையை கூப்பிட்டுட்டு வரணும்னு சொன்னாங்க அதான்.''

''பாத்தயா?''.

''ம்... '' என்கிறான்.

''கூப்பிட்டியா?''

முதலில் ஆம் என்றவன் பின் 'இல்லை' என்று தலை அசைக்கிறான்.

''ஏண்டா சொல்லலை?''



''இல்லை அத்தை பின்னால பாத்திரம் தேச்சிக்கிட்டு இருந்தாங்க. கூட ஹெல்ப் பண்ணுன்னு சொல்றதுக்காக தேன்மொழிகிட்டே வந்தேன்.''

கடைசி வார்த்தை சொல்லும் போதே குரல் தேய்ந்து போய் பலவீனமாக ஒலித்தது.

''சொல்லுடா. நீ சொன்னாலாவது உங்க மாமாவுக்கு உரைக்கட்டும்.'' முகத்தை தோள்பட்டையில் இடித்த வாறே சொல்கிறாள் செல்வி.

''ஆரம்பிச்சிட்டயா? வீட்டுக்கு எப்ப வருவேன்? யுத்தம் பண்ணலாம்னு காத்துகிட்டு இருக்கியா?''

''என்னங்க உங்க பொண்ணு இப்படி இருக்கு? அத்தனை தூரம் உதவி செய்யுன்னு கெஞ்சாத குறையா கேட்கிறேன். டிவியை பாத்துகிட்டே உக்காந்துகிட்டு இருக்கா. அசையவே இல்லை.''

பெரிய புகார் பட்டியலையே தருகிறாள் செல்வி.

''வாயை மூடு... அவள் விரோதியா? பொண்ணு. சொந்தப் பொண்ணு அவகிட்டே இப்படியா நடந்துப்பே.''

சட்டென்று தேன்மொழியைப் பார்க்கிறார். இவளின் அதிர்ஷ்டதேவதை. இவள் பெயரிலோ இல்லை நினைத்தோ முதலீடு செய்தால் ஒன்றுக்கு பத்து மடங்கு லாபம். பாவம் ஏன் குழந்தை அழுதிருக்கிறாள்? கண்கள் எல்லாம் சிவந்து போய் வீங்கிப்போய்... ''ஏய்... என்னடி செய்தே? எம் பொண்ணு அழுதுகிட்டு இருக்கு?''

செல்வி கணவனின் மிரட்டலில் எரிச்சல் அடைந்தாள். ''யோவ் வாயை மூடுயா. உம் பொண்ணு திமிர் எடுத்துப்

போய் டிவி பார்த்து தன்னால அழுது. அதுக்கு நாங்க என்ன செய்யறது?''

''என்னடா எதுக்கு அழுதே? ஏதான சோக படமா?''

''ஆமாப்பா பழைய ஸ்டோரிப்பா. தாங்கவே முடியலேப்பா.''

''ஏண்டா அதெல்லாம் பாக்கறே? மனசு வருத்தப்பட்டு அழலாமா தலையை வலிக்காதா?'' பெண்ணின் தலையை அன்பாகத் தடவுகிறார்.

''உனக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கேன்பாரு.''

''என்னப்பா?'' துள்ளுகிறாள். கண்கள் மின்னுகின்றன. முகம் விளக்கு போட்டது போல் பளிச்சென்று ஆனது. கரெஸ் பாண்டண்ட் கோர்ஸில் பிகாமுக்கான அப்ளிகேஷன்.

''ஐ... தேங்க்யூபா'' குதிக்கிறாள் தேன்மொழி. ப்ளஸ்டூ ஓஹோவென்று படிக்கவில்லை என்றாலும், ஓரளவு நன்றாகவே படித்தாள். முதல் வகுப்பில் தான் பாஸ் செய்தாள். ஆனால் அதற்கு மேல் படிக்க வைக்க பாட்டியும், ஒத்துக் கொள்ளவில்லை. அம்மாவும் ஒத்துக் கொள்ளவில்லை. இந்த காலத்தில் கூலிக்காரன் பெண் கூட பி.ஏ., பி.எஸ்ஸி., என்று படிக்கிறது. ஆனால் இவர்கள் வீட்டில் ஒத்துக் கொள்ளாததால் ப்ளஸ்டூவோடு நிறுத்தப்பட்டாள்.

பிறகு தானும் டிகிரி படிக்க வேண்டும் அப்பாவிடம் சொன்ன போது அஞ்சல் வழிக் கல்வி முறையை படிக்கும்படி சொல்ல, இவளும் ஒத்துக் கொண்டு இதோ, விண்ணப்பத்தாளும் வந்தாகிவிட்டது.



''தேங்க்யூபா'' குதிக்கிறாள் தேன்மொழி.

''தேனு... அதை பில்லப் பண்ணிடு. அப்பா போகும் போது குடுத்திடறேன். சரியா. உனக்கும் கன்டினியூடி விடாது. நீயும் தொடர்ந்து படிக்கலாம். உங்க அம்மா வாயும் அடைச்சமாதிரி இருக்கும்.''

''ஆமா எல்லாத்துக்கும் என்னைக் குத்தம் சொல்லுங்க. பிளஸ் டூ படிச்சதுக்கே இந்த சிலுப்பு சிலுப்பறா. கொஞ்சம் ஒத்தாதையா வேலை செய்யுன்னு கெஞ்சினேன். முடியாதுன்னுட்டா. இன்னும் படிக்கவச்சா விளங்கும்.''

''பாருங்கப்பா, '' தேன்மொழி சிணுங்க,

''என்னிக்கு குழந்தையை திட்டாம இருந்திருக்கே நீ. ஞான சூனியம்.'' அவர் திட்ட, அவமானப்பட்ட செல்வி,

''நீ வாப்பா... இதுங்கள்ட்டே நின்னுகிட்டு நீயும் அவமானப்படணும். '' என்றவாறே சிவாவையும் கையோடு அழைத்துச் செல்கிறாள்.

சிவாவிற்கு மிகவும் வருத்தம் தான். மாமா மட்டும் வராமல் இருந்திருந்தால் எத்தனை நன்றாக பேசியிருக்கலாம்? எல்லாம் நேரம். இவர் வருகிறார் என்று தெரிந்தால் வந்திருக்கவே வேண்டாம். சிவாவும் அவருடைய பெற்றோருக்கு ஒரே பையன் தான். தேன்மொழி அளவு பணக்காரர்கள் இல்லையென்றாலும், அவர்களும் பணக்காரர்கள் தான். தங்கையின் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் உண்டான சொத்து வீட்டிற்கு வந்து விடும் என்று கணக்கு போட்டனர். பெற்றோர் அப்படி நினைத்தாலும் சிவாவிற்கு பெண்ணின் துறுதுறுத்த

முகமும், குழந்தை போல் மனமும், கள்ளங்கபடமற்ற பேச்சு, பார்க்க பல தடவை தூண்டும் அழகும் மெய்மறக்க வைத்தன. பெண்ணை விட பத்து வயது பெரியவன்.

''அப்பா கட்டினால் இந்த பொண்ணை தான் கட்டுவேன்.'' வீட்டில் திட்ட வட்டமாக சொல்லி விட்டான் சிவா.

''நீ சொல்றது சரி அவன் அப்பன் ஒத்துக்கணும். நம்பளைக் கண்டாலே அவனுக்குப் பிடிக்காது. உங்க அத்தையோட சொந்தம் யாராவது வீட்டுக்கு வந்தாலே வள்ளு வள்ளுன்னு விழுவாரு. அந்தப் பொண்ணு உன்னை பிடிச்சிருக்கின்னு சொன்னாதான் உன் கல்யாணம் நடக்கும். இல்லேன்னா ...... இல்லை. ''

''அவளுக்கு என்னை பிடிக்கும்பா.'' சிவா சொன்னதும்,

''அதை நீ சொல்லக் கூடாதுப்பா. அவ சொல்லணும். சொல்ல வை நீ ஜெயிச்சிடுவே.''

அப்பாவின் இந்த வார்த்தையால் தானே போய், போய் வருகிறான். எப்போதுமே மாமா இருக்க மாட்டார். அத்தைக்கு சாதகமாக பேசுவது போல் பேசி விட்டு தேன்மொழிக்கு சாதகமாகவே பேசுவான். ''தேனு, தேனு'' என்று அவளுக்கு பிடித்ததெல்லாம் வாங்கிக் கொண்டு போவான்.

''மாமா.. மாமா... '' என்றபடி அவளும் விழுந்து, விழுந்து பேசுவாள். அம்மா எது செய்திருந்தாலும் 'மாமாவுக்கு கொடுக்கலை?' என்று கேட்டவாறே உள்ளே இருந்து கொண்டு வந்து உபசரிப்பாள். வந்தால் சினிமா,.



டிராமா, கதைப்புத்தகங்கள், டிவி நிகழ்ச்சி எல்லாவற்றையும் பற்றி விமரிசிப்பார்கள் பேசுவார்கள். சில நேரங்களில் மணிக் கணக்காக பேசுவார்கள். மிக மிக நகைச்சுவையோ, சோகமோ, இல்லை அற்புதமான காட்சியோ இருந்தால், குதிப்பாள் தேன்மொழி, தன்னையும் மறந்து, மாமனின் தோளைத் தட்டி பேசுவாள்.

சிவாவுக்கு இதையெல்லாம் நினைத்து ஆனந்தம். தேனு தன்னை மிக மிக நேசிப்பதாக நம்புகிறான். அவளின் அழகில், அவளின் பேச்சில் தன்னை மறக்கிறான். அவளுக்காக எதையும் செய்யவும் காத்திருக்கிறான்.

சற்று வேதனையோடு அத்தையின் அருகில் போய் அமர்ந்த போது, செல்வி அத்தை புரிந்து கொண்டாள்.

''ஏம்பா வருத்தப்படறே? உங்க மாமா குணம் தான் உனக்குத் தெரியுமே. இன்னும் கொஞ்சம் நேரத்தில் அவர் கிளம்பிப் போயிடுவார். நீ தேனோட போய் பேசிக்கிட்டு இரு.''

சொல்லிவிட்டு தேய்த்து வைத்த பாத்திரங்களை அவனை வைத்துக் கொண்டு கழுவ, உள்ளே போய் கவுத்து வைக்கச் சொல்கிறாள். சிவா எப்போது வந்தாலும் இப்படித்தான். 'அத்தை, அத்தை' என்று எல்லா வேலைகளையும் மாய்ந்து, மாய்ந்து செய்வான். தன் சகோதரன் பிள்ளைகளிலேயே சிவாவைத்தான் செல்விக்கு மிக மிக பிடிக்கும். இத்தனை உபசரணையான மாப்பிள்ளை யாருக்கு கிடைக்கும்? கும்மி வைத்திருந்த துணிகளை காயப் போடச் சொல்லுகிறாள். திடீரென்று மேல்

குழாயில் தண்ணீர் வராமல் போக கீழே இருந்து ஒரு குடம் குடிக்கும் தண்ணீரை எடுத்து வருகிறான்.

செல்வி அண்ணன் மகனை உட்கார வைத்து ஆசை யாக சாப்பாடு போடுகிறாள். தன் பெண்ணுக்கு என்று எடுத்து வைத்திருந்த ரசகுல்லாவை ஊட்டுகிறாள்.

''தேனுக்கு...''

''என்னடா பொல்லாத தேனு, சோம்பேறிக் கழுதை, அது. நீ சாப்பிடு.'' என்று தருகிறாள்.

அத்தையோடு சமையல் அறையில் வேலை செய்து கொண்டே 'மாமா எப்போது தொலைவார்' என்று பார்த்துக் கொண்டிருக்கிறான் சிவா.

இங்கே குதூகலிக்கிறாள் தேன்மொழி. ''ரொம்ப தேங்க்ஸ்பா; என் ப்ரண்ட்ஸ் எல்லாம் மேலே படிக்கறாங்க. என்னை மட்டும் அனுப்பலையேன்னு அழுதுகிட்டு இருந்தேன்.''

''என்னடா இப்படி பேசறே? உன்னை கட்டாயம் அனுப்புவேன். கவலைப்படாதே. உங்கம்மா சொன்னா கூட கவலைப்பட மாட்டேன். உங்க பாட்டி உயி ரெடுக்குதே அதான். கவலைப்படாதேடா.''

அப்பாவிடம் அவசரம் அவசரமாக அப்ளிகேஷனை நிரப்பி எழுத வேண்டியதெல்லாம் எழுதி கொடுத்து விடுகிறாள். இதற்குள் அவளின் தந்தை சாப்பிட்டு விட்டு மறுபடியும் கிளம்ப யத்தனிக்கிறார்.

''இப்ப தான் வந்தீங்க. கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு போகக் கூடாதா?''



''என்ன ரெஸ்ட்? மேலே போகும் போது தான் ரெஸ்ட் எடுக்கணும்.'' என்று குதர்க்கமாக சொல்லியவாறே கிளம்ப, தேனு வாசல் வரை வந்து வழி அனுப்புகிறாள்.

உள்ளேயிருந்து பார்த்துக் கொண்டிருந்த சிவா நிம்மதிப் பெருமூச்சு விடுகிறான். அப்பா.. எப்படியும் திரும்ப வர இரவு எட்டு மணி ஆகிவிடும். நிம்மதி... மனம் நினைக்கிறது.

தேன்மொழி உள்ளே வருகிறாள். ''அம்மா பசிக்குது ஏதான தரப் போறீங்களா இல்லையா?''

''ஆமாண்டி இதுக்கு மட்டும் வந்துடு. கூட மாட ஏதான செய்யறியா? வேலை செய்யாம தானா கிடைக்குமா?''

''சரி அப்ப எனக்கு ஒண்ணும் வேண்டாம்.'' சினத்தின் வசப்பட்டவளாய் திரும்பி நடக்க, ''ஆமா இந்த கோபத் துக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே.'' செல்வி முணு முணுக்க,

''என்ன அத்தை நீங்க பாவம் தேனு எப்ப சாப்பிட் டதோ என்னவோ. முதல்லே தோசையை ஊத்திக் கொடுங்க. எனக்கு ஊத்தி கொடுத்தீங்கள்லே.''

''பேசாம இருடா. ஒரு நாள் பட்டினிகிடந்தா ஒண்ணும் ஆகாது.'' அத்தை கூற துடித்துப் போகிறான் சிவா.

அவசரம் அவசரமாக வெளியே வந்து தன் பைக்கை எடுத்துக் கொண்டு போய் கடைக்கு போகிறான். தேனுக்கு உப்பு பிஸ்கட் மிகவும் பிடிக்கும். பஃப் விரும்பி சாப்பிடு வாள். அது இரண்டு. ப்ளம் கேக் ஒன்று என்று எல்லாவற்றை யும் வாங்கியவாறே அவசரம் அவசரமாக வருகிறான்.

பார்த்தவுடனே 'ஐ... சிவா மாமா' குதிப்பாள் தேனு,' நினைத்தவாறே தேன்மொழியின் அறைக்குச் செல்ல, அங்க சிரிப்பு சத்தம் பலமாகக் கேட்டது. மணி உருளுவது போல் தேனின் கல கல சிரிப்பொலியும், சற்று கடினமாக ஹா... ஹா... கெற ஒலியும் வர, ஒரு வேளை... மாமா தானோ.. பயந்து பயந்து உள்ளே நுழைந்தவன், தேன் மொழியின் எதிரில் இருப்பவனைப் பார்த்து முகம் மாறினான்.

## 3



மகேஷ்... தன் சித்தப்பாவின் பையன். சித்தப்பா விற்கு இரு மகன்கள். பெரியவன் நரேஷுக்கு திருமணம் ஆகி எட்டாவது படிக்கும் மகனும் உண்டு. நரேஷுக்குப் பின் குழந்தையே இல்லாமல் வெகு நாட்களாக தவமாய் தவம் இருந்து பிறந்தவன் மகேஷ். மகேஷ் தேன் மொழியை விட ஐந்து வயது தான் பெரியவன். தானாவது பிகாம் முடித்து விட்டு அப்பாவின் மளிகையை பார்த்துக் கொள்கிறோம். மகேஷ் இன்ஜினியர். பிரபல ஸாப்ட்வேர் கம்பெனியில் வேலை செய்பவன். நுனி நாக்கில் ஆங் கிலமும், ஜீன்ஸ், டீ ஷர்ட் என்று அமர்த்தலாக வருவான். சிவாவிற்கு மகேஷ் என்றாலே பயம். மகேஷ் சரியான போட்டி. அவனை மீறுதல் மிக மிக கஷ்டம். மீற முடியுமா? 'எதற்காக இந்த சனியன் இங்கே வருகிறது? யாராவது



ஸாப்ட் வேரில் கூட வேலை செய்கிறாளே அவளை எவளையாவது திருமணம் செய்து கொள்வது தானே.' மனம் அவனை நினைத்தாலே எரிச்சல் உற்றது. அவன் வந்தாலே 'ஹனி' என்றபடியே அவளருகில் அமர்ந்து தான் பேசுவான். அத்தையைப் பார்க்க உள்ளே எல்லாம் போக மாட்டான். அத்தையே தான். 'வாப்பா மகேஷ், எப்படிப்பா இருக்கே?' என்பாள்.

''ம்... நல்லா இருக்கேன் அத்தை'' என்று சொல்லி விட்டு அதன்பின் ஒரு வார்த்தை கூட அவர்களிடம் பேச மாட்டான். 'ஹனி ஹனி' என்று தேன்மொழி புராணம். இன்ஜினியர், நன்றாக சம்பாதிப்பதால் செல்வியின் கணவனுக்குக்கூட அவனிடத்தில் மரியாதைதான்.

''தேனு... இந்தாம்மா உனக்குப் பிடிச்ச பஃப், கேக், உப்பு பிஸ்கட், பசின்னியே.''

''தேங்க்ஸ் மாமா. ஆனால் மகேஷ் பீட்ஸா வாங்கிட்டு வந்திருக்காரு. நான் இதோ சாப்பிடறேன். நீங்களும் சாப்பிடுங்க. இந்த கடை பீட்ஸா ரொம்ப நல்லா இருக்கும்'' தேன்மொழி சொல்ல,

''வேண்டாம்மா இப்பதான் அத்தை எல்லாம் கொடுத்தாங்க.''

சிவா மறுக்க, ''சாப்பிடுங்க மாமா'' என்றவாறே ஒரு பேப்பர் பிளேட்டில் ஒரு பீஸை கட் பண்ணி சிவாவிற்குத் தருகிறாள்.

''ஹனி டேக் ஸம் சீஸ்'' மகேஷ் சொல்லச் சொல்ல,

''மகேஷ் உங்களுக்கு?'' கேட்கிறாள் தேன்மொழி.

''நோ'' என்கிறான் மகேஷ்.

பீட்ஸாவை சாப்பிட்டுவிட்டு மகேஷோடு பெங்களூரைப் பற்றி, கம்ப்யூட்டரைப் பற்றி, பிளேனைப் பற்றி என்று பேச ஆரம்பிக்கிறாள் தேன்மொழி. சிவா அங்கேயே சிறிது நேரம் உட்கார்ந்து கொள்கிறான். பேச வேண்டும் என்று நினைத்தாலும் மகேஷின் ஆணித்தரமான பேச்சுக்கு முன்னால் எதையும் பேச முடியவில்லை. வாய் மூடி இருக்கிறான்.

சிறிது நேரம் சென்றபின் ''ஹனி வர்றியா ஒரு ஜாலி ரைட்''. அவன் கூப்பிட,

''சாரி மகேஷ் பைக்குன்னா அம்மா ஒத்துக்க மாட்டாங்க.''

''எனக்குத் தெரியாதா? என் நியூ ஹோண்டாவை எடுத்துட்டு வந்திருக்கேன்.''

''ஹை...'' சட்டென்று கள்ளங்கபடமில்லாமல் சிரிக்கிறாள்.

''எப்ப எடுத்துட்டு வந்தீங்க?''

''நேத்துதான் டெலிவரி எடுத்தேன். உங்கிட்டதான் முதல்ல காண்பிக்கணுன்னு தோணிச்சு. அதான் எடுத்துட்டு வந்தேன்.''

அவன் சொல்லி முடிக்கவும்.

''கொஞ்ச இருங்க டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வரேன்.''

வெளிர் ரோஸ் நிறத்தில் டாப்ஸும் அடர்ந்த நீல நிறத்தில் பைஜாமாவும் வெளிர் ரோஸ் நிறத்தில் டிசைன்



வேலை செய்யப்பட்ட துப்பட்டாவும் அணிந்து கைகளுக்கு ரோஸ் நிறக் கற்கள் வைத்த வளையல், காதுகளில் ரோஸ் நிற தொங்கட்டான், கழுத்தில் ரோஸ் நிற வெல்வெட் போன்ற துணியில் பதக்கம் போன்ற ஒரு அமைப்பை நெக்லஸாக கட்டிக் கொண்டு வந்து நிற்க, அசந்து போகிறார்கள் மகேஷும் சிவாவும்.

மிக மிக இனிமையாக சிரித்தபடி ''வாங்க மாமா போகலாம். வாங்க மகேஷ்'' என்றவாறே சின்னஞ்சிறு கைப்பையும் எடுத்துக் கொண்டு கிளம்புகிறாள். அம்மா உள்ளிருந்து வந்து எரிச்சல் உறுகிறாள்.

''ஏம்பா மகேஷ்.. அவளே குரங்கு. அவளை வேறு சுற்ற அழைத்துப் போனால் அவ்வளவுதான்.''

''என்ன ஆன்ட்டி நான் பாத்துக்கறேன். பாவம் தேனு'' என்றவாறு நீலநிற ஹோண்டாக்களின் கதவைத் திறந்து விட்டு அவள் அமர வைத்து சென்றபோது ஏக்கமாகப் பார்க்கிறான் சிவா.

'போயிற்று இந்த மகேஷ் அவளை லேசில் விட மாட்டான். ஒரு ரவுண்டு இரண்டு ரவுண்டு என்று ஒரு மணி நேரம் பொறுத்துதான் கொண்டு விடுவான். புதிதாக மோட்டார் பைக் எடுத்து வந்தும் ஒரு முறை இப்படித் தான் செய்தான். இனி இங்கே காத்திருத்தல் வேஸ்ட் தான்.' கிளம்ப முயற்சிக்கையில் அத்தை வருகிறாள்.

''இவன் வந்தாலே எனக்கு சரிப்படாதுடா. உன்னை மாதிரி பாந்தமா ஏதாவது பேசறானா? எனக்குப் பிடிக்கவே இல்லை.''

சிவா உள்ளுக்குள் மகிழ்ச்சி அடைந்தான். அத்தைக்குப் பிடிக்கவில்லை என்றால் கல்யாணம் அவ்வளவுதான். மாமா என்னதான் கத்தினாலும் அத்தை வேண்டா மென்றால் மேலே தொடர ரொம்ப யோசிப்பார்.

''இன்னிக்கு பாத்து வேலைக்காரி வரலை. சிவா காப்பித்தூள் இல்லை. கொஞ்சம் வாங்கிட்டு வந் திடறயா?'' காசைக் கொண்டு வந்து தர எரிச்சலடைகிறான். 'இந்த அத்தை எப்போதுமே இந்த ரகம்தான். மகேஷை வேலை வாங்க வேண்டியதுதானே. எல்லா வேலையை யும் எங்கிட்டதான் சொல்லும் சனியன்.' என்று மன திற்குள் வைதவாறே 'எல்லாம் தேனுக்காக' என்றவாறே கிளம்பிப் போகிறான்.

இங்கே மகேஷோடு ஆனந்தமாகப் பயணிக்கிறாள் தேனு. கார் செல்லும் லாவகம் மனதை சந்தோஷப்படுத்த, கன்னங்கள் குழிய சிரிக்கிறாள். எந்த இன்பத்தையும் அனுபவிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அதற்கும் கொடுப்பினை வேண்டும். சில ஜன்மங்கள் எத்தனை இருந்தாலும் அழுது கொண்டே இருக்கும். அந்தந்த நிமிடத்தில் மகிழ்ச்சியாக வாழவும் இறைவன் வகை செய்ய வேண்டும். அந்தக் கொடுப்பினை கூட சில பேருக்கு தான் உண்டு. எல்லா வசதிகள் இருந்தும், எப்போதும் துன்பத்தையே நினைத்து வருத்தப்படும் ஜீவன்களும் உண்டு. முக்கால்வாசிப் பேர் கண் எதிரே இருக்கும் சுகத்தை அனுபவிக்காமல், எங்கோ இருப்ப தாக நினைக்கும் சுகத்தை நினைத்து ஏங்கிக் கொண்டு இருப்பார்கள். தேன்மொழி மிக மிக கொடுத்து வைத்



தவள். அவளுடைய வெள்ளை மனதுக்கு எல்லாமே சுகம்தான்.

மகேஷ் அவளை வீட்டில் இறக்கிவிட்டு விட்டுச் சென்றபோது சற்று துள்ளல் நடையுடன்தான் வருகிறாள். இங்கே வாங்கிக் கொடுத்தது போதாதென்று வெளியே அழைத்துப் போய் ஐஸ்கிரீம் வாங்கித் தந்தான் மகேஷ். எல்லாம் சாப்பிட்டதே வயிறு நிறைய பட்டாம் பூச்சியாக உள்ளே வருகிறாள்.

உள்ளே வரும்போதே அம்மா பிடித்துக் கொள்கிறாள்.

''ரொம்ப நல்லாயிருக்குடீ நீ செய்யறது? அப்பா செல்லம்னு உனக்கு இத்தனை திமிரா?''

''ஆரம்பிச்சிட்டியாம்மா.''

''ஆரம்பிக்காம... காலையிலே பசின்னே, மாமன் காரங்க வாங்கிக் கொடுத்ததெல்லாம் தின்னாச்சு. நான் கோபத்துல பேசினாலும், பாவம் குழந்தை. குழந்தைன்னு உருகிட்டு நிக்கறேன். உனக்கு அந்த நினைப்பு கொஞ்ச மாவது இருக்கா?''

கேட்கும்போதே அம்மாவின் குரல் உடைய கண்ணீர் வந்தது. பதில் பேசாமல் சில நிமிடங்களில் கரைந்து போகிறாள்.

ஒரு நிமிடம் எரிச்சலோடு இருந்தவள் அடுத்த நிமிடம் உருகிப் போகிறாள் பாவம் அம்மா...

''என்னம்மா நீங்க? எதுக்கு அழறீங்க. மகேஷ் புது கார் வாங்கியிருக்கேன்னு கூப்பிட்டதாலே போனேன். எனக்கே பசி. உங்க கை சமையலை ஒரு பிடிபிடிக்க

லான்னா... இப்ப போய் ஏதோ பேசறீங்களே,'' அம்மாவின் தோளில் சாய்ந்து கொள்ள, அம்மாவும் உருகிப் போகிறாள்.

''வாடி உனக்குப் பிடிச்ச இடியாப்பம் குருமா வச்சிருக்கேன்.''

அம்மா சொல்லச் சொல்ல சந்தோஷமாகச் சிரிக்கிறாள் தேன்மொழி. அம்மா நான்கு, ஐந்து இடியாப்பங்களை வைக்க,

''அம்மா... போதும்மா.. சாப்பிடவே முடியாது.'' ''அதெல்லாம் தெரியாது சாப்பிட்டுதான் ஆகணும்.'' பின்னும் இரண்டு இடியாப்பங்களைப் போட்டு, சற்று பெரிய கிண்ணத்தில் குருமா, இன்னொரு கிண்ணத்தில் தேங்காய் சட்னி, இன்னொன்றில் வெங்காய சட்னி வைத்து ''சாப்பிடு கண்ணு. அந்த சிவா சனியன் இங்கயே நின்னு கிட்டு இருந்தது. பழைய ரசகுல்லாவை அவன் தலைல கட்டிட்டேன்.'' அம்மா சொல்லச் சொல்ல,

''என்னம்மா... நீங்க பாவம் மாமா.. உங்கண்ணன் பையன் தானே. உனக்கு எத்தனை வேலை செய்து கொடுக்கிறார். இப்படிச் செய்யலாமா?'' என்கிறாள்.

''அடிபோடி... நான் நல்லா செய்யறது எல்லாம் என் பொண்ணுக்கு மட்டும்தான்.''

''சரிம்மா... உங்களை மாத்தவே முடியாது...'' என்றவாறே இடியாப்பத்தைப் பார்த்து மலைக்கிறாள்.

இத்தனையும் கட்டாயம் சாப்பிட முடியாது. கீழே கொட்டவும் மனம் வரவில்லை. பாவம் அம்மா



பொண்ணுக்கு, பொண்ணுக்கு என்று மாய்ந்து மாய்ந்து செய்திருக்கிறாள்.

யோசித்துக் கொண்டு இருக்கும் போதே வந்து சேர்ந்தான் ஜெயபாலன். செல்வியின் தம்பியின் மகன். இவனுக்கு கூடப் பிறந்தவர்கள் யாரும் கிடையாது. வீட்டுக்கு ஒரே மகன். இவனும் மகேஷும் ஏறக்குறைய ஒரே வயது. ஜெயபாலன் மருத்துவம் படித்திருக்கிறவன் எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு ஏதோ ஒரு புகழ் பெற்ற நர்ஸிங் ஹோமில் டாக்டராக இருக்கிறான். நேற்று எல்லாம் ஏதோ எமர்ஜென்ஸி கேஸை பார்த்ததால் இரவு முழுவதும் கண் விழித்துக் காலை எட்டு மணிக்கு மேல் தான் வீட்டிற்கே வந்தானாம். இன்று விடுமுறை எடுத்துக் கொண்டதாக சொன்னான்.

''ஹாய்... தேன்ம்மா'' தேன்மொழியை அவன் அப்படித்தான் கூப்பிடுவான்.

''வாங்க டாக்டர்..'' சொன்னவளின் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. சூடான இடியாப்பத்தைத் தள்ளிவிட இடம் கிடைத்தது. மீதி இரண்டு மாமாக்களும் இவளுக்கு ஏதேனும் வாங்கி வரும்போது, இவன் மட்டும் வெறுங் கையோடுதான் வருவான். ''அத்தையோட ஸ்பெஷல் என்ன? செய்து போடச் சொல்லு'' உரிமையோடு கேட்பான்.

அவன் எப்போது வந்தாலும் அம்மா கோவிலுக்குக் கிளம்பிப் போய்விடுவாள்.

''போதும்டீ இதைக் கொண்டா, அதைக் கொண்டான்னு தின்னு தீத்துட்டு போகும். அப்படியே என் தம்பியே தான்.

அடுத்தவங்க வீட்டுக்குப் போனா சுரண்டாம வர மாட்டான்.'' என்பாள்.

இன்றும் ஜெயபாலனை பார்த்தவுடனேயே, கிடுகிடு வென்று வந்து பெண்ணின் காதில் கிசுகிசுக்கிறாள். ''நான் பக்கத்திலே இருக்கற கோவிலுக்குப் போறேன். இது போனப்புறம் வரேன்.''

சொல்லிவிட்டுக் கிளம்பி விடுகிறாள்.

''என்ன அத்தை மருமகப்பிள்ளை வந்திருக்கேன். பாக்காமப் போறீங்க?''

வழக்கமாக கேட்கும் கேள்விதான். வழக்கமான பதிலைச் சொல்கிறாள் அத்தை.

''அதான் தேனு இருப்பாளே தம்பி. அவ கவனிச்சுப்பா.'' எப்போது ஜெயபாலன் வந்தாலும் தேன்மொழி ஏலக்காய் டீயோ, பஜ்ஜியோ போண்டாவோ, இல்லை மாவாட்டி வைத்திருந்தால் இட்லி, தோசை என்று ஏதேனும் செய்து கொடுத்து அனுப்புவாள். வரும்போதே 'பசி' என்பான். ''என்ன இருக்கு?'' என்று கேட்பான்.

''நல்ல சொந்தம்'' சில சமயங்களில் மனதில் நினைத் தாலும், வீட்டுக்கு வந்த விருந்தினர் யார் வந்தாலும் மாய்ந்து, மாய்ந்து செய்வாள் செல்வி. அதே போல் ஜெயபாலனுக்கும் செய்திருக்கிறாள்.

''நீங்க வாங்க...'' என்றவள் அம்மா வைத்து விட்டுப் போன இடியாப்பத்தை லேசாக குக்கரில் சுட வைத்து அவனுக்குப் போடுகிறாள். அம்மா கொண்டு வைத் திருந்த குருமா, சட்னி, வெங்காய சட்னி எல்லா வற்றையும் பக்கத்தில் வைக்கிறாள்.



''ஐ...'' என்றவன் ''நீயும் சாப்பிடு தேனம்மா'' சொல்ல, அம்மா எப்படி இருக்கிறது என்று கேட்டால் பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக ஒன்றே ஒன்றை எடுத்துக் கொண்டு,

''நீங்கதான் பசியோடு வந்திருக்கீங்க சாப்பிடுங்க'' உபசரிக்கிறாள்.

அவர்கள் சாப்பிட ஆரம்பிக்கும்போது, காலிங் பெல் ஒலிக்க, எச்சில் கையை கழுவியவாறே ஓடிப் போய் கதவைத் திறக்க வந்தவனைப் பார்த்து திகைக்கிறாள்.

'அர்ஜுன்...' இவனும் ஒரு அத்தை மகன்தான். அப்பாவின் கூடப் பிறந்த ஒரே வாரிசு மகாலட்சுமி அத்தையின் இரண்டாவது மகன். பெரியவள் ஜெயா. இரண்டாவது அர்ஜுன். ஏதோ திருமணங்களில் சந்திப்ப தோடு சரி. வீட்டிற்கெல்லாம் வந்ததில்லை. இவளை விட ஒன்பது வயது மூத்தவன். இவளைவிட நிறமானவன். தன் அத்தை மகன்களிலேயே இவன்தான் வெளுப்பாக இருப்பான். அடர்த்தியான மீசை. கருகருவென்ற சுருண்ட தலை மயிர். அடர்ந்த இமைப் பகுதி பார்க்கும் போதே மனது போய் ஒட்டிக் கொள்ளும் உருவம். ஆறு அடி உயரம். அதற்கேற்ற உடல்வாகு. அப்பாவைப் போல் அத்தை வீட்டாரும் பெரும் பணக்காரர்கள்தான். அத்தையின் கணவரும் சாம்பசிவமும் பிஸினஸ் செய்து கொண்டு கொழிப்பவர். அர்ஜுனோ தனி கம்பெனி வைத்திருப்பவன். அம்மாவின் சொந்தங்கள் வருவது போல் அப்பாவின் சொந்தம் வீட்டுக்கு வருவதே இல்லை. இத்தனையும் மனதில் ஓட,

"வாங்க... உள்ளே வாங்க..." அவள் கூப்பிட,

"அப்பா இல்லே..." வாசலில் நின்றவாறே கேட்கிறான் அர்ஜுன்.

"வர நேரம்தான். இன்னும் அரை மணியிலே வந்துடுவாங்க.. வாங்க.." தேன்மொழி கூப்பிட,

"நோ... தேங்க்ஸ்" என்றவன்.

"நான் அப்புறமா வரேன்" என்றவாறு திரும்பி நடக்க, பெருமூச்சு விட்டவாறே மறுபடியும் சாப்பிட அமர்கிறாள்.

"என்னவாம் உங்க திமிர் பிடிச்ச அத்தையோட திமிர் பிடிச்ச பிள்ளைக்கு என்னவாம்?" ஜெயபாலன் கேட்க,

"ஆமாண்டா. நாங்க திமிர் பிடிச்ச கூட்டம்தான். இல்லைன்னா வக்கணையா ஆக்கிப் போட்டு உன்னை திங்க வச்சிருப்போமா?" தேன்மொழியின் அப்பாவின் குரல் கேட்டு அதிர்ந்து போய் எழுந்தனர் இருவரும்.

## 4



"ஏண்டா ஒரு நாளைக்கு எத்தனை பேர்டா வருவீங்க? பெரிய அத்தை உறவு கொண்டாடறீங்களா? அவளும் பொறந்த வீடு, பொறந்த வீடுன்னு உருகி, உருகி செய்யறா? அதுக்குன்னு ஒரு அளவு கிடையாதா? எப்பபாருமா? ஒவ்வொருத்தனா வந்து மணிக் கணக்கா உக்காந்துகிட்டு சே!" அவர் கத்தவும், தேன்மொழிக்கு



என்னவோ போல் இருந்தது. விரோதியாக இருந்தாலும் வீட்டிற்கு வந்து விட்டால் மரியாதை செய்வது நமது பண்பு. அப்பா ஏன் இப்படி நடந்து கொள்கிறார்?

"அப்பா... ஏம்ப்பா... பாவம்பா" தேன்மொழி ஆரம்பிக்க, கொதித்துப் போய் பேசுகிறார் அப்பா.

"என்னம்மா? நீ கூடவா இப்படி இருப்பே? அம்மா வீட்டு சொந்தம் வந்தா சிரிச்சுச் சிரிச்சுப் பேசி அவுங்களுக்கெல்லாம் செய்யறே? அப்பாவுக்கு ஒரே தங்கச்சி. அதுவும் போக்குவரத்தும் இல்லாமப் போச்சு. என்னிக்கோ ஒரு நாள் வந்தா இப்படி தெருவுலே நிக்க வச்சா பேசறது."

தேன்மொழி அதிர்ந்து போகிறாள். பேசுவது அப்பாவா? முகம் இருண்டு போனது. சிறு வயதிலிருந்து ஒரு முறை கூட அப்பா தன்னைக் கடிந்ததில்லை. எப்போதும் சிரிக்க சிரிக்கப் பேசுவார். தன்னை மறந்தும் கடியாத அப்பா இன்று கடிந்து கொள்கிறார் என்றால் என்ன செய்வது? அவர் கடிந்து கொண்டார் என்று ஒரு பக்கம் அவர் மேல் வருத்தம் இருந்தாலும், அடுத்த நிமிடம் அவர் வருத்தப்படும்படிதான் நடந்து விட்டோமே என்று மனம் சங்கடப்பட்டது. எத்தனை மன வருத்தம் இருந்தால் இப்படிப் பேசுவார். அர்ஜுன் உள்ளே வர மாட்டேன் என்றால்கூட விட்டிருக்கக்கூடாது. தவறு செய்து விட்டோம். இப்படி யோசித்து முகம் கூம்பிப் போய், வேதனையில் அழ,

"என்ன அங்கிள் நீங்க. அவ பாவம். உள்ளே வான்னுதான் எவ்வளவோ கூப்பிட்டா. நான்தான் போகலை. எதுக்கு அனாவசியமா திட்டறீங்க?"

''இல்லைப்பா...''

''இல்லை அங்கிள் ப்ளீஸ். அம்மாவுக்குத் தெரிஞ் சாலும் திட்டுவாங்க. அவளுக்குக் கெட்ட பேர் வரவா நீ போனேன்னு கேப்பாங்க. தவிரவும் உங்க பொண்ணு மேலே எந்தத் தப்பும் இல்லை. நான் தான் உள்ளே வரலை. உள்ளே வந்து பேசற மூடுலே இல்லே. ப்ளீஸ் அதுனால கோபப்படாதீங்க. அப்பாவை ஆஸ்பத்திரி யிலே சேர்த்திருக்காங்க. மைல்ட் ஹார்ட் அட்டாக்குன்னு சொன்னாங்க. அதான் சொல்லிட்டு வரச் சொன்னாங்க.''

''என்ன சொல்றே? உங்க அப்பாவுக்கா?''

அதற்கு மேல் அப்பா அங்கே நிற்கவில்லை. அர்ஜுனுடன் கிளம்புகிறார். தேன்மொழி 'அப்பா' என்று கூப்பிட்டவள், 'நானும் வரேம்பா' என்கிறாள்.

''சரி வாம்மா'' என்றவர் ஜெயபாலனை அங்கேயே வீட்டுக்குக் காவலாக உட்கார வைத்துவிட்டு மூவரும் கிளம்பிச் செல்கின்றனர்.

ஜெயபாலன் எரிச்சலோடு அமர்ந்தான். 'என்றோ ஒரு நாள் வருகிறோம். வந்தாலும் இப்படி ஏதோ ஆகி விடுகிறது. போன தடவை வந்தபோது மாமா ஊட்டி போவதாகச் சொல்லி தேன்மொழியை கையோடு அழைத்துப் போய்விட்டார். இன்று இப்படி இருக்கிறது.' பெருமூச்சோடு அமர்ந்திருக்கிறான்.

கோவிலுக்குப் போய்விட்டு அவசரம் அவசரமாக உள்ளே வந்தாள் செல்வி. ஜெயபாலன் கட்டாயம் போயிருப்பான். தான் வந்தே ஒரு மணி நேரம் ஆகி



விட்டதே. பெண் வேறு இளித்துக் கொண்டே பேசித் தொலைத்து இருக்கு. இன்னும் அதற்கும் ஒரு கருத்தும் தெரியவில்லை. யாரை சேர்ப்பது, யாரை சேர்க்கக் கூடாது என்றுகூடவா தெரியாது. ஜெயபாலன் இப்போதே மருமகன் முறை எடுத்துக் கொண்டு தின்ன வரும் பார்ட்டி அவனிடம் போயா பேசித் தொலைக்க வேண்டும். தன் பெண்ணுக்கு ஒன்றுமே தெரியவில்லை. அவளுக்கு எல்லாமே ஒன்றுதான். பணக்காரன், ஏழை, கொடுப்பவன் எடுக்கிறவன் என்ற வித்தியாசமே அவளிடம் கிடை யாது. கடவுளைப் போல

ம்... என்று பெருமூச்செறிந்து கொண்டு உள்ளே நுழைய ஜெயபாலன் மோட்டு வளையைப் பார்த்து உட்கார்ந்திருப்பது, எரிச்சலைத் தந்தது. இவனை இப்படி உட்கார வைத்து இவள் உள்ளே என்ன செய்கிறாள்?

''தேனு... ஏய் தேனு...'' கத்திக் கொண்டே செல்வி நுழைய,

''அவ இல்லை'' என்கிறான் ஜெயபாலன்.

''எங்கே போயிருக்கா'' திகைப்போடு கேட்கிறாள் செல்வி.

''மாமா எங்கேயோ அழைச்சுகிட்டுப் போயிருக்காரு. அவரு அழகுப் பையன் அர்ஜுன் வந்திருந்தான். உடனே அவசரம், அவசரமா போயிட்டாங்க.''

செல்வி திகைத்து நின்றாள். அவளுக்கு ஒரே நாத்தனார்தான். போக்குவரத்தே இல்லை. செல்வியின் கணவனுக்கு தங்கை என்றால் மிக மிகப் பிரியம். தங்கச்சி

தங்கச்சி என்று உருகிக்கொண்டே இருப்பார். மாமியார், மாமனார் இருக்கும் வரை உறவு சீர்பட்டு இருந்தது. அவர்கள் தலை சாய்ந்தபின் நாத்தனார் உறவின் மேல் அத்தனை விருப்பம் இருக்கவில்லை. ஒரு முறை ஏதோ விசேஷத்திற்கு வந்தபோது செல்வி நாத்தனாரிடம் முகம் கொடுத்துக்கூட பேசவில்லை. முன்பெல்லாம் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கும்போதே. நாத்தனாரைப் பார்த்தாலே முகம் சுளிப்பாள் செல்வி. நிலைமையை உணர்ந்து தான் வருவதையே குறைத்துக் கொண்டாள் மகாலட்சுமி. கணவன் 'தங்கச்சி' என்று உருகுகிறானே என்ற கடுப்பு. தன் வீட்டு மனிதர்கள் என்றால் ஆனந்தம். கணவன் வீட்டு மனிதர்கள் என்றாலே எரிச்சல். தன் எரிச்சலை, ஆத்திரத்தை ஒன்றும் இல்லாத விஷயத்துக்கு எல்லாம் வெளிப்படுத்த மகாலட்சுமி பிறந்த வீட்டு தொடர்பையே அறுத்துக் கொண்டு விட்டாள்.

அந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்கிறாள் செல்வி. ஒரு முறை தன் நாத்தனாரின் மகன், தன் அண்ணன், தங்கை, தம்பி மகன்கள் எல்லாம் வீட்டில் குழுமி இருக்க அத்தனை பேருக்கும் இலை போட்டு இட்லி, பொங்கல் எடுத்து வைத்த செல்வி நாத்தனார் மகாலட்சுமியின் பிள்ளைகளுக்கு மட்டும் ஒன்றும் தரவில்லை. ''போய் அப்படி உக்காரு. தூரப்போ'' என்று விரட்டி விட பார்த்துக் கொண்டிருந்த மகாலட்சுமிக்குப் `பற்றிக் கொண்டு வந்தது. மகாலட்சுமியின் கணவர் பிஸினஸ் என்று ஆரம்பித்து நொடித்துப் போன நேரம். மேலே பிஸினஸ் நடத்த முடியாமல் கஷ்டப்பட்ட நேரம். அந்த



நேரத்தில் அண்ணனின் வீட்டில் சிறிது காலம் இருக்க எண்ணிய மகாலட்சுமியை அவமானப்படுத்த அன்று கிளம்பிப் போனவள் தான். என்றாவது நினைக்கும் போது மனசாட்சி உறுத்தத்தான் செய்கிறது. கேவலம் அந்தப் பொங்கலையும், இட்லியையும் குழந்தைகளுக்குக் கொடுத்து இருக்கலாம். அதற்காக கணவரிடம் வேண்டுமென்கிற அளவு அடியையும், உதையையும், திட்டுக்களையும் வாங்கியாயிற்று. அதுவரை ''செல்வி'' என்று கூப்பிட்டுக் கொண்டிருந்த கணவன், பின் தன்னிடம் பேசுவதையே நிறுத்திக் கொண்டான். ஏதாவது சொன்னாலும் வள்ளென்று விழுவான். செல்வி இதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. இப்போது எதற்கு அந்தப் பிள்ளையாண்டான் வந்து கூப்பிட்டுக் கொண்டு போகிறது. உறவே வேண்டாம் என்று ஒதுங்கிப் போனவர்கள் அல்லவா? மனம் குடைய,

''அத்தை காபி குடிக்கணும். காபி கொடுங்க'' சட்டமாக அமர்ந்து கேட்கும் ஜெயபாலன் மேல் எரிச்சல் வர, எரிச்சலோடு உள்ளே போகிறாள்.

'சனியன் தின்னாம போகாது. இது 'மாப்பிள்ளையா இருந்தால் அவ்வளவுதான். இதுக்கு வடிச்சு கொட்டியே ஆயுசு கழிஞ்சிடும்' நினைத்தவாறே உள்ளே போய் அவசரம் அவசரமாக காபி டிகாஷன் போட்டு காபி கலந்து தருகிறாள்.

''ஏ... கிளாஸ் காபி... இந்தக் காபிக்காகத்தான் வரேன்'' என்றவாறு அவன் புறப்பட்டுப் போக, செல்வி மௌனமாக இருக்கிறாள்.

சாதாரணமாக தன்னைப் புகழ்ந்து விட்டால் குதித்துப் போகும் மனது இப்போது ஒன்றும் மகிழ்ந்து விட வில்லை. எரிச்சல் பட்டது. மறுபடியும் தன் பெண் எதற்காகப் போனாள் மனம் தவித்து தவித்துப் போனது. என்ன விஷயமாக இருக்கும். 'இவர் போனால் போகட்டும். பெண்ணை ஏன் அழைத்துப் போக வேண்டும்?' ஒரு வழியாக மனது சமாதானமானது. 'பெண் போனதும் நல்லதாகத்தான் போயிற்று. என்ன நடந்தது என்று விலாவாரியாகச் சொல்வாள். இவர் வாயையே திறக்க மாட்டார். அதுவும் தங்கையை அவமானப்படுத்தி அனுப்பி விட்டோம் என்ற கோபம் வாயையே திறக்க மாட்டார். பெண் வரட்டும்...? அவசரம் அவசரமாக சமையலை முடித்துவிட்டு பெண் வருகைக்காக காத் திருக்கிறாள்.

மணி ஏழாயிற்று. எட்டு, ஒன்பது... இன்னும் போனவர் களைக் காணவில்லை. சாதாரணமாக இருந்தால் ஆறு முறை கணவனை செல்லில் தொடர்பு கொண்டிருப்பாள். இப்போது அப்படி இல்லை. தங்கை வீட்டிலிருந்து வந்து தொலைக்கட்டும். பிறகு பேசிக் கொள்வோம். நினைத் தாலும் மனம் மருண்டது. என்னாகி இருக்கும். ஏதேனும் ஆபத்து என்றால் தானே அழைத்துப் போக முடியும். என்ன ஆபத்தாக இருக்க முடியும். ஒரு வேளை மகாலட்சுமியின் புருஷனுக்கு உடம்பு சரியில்லையா? இல்லை மகாலட்சுமிக்கே ஏதேனுமா?

இப்படி நினைக்க, மகாலட்சுமியுடன் சிரித்த முகம் நினைவுக்கு வந்தது. திருமணமான புதிதில் 'அண்ணி



அண்ணி' என்று வளைய வளைய வந்து எத்தனையோ உதவி புரிந்திருக்கிறாள். முதலில் செல்வியும் பாசமாகத் தான் இருந்தாள். பிறகு தன் குடும்பம், தன் பிள்ளைகள் என்று வர வர ஒரு மாற்றம். பின் பணம் வர சகலமும் மாறிப் போனது. மகாலட்சுமியை திருமணம் செய்து கொடுத்த இடம் சற்று வசதியான இடம்தான். அதனால் நாத்தனாரை மிக மிக நன்றாகத்தான் கவனித்துக் கொண் டாள் செல்வி. எப்போது பிஸினஸ் என்று அவளின் வீட்டுக்காரர் ஆரம்பித்தாரோ எப்போது எல்லாம் போனதோ, அதன் பிறகு மகாலட்சுமியின் மேல் மரியாதையும் போனது. தொட்டதற்கெல்லாம் குற்றம் கண்டு பிடித்து பாவம் அதை மகாலட்சுமியின் மேல் போட்டு... இப்போது நினைத்துப் பார்த்தால் தான் ஏன் இத்தனை கேவலமாக நடந்து கொண்டிருக்கிறோம் என்று தோன்றியது. மனசாட்சி இடித்தது. மனசாட்சி இடிக்க இடிக்க வருத்தம் தோன்றியது.

எப்படிப்பட்ட மனிதனாக இருந்தாலும் ஏதேனும் ஒரு கால கட்டத்தில் மனசாட்சிக்கு பயப்பட்டே ஆக வேண்டும். செய்யும் போது உறுத்தாத தவறு கூட ஒரு கால கட்டத்தில் நம்மை உறுத்தத் தொடங்கி விடும். அந்த உறுத்தலை அலட்சியமும் செய்ய முடியாது. நம் மனதில் உழன்று, எலும்பில், தசையில் ஆட்கொண்டு நம்மை ஒரு வழி பண்ணிவிடும். செல்வியும் மனசாட்சியின் உறுத்த லால் இப்போது வருத்தப்படுகிறாள். தன் புருஷனின் கூடப் பிறந்தவள் தானே. அவளிடம் சற்று சுமுகமாக நடந்து கொண்டு இருக்கலாம். அநியாயமாய் தவறு செய்து விட்டோம். மனம் இடித்துரைத்தது.

இதே யோசனையில் வேதனையோடு இருந்த போது கார் ஹாரன் ஒலி கேட்க, சற்று முகத்தை சோகமாக வைத்தபடி கதவைத் திறக்கிறாள். சாதாரணமாக இருந் தால் ''என் வீட்டு மனுஷங்களுக்கு ஏதான என்றால் அப்படியே குதிச்சுகிட்டு இருக்கியே. உள்ளுக்குள் சந்தோஷம் பொங்குதா'' என்று கேட்பான் கணவன்.

அதற்காகவே சற்று சோகமாக முகத்தை வைத்துக் கொள்கிறாள். கூடவே மனசாட்சி வேறு இடித்து உரைக்க பின்னும் சோகமாக வைத்துக் கொண்டு கதவைத் திறக்கிறாள்.

தன் வழுக்கைத் தலையைத் தடவியவாறு எங்கோ பார்த்தவாறு இறங்கி வருகிறார் கணவன். உடல் குண்டுமில்லாமல் ஒல்லியுமில்லாமல் ஒரு தேகம். சற்று மாநிறம். முகத்தில் ஒரு மெல்லிய பூனை மீசை, கண் களும், நினைவுகளும் எப்போதுமே தொலை தூரத்தில், எங்கோ பார்த்தவாறு, எதையோ நினைத்தவாறு இருக் கும். இன்னும் அதே போல் தான் இறங்கி வருகிறார்.

பெண்டாட்டி அவரையே பார்த்தவாறு நிற்க, அவர் பெண்டாட்டியை திரும்பிக் கூட பார்க்கவில்லை. கணவன் உள்ளே செல்ல, வீட்டினுள்ளே இருக்கும் ஷெட்டில் காரைக் கொண்டு வருகிறான் டிரைவர். தேன் மொழியைத் தேடுகிறாள் செல்வி. 'எங்கே போயிருப்பாள்? ஒரு வேளை லைப்ரரி எங்காவது போயிருக்கலாம். ஒழி யட்டும். எல்லாம் அப்பா கொடுக்கும் செல்லம்.' எரிச்சல் வர, 'வரட்டும் கழுதை இன்று பேசிக் கொள்கிறேன்.' நினைத்துக் கொள்கிறாள்.



இதற்குள் பரசுவைத் தொடர்ந்து போகிறாள். தானாக எதுவும் சொல்வாரா காத்திருக்கிறாள். ஏதேனும் ஆரம்பித் தாலே திட்ட ஆரம்பித்து விடுவார் கணவன். கைகால் களைக் கழுவி விட்டு அமர்ந்தபோது இரவு சாப்பாட்டுக் கென்று செய்த சப்பாத்தியையும் குருமாவையும் வைக் கிறாள். எங்கோ பார்த்தவாறு சாப்பிடுகிறான் கணவன். பெண்டாட்டியோடு எதுவும் பேசவில்லை.

''ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க? உடம்பு நல்லா யில்லையா?''

''உடம்புக்கு என்ன?''

''பின்னே ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?''

''சொன்னா என்ன செய்யப் போறே?'' அவர் நக்க லாகக் கேட்க செல்வி சற்று பணிவுடன் பதில் சொல்லுகிறாள்.

''இல்லே... அர்ஜுன் வந்ததா ஜெயபாலன் சொல்லிச்சு. எல்லோரும் சுகந்தானே யாருக்கும் ஒண்ணுமில்லையே.''

''ஏதேது ஆடு நனையுதேன்னு ஓனாய் அழுவுது.''

''ஏங்க இப்படிச் சொல்லறீங்க? நடுவிலே ஏதோ மனசு வேற்றுமை. அதனால அவுங்களுக்கு ஒண்ணுன்னா நான் துடிக்க மாட்டேனா?''

''மனசு வேற்றுமைக்குக் காரணம் யாரு. உன் திமிர். நீ உசத்திங்கற திமிர்...''

''அப்படித்தான் வச்சுக்கங்களேன். என்னாச்சுன்னு சொல்லுங்களேன்?''

செல்வி கெஞ்ச,

"மகாலட்சுமி வீட்டுக்காரருக்கு ஹார்ட் அட்டாக். அதான்."

"என்னது?" என்றவள் பிழியப் பிழிய அழ,

"போதும் நடிக்காதே." என்றவரைப் பார்த்து,

"ஏன் இப்படிப் பேசறீங்க? ஒரு கஷ்டம்னா நான் போய் உதவி செய்யமாட்டேனா?"

"அப்படியா?"

"ஏங்க இப்படிப் பேசறீங்க. மகா என் நாத்தனாருங்க."

"அப்படியா? நீ உதவுவேன்னு நம்பிதான் ஹெல்ப்புக்கு உன் பொண்ணை அங்க விட்டுட்டு வந்திருக்கேன்" என்று நக்கலாகச் சொல்கிறார் பரசு.

அவர் சொல்ல, சொல்ல திக் பிரமை அடைந்தவளாய் அவரையே வெறித்துப் பார்க்கிறாள் செல்வி.

5



மனசாட்சி உறுத்தியதால் உதவி செய்ய வேண்டும் என்று தோன்றியதே தவிர, நாத்தனாரின் மேல் இன்னும் எரிச்சலும், அசிகையும் இருந்தது. இப்போது கணவன் பெண்ணை அங்கே விட்டு வந்தான் என்று சொன்னதிலிருந்து எரிச்சலும், ஆத்திரமும் தாங்க மாட்டாமல் போக சற்று பதை பதைப்புடன் வெடிக்கிறாள்.



"அறிவிருக்கா உங்களுக்கு? குழந்தை அவ. ஆஸ்பத்திரியிலே போய் என்ன செய்வா? ஏன் அவுங்களுக்கு பிள்ளை குட்டி இல்லே. பாத்துக்க மாட்டாங்களா?"

அதற்குப் பிறகு பேசவேயில்லை. போய் துணிகளை மாற்றிக் கொண்டு தூங்கப் போய்விட்டார். சாப்பிடப் பிடிக்காமல் இருக்கப் பிடிக்காமல், உட்காரப் பிடிக்காமல், நிற்கப் பிடிக்காமல் தவித்துக் கொண்டு இருந்தாள் செல்வி.

'புருஷனுக்கு புத்தி பேதலித்து விட்டதா? இங்கேயே பெண் வேலை ஒன்றும் செய்யாது. பாவம் குழந்தை. அது செல்லமாக வளர்ந்தது. அதைப் போய் விட்டு விட்டு வருவானேன். இவர் வேண்டுமானால் போய் இருக்கிறது தானே.' நினைத்து நினைத்து நெஞ்சு வலித்தது செல்விக்கு. இந்த மனிதரிடம் எப்படிக் கேட்பது? என்ன கேட்பது? பெண் எப்படி அங்கே இருக்கும்?

சட்டென்று ஏதோ ஞாபகத்திற்கு வர, பெண்ணின் செல்லில் தொடர்பு கொண்டாள்.

"தேனும்மா... தேனு... ராஜா என்னடா இப்படி பண்ணிட்டே."

"ஒண்ணும் இல்லேம்மா. கவலைப்படாதீங்க. அத்தை வீட்டுக்காரர். இப்பதான் கிரிடிகல் ஸ்டேஜ்லேந்து வெளியே வந்திருக்கிறார். அத்தையும் ரொம்பக் கவலையா இருக்காங்க. இன்னும் இரண்டு நாள்ல அத்தை வீட்டுக் காரரை டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்க. நானும் வந்துடுவேன் கவலைப்படாதீங்க."

பெண் சொன்னாலும் மனம் தழுதழுத்தது. ஏ.ஸி. அறையில், நுரை மெத்தை படுக்கையில் படுத்திருப்பவள்

இப்போது ஆஸ்பத்திரியில் போய் படுக்கிறாளா? மறுபடியும் இருப்பு கொள்ளாத நிலை. 'கடவுளே என் குழந்தை பாவம். இந்த சனியன் புடிச்ச ஆள் இவரு போய்த் தொலைக்க வேண்டியதுதானே.' ஆத்திரம், கோபத்தோடு முணுமுணுக்கிறாள். அப்படியே அமர்ந்தவாறே பெண்ணை வரவழைக்க என்ன செய்யலாம் யோசித்துக் கொண்டு இருக்கிறாள்.

உடல் நலம் சரியில்லை என்பது அழகான சாக்கு. கொஞ்சம் படுத்து விட்டாலும் போதும் எல்லாரும் என்ன என்ன என்று கேட்டு உயிரெடுத்து விடுவார்கள். எரிந்து விழும் கணவன்கூட உடம்பு சரியில்லை என்று படுத்து விட்டால் ஒன்றும் சொல்ல மாட்டான். வாயை மூடிக் கொள்வான். நாளைக்காலை படுத்து விட வேண்டியது தான்.

முடிவு செய்தவள் 'உடம்பு சரியில்லை' என்ற நாடகத்தை நடத்த ஆரம்பித்தாள். அடுத்த நாள் எழுந்து கொள்ளவே இல்லை. இழுத்துப் போர்த்து படுத்துக் கொண்டு இருக்கிறாள்.

பரசு மனைவியைத் திரும்பிப் பார்த்தவர், அதன் பிறகு அங்கே நிற்காமல் விடுவிடுவென்று கிளம்பிப் போய் விட்டார். எழுந்தவள் எரிச்சல் அடைந்தாள்.

'சே! இவனெல்லாம் ஒரு புருஷன். தன்னைவிட தன் மனிதர்களுக்கு உடம்புக்கு என்றால் விழுந்து, விழுந்து கவனிப்பான். தனக்கு என்றால் எப்போதுமே கம்மிதான்.' எரிச்சல், ஆத்திரத்தோடு தவிக்கிறாள். காலையில் தலையை வலிக்க, ஒரு காபியைக் கலந்து குடித்தாள்.



பின்னும் என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்க, சட்டென்று பெண்ணை செல்லில் தொடர்பு கொண்டால் என்ன என்று தோன்றியது. பெண் தூங்கிக் கொண்டு இருப்பாளோ, கல்லூரிக்குப் போகும் நாளில் தான் ஏழரைக்கு எழுந்திருப்பாள் தன் பெண். மற்ற நாட்களில் எட்டு எட்டரை ஆகிவிடும். இப்போது தூங்கிக் கொண்டிருப்பாளோ? எப்படி வேண்டுமென்றாலும் இருக்கட்டும். தன்னால் தன் பெண்ணைப் பார்க்காமல் கட்டாயம் இருக்க முடியாது. பெண்ணை நினைத்து நினைத்து மனம் அழுதது.

என்னதான் பெண்ணிடம் சண்டை போட்டாலும் பெண்ணைத் திட்டினாலும், பெண்ணை பார்க்காமல் ஒரு நாள் கூட செல்விக்கு இருக்க முடியாது. எப்போதும் இல்லாததாக இப்போது என்ன பெரிய உறவு வேண்டியிருக்கு? மகாலட்சுமி தான் எதுவும் வேண்டாம் என்று வெட்டிக் கொண்டு விட்டாளே. ஏதோ ஒரு முறை அவள் குழந்தைகளுக்கு சாப்பாடு போடவில்லை என்று வெட்டிக் கொண்டு போனவள், அண்ணனை மட்டும் அவ்வப்போது சந்திப்பது தெரியும். தன் கணவரின் அலுவலகத்திலேயே பார்த்துவிட்டு வந்து விடுவாள். தொடர்பு கொள்வதும் அங்கேதான். இப்போது பிள்ளையை வீடு வரைக்கும் அனுப்பி இருக்கிறாள். ஏதாவது பணம் வேண்டியிருக்குமோ? வேண்டி இருந்தாலும் எப்போதோ கணவனிடம் வாங்கி இருப்பாள். உதவிக்கு வேண்டுமென்றால் எவளையாவது நர்ஸை வைத்துக் கொள்ள வேண்டியதுதானே. எதற்கு தன் பெண். சனியன், பீடை மகாலட்சுமியை மனமாற வைகிறாள்.

அதற்கு மேல் தாங்க முடியாமல் பெண்ணை செல்லில் தொடர்பு கொள்கிறாள்.

''என்னம்மா?''

''என்னடா? அங்கே போய் உக்காந்துட்டே. அம்மாவுக்கு நீ இல்லாம முடியுமா?'' விசித்து, விசித்து அழுகிறாள்.

''அம்மா என்ன இது? எதுக்கு இத்தனை ஆர்ப்பாட்டம் பண்றீங்க? எனக்கு ரெண்டு நாள் காலேஜ் லீவு. மாமா ஆஸ்பத்திரியிலே. மாமி அப்படியே உடைஞ்சு போயிட்டாங்க. அர்ஜுன் சிஸ்டருக்கும் வர முடியலே. அதான் அங்க யாராவது ஒருத்தர் இருந்துதாம்மா ஆகணும். பாவமா இருக்கு. அப்பாதான் அங்க இருக்கறதா இருந்தார்.

அவருக்கு ஆபீஸ் வேலை எல்லாம் இருக்கவே. நான் இருக்கலாம்னு தோணுச்சு.''

''உன்னை நினைச்சு அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அம்மா நினைப்பு உனக்கு வரலியா?''

''ஏம்மா இப்படிச் சொல்றே? நீ அழறதைப் பார்த்தா மனசே ஓடலை. இங்கே இருப்பே கொள்ளலை. அப்பாவை இங்க இருக்கச் சொல்லிட்டு உன்னை வந்து பாத்துட்டுப் போறேம்மா. எனக்கும் உன் நினைவாத்தாம்மா இருக்கு.''

பெண் சொல்ல, அம்மாவின் மனம் ஆனந்தப்பட்டது.

''சீக்கிரம் வந்துடடீ கண்ணு. உன்னைப் பாத்தா தான் மனசு சாந்தமாகும்?''



''மத்தியானம் மாமி வீட்டுக்கு வருவாங்கம்மா. அப்ப சொல்லிட்டு வந்துடறேன்.''

பேசியது தன் பெண். பொத்தி பொத்தி வளர்த்த பெண். தன் குழந்தை இன்னொருத்தர் வீட்டிலே போய் மாட்டி கிட்டு இருக்கு. இதற்கெல்லாம் காரணம் தன் திமிர் பிடித்த புருஷன். மதியம் பெண் வரட்டும். இனிமேல் அந்த வீட்டுப் பக்கமே விடக்கூடாது. தன் கணவனே எது சொன்னாலும் என்னவானாலும் ஆகட்டும். இனிமேல் எதையும் ஒத்துக் கொள்ள முடியாது. டிபன் எதுவும் செய்யாமல் நேராக சமையலில் ஈடுபட்டாள். மத்தியானம் தன் பெண் வந்தால் சாப்பிட்டுப் போகட்டுமே. அவளுக்குப் பிடித்த சமையல்தான் செய்ய வேண்டும். பூண்டு தட்டி போட்டு ரசம் செய்தால் பெண் மிக மிக விரும்பிச் சாப்பிடும், உருளைக் கிழங்கு அவளுக்கு மிக மிகப் பிடிக்கும். அதுவும் குட்டி குட்டியான உருளைகளை தோலோடு பொரியல் செய்ய வேண்டும். மொறு மொறு வென்ற அந்த உருளைப் பொரியல் பெண்ணுக்கு மிக மிக இஷ்டம். தேங்காய், புதினா போட்டு அரைத்துப் பச்சடி செய்தாள்.

பெண்ணுக்கு மிகவும் பிடித்த கேசர் பேடாவை வேலைக்காரியை அனுப்பி வாங்கி வரச் செய்தாள். தான் ஒரு துண்டு கூட வாயில் போடாமல் பெண்ணின் வருகைக்காக வாயிலில் போய் அமர்ந்து கொண்டிருக் கிறாள். பெண் வரட்டும் சேர்ந்து சாப்பிடுவோம். குளிக்கக்கூட போகாமல் தொலைதூரத்துக்குப் போய் விட்ட பெண்ணை எதிர்பார்ப்பதைப் போல் பார்த்துக்

கொண்டு நிற்கிறாள். தனக்கு சாப்பிடக் கூடத் தோன்றாமல் சோர்ந்து போய் வாயிலைப் பார்த்தவாறே உட்கார்ந்துகொண்டு இருக்கிறாள்.

இங்கே பரசுவும் காலையிலிருந்து தவித்துக் கொண்டு தான் இருக்கிறார். தங்கை எதையுமே சாப்பிட மறுத்து ஆஸ்பத்திரியே கதியாக நிற்கிறாள்.

''என்ன மகா சாப்பிடு. பைத்தியமா நீ. அவருக்கு ஒண்ணும் இல்லே. மைல்ட் அட்டாக் தான்.''

''இல்லை அண்ணா. நீ எனக்காக சொல்றே? இத்தனை நேரம் ஆச்சு. நேத்து உள்ளே போனவர். இன்னும் இன்டன்ஸிவ் கேர்லேந்து வெளியே வரலை. என்னை சமாதானப்படுத்தாதே. எதுவா இருந்தாலும் பேஸ் பண்ணிதானே ஆகணும். அவருக்கு இப்படி இருக்கும் போது என்னால எப்படி அண்ணா சாப்பிட முடியும்?''

கடைசியில் பரசு, அர்ஜுன் டிபனை எடுத்து வந்திருந்த தேன்மொழி எல்லோருமே டாக்டரைப் பார்க்க,

''மகா இனிமேயாவது நீ சந்தோஷமா இருக்கணும். இன்னும் ஒரு ஆப் ஆன் அவர்லே ஐ.சி.யுலேந்து வெளியே கொண்டு வந்து படுக்க வக்கப் போறாங்களாம்?''

''மாமி நீங்க இனிமேலாவது சாப்பிடுங்களேன்.'' மகாலட்சுமியை வலுக்கட்டாயப்படுத்துகிறாள் தேன்மொழி.

''அவுங்க மாமி இல்லேம்மா அத்தைம்மா'' என்றவர்,

''பாரு மருமக வந்து செஞ்சுது சாப்பிடு'' என்கிறார்.

ஒரு வழியாக அத்தைக்கு டிபனைத் தந்து காபியைக் கலந்து கொடுத்து பாந்தமாகத் தேன்மொழி செய்யச்



செய்ய ஆச்சரியமாகப் பார்க்கிறார் பரசு. அர்ஜுன் ஒருவித நெகிழ்ச்சியுடன் பார்க்கிறான். எத்தனை நல்ல பெண். தன் மாமியைப் பார்த்திருக்கிறான். எப்போதுமே வசதி உள்ளவர்கள், இல்லாதவர்கள் என்று பிரித்துப் பார்ப்பாள். எப்போதும் கடுஞ் சொல்லே பேசுவாள். இந்தப் பெண் பரவாயில்லையே. சேற்றில் முளைத்த செந்தாமரை என்று சொல்வார்களே அது போல் அல்லவா இருக்கிறது. மிக மிகப் பணிவாகத்தான் இருக்கிறது. தனக்கும் தேவையானதை செய்து கொடுத்திருக்கிறது. ஒரு வார்த்தை கூட அகம்பாவமோ, கர்வமாகவோ பேசவே இல்லையே. மகாலட்சுமியின் கணவனை சாதாரண வார்டுக்கு மாற்றியவுடன், மகாலட்சுமி சற்று கலகலப்பாக மாறிப் போனாள்.

''அண்ணா உன் பொண்ணு பத்தரை மாத்து தங்கம். எத்தனை சுறு சுறுப்பு சமர்த்து.''

புகழ்ந்து தள்ளுகிறாள். மருமகளை அருகில் வைத்து தலையைத் தடவுகிறாள். ஜெனரல் வார்டுக்கு மாறியவுடன் மெதுவாகக் கண்ணைத் திறக்கிறார் மகாலட்சுமியின் கணவர் பாஸ்கரன். பின் சாதாரணமாகப் பேசுகிறார். மச்சினனைப் பார்த்து சந்தோஷம் அடைகிறார். தேன்மொழியைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்.

''இத்தனை பெரிய பெண்ணாவா வளர்ந்துடுச்சு.''

தேன்மொழியைப் பற்றி மகாலட்சுமி கணவனிடம் புகழ்ந்து தள்ளிவிட, முகமெல்லாம் புன்னகையோடு தேன்மொழியையே பார்க்கிறார் மகாவின் கணவர்.

"பரசு... நான் ஒண்ணு கேட்டா தப்பா எண்ண மாட்டீங்களே."

"என்ன பாஸ்கர். என்ன திடீர்னு. என் தங்கையையே உங்களுக்குக் கொடுத்திருக்கேன். நீங்க என்ன கேட்டாலும் உடனே கொடுத்துடுவேன்."

பாஸ்கர் சற்று தயங்க,

"என்ன பாஸ்கர் என்ன வேணும்? பணம் ஏதேனும் வேணுமா?"

"வேண்டாம்" என்று தலையை அசைக்கிறார்.

"பின்னே என்னப்பா...?"

"வந்து உங்க பொண்ணை, தேன்மொழியை எங்க வீட்டு மருமகளா ஆக்கணும்."

பரசு லேசாக அதிர்ந்துதான் போகிறார். அவருக்கும் அந்த ஆசை உண்டுதான். இருந்தாலும் பெண்டாட்டி என்ன சொல்வாளோ என்ன ஒரு உணர்வு. மேலும் பெண்ணுக்கு இவனை பிடிக்குமா என்ற யோசனை. பெண்ணிடம் ஒரு வார்த்தை கேட்டு சரி என்று சொல்லி விட்டால் அப்பவும் ஒன்றுமே இல்லை.

"ஏம்பா பொண்ணை கேக்கணுமா?"

பரசு லேசாகத் தலையை ஆட்ட, "நான் கேட்டுப் பார்க்கட்டுமா?" அவர் கேட்க, பரசு ஒத்துக் கொண்டார்.

வெளியே மகாலட்சுமியோடு இருந்த தேன்மொழி, அர்ஜுன் இருவரையும் கூப்பிடுகிறார்.

"ரொம்ப நன்றிம்மா" பாஸ்கர் கூற,



CPL613041

"எதுக்கு மாமா?"

"எத்தனை சிரத்தையா வேலை செய்திருக்கே?"

"ஏன் மாமா எல்லாத்தையும் பெரிசு படுத்தறீங்க."

"ஒரு ஒரு கேள்வி. டக்குன்னு பதில் சொல்லியா?"

"சொல்லுங்க மாமா?"

613041

"எம் பையனைக் கல்யாணம் பண்ணிப்பியா?" - அர்ஜுன், தேன்மொழி இருவருமே திகைத்துப் போயினர்.

"என்னம்மா திகைச்சுப் போயிட்டே? அர்ஜுன் ரொம்ப நல்லவன். ஒரு கெட்டப் பழக்கம் இல்லாதவன். அவனே நிறைய சம்பாதிக்கிறான். இதுலே என்னோட சொத்தும் அவனுக்கு வரும். பாக்கவும் ஹீரோ மாதிரி தானே இருக்கான். சரின்னு சொல்லுவியா?"

ஒரு நிமிடம் யோசிக்கிறாள் தேனு. அர்ஜுனைத் திருமணம் புரிந்து கொள்ளலாமா? வேண்டாமா? என்றெல்லாம் அவளுக்குத் தெரியவில்லை. இப்போது நோய் வாய்ப்பட்டிருக்கும் மனிதர் எழுந்து வரட்டும். அதற்கு அவருக்கு மனதிற்குப் பிடித்தது போல் பேச வேண்டும். பிறகு நிச்சயமா இல்லையா என்று முடிவு செய்யலாம்.

894.8113 LAT

"எனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லை மாமா." தேன்மொழி சொல்ல,

"ரொம்ப தேங்க்ஸ்மா. நம்ம குடும்பம் மறுபடியும் ஒண்ணா சேரணும்" என்கிறார் பாஸ்கர்.

"தேங்க்ஸ்மா" என்கிறார் பரசு மகளைப் பார்த்து சிரித்தபடி சொல்ல,

பாஸ்கர் அர்ஜுனைக் கூப்பிடுகிறார்.

''அர்ஜுன் உன் வைர மோதிரத்தைக் கழற்றி அவ கைல போடு. உன் மோதிரத்தை அவனுக்கும் போடும்மா. உன் கழுத்துச் செயினை அவ கழுத்திலே போடுறா.'' அப்பா கூற திகைத்துப் போகிறான் அர்ஜுன்.

''இப்ப என்ன அவசரம்? நீங்க முதல்ல நல்லபடியா எழுந்து வாங்க.'' பரசு சொல்ல,

''இல்லைப்பா இது எனக்கு எச்சரிக்கை. கடவுள் எச்சரிக்கை மணி அடிக்கும்போதே ஆட்டம் க்ளோஸுன்னு புரிஞ்சுக்கணும். நான் நல்லா இருக்கும்போதே இதை முதல்லே செய்திடலாமே.''

அவர் சொல்லச் சொல்ல ''உங்களுக்கு ஒண்ணும் ஆகாது.'' என்று சொன்ன பரசு,

''தேனு இங்கே வாம்மா'' என்றவர், அவளின் கையில் இருந்த நீல மோதிரத்தை அர்ஜுன் கையில் போடச் சொல்கிறார். அப்படியே அர்ஜுனும் தன் கையில் இருந்த வைர மோதிரத்தை அவளின் கையில் போடுகிறான். தன் கழுத்தில் போட்டிருந்த செயினை எடுத்து அவள் கழுத்தில் போடுகிறான். அப்பா சொல்ல சொல்ல செய்தாலும் தேன்மொழி ஒன்றும் சொல்லத் தோன்றாமல் நிற்கிறாள்.

''பரசு இன்னும் ஒரு முக்கியமான உதவி. தப்பா நினைக்காதீங்க. நான் எழுந்து வெளியே வந்த பிறகு அமர்க்களமாக கல்யாணத்தை வச்சுக்கலாம். ஆனா அதுக்கு முன்னாடி நாளைக்கு ரிஜிஸ்தர் மேரேஜுக்கு நீங்க ஏற்பாடு பண்ணுங்க.''

அவர் சொல்லச் சொல்ல பரசு, தேன்மொழி அதிர்ந்து போயினர்.





# 6

''இதப் பாருங்க.. எனக்கு இருக்கறது ஒரு பொண்ணு. அவ கல்யாணத்தை ஏதோ அன்னாடங் காய்ச்சி கல்யாணம் மாதிரி செய்ய முடியாது. ஊரு என்ன சொல்லும்? ஊரைக்கூட விடுங்க. உறவு முறை என்ன சொல்லும்? யார் முகத்திலே முழிக்க முடியும். நீங்க ஆசைப்பட்டபடி மோதிரத்தை போட்டாச்சு. முக்கால் நிச்சயம் ஆன மாதிரிதான். நீங்க உடம்பு சரி பண்ணிகிட்டு எழுந்து வந்திடுங்க. அப்புறம் கட்டாயம் கிராண்டா செய்வோம். உங்களுக்கும் மனுஷங்க அதிகம். எனக்கும் அதிகம். எல்லோர் மனதும் சந்தோஷப் படும்படி நடத்திடுவோம்.''

''அண்ணன் சொல்றது தான் சரிங்க. இப்ப முதல்லே உடம்பு சரி பண்ணிக்கங்க. நீங்க வீட்டுக்கு வந்து ஒரு மாசத்துக்குள்ளே கல்யாணத்தை வச்சிப்போம்.''

''இல்லை மகா. நான் சொல்றதை தயவு செய்து கேளு. கல்யாணம் நடந்தாகணும். ஒரு வேளை என் முடிவு சீக்கிரம் வந்திடுச்சுன்னா. அப்புறம் மனக் குறையோடு தான் போன மாதிரி இருக்கும்.''

''என்னங்க என்னன்னவோ பேசறீங்க?'' மகா துடித்துப் போகிறாள்.

''நாலு தடவை ஹார்ட் அட்டாக் ஆனவங்க எல்லாம் இன்னும் வாழ்ந்துட்டு இருக்கலையா? உங்களுக்கு

என்ன அவசரம்? போறேன் போறேன்னு சொல்நீங்க. என்னைக் கஷ்டப்படுத்தணும்னு பேசறீங்களா?'' சொல்லும் போதே கண்ணீர் வந்துவிட, துடைத்தபடி பேசுகிறாள்.

''நாமதான் நிச்சயம் பண்ணிட்டோமே. இனிமே தேன்மொழி நம்ம மருமக. கவலை இல்லாம இருங்க.'' மகா ஆசுவாசப் படுத்த,

''கவலை இல்லாம இருக்கத்தான் கேக்கறேன் மகா. ரிஜிஸ்தர் பண்ணிட்டா எனக்குக் கவலை இல்லாம இருக்கும். பிள்ளை கல்யாணத்தைப் பார்த்த மாதிரி இருக்கும். ஒருவேளை நான் இல்லேன்னாகூட பார்த் தோமேன்னு ஒரு சந்தோஷத்தோட போவேன்.''

''ஏன் சொன்னா நீங்க கேக்க மாட்டேங்கறீங்க?'' பரசு கேட்க,

''நானும் அதே சொல்லலாமா? இந்த உதவியைச் செய்தா மறக்கவே மாட்டேன். தயவு பண்ணுங்க'' பாஸ்கர் மெதுவாக எழுந்திருக்கத் தலைப்பட,

''என்ன இது ஏன் இப்படிப் பிடிவாதம் பண்றீங்க?''

''எனக்கு என்னவோ பயமா இருக்கு?''

''பயப்படறதுக்கு ஒண்ணுமே இல்லை'' பரசு சொல்ல,

''நாளைக்கு நாள் நல்லா இருக்கு. எந்தவித ஆர்ப் பாட்டமும் இல்லாமல் மேரேஜ் முடிச்சிடுவோம். அப் புறம் நீங்க சொல்ற மாதிரி கிராண்டா செய்துடுவோம்.''

அதற்கு மேல் பரசுவால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. மகா வேறு கெஞ்ச ஆரம்பிக்க, லேசாக தலை



அசைத்து வைத்தார். பாஸ்கரன் பரசுவின் கைகளைக் கெட்டியாகப் பிடித்தவாறே கன்னத்தில் வைத்துக் கொள்கிறார்.

பரசு பெண்ணைத் தனியாக அழைத்துப் போய் பேசுகிறார். ''உங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லைம்மா. காலைலே வந்திருக்க முடியலே. உன்னைப் பாக் கலைன்னா அவளுக்கு உடம்பு வந்திடும். கொஞ்ச நேரம் பாத்திட்டு வந்திடுவோம்.''

தேன்மொழி தலையை ஆட்ட, ''அம்மாகிட்டே எதுவும் சொல்லிடாத. இந்த கல்யாணத்தைப் பத்தி எதுவும் இப்ப தெரிய வேண்டாம்.'' பரசு சொல்லச் சொல்ல தலை ஆட்டுகிறாள் தேன்மொழி. மறுபடியும் உள்ளே போய் மகாவைப் பார்த்து விஷயத்தைச் சொல்லிவிட்டு பெண்ணை அழைத்துக் கொண்டு காரில் செல்கிறார்.

''என்னம்மா தேனு என்னடா இப்படி திடீர்னு அத்தை பையனை நிச்சயம் பண்ணிட்டாங்களேன்னு வருத்தமா?''

''அப்படியெல்லாம் இல்லைப்பா?''

''அர்ஜுனை உனக்குப் பிடிச்சிருக்கா?''

''சொல்லத் தெரியலைப்பா. அவுங்க நல்லவங்களாகத் தான் இருக்காங்க. ஆனாலும் பிடிச்சுதா இல்லையான்னு சொல்லத் தெரியலை.''

பெண்ணையே பெருமை பொங்கப் பார்க்கிறார். எத்தனை அறியாத பெண்ணாக இருக்கிறது. சூதுவாது இல்லாமல் பேசுகிறாள்.

''இல்லைம்மா ஒருவேளை உனக்குப் பிடிக்கலையோ தப்பு பண்ணிட்டேனோன்னு மனசு ஃபீலிங்கா இருக்கு.''

"அதெல்லாம் ஒண்ணும் இல்லைப்பா. கவலைப் படாதீங்க. எனக்கு எது நல்லதுன்னு எங்கப்பாவிற்குத் தெரியாதா?அவரை நான் நம்பறேன்." அப்பாவைப் பார்த்து சிரித்தபடி சொல்ல, அகமகிழ்ந்து போனார் பரசு.

'பொண்ணு எம் பொண்ணல்லவா?' மனசு ஆனந்தக் கூத்தாடியது. 'ஒருவேளை பெண்ணுக்குப் பிடிக்காதோ என்று தான் பயந்தது இப்போது இல்லை. தன் பெண் பத்தரை மாற்றுத் தங்கம்.' உள்ளுக்குள் மகிழ்ந்தபடியே காரை செலுத்துகிறார்.

"கண்ணு உன்னை ரிஜிஸ்தர் மேரேஜ் செய்து தரச் சொல்லி மாமா சொல்றார். நீ என்ன சொல்றே?"

"உங்க இஷ்டம்பா."

"அந்தப் பையன் ரொம்ப நல்லவன்மா. ரொம்ப புத்திசாலி. உன் மாமா பசங்களைவிட நூறு மடங்கு உசத்தியானவன். அவனை நீ கல்யாணம் பண்ணிக்கற துலே பரம சந்தோஷம்தான். ஆனா உன் அம்மாவுக்குத் தெரிஞ்சா பெரிய பிரச்சனை ஆயிடும். அதான் யோசிக் கறேன்."

தேன்மொழி ஒன்றும் பேசாமல் மௌனமாக தந்தையையே பார்க்கிறாள்.

"ஒரே கவலையா இருக்கும்மா. என்ன செய்யறதுன்னு தெரியலை."

"அப்பா உங்க மனதுக்கு சரின்னு பட்டதுன்னு ஓகேப்பா. அம்மாவை எப்படியாவது சமாளிச்சுப்போம்." தேன்மொழி சிரித்தபடி சொல்கிறாள். ஆனால் எல்லாம்



நம் கையிலா இருக்கு. சில நேரங்களில் தீர்க்கக் கூடிய பிரச்சனைகளைகூடத் தீராமல் பூதாகாரமாக இருக்கும். எந்தவித ஒரு வேலையையும் தப்பாகச் செய்தால் முடிவும் தப்பாகத்தான் போய் விடுகிறது. இந்த முடிவு எத்தனை பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிந்திருந்தால் பரசு மட்டுமல்ல, பாஸ்கரன் கூட எதற்கும் ஒத்துக் கொண்டிருக்க மாட்டார்.

மூன்று மணி வரையிலும் பசியோடு வாயிலில் அமர்ந்திருக்கிறாள் செல்வி.

'பெண் வருவாளா இல்லையா?' செல்லில் தொடர்பு கொண்டு களைத்துப் போயிருக்கிறாள். தேன்மொழியின் டெலிபோன் அணைக்கப்பட்டு இருந்தது. செல்வி தவித்துக் கொண்டு இருந்தாள்.

பெண் வருவாளா, மாட்டாளா? இந்த மனநிலையில் சட்டென்று பேச முடியவில்லை. பெண்ணைப் பார்த்ததும் உடைந்து போய் அழுகிறாள். தலை கலைந்து கண்கள் சிவந்து பார்க்கவே பரிதாபமாக இருந்தாள் செல்வி.

"அம்மா... என்னம்மா.." பெண் கேட்க,

"காலைலே வரேன்னே எப்ப வரே?" கேட்கும் போதே அழுகிறாள்.

"என்னம்மா நீ ஆஸ்பத்திரியிலிருந்து அவுங்க வந்த பிறகு தானேம்மா வர முடியும். எதுக்காக புயல்ல அடிபட்ட ஜீவன் மாதிரி இருக்கே."

"சொல்லுவடி. தாய்ப்பாசத்தைப் பத்தி உனக்கு என்ன தெரியும்? ராணி மாதிரி உன்னை வளத்துட்டு,

வேலைக்காரி மாதிரி யார் வீட்டு வேலையோ பாத்துட்டு வரே. நல்லாவா இருக்கு?''

இன்னும் ஏதோ சொல்லிக் கொண்டு போகிறாள். தேன்மொழி அம்மாவை சமாதானப்படுத்துகிறாள்.

''அம்மா காலையிலே சாப்பிட்டது. ஒரே பசி. ஏதேனும் செய்துருக்கிறீங்களா?''

செல்வி உருகிப் போகிறாள். பெண்ணுக்கு பெண்ணுக்கு என்று மாய்ந்து மாய்ந்து செய்ததை எல்லாம் பரிமாறுகிறாள்.

''வா சாப்பிடவா.''

பரசு சிரிக்கிறார். ''உன்னைப் பார்த்தா உங்கம்மாவுக்கு சாப்பாடு போடணும்னு தோணுது. என்னைப் பாத்தா தெரியலை பாத்தியா.'' சொல்லிச் சிரிக்கிறார். அவர்கள் இருவருக்கும் சாப்பாட்டைப் போட்டு விட்டு, சற்று சோர்வாக செல்வி அமர்ந்தபோது,

''அம்மா நீயும் சாப்பிடம்மா'' என்று அம்மாவை அமர வைத்து சாப்பாட்டைப் போடுகிறாள் தேன்மொழி.

''காலையில் என்ன டிபன்மா'' தேன்மொழி கேட்க,

மௌனமாக இருக்கிறாள் செல்வி. பரசு சற்று பாவமாக மனைவியைப் பார்க்கிறார்.

''தனக்குன்னவுடனே உங்கம்மா ஒண்ணையும் செய்துக்க மாட்டா? அப்படித்தானே?''

செல்வி மௌனம் சாதிக்க, எரிச்சலோடு கடிந்து கொள்கிறார் பரசு.



''அறிவிருக்கா உனக்கு. காலைலேந்தா பட்டினி கிடக்கறே? அது என்ன இது. புருஷன், குழந்தைங்க இல்லேன்னா பொம்பளைங்க ஒண்ணுமே செய்துக்கறதில்லே. ஏன் அப்படி? உங்களுக்கு மட்டும் பசி, கிசி எதுவுமே கிடையாதா? முகமெல்லாம் எப்படி ஆயிடுச்சு பாரு. தேனு அம்மாவுக்குப் பாத்துப் போடு.''

கரிசனமாக புருஷன் பேச, லேசாக புன்னகைக்கிறாள் செல்வி. பசியில் செல்வி அள்ளி அள்ளி சாப்பிடச் சற்று கவலையோடு பார்க்கிறார் பரசு.

'என்னாகும்? கொஞ்சம் லேட்டாக வந்ததிற்கே உண்ணா விரதம் என்றால் தங்கை பையனுக்கு நிச்சயம் செய்து விட்டு, நாளை கல்யாணம் என்று தெரிந்தால் என்னாகும்?' இதற்காகத்தானே அவர் யோசித்துக் கொண்டு இருக்கிறார். மறுபடியும் சிந்திக்கிறார். தங்கையின் கணவரைப் பற்றி நன்றாகத் தெரியும். பிடித்தால் பிடித்தபிடி. இப்போது போய் ரிஜிஸ்தர் மேரேஜ் வேண்டாம் என்றாலோ நிலைமை சீரியஸாகி விடும். இது நடந்தால் செல்வியின் நிலைமை இன்னும் மோசமாகி விடும்.

செல்விக்கு உடம்பு சரியில்லை. நாளை வருவதாகத் தொலை பேசியில் தொடர்பு கொள்கிறார் பரசு.

''அண்ணி உடம்பை பாத்துக்க அண்ணா. இவுங்களுக்கு ஒண்ணும் இல்லே. ஜெயாவும் வந்துட்டா. அதனாலே நீ கவலைப்படாதே. இவங்கதான் நாளைக்கு கல்யாணம்ன்னு ஜபிச்சுகிட்டு இருக்காங்க. என்ன முடியுமோ செய். எல்லாத்துக்கு மேலே கடவுள் என்ன

விருப்பப்படறாரோ. நம்ம கையிலே என்ன இருக்கு சொல்லு.''

மனம் நெகிழ்ந்து போகிறார் பரசு. மகா மிகவும் அனுசரித்துப் போகும் குணம். எப்போதுமே விட்டுக் கொடுத்து விடுவாள். இப்போது என்று இல்லை. சிறுவயதிலிருந்தே இந்த குணம் தான். புடவைகள் வாங்கிக் கொண்டு வருவார் பரசு. செல்வி நல்லதாக இருப்பது எல்லாவற்றையுமே முதலில் எடுத்துக் கொண்டு விடுவாள். மிச்சம்தான் மகாவிற்கு. இதற்காக ஒரு நாள் கூட மகா சண்டை போட்டதில்லை. சில நாட்கள் மகா கையில் இருக்கும் புடவைகளைக் கூட பிடுங்கிக் கொள்வாள் செல்வி. தப்பித் தவறிக்கூட அண்ணனிடம் அண்ணியைப் பற்றி புகார் சொன்னதில்லை. எதேச்சையாகவே பரசுவே பார்த்துத் தெரிந்து கொண்டிருக்கிறார்.

சில பேர் போல் வம்புக்கு அலைந்து கொண்டு ஓடி வர மாட்டாள். ஒன்று பேசினால், .பத்து பேசி சண்டை போடும் ரகம் கிடையாது. கோபம் வந்தாலே பேசவே மாட்டாள். உம்மென்று இருப்பாள். அதிலிருந்தே கோபம் என்று தெரிந்து விடும். மகா எப்படிச் சொன்னாலும் ஒத்துக் கொள்வாள். ஆனால் அவள் கணவன்.

இரவு முழுவதும் இந்த உணர்வுகளிலேயே இருந்த பரசு 'என்ன ஆகும்? திருமணம் இப்போதைக்கு நடத்த வேண்டாமா? இரவு முழுவதும் யோசித்ததில் பாஸ்கர் சொல்வது போல் திருமணத்தை முடித்து விட வேண்டியது தான். அர்ஜுன்தான் மாப்பிள்ளை என்று பெண்ணுக்கு முடிவு செய்தவன் ஏன் இந்தப் பின்னேற்றம்? பார்த்துக் கொள்வோம்.



அடுத்த நாள் காலையிலேயே எழுந்திருக்கிறார் பரசு. தேன்மொழியையும் எழுப்பி விடுகிறார். 'அம்மாவிடம் ஏதேனும் சொல்லிவிட்டுக் கிளம்பிவிடு. நான் காரில் முதலில் போய் தெருமுனையில் நின்று கொள்கிறேன். நீ வந்து ஏறிக் கொள்'' என்பது வரை ஏற்பாடாயிற்று.

சிறிது நேரத்தில் கல்லூரியில் ஒரு பெண்ணுக்குத் திருமணம் என்று பொய் சொல்லிவிட்டு புதிதாக வாங்கிய பட்டுப் புடவை ரவிக்கை அணிந்து கெம்பு செட் அணிந்து வெளியே வருகிறாள்.

தன் நாத்தனாரின் வீட்டைத் தவிர பெண் எங்கே போனாலும் ஒத்துக் கொள்வாள் செல்வி. தன் நாத்தனாரிடம் பெண் போகாது இருந்தாலே போதும்.

கிளம்பும்போது தேன்மொழி அம்மாவை விழுந்து வணங்க, ''என்னடா ராஜா என்ன இது? எதுக்குக் கீழே விழுந்து கும்பிடறே?'' செல்வி பாசமாகக் கேட்க,

''இல்லைம்மா இது புதுப்புடவை. புதுசு கட்டினா உங்க கால்ல விழுவேன் இல்லே.'' தேன்மொழி சொல்ல, செல்வி பூரித்துப் போகிறாள்.

''பூ இல்லாமப் போறே இரு'' என்று தெருவில் போகும் பூக்காரியிடமிருந்து மூன்று முழம் வாங்கி தலையில் சூட்டுகிறாள்.

'அப்...பா... பொண்ணு எத்தனை அழகு. திருஷ்டி சுத்திதான் போடணும்.' நினைத்தவாறே தன் வேலையை கவனிக்கப் போகிறாள்.

அடுத்த அரை மணியில் பரசு பெண்ணை அழைத்துக் கொண்டு ரிஜிஸ்தர் ஆபீசில் இருக்க, மகா அர்ஜுனோடு அங்கு வந்து நிற்கிறாள். எல்லா ஏற்பாடுகளையும் ஏற்கனவே செய்து விட, குறிப்பிட்ட நேரத்தில் இருவரும் கையெழுத்துப் போட, பரசு, மகா சாட்சிக் கையெழுத்துப் போடுகிறார்கள்.

''இந்த மாலையை அர்ஜுன் கழுத்திலே போடு. அர்ஜுன் இதை தேனு கழுத்திலே போடு. கையைப் புடிச்சுக்க'' மகா சொல்ல, இருவரும் மாலையும் கழுத்துமாக ஒருவரை ஒருவர் பிடித்தபடி வெளியே வர, ஏதோ வேலையாக அந்தப் பக்கமாக வந்த சிவாவின் கண்ணில் பட்டனர்.

## 7



சிவா ஆச்சரியப்படுகிறான். அதிர்ந்து போகிறான். தான் நிஜத்தையா பார்க்கிறோம். கைகளால் லேசாக கிள்ளிப் பார்த்துக் கொள்கிறான்.

பரசு மாமாவையும், அவர் தங்கை மகாலட்சுமியையும் பார்த்ததும் நடந்தது நிஜம் என்று புரிந்தது. நிஜம் புரிந்ததும் ஆத்திரம் எரிச்சல், ஏமாற்றம் எல்லாம் சேர, அங்கிருந்து மெதுவாகக் கிளம்புகிறான். இத்தனை நாட்கள் எடுபிடியாக வேலை செய்தது யாருக்காக? அத்தை எத்தனை அவமானப்படுத்தி இருக்கிறாள்.



இத்தனை அவமானத்தையும் பொறுத்துக் கொண்டது எதனால்? தனக்கு எத்தனை அவமானம்? அத்தை தன் கீழ் இருக்கும் வேலைக்காரனைக் கூட இத்தனை கேவலப் படுத்தியதில்லை. மாமா கடையிலிருந்து ஆள் அனுப்பினாலும் ஏதேனும் ஒரு வேலை சொல்வாள். மறந்து விட்டால் சிவா இருந்தால் 'டேய் கண்ணா நீ போயிட்டு வந்திடுடா. நான் சொல்ல மறந்துட்டேன்டா. உங்க மாமா பார்த்தார்னா என்னை சொல்லால தைச்சுத் தீர்த்துடுவார்.' இப்படி சொன்ன போதெல்லாம் 'பரவாயில்லை அத்தை கொடுங்க. நான் இருக்கும்போது உங்களுக்கு என்ன கவலை' என்று வாங்கிக் கொண்டு வருவான். இதையெல்லாம் எதற்கு செய்தான். அத்தைப் பெண் தனக்குத் தான் என்று தானே. இப்போது?

ஆத்திரத்தை அடக்க முடியாமல் தவிக்கிறான். இன்று அப்பாவின் வேலையாக எங்கோ போக வேண்டும் வந்த வேலையை மறந்துவிட்டு நேராக அத்தையின் வீட்டிற்குப் போகிறான்.

இங்கே திருமண சந்தோஷம் எதுவும் இல்லாமல் சாதாரணமாக இருந்தாள் தேன்மொழி. அர்ஜுனும் புது மாப்பிள்ளை என்று முறுக்கு எதுவும் இல்லாமல் மிகச் சாதாரணமாக இருந்தான். புது மனைவி இருக்கிறாளே என்ற சந்தோஷமோ, துடிப்போ, ஆர்வமோ எதுவும் இல்லாது இருந்தான். இருவருமே கையைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதால் கையைப் பிடித்துக் கொண்ட மாதிரி இருந்தது. காரில் மாமியாரோடும், கணவரோடும் பின் சீட்டில் அமர்ந்து கொண்டாள் தேன்மொழி.

பரசு முன் சீட்டில் அமர்ந்து கொண்டு நேரே மகாவின் கணவர் இருக்கும் ஆஸ்பத்திரிக்கு போனார்கள்.

பிள்ளையும், மருமகளையும் பார்த்த பாஸ்கர் மிக மிக சந்தோஷப்பட்டார். சட்டென்று எழுந்து அமர்ந்து கொண்டார்.

''படுங்க... இன்னும் டிரிப்ஸ் ஏறிகிட்டு இருக்கு. படுங்க மாப்பிள்ளை.'' பரசு பதறிப்போக.

''ஆயிரம் யானை பலம் வந்த மாதிரி இருக்கு எனக்கு.'' பாஸ்கர் குதூகலித்தார்.

பரசுவின் கையைப் பிடித்துக் கொண்டார்.

''ரொம்ப நன்றிப்பா.''

''என்ன நீங்க... எம் பொண்ணுக்கு நல்ல இடத்துலே முடிஞ்சதுன்னு நான் சந்தோஷப்படறேன். நீங்க வேற.''

''இல்லைப்பா. உன்னோட சங்கடம் எல்லாம் எனக்குத் தெரியும். எல்லாத்தையும் தூக்கிப் போட்டு என் ஆசையை நிறைவேத்தி வச்சியே தேங்க்ஸ்.''

''உங்க ஆசை நிறைவேறியாச்சு. இனிமே சந்தோஷமா இருக்கணும். நான் ஆபீஸ் போயே நாலு நாளாச்சு. போயிட்டு இன்னும் இரண்டு அவர்லே வந்துடறேன். நான் போலேன்னா அப்படியே எல்லாத்தையும் வச்சிருவாங்க. பாத்துட்டு வந்திடறேன். மகா காலை லேந்து ஒண்ணுமே சாப்பிடலை இல்லை .உங்க மூணு பேருக்கும் ஏதாவது வாங்கிட்டு வரட்டுமா? ஜெயா நீ ஏதான சாப்பிட்டியா?''



ஊரிலிருந்து வந்த மகாவின் பெண்ணைக் கேட்கிறார் பரசு.

''நான் சாப்பிட்டாச்சு மாமா'' என்கிறாள் ஜெயா.

''மகா நீ போய் பையன் மருமகளைக் கூப்பிட்டுகிட்டு போய் சாப்பிட்டுட்டு வந்துடு'' பாஸ்கரன் சொல்ல,

''வாம்மா மகா. குழந்தைகளும் ஒண்ணும் சாப்பிடலை வா.''

பரசு கூப்பிட புள்ளை, மருமகளை அழைத்துக் கொண்டு அண்ணனோடு போகிறாள் மகாலட்சுமி.

அவர்கள் மூவரையும் அமரச் செய்து விட்டு அவர்களுக்கு வேண்டியதை ஆர்டர் கொடுத்துவிட்டு, அவர் நகர முற்பட்டபோது,

''அப்பா நீங்களும் சாப்பிடுங்க'' தேன்மொழி கூற,

மகாவும் ஆரம்பிக்கிறாள்.

''அண்ணா இப்பவே மணி ஒண்ணாகப் போவுது. நீயும்தான் ஒண்ணும் சாப்பிடலை. சாப்பிட்டு விட்டு போ.''

''ஆமாம் மாமா. ஏஜ் ஆனா கரெக்ட் வேளையிலே சாப்பிட்டுடணும். நீங்களும் உக்காந்து சாப்பிடுங்க.'' அர்ஜுன் கூற பரசுவும் உட்காருகிறார். தனக்கு வேண்டியதை வரவழைத்துவிட்டு, எல்லோருடனும் சாப்பிடுகிறார். தன் காரிலேயே அவர்களை மருத்துவமனையில் இறக்கிவிட்டு அவர் கிளம்பிச் செல்கிறார்.

ஜெயாவும், மகாலட்சுமியும் கிளம்பிச் சென்று விட, தேன்மொழியும், அர்ஜுனும் அங்கே காவல் இருந்தனர்.

பாஸ்கர் சிறிது நேரம் பிள்ளையிடமும், மருமகளிடமும் சந்தோஷமாக அளவளாவிவிட்டு தூங்கத் தொடங்கு கிறார்.

அர்ஜுன் தன்னுடைய மணாளன்தான். இருந்தாலும் அவளிடம் ஸ்பெஷலாக எந்தவித உணர்வும் வரவில்லை. எப்போதும் பேசுவது போல்தான் பேசுகிறாள். அர்ஜுனும் அப்படியேதான் இருக்கிறான்.

மாமனார் உறங்கிவிட மெதுவாக அங்கிருந்து வெளியே வருகிறாள் தேன்மொழி. வெளியே ஹாலில் அமர்ந்து வருவோரைப் பார்த்தவாறே புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறான் அர்ஜுன். என்ன செய்வதென்று தெரியாமல் அவனுக்கு எதிரில் அமர்ந்தவாறே அங்கே இருக்கும் பேப்பரைப் படிக்கிறாள் தேன்மொழி.

''ஹாய் ஹனி.... இங்கே எங்கே?'' என்றபடி வருகிறான் மகேஷ்.

''ஹாய் மகேஷ். நீங்க எங்க இங்கே?'' என்றபடி சிரிக்கிறாள் தேன்மொழி.

''என் பிரண்டுக்கு ஆக்ஸிடண்ட். நேத்து அட்மிட் பண்ணோம். அதான் எப்படி இருக்கான்னு பாத்துட்டு வரலாம்னு கிளம்பி வந்தேன். ஆமா நீ எங்கே இங்கே?''

சட்டென்று அர்ஜுனைப் பார்க்கிறாள். ''இவர் யாருன்னு தெரியுமில்லே. எங்கப்பாவுடைய தங்கை பையன். எங்கப்பாவோட தங்கச்சி புருஷனுக்கு உடம்பு சரியில்லை. மைல்ட் ஹார்ட் அட்டாக். இன்டன்ஸிவ் லேர்ந்து இப்பதான் இங்க வந்தார். இப்ப பரவாயில்லை. அதான் பாக்க வந்தேன்.''



''பாத்துட்ட இல்லே. வா. நான் உங்க வீட்லே டிராப் பண்றேன்.''

''இல்லை அத்தை எல்லாம் வீட்டுக்குப் போயிருக் காங்க. அதான் நான் காவல் இருக்கேன்.''

''ஏன் இவர் என்ன செய்யப் போறார்? இவரைப் பாத்துக்கச் சொல்லிட்டு வா.''

''வேணாம் மகேஷ் அப்பா வந்து கூப்பிட்டுகிட்டு போவார். ஈவினிங் நாலு மணிக்கு வந்துடுவேன். இருன்னு சொல்லிட்டுப் போயிருக்கார்.''

''ஒகே... நாலு மணிக்கு அப்பா வரதுக்குள்ளே வந்துடலாம்ல.''

அவன் கூப்பிட என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கிறாள் தேன்மொழி. பின் மெதுவாக அர்ஜுனிடம் கேட்கிறாள்.

''நான் போயிட்டு வந்துரட்டுமா? நீங்க இங்க இருப்பீங்களா?''

அவள் கேட்க,

''நீ போ... நான் பாத்துக்கறேன்..'' அர்ஜுன் சொல்ல.

''தேங்க்ஸ்'' என்றவாறே கிளம்புகிறாள் தேன்மொழி.

மகேஷோடு கிளம்பிச் சென்று விடுகிறாள் தேன்மொழி. தேன்மொழியை அருகில் இருக்கும் புத்தக கண்காட்சிக்கு அழைத்துச் செல்கிறான் மகேஷ். அவள் ஆசைப்பட்ட புத்தகங்களை வாங்கிக் கொடுத்தான்.

பின் தேனுக்குப் பிடித்த பஞ்சு மிட்டாய், பாப்கார்ன் எல்லாம் வாங்கித் தந்தான். பிறகு இருவரும் ஒரு

ஓட்டலுக்குப் போய் பேச ஆரம்பித்தனர். பிஸினஸ், கம்ப்யூட்டர், சினிமா அவள் படிப்பு என்று எங்கெங்கோ பேச்சு தொடங்கி, டி.வி. தொடர்கள், ஜோக்ஸ் என்று போய் நேரம் போனதே தெரியவில்லை. மணி நான்கைத் தொட்டு விட,

''வா ஏதான சாப்பிடலாம்'' அவன் கூப்பிட,

''இல்லை மகேஷ் நான் லேட்டாதான் சாப்பிட்டேன்.''

''அடாடாடா எனக்குப் பசிக்குது. காலைல சாப்பிட்டது.''

''ஐயையோ நீங்க சாப்பிடவே இல்லையா'' என்றவாறே அவனோடு உட்காருகிறாள்.

''உனக்குப் பிடிச்ச பாஸந்தி இந்தா.'' அவன் சொல்ல,

''ஐயோ நிறைய வாங்கிக் கொடுத்துகிட்டே இருக்கீங்க. இப்பதான் வயிறு ரொம்ப சாப்பிட்டேன்.''

''பரவாயில்லை சாப்பிடு.'' தேன்மொழியும் ஒரு செல்ல சிணுங்கலோடு சாப்பிடுகிறாள்.

மணி ஐந்தைத் தொட்டபோதுதான் அவளுக்கு வெகு நேரம் ஆகிவிட்டது தெரிந்தது.

''ஐயையோ அப்பா நான்கு மணிக்கே வரேன்னு சொன்னாரே. மகேஷ் கிளம்பணும். அப்பா வரேன்னாரே. ப்ளீஸ் சீக்கிரம்.'' தேன்மொழி பதற, பதற... மகேஷ் தேன்மொழியை அழைத்துக் கொண்டு வேகமாக வருகிறான். ஆஸ்பத்திரியை நெருங்கியபோது பரசு வாயிலிலேயே இப்படியும் அப்படியுமாக உலாவிக் கொண்டு இருப்பது தெரிந்தது.



மகேஷ் ஒரு நிமிடம் தயங்குகிறான். ''ஹனி நீ போயிடு. மாமா வந்தா பிரச்சினை ஆயிடும்'' சொல்லி விட்டு அவன் கிளம்பி விடுகிறான்.

காரிலிருந்து இறங்கி விடு விடுவென்று உள்ளே போகிறாள் தேன்மொழி. நல்லவேளை அப்பா அவளைக் கவனிக்கவில்லை. வேறு வழியாக உள்ளே சென்ற போது, பாஸ்கர் மாமா படுக்கையில் படுத்துக் கிடக்க, அர்ஜுன் தலை குனிந்து அமர்ந்திருக்க, மகாலட்சுமி ஏதோ மெலிதான குரலில் அர்ஜுனிடம் கிசுகிசுத்துக் கொண்டிருந்தாள். முகம் முழுவதும் கோபத்தின் வசப் பட்டு இருந்தது. வார்த்தைகள் சற்று தடித்தது போல் இருந்தது. அர்ஜுன் முகத்தில் உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் ஒன்றும் பேசாமல் மௌனமாக அம்மா கேட்பதையே கேட்டுக் கொண்டிருக்கிறான். அவ்வப்போது அம்மாவையே பார்க்கிறான்.

தேன்மொழி உள்ளே நுழைந்ததுமே பேச்சு சட்டென்று நின்றது. அர்ஜுன் அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு தலையைக் குனிந்து கொள்கிறான். மகாலட்சுமியும் சற்று கடுகடுப்புடன் அமர்ந்திருக்கிறாள். சாதாரணமாகத் தேன்மொழியைப் பார்த்தாலே,

''என்னம்மா வாம்மா பக்கத்துலே உட்காரு'' என்று வாஞ்சையாகத் தடவிக் கொடுப்பாள். இன்று என்ன ஆகி விட்டது?

யோசிக்கிறாள் தேன்மொழி.

ஒருவேளை மாமாவை இப்படி விட்டு விட்டுப் போனதில் அத்தைக்குக் கோபம் வந்து விட்டதோ.

சொல்லி விட்டு தானே போனேன். அர்ஜுனிடம் சொன்னேனே. ஏதோ பழைய மாமன் மகள் போல் தன்னை எண்ணுகிறாளே தவிர, அர்ஜுனின் மனைவியாக எண்ணத் தோன்றவே இல்லை. இப்போது கூட அது நினைவுக்கு வராமல் போக,

''என்ன அத்தை கோபமாக இருக்கீங்களா என்னாச்சு? அர்ஜுன் ஏதாவது தப்பு பண்ணிட்டாரா?'' கேட்கிறாள் தேன்மொழி.

ஒருமுறை அண்ணன் மகளையே தீர்க்கமாகப் பார்க்கிறாள் மகாலட்சுமி. 'இவள் மட்டும் என் அண்ணனின் மகளாக இல்லையென்றால் நடப்பதே வேறு' என்று நினைத்தவள் சற்று பொறுமையாக, ''என் பிள்ளை எந்தத் தப்பும் பண்ணவே மாட்டான். அவனுக்கு பண்ணவும் தெரியாது'' என்கிறாள்.

''பின்னே... நீங்க கோபமாக இருக்கற மாதிரி இருக்கிறீங்க?''

''அவன் நல்லவனா இருக்கானே. அதை நினைச்சுக் கோபம். ரொம்ப நல்லவனாகவும் இருக்கக் கூடாதும்மா. எல்லோரும் மிளகாய் அரைச்சுட்டுப் போயிடுவாங்க.''

''நீங்க என்ன சொல்றீங்கன்னே புரியலை. என்ன ஆச்சு? யார் இவரை ஏமாத்தினாங்க.''

ஏதோ சொல்ல வாயெடுத்தவளை அர்ஜுன் கண்களில் சமிக்ஞை செய்து எச்சரிக்க, மகாலட்சுமி மௌனமானாள். இதற்குள் உள்ளே வந்த பரசு, பெண் அங்கே இருப்பதைப் பார்த்து இன்னும் ஆத்திரமும் எரிச்சலும் அடைகிறார்.



படுக்கையில் படுத்திருக்கும் பாஸ்கரைப் பார்த்து விட்டு, அவர் உறங்குவதைப் பார்த்ததும் தன் மகளை சைகையில் வெளியே வரும்படி அழைக்க, தேன்மொழியும் சற்று பயந்தபடிதான் போகிறாள். 'நான்கு மணிக்கு வருகிறேன் என்று சொல்லி விட்டுப் போனார். நாம் அநியாயமாக லேட் செய்து விட்டோம். அதற்குத்தான் திட்டப் போகிறார். சரி வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான்.' நினைத்தவாறே தயங்கித் தயங்கி அவள் செல்ல, அவளின் பின்னே அவளைக் காப்பாற்றுபவன் போல் அர்ஜுன் செல்ல, அவனின் பின்னே அவன் தாயும் செல்கிறாள்.

''என்ன பண்ணிகிட்டு இருக்கே? உன்னை ஆஸ்பத்திரியிலே இரு. நாலு மணிக்கு வந்திடறேன்னுதானே சொல்லிட்டுப் போனேன். எங்கே போனே நீ?''

''இல்லேப்பா.. மாமா தூங்கிட்டு இருந்தாரா. இங்க போரடிச்சுது. அத்தையும் ஜெயாவும் வீட்டுக்குப் போயிட்டாங்க. அப்ப நம்ம மகேஷ் வந்தாரு. புக் எக்ஸிபிஷன் நடக்குது வெளியே போயிட்டு வரலாம் வர்றியான்னு கூப்பிட்டாரு. அர்ஜுன் கிட்டே சொல்லிட்டுதான் கிளம்பினேன். இதப் பாருங்க புக்ஸ் கூட வாங்கிக் கொடுத்திருக்காரு'' மகாலட்சுமி மௌனமாக அண்ணனைப் பார்க்க,

''என்னம்மா இப்படிச் செய்யறே? உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சு. அது தெரியும் இல்லே. புருஷன் இருக்கும்போது இன்னொருத்தர்கூட கிளம்பிப் போவாங்களா?''

''என்னப்பா இன்னொருத்தர்னு பேசறீங்க நம்ப மகேஷ்ப்பா.''

''யாரும்மா அவன்?''

''நம்ப ரிலேடிவ்பா. இவர் கிட்டே சொல்லிட்டு தானே கிளம்பினேன். இதுலே என்னப்பா தப்பு?''

''தப்பும்மா. புருஷனை பக்கத்துலே வச்சுகிட்டு இன்னொருத்தரோடு ஊர் சுத்தறது தப்பு. இப்படி பண்ணிட்டு வந்துட்டு எங்கிட்டயே பேசிகிட்டிருக்கே நீ'' அவர் பல்லைக் கடிக்க,

''ப்ளீஸ் மாமா அவ எதுவுமே தப்பா பண்ணலே. ரொம்ப போரடிச்சுதுன்னு அவ ஃபீல் பண்ணவுடனே நான் தான் அனுப்பி வச்சேன். தயவு செய்து இதை பெரிசு படுத்தாதீங்க'' என்கிறான் அர்ஜுன்.

அர்ஜுன் சொன்னதும் வாயைத் திறக்காமல் சற்று மௌனம் சாதிக்கிறார் பரசு.

''சரி வா கிளம்பலாம்'' அவர் சற்று கடுப்பாகக் கூற,

''ப்ளீஸ் மாமா. சாதாரண விஷயத்தைப் பெரிசு படுத்தாதீங்க. எனக்காக'' அவன் சொல்லி அனுப்புகையில் ஒரு நீண்ட பெருமூச்சை விடுகிறார் பரசு.

'இப்படி ஒரு முட்டாள் பெண் இருக்குமா? வீட்டிற்குப் போய்தான் உபதேசிக்க வேண்டும்.' நினைத்துக் கொள்கிறார். 'நாம் திட்டமிட்டபடி என்ன நடந்து விடுகிறது? மேலே இருப்பவன் எண்ணமிட வேண்டாமா?' கார் போர்ட்டிகோவில் நுழையும்போதே பத்ரகாளியாக நிற்கும் மனைவியைப் பார்த்து திடுக்கிட்டுப் போனார் பரசு.





# 8

என்னாயிற்று? பெண்டாட்டி ஏன் இப்படி தலைவிரி கோலமாக நிற்கிறாள். முகம் உப்பிப் போய் இருக்கிறது. கண்கள் சிவந்து போய் ஏறக்குறைய கண்ணகி பாண்டிய மன்னனிடம் இப்படி நின்றிருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு சீற்றத்தோடு நின்று கொண்டு இருக்கிறாள். அப்படி நினைக்கையிலேயே அந்தச் சூழ்நிலையும் மறந்து சற்று உதடுகளில் ஒரு இளநகை தோன்றியது.

வீட்டின் அருகே காரை நிறுத்தி உள்ளே நுழைய முற்பட்டதுமே ''என்னய்யா கல்யாணம் நல்லபடியா முடிஞ்சுதா?'' என்று சகதர்மிணி கேட்க, அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'மிக, மிக ரகசியமாக அல்லவா வைத்திருந்தோம். இவளுக்கு எப்படித் தெரியும்? இல்லை வேற ஏதாவது கல்யாணத்தைப் பத்திப் பேசுகிறாளா?' மௌனமாக பெண்டாட்டியைப் பார்க்க,

''ரொம்ப அழகா இருக்கு. ரொம்ப ரொம்ப அழகாயிருக்கு'' என்று கத்துகிறாள்.

சட்டென்று சுற்றும் முற்றும் பார்க்கிறார். யாரும் இல்லை. டிரைவரைத் தவிர வேறு யாரும் இதை கேட்டிருக்க முடியாது. வீடே பெரிய பங்களா போன்ற அமைப்பு. சுற்றிலும் மூன்று ஏக்கருக்கு மேல் தோட்டமும், துரவுமாக யாருமே எளிதில் நுழைய முடியாது.

இருந்தாலும் கார் ஓட்டுனரின் முன் இப்படிப் பேசியது அவருக்கு எரிச்சலை விளைவித்தது. பல்லைக் கடித்தபடி உள்ளே போகிறார். அப்பா திட்டியதும்தான் நிஜம் புரிந்தது தேனமொழிக்கு. இப்போது அம்மாவும் கல்யாணம் அது இது என்று சொன்னது பயத்தை ஏற்படுத்தியது. அம்மா என்ன திட்டப் போகிறாரோ. எதிர்பாராமல் நடந்த விபத்து இது என்றால் அம்மா ஒப்புக் கொள்வாளா? வாழ்க்கையில் எத்தனையோ எதிர்பாராதது நடக்கலாம். எதிர்பார்த்ததேவா எப்போதும் நடக்கிறது? ஆனால் எதிர்பாராதது நடந்தால் நம்மால் தான் ஜீரணிக்க முடிவதில்லை. அம்மா... அம்மாவை எப்படி சமாளிப்பாளோ? கூடுமான வரை சாதாரணமாகவே இருக்க முற்பட்டாள்.

உள்ளே காலடி வைத்ததுமே அம்மா ஆரம்பிக்கிறாள்.

"அப்பனும், மகளும் எத்தனை நாளா பிளான் பண்ணியிருந்தீங்க. ஏண்டி அவுங்க வீட்டு மனுஷங்க நம்பளை மதிச்சதுகூட கிடையாது. நம்மோட எந்த விசேஷத்திற்கும் வந்ததில்லை. ஏறக்குறைய பிரிஞ்சு போன குடும்பம். உங்கப்பா கம் போட்டு ஒட்ட வைத்து சேர்க்கப் பார்க்கிறாரா?"

பெண்டாட்டி பேசுவதை மௌனமாக கேட்டுக் கொண்டிருக்கிறார். அவள் பேசி முடிக்கும் வரை கேட்டுக் கொண்டிருந்தவர், பிறகு மெதுவாக ஆரம்பிக்கிறார்.

"எதையாவது வாய்க்கு வந்ததை பேசாதே."

"நான் பேசலேன்னா உண்மை பொய் ஆயிடுமா?"



"நீ பேசினா மட்டும் பொய் உண்மையாய் ஆயிடுமா?" பரசு வாதம் பண்ணுகிறார்.

"எது பொய்? இவளுக்கு உங்க தங்கச்சி மகனை கட்டி வைக்கலை. ரிஜிஸ்தர் மேரேஜ் செய்து வைக்கலை."

பரசு மெதுவாக தலையை ஆட்டுகிறார். செல்வி எரிச்சலோடு பேசுகிறாள்.

"நீ மனுஷனாய்யா? நீ நல்ல கதிக்கே போக மாட்டே. இதுக்கு என்ன வயசாச்சுன்னு கல்யாணம் பண்றே? உன் உறவு முறை விட்டுடக்கூடாதுன்னு எம் பொண்ணை மிரட்டி கல்யாணத்துக்கு ஒத்துக்க வச்சிருக்கே."

"உளராதே. யாரையும் மெரட்டலே. தேனாதான் ஒத்துக்கிடுச்சு..."

"எப்படி? எப்படி ஒப்புவா? அந்தப் பையனை ஒரு இரண்டு தடவை பார்த்திருப்பாளா? பேசியிருப்பாளா? நீ பண்ணிக்கிடணும்னு மிரட்டி இருப்பே. தெரியாதா எனக்கு?" செல்வி கத்தியதும்,

"நீ பேசறதே பேசாதே. இங்க யாரும் யாரையும் ஃபோர்ஸ் பண்ணலே."

"பின்னே அவ என்ன ஓடிப்போய் கல்யாணம் பண்ணிகிட்டாளா?"

"கொஞ்சம் பொறுமையா நான் பேசறதைக் கேட்பியா?"

"என்ன பொறுமை? நான் பெத்த பொண்ணு. இருக்கறது ஒரே பொண்ணு. எத்தனை கனவு கண்டுட்டு இருப்பேன். எல்லாத்தையும் நாசம் பண்ணிட்டியே."

ஐயோ தலையைப் பிடித்துக் கொள்கிறார் பரசு.

''அம்மா ப்ளீஸ் சொல்றதைக் கொஞ்சம் கேளேன்.''

''என்னடி சொல்லனும்?''

''அம்மா ப்ளீஸ்...'' அம்மாவின் முகவாயைத் தொட்டு கொஞ்சி... பெண் சமாதானப் படுத்த, அம்மா சற்று சமாதானம் அடைகிறாள். எப்போதுமே காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சுதான். தன் வயிற்றில் பிறந்த ஒரே காரணத்தினால் தன் குழந்தை என்ன தவறு செய்தாலும், அந்தத் தவறை மன்னிக்கிறது மனம். இதே அடுத்தவர் ஒரு சின்ன தப்பு செய்தால் ஆட்டம் ஆடுகிறது. தண்டிக்க வேண்டும் என்று கருவுகிறது மனம். மனமே ஒரு விசித்திரமான சாதனம்தான். பெண் கெஞ்சியதும் சற்று அமைதியானாள் செல்வி. பெண் மெதுவாக பேசத் தொடங்குகிறது. மாமாவைப் பார்க்க போனதைப் பற்றி அவரின் உடல்நிலை பற்றி அங்கே இருந்த சூழ்நிலை, மாமாவின் வேண்டுகோள், எல்லாவற்றையும் சொல்லி முடிக்கும்போது, செல்வி கடுகடுவென்று கோபத்தின் வசப்பட்டாள்.

''உடம்பு வந்ததுன்னா அந்த அளவுக்கு புத்தி பேதலிச்சுப் போயிடுச்சா? அறிவில்லே. அப்படியே ஏதோ வயசானவங்க சொன்னா கூட என்ன? கட்டாயம் செய்துடலாம். நீங்க எழுந்துடுங்க. அப்படித்தானே சொல்லனும். அதுக்குப் பதிலா குடு குடுன்னு போய் ரிஜிஸ்தர் கல்யாணம் எப்படி செய்யலாம்?''

''அம்மா மாமா ஒத்துக்கலை அவருக்கு தான் செத்துப் போயிடுவோம்ங்கற பயம் வந்திடுச்சு. எங்களுக்கு



கல்யாணம் செஞ்சு வச்சே ஆகனும்னு ஒத்தைக் கால்ல நின்னார்.''

''அதுக்காக... அதுக்காக நீ செய்துக்கனுமா என்ன? எனக்கு விருப்பமில்லைன்னு சொல்ல வேண்டியது தானே?''

''சொல்ல முடியாதும்மா.''

''அதான் ஏன்? மனிதாபிமானம் மட்டுமல்ல. அவர் நம்முடைய சொந்தக்காரர். சாவின் பிடியிலே இருக்கும் போது முகத்திலே அடிச்ச மாதிரி பேச முடியாது.''

''சரிடி. செய்துக்கறேன்னு சொல்லிட்டு அப்புறம் பேசிக்கிறது.''

''அம்மா அவர் எதையும் கேக்கலைம்மா. மாலை மாத்திக்கோ, மோதிரம் போட்டுக்கோன்னு சின்னக் குழந்தை மாதிரி உயிரெடுத்துட்டாரு.''

''அவர் சொன்னா உனக்கு எங்கேடி போச்சு புத்தி?'' எனக்கு பெத்தவங்க இருக்காங்க. அவுங்களை கன்சல்ட் பண்ணாம எதுவும் பண்ண மாட்டேன்னு சொல்றது தானடி.''

''அம்மா அப்பா இங்கே பக்கத்துலே இருக்காரு. முதல்லே என் சம்மதத்தைக் கேட்டுட்டு அப்பாகிட்டேயும் பர்மிஷன் கேட்டுட்டுதான் இந்த ஏற்பாடே.''

''அதுதான் ஏன்னு கேக்கறேன்? உன் அம்மா இன்னும் உயிரோடுதானே இருக்கேன். அவளுக்கு ஒரு வார்த்தை நீ சொல்ல வேண்டாமா? அந்த அளவுக்குதான் உனக்குத் தாய் கிட்டே மரியாதையா?''

''செல்வி ஏன் குழந்தையைத் திட்டறே? பாவம் அது. அவ மேலே எந்தத் தப்பும் இல்லே.''

''தெரியுமே எனக்கு நல்லாத் தெரியுமே. எல்லாத் தப்பும் உங்க மேலேதான். தங்கை தங்கைன்னு உருகு வீங்களே. உங்க அளவுக்கு அவளுக்குப் பாசம் இருக் குதா? அவளுக்கு காரியம் ஆகணும்னா உங்களைக் கூப்பிடுவா.''

''இத... பாரு யாரையும் தப்பாப் பேசாதே. அவளுக்கே தெரியாது. மாப்பிள்ளை இப்படி கேப்பார்னு அவளே யோசிக்கலை. எனக்கும் இப்ப மகளுக்கு கல்யாணம் கட்டவே இஷ்டமில்லை. இருந்தாலும் மருமகப் பிள்ளை ஹார்ட் அட்டாக் ஆகி படுத்துட்டு இருக்காரு. அவருக்கு எந்த ஸ்டிரெயினும் கொடுக்கக் கூடாதுன்னுதான் இதை செய்தேன்.''

''ஏங்க என்ன நினைச்சுகிட்டு இருக்கீங்க உங்க மனசுல? அவருக்கு ஸ்டிரெய்ன் கொடுக்கக் கூடாதுன்னு நம்ப பொண்ணு வாழ்க்கையை கெடுக்கலாமா?''

''என்னடி உளர்றே? அர்ஜுன் என்ன குடிக்கிறானா? சிகரெட் பிடிக்கிறானா? இல்லை வேற பொண்ணுகள் கிட்டே பழகறானா? இல்லை படிக்காதவனா? அவனும் இன்ஜினியர். தனிக் கம்பெனி வச்சிருக்கான். அப்பா சொத்து எக்கச்சக்கமா பிள்ளைக்கு உண்டு. பாக்கவும் அழகா இருக்கான். உன்னைப் பொறுத்தவரை ஒரே குறை அவன் என் தங்கச்சி பையன்.''

''ஆமா இப்படி அடிச்சுப் பேசினா பயந்துடுவாங் களா? போதும். இதப் பாருங்க. நீங்க ரிஜிஸ்தர் மேரேஜ்



பண்ணியிருந்தாலும் சரி, சாதாரண மேரேஜ் பண்ணி யிருந்தாலும் என்னைப் பொறுத்தவரை இந்தக் கல் யாணம் செல்லாது. இத பாருடி. இனிமே என் பர்மிஷன் இல்லாம வெளியே போனே. அப்புறம் அம்மாவை உயிரோடு பார்க்க முடியாது'' வெடிக்கிறாள் செல்வி.

தேன்மொழி பேசாமல் இருக்க, அப்பா பேசுகிறார்.

''ஏம்மா... இவளை விடு. ஏன் அப்படி பண்ணினே நீ?''

பரசு பெண்ணைக் கேட்க, செல்வி புரியாமல் இருவரையும் பார்க்கிறாள்.

''என்னப்பா?''

''ஏம்மா உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சு. நீ எப்படி இன்னொருத்தனுடன் போவே? கட்டினவன் இருக்கான். என்னதான் பர்மிஷன் கொடுத்தாலும் அவன் கூட நாலு அவரா இருந்துட்டு வருவே.''

''என்னப்பா யாரோ மாதிரி பேசறீங்க. மகேஷ் தானே வந்திருந்தார். எப்ப வந்தாலும் நாங்க மணிக்கணக்கா பேசுவோம்பா. எங்க ரெண்டு பேர் திங்கிங்கும் நல்லா ஒத்துப் போகும்.''

''அம்மா.. திங்கிங்கோ டிங்கிங்கோ. இன்னொரு தடவை இது மாதிரி நடக்கக் கூடாது. அந்தப் புள்ளை யாண்டான் நல்லவனா இருக்கவே ஒண்ணும் நடக்கலே.''

''என்னப்பா என்னென்னவோ பேசறீங்க? வெறும் புக் எக்ஸிபிஷன் போனோம்பா. அவனுக்கு பசின்னு ஹோட்டல்லே சாப்பிட்டான். நான் கூட உக்காந்தேன்.''

அம்மாவுக்கு விஷயம் புரிந்துவிட, அம்மா குதிக்க ஆரம்பித்தாள். பெண்ணுக்கு ஆதரவாகப் பேசினாள்.

''என்ன தேனைப் போய் மிரட்டறீங்க? எப்பவும் வர மகேஷ்கூட அவ போயிருக்கா. அதுலே என்ன தப்பு? ஆஸ்பத்திரிக்கு உதவிக்குன்னு போனவளை உக்கார வச்சு கல்யாணத்தைப் பண்ணியாச்சு. அதுவே தப்பு. இதுலே புருஷன் பேச்சை ஏன் கேக்கணும்? இங்க ஏன் போனே? அங்கே ஏன் போனேன்னு மிரட்டறீங்க? ஏன் அப்படி?''

''இத பாரு செல்வி உன் விரோதத்தை எல்லாம் மறந்திடு. அவன் நமக்கு மருமகப்பிள்ளை. பொண்ணுக்கு நல்லதைச் சொல்லிக்கொடு. நாலு பேர் பொண்ணை இப்படி வளர்த்துருக்காங்கன்னு பேசற அளவு வச்சுக்காதே.''

''ஓ... எனக்கே உபதேசமா? என்னையும் என்ன தேனுன்னு நினைச்சீங்களா? இத பாருங்க. இதை உங்க தங்கை வீட்டுக்காரருக்காக செய்த ஒரு கண் துடைப்பு நாடகம் அவ்வளவுதான். இது கல்யாணமும் இல்லே. இது செல்லவும் செல்லாது.''

பரசு தலையைப் பிடித்துக் கொண்டார். ''பெண்டாட்டி சரியான அடாவடிக்கேஸ். எது சொன்னாலும் அதையே தான் பிடித்துக் கொள்வாள். தான் சொல்வது தவறு என்று என்றுமே ஒத்துக் கொள்ள மாட்டாள். இனி இவளிடம் பேச முடியாது. விஷயத்தைக் கொஞ்சம் ஆறப் போடவும், பிறகு எப்படி செய்யணுமோ, அப்படிச் செய்து கொள்ளுவோம்.' நினைத்தவர் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. உள்ளே போய் படுக்கப் போய் விட்டார்.



பெண்ணிடம் குசுகுசுவென்று மகா அத்தையைப் பற்றி விசாரிக்கிறாள் செல்வி.

''எப்படி இருக்கா அவ?''

''அத்தை ரொம்ப நல்லவங்க அம்மா.''

''ஆமா நீ தான் மெச்சிக்கணும்'' என்றவள்.

''அந்தப் பையனை உனக்குப் பிடிச்சிருக்குதா என்ன?'' கேட்கிறாள்.

''அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லே. அப்பா தான் பையன் நல்லவன்னு சொன்னார். இரண்டாவது ஒரு உயிரைக் காப்பாத்தணும் அதுதான் சரின்னு சொன்னேன்.''

''சரி நீ எதையும் லட்சியம் பண்ணாதே. எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்'' என்கிறாள் செல்வி.

தேன்மொழி பதில் பேசாமல் நிற்கிறாள். தன் அறையை அடைந்து மேக்ஸிக்கு மாறி படுக்கையில் விழுந்தபோது, காலிங் பெல் ஒலித்தது. கதவு மாறி மாறி தட்டுவது தெரிய, செல்வி விளக்குப் போட்டு கதவைத் திறக்க, எதிரே பதட்டத்துடன் நின்று கொண்டிருக்கிறான் அர்ஜுன்.

'இந்த வேளையில் எதற்கு வந்திருக்கான். மாப்பிள்ளை ஹோதாவைக் காண்பிக்கவா?' பல்லைக் கடித்தவாறே,

''என்ன?'' என்று கேட்கிறாள்.

''அப்பா போயிட்டார். மாமாவைக் கூப்பிடுங்க அத்தை'' சொன்னவன் கண்கள் கலங்கி இருக்க அதிர்கிறாள் செல்வி.



# 9

அடுத்த இரண்டு நாட்களும் பரசுவும், செல்வியும், தேன்மொழியையும் அழைத்துக் கொண்டு, அர்ஜுனின் வீட்டில் இருந்தனர். பரசு உடைந்து போய் துக்கப்பட்டு நிற்க செல்வி சண்டை, சச்சரவை மறந்து நாத்தனாரின் வீட்டில் தங்கி வேண்டிய உதவிகளைச் செய்கிறாள்.

''அண்ணி'' மகா அழுத போதெல்லாம், ''அழாதே மகா'' தேற்றுகிறாள் செல்வி. துக்கத்தில் பங்கு போடும் சொந்தங்களின் நெருக்கம் கெட்டிப் பட்டுதான் போய் விடுகிறது. அண்ணி சொன்னதால் வெறுத்துப் போய் வீட்டை விட்டுச் சென்றவள் அண்ணியை சந்திக்காமலேயே இருந்தவள், இன்று அண்ணியின் மடியிலே கவிழ்ந்து கொண்டு அழுகிறாள். அண்ணியை விட மறுக்கிறாள். 'அண்ணி அண்ணி' அழுது அழுது தவித்துப் போகிறாள்.

''அழாதே மகா...'' மகாவைத் தேற்றி அவளைச் சாப்பிட வைத்து அவளுடனே இருக்கிறாள் செல்வி. கலங்கிப் போய் இடிந்து போய் இருக்கும் தன் புருஷனைப் பார்த்தாலும் பாவமாகத்தான் இருந்தது செல்விக்கு.

செல்விக்குத் தெரியாமல் தேன்மொழியை வீட்டு நிர்வாகம் எடுத்துக் கொள்ளுமாறு தந்தை பணித்ததும் ஏற்கனவே இரண்டு நாட்கள் பழக்கப்பட்டதால் உடனே



உள்ளே புகுந்து எல்லாவற்றையும் செய்யத் தொடங்குகிறாள் தேனு.

ஆயிற்று காரியங்கள் ஆகும் வரை கூடவே இருந்தனர். இது நாள் வரை இருந்த சண்டை, சச்சரவு எல்லாம் போய் நாத்தனாரிடம் ஒட்டிக் கொண்டாள் செல்வி. அண்ணியிடம் மகாலட்சுமியும் இழைந்தாள்.

காரியங்கள் எல்லாம் முடிந்ததும் ''அண்ணி போகாதீங்க அண்ணி,'' புறப்பட்ட செல்வியைத் தடுக்கிறாள் மகாலட்சுமி.

''கொஞ்சம் தைரியமா இரு மகா. அங்கே வீட்டை விட்டு வந்து பதினேழு நாளாச்சு. இவரும் கம்பெனிக்குப் போகலே. என்னம்மா பண்றது? அடுத்தது நடந்து தானே ஆகணும். அப்படியே இருக்க முடியுமா? புரிஞ்சுக்கம்மா. நான் என்ன ஊரை விட்டா போறேன். இதோ கொஞ்சம் தூரம் தள்ளி இருக்கும் தெருவுக்குப் போகப் போறேன். கட்டாயம் உன்னோடு தினமும் போன்ல பேசறேன். அப்பப்ப நேரயே வந்து பார்க்கறேன்மா.''

உறவுகளில் பிணக்கு ஏற்பட்டு மீண்டும் சேர்ந்தால் இரண்டாவது சேர்க்கை மிக மிக கெட்டிப்பட்ட சேர்க்கையாகத்தான் இருக்கும். எத்தனையோ வருடங்களாகப் பிரிந்து போனவர்கள்தான். ஒருவரை ஒருவர் பார்க்காமல் பேசாமல் இருந்தவர்கள்தான், இப்போது புரிந்து கொண்டதும் ஒரு நிமிடம் கூட பார்க்காமல் இருக்க முடியவில்லை. உறவுகள் முறிவதற்கு நம் முட்டாள்தனமான செயல்களும், கடுமையான பேச்சுக்களும்தான் காரணம். தவறான ஒரு வார்த்தை அஸ்திவாரத்தையே

ஆட்டி விடும். இத்தனையும் பரசுவின் மனதில் தோன்றியது.

"அண்ணி சொல்றதை கேளு மகா. நான் ஆபீசுக்குப் போயிட்டு வந்து உன்னைப் பாக்கறேன். நான் இருக்கேம்மா." கனிவாக அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டபோது, செல்வி பெருமூச்செறிந்து விட்டு பெண்ணைத் தேடிச் செல்கிறாள்.

"அண்ணா மருமகளையாவது இங்கே விட்டுட்டுப் போகக் கூடாதா?"

"ஸ்..." என்று உதட்டில் விரல் வைத்து எச்சரிக்கிறார் பரசு.

"உங்க அண்ணிக்கிட்டே அப்படி கேக்காதே. நீ இருந்தாலே தேனை விட்டுட்டு போன்னு கேளு." சற்று தணிந்த குரலில் கழுத்தை சாய்த்து ரகசியம் பேசுவது போல் அவர் பேச, மகாலட்சுமி புரிந்து கொண்டாள்.

அவர்கள் எல்லோரும் கிளம்பிப் போகும்போது.

"அண்ணி என்னால உங்களைப் பிரிஞ்சு இருக்க முடியாது.." ஓவென்று அழ, செல்வி இளகிப் போய் விடுகிறாள்.

"என்ன மகா... உன் நிலைமை எனக்குப் புரியுதும்மா. ஆனா என் நிலைமையையும் புரிஞ்சுக்கோடா கண்ணு."

"நீங்க இல்லேன்னா தேனையாவது ஒரு இரண்டு நாளைக்கு விட்டுட்டுப் போங்க. என்னால தனியா இருக்க முடியாது."



"சரி சரி அழாதே. அவளை இருக்கச் சொல்றேன்."

தேன்மொழியை விட்டு விட்டு அவர்கள் இருவரும் கிளம்ப, பரசு தேன்மொழியிடம் மாமியாருக்கு அனுசரணையா இரு" சொல்லிவிட்டுக் கிளம்புகிறார்.

தேன்மொழி எல்லாவற்றையும் புரிந்து கொண்டது போல் தலையை ஆட்டுகிறாள். வீட்டில் மாய்ந்து மாய்ந்து வேலை செய்கிறாள். இருப்பினும் ஒரு நாளிலேயே எதையோ பறி கொடுத்தவள் போல் ஆகிப் போனாள். வீட்டில் டி.வி.யில் எந்த நாடகத்தையும் விடாமல் பார்ப்பாள். அவளுக்கு வேண்டிய சினிமா பாடல்களை சி.டி.யில் சேமித்து மெய்மறக்கக் கேட்டுக் கொண்டிருப்பாள்.

ஆரம்பத்தில் மாமாவுக்கு உதவ வேண்டும் என்று சுபாவமான உணர்வினால்தான் உதவி செய்தாள். ஆனால் இதற்காக தன்னுடைய பொழுது போக்குகளை எல்லாம் தியாகம் செய்ய வேண்டும் என்னும் போது மனம் வலித்தது. அம்மா வேலை செய்ய ஒரு துரும்பு கூட எடுத்துப் போடாமல் தன் காரியத்தையே பார்த்தவள். இப்போது அதிர்ந்துதான் போகிறாள். நிஜம் மிகவும் பயமுறுத்துகிறது. திருமணம் புரிந்து கொண்டு சென்றால் தன்னால் இன்பமாக இருக்க முடியாது. தன் மாமியார் வீடு எப்படி இருக்கும்? இன்னும் அவள் அர்ஜுனை கணவனாக நினைக்கவே இல்லை. மாமாவிற்காக நடந்த பொம்மைக் கல்யாணம் என்று நினைத்துக் கொள்கிறாள்.

அப்பா இருந்தபோது ஆசை, ஆசையாக செய்ததெல்லாம் இப்போது மறைந்து போனது. ஏனோ எதையும்

செய்ய வெறுப்பாகத்தான் இருந்தது. ஒரு இரண்டு நாளில் இங்கிருந்து ஓடி விட வேண்டும் முடிவு செய்து கொள் கிறாள். அம்மா மூன்று வேளையும் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறாள்.

"அம்மா என்னைக் கூப்பிட்டுகிட்டுப் போயிடுங்க. இங்க இருக்கவே பிடிக்கலை. போர் அடிக்குது."

செல்வி பூரித்து தான் போகிறாள். பெண் சண்டை போட்டாலும் தன்னை ஒரு நாள் கூட பார்க்காமல், பேசாமல் இருக்காது.

தான் கூட லேசாக சந்தேகப்பட்டோமே... சே... பாவம்... நினைத்துக் கொள்கிறாள்.

"நாளைக்கு ஒரு நாள் இரு. அப்புறம் ஏதாவது சொல்லி அழைச்சுகிட்டு வந்துடறேன். எனக்கு மட்டும் உன்னை விட்டுட்டு இருக்க முடியுமா என்ன?"

அம்மா சொன்னாலும் தேன்மொழி பிடிவாதம் பிடிக்கிறாள்.

"அ...ம்மா.. நான் உங்களை ரொம்ப மிஸ் பண்றேன்." கத்தவும்..

"சரி... சரி கத்தாதே. அப்பாவை அனுப்பறேன். கவலைப்படாதே?" என்று சொன்னாள் செல்வி.

பெண் ஒன்றும் சொல்லாமல் இருந்தாலோ, இல்லை இங்கேயே இருக்கிறேன் என்று சொல்லி இருந்தாலோ எரிச்சல் வந்திருக்கும். அம்மா உன்னை மிஸ் பண்ணு கிறேன் என்று சொன்னதிலிருந்து பெண்ணின் மேல் ஆசை வந்தது. தன் பெண்ணுக்குத் தன்னை விட்டு



இருக்கவே முடியாது. நினைத்தாலே பெருமையாக இருந்தது. எல்லோருமே தான் என்ற நினைவில் தானே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தான் சொன்னால் சரி, தான் நினைப்பது தான் நிஜம். தனக்கு மட்டும்தான் உணர்வுகள். தனக்கு மட்டும் தான் தியாகம், பக்தி, தர்மம் எல்லாம் தெரியும். மற்றவர்க்கு எதுவுமே கிடையாது. தப்பித் தவறி இருந்தாலும் போலியாக இருக்கலாம்.

இங்கே செல்விக்கும் அதுதான். தன் பெண் தன்னிடம் மட்டும் ஒட்டுதலாக இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறாள். தான் என்ற உணர்வு ஆட்டி வைக்க, சந் தோஷத்தில் திளைத்துப் போகிறாள். கணவன் வந்ததும் விஷயத்தைச் சொல்கிறாள் பரசு எரிச்சலுகிறார்.

"அவதான் சின்னக் குழந்தை. உனக்கு எங்கே போச்சு? கொஞ்ச நாட்கள் மகாகூட இருந்துட்டு வந்தா என்ன?" அவர் எரிச்சலோடு கேட்க,

"என்ன இப்படிப் பேசறீங்க? என்னமோ நான் கூப்பிட்ட மாதிரி இல்லே சொல்லறீங்க? குழந்தை மூணு தடவை போன் பண்ணிட்டா."

சாப்பிட வந்தவர் சட்டென்று ஒருவித ஆத்திரத்துடன் எழுந்து சென்று மகளை செல்லில் தொடர்பு கொள்கிறார்.

"என்னங்க... என்ன பண்றீங்க? சாப்பிடுங்க முதல்லே."

"பேசாம இரு. ஒழுங்கா வளர்த்தா இப்படி இருக்குமா?"

எரிச்சலுடன் உறுமி விட்டு மகளிடம் பேச முற்படுகிறார்.

"அப்பா... என்னப்பா... நீங்க வருவீங்கன்னு அம்மா சொன்னாங்களே எப்பப்பா வருவீங்க?"

"சாயந்திரம்தாம்மா வருவேன். ஆமா அத்தை எப்படி இருக்காங்க?" கேட்க, சற்று மௌனம் சாதித்த தேன்மொழி.

"அழுதுகிட்டேதான் இருக்காங்க. எதுவும் சாப்பிட மாட்டேங்கறாங்க. அப்புறம் அவுங்க பையன்தான் சாப்பாடு போட்டு ஏதோ கொஞ்சம் சாப்பிட்டாங்க."

"நீ சாப்பிட்டியாம்மா."

"ம்.. சாப்பிட்டேன்பா. அப்பா... எனக்கு இங்க இருக்க பிடிக்கலைப்பா. இவுங்க வீட்டுலே இருக்க பயமா இருக்குப்பா. நம்ப வீடா இருந்தா டி.வி. போட்டுப்பேன். எத்தனையோ சீரியலை மிஸ் பண்ணிட்டேன். இப்ப புது படத்துலே நிறைய சாங்ஸ் எல்லாம் இருக்கு. அதெல்லாம் வேற டேப் பண்ணலே. நம்ப சாப்பாட்டையும் ரொம்ப மிஸ் பண்றேன்பா."

"என்னம்மா உளர்றே? அவுங்க என்ன வெளிநாட்டுக் காரங்களா என்ன? நம் ஊரு, நம்ப சொந்தம்? சாப் பாட்டுலே என்ன வித்தியாசம் வந்திடுச்சு? ஏன் சமையற் கார அம்மா வித்தியாசமா சமைக்குதா?"

"அதெல்லாம் இல்லைப்பா. நம்ம வீட்டுலே இட்லிக்கு எத்தனை தினுசு சட்னி அம்மா செய்வாங்க. இங்கே சமையற்கார அம்மா கேட்டா டிபனே வேண்டாம்னு சொல்லிட்டாங்க அத்தை. அப்புறம் நாங்க எல்லாம் இருக்கிறோமேன்னுட்டு இட்லி பொடி போட்டுக்கச் சொன்னாங்க."

"தேனு... புரிஞ்சுக்கம்மா. உங்க மாமா இறந்து போயிட்டாரு. அத்தை ஒரே துக்கத்துலே இருக்காங்க. நீ



அந்த வீட்டு மருமக. உங்க ரெண்டு பேருக்கும் ரிஜிஸ்தர் மேரேஜ் ஆயிடுச்சு. ஞாபகம் இருக்குல்லே. அந்த வீட்டு மருமகளா உன் கடமையைச் செய். அத்தைக்கு ஆதரவா இரு. உங்க வீட்டுக்காரரை நல்லா கவனிச்சுக்க. நீ போய் வாழப் போற வீடு அது. அது உன் இடம் தானே. அதனால எல்லாத்தையும் மூட்டை கட்டி வச்சிட்டு நல்ல மருமகள்ங்கற பேரை எடுக்கப்பாரு." சற்று கடினமான குரலில் அதட்டலான முறையில் பேசி விட்டு செல்லை அணைத்தபோது, அருகில் வந்து அவரையே வெறித்த படி நிற்கிறாள் செல்வி.

## 10



"என்னய்யா சொல்றே?"

பரசு மறுபடியும் மௌனமாக சாப்பிடும் தட்டின் அருகில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார்.

"உங்களைத்தான் கேக்கறேன். உங்க தங்கச்சிக்கு ஏதோ இரண்டு நாள் உதவி செய்யணும்னு சொன்னீங்க. கரெக்ட். நானும் பாவம் நம்ப நாத்தனாராச்சேன்னு பொண்ணை விட்டேன். நீங்க வேற என்னமோ சொல்றீங்க?"

"என்ன வேற சொல்றேன். கல்யாணம் ஆயிடுச் சில்லே. ஒரு கஷ்டம்னு வரும்போது மாமியாருக்கு உதவி செய்ய வேண்டாமா?"

''கல்யாணமா? என்ன கல்யாணம்? பொம்மைக் கல்யாணம். சும்மா அவசரக் கோலம்னு அள்ளித் தெளிச்ச மாதிரி ஏதோ காரியத்தை செய்துட்டு... கல்யாணம்னு பேசறீங்க?''

''கல்யாணம் எப்படி ஆயிருந்தாலும் அது கல்யாணம் தான். ரெண்டாவது இது வெறும் மேடையிலோ, மாலை மாத்தி கல்யாணமோ அல்ல. இது முறைப்படி ரிஜிஸ்தர் பண்ணியாச்சு. உம் பொண்ணும் ஒத்துகிட்டு கையெழுத்துப் போட்டிருக்கு. ஞாபகம் வச்சுக்க.''

''எப்படி ஒத்துகிச்சு? உங்களாலே. அப்பா சொன்னா எப்படி மறுக்கறதுன்னு பயந்து போய் ஒத்துகிச்சு. சண்டைக் கோழியாய் கத்துகிறாள் செல்வி.

''சரி அப்படித்தான் வச்சிக்க. ஒத்துகிச்சு இல்லே. கல்யாணம் ஆயிடுச்சு இல்லே. இன்னும் என்ன? அது அங்கே இருக்கறது தானே நல்லது.''

''போதும். திருப்பித் திருப்பி அப்படிப் பேசாதீங்க. எனக்கு கெட்ட கோபம் வரும். இது அவசரத்துலே செய்த கல்யாணம். பெத்தவளைக் கூட ஒதுக்கி வச்சுட்டு செய்துருக்கீங்க. இதைக் கட்டாயம் நான் ஒத்துக்கவே முடியாது.''

''நீ ஒத்துக்கிட்டாலும், ஒத்துக்கலைன்னாலும் நடந்தது நடந்ததுதான்.''

''திருப்பி, திருப்பிச் சொன்னதையே சொல்லறீங்க? இப்பவே என் பொண்ணைக் கூப்பிட்டுக்கறேன்'' செல்வி சொல்ல, பட்டென்று அடித்து விடுகிறார் பரசு.



''தபாரு போன்ல கையை வச்சே கையை வெட்டிடு வேன்.''

செல்வி அதிர்ந்து போகிறாள். அதுவரை நாத்தனாரின் மேல் இருந்த விருப்பு, ஆசை எல்லாம் போய் எரிச்சல், ஆத்திரம் வந்தது.

''சனியன் ஆதிநாள்லே அண்ணா அண்ணான்னு என் புருஷனை பிடிச்சு வச்சுகிட்டு இருந்தது. இன்னிக்கு புருஷன் செத்துட்டாருன்னவுடனேயே எம்பொண்ணை தாரவாக்கணுமாம். போகட்டும் தானா எம்பொண்ணை இங்கே வரும்படி செய்யறேன்.'' கருவிக் கொள்கிறாள்.

''த... பாருடி நான் போனப்புறம் ஏதாவது டிரிக் செய்து பொண்ணை வரவழைச்சேன்னு வச்சுக்க அப்புறம் என்னை உயிரோடு பாக்க முடியாது. அப்புறம் அம் மாளும், பொண்ணும் என்னவெல்லாம் செய்துக்கங்க.''

செல்வி கனத்த மௌனத்தில் ஆழ்ந்தாள். சில பேர் மனதில் என்ன இருக்கிறதோ அதைக் கத்தித் தீர்த்து விடுவர். ஆனால் மனதில் அவர்களுக்கு ஒன்றும் இருக் காது. மற்றும் சிலர் பரசுவைப் போல் அழுத்தம்தான். என்ன நினைக்கிறார்களோ அது வெளியவே வராது. ஆனால் பிடிவாதமாக தான் நினைத்ததே நடக்க வேண்டும் என்பர். பரசு இந்த ரகம்தான் அழுத்தம்தான். தப்பித் தவறிக்கூட தான் நினைத்தது நடக்கவில்லை என்றால் 'சாது மிரண்டால் காடு கொள்ளாது ரகம் தான்.'

சாதாரணமாக எதிர்த்துப் பேசினாலும், இப்படி பதில் பேச மாட்டார். இவளை ஒரு பார்வை பார்த்துக் கொள்வார். இன்று போல் என்றாவது ஒரு நாள் தான்

சண்டை போடுவார். அதை மீறவே முடியாது. என்றோ ஒரு நாள் சொல்லும் சொல் நிஜமாகவே இருக்கும். கணவன் சாப்பிட்டுவிட்டு அலுவலகம் சென்ற பின்னும் அதையே யோசித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

பெண்ணை எப்படி வீட்டிற்கு வரவழைப்பது? தானாக வந்தால் பிரச்சனை இல்லாமல் போய்விடும். எப்படி?

யோசனையில் காலை டிபன்கூட சாப்பிடத் தோன்றவில்லை. தன் பெண்ணை மாமன் வீட்டுக்கு அனுப்பியது, தன் உயிரைப் பிடுங்கி அனுப்பியது போல் தோன்றியது. கணவன் அவள் அங்கேதான் இருக்க வேண்டும் என்று சொன்னது மனதைக் காயப்படுத்தியது. இப்போது தான் தன் உயிர் அங்கே போய் மாட்டிக் கொண்டது போல் தோன்றியது. தவிக்கிறாள் செல்வி. பாவம் குழந்தை, ஒன்று விட்டு ஒரு நாள் குழந்தைக்கு உருளைக் கிழங்கு வறுவல் இருக்க வேண்டும். அவளுக்கு என்று வாரம் இரு முறை உருளைக் கிழங்கை வாங்கி வைத்து விடுவாள் செல்வி. சாப்பாட்டுக்கு சாப்பிட்டது போக, சீரியல் பார்க்கும்போது ஒரு தட்டில் உருளை வறுவலை வைத்துக் கொண்டு சாப்பிட்டபடியே பார்ப்பாள். 'குழந்தை... குழந்தை' என்று ஆப்பிளை துண்டு துண்டாக ஒரே சரியாக நறுக்கி வைப்பாள்.

ஆரஞ்சு பழ ஜூஸ் பிழிந்து கொடுப்பாள். கமலா ஆரஞ்சு இருந்தால் ஒன்றாவது தினமும் சாப்பிடக் கொடுப்பாள். பெண்ணுக்கு என்று சற்று தாராளமாகவே நெய் விட்டு சாப்பாடு போடுவாள் அம்மா. இப்போது பெண் என்ன செய்கிறதோ? அழுகை வந்தது பாவம்...



பெண்ணை தண்ணியில்லாக் காட்டுக்கு அனுப்பியது போல் அழுகை வந்தது.

ஏதோ யோசனையில் இருந்தபோது தொலைபேசி அலற, மறுமுனையில் பெண் தான். "என்னம்மா நீங்க? அப்பவே போன் செய்தேன் இல்லை. இதுக்குள்ளே நீங்க இரண்டு தடவை வந்திருப்பீங்கன்னு நினைச்சேன். எப்ப வருவீங்க?" செல்வி மௌனம் சாதிக்கிறாள். பெண்ணின் கெஞ்சல் மனதைப் பிசைந்தது.

"என்னம்மா பேச மாட்டேங்கறீங்க?" பெண் கேட்க.

உடைந்து போய் அழுகிறாள் செல்வி.

"உங்கப்பா கேக்க மாட்டேங்கறாரு தங்கம். ஒரே திட்டு சண்டை. உனக்கு கல்யாணம் ஆயிடுச்சாம். அதுனாலே நீ அங்கேதான் இருக்கணும்னு சொல்லிட்டாரு."

"என்னம்மா இது பைத்தியக்காரத்தனமான யோசனையா இருக்கு. மாமாவுக்கு ஹெல்ப் பண்ணத்தான் நான் கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்கிட்டேன். இது ஒரு அட்ஜஸ்ட்மெண்ட்தானே. நான் அர்ஜுன் கிட்டே பேசறேன். கட்டாயம் ஒத்துப்பாரு. த பாரும்மா அப்பா கிட்டே சொல்லுங்க. நான் சாயங்காலம் வந்துகிட்டே இருப்பேன்."

செல்வி பெருமூச்சு விடுகிறாள். ஒரு புறம் சந்தோஷமாக இருந்தாலும் இன்னொரு புறம் பயமாக இருந்தது. கணவன் என்ன சொல்வானோ? என்ன வேணும்னாலும் சொல்லட்டும். இப்படிப் பயம் போனவுடனும்தான் மனம் சற்று உறுதி பெற்றது. இரவு கணவன் வரவிற்காக காத்து இருக்க ஆரம்பிக்கிறாள்.

''உன் பெண் எப்படி வரலாம்?'' என்று சண்டை போட்டால் என்ன செய்வது? கணவனின் காரை எதிர்பார்த்துக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

மனம் ஒரு நிலையில் இல்லை. ஒரு பக்கம் நாத்தனாரின் கெஞ்சல் ஞாபகத்திற்கு வந்தது. பாவமாகத்தான் இருந்தது. ஆனால் தான் என்ன செய்ய முடியும்? அவரவர்கள் வாழ்க்கை அவரவர்களுக்கு. இன்றோ தன் கணவன் அடித்து விட்டுப் போய் விட்டான். இன்னும் என்ன ஆகுமோ? இரவு பெண்ணுக்கும் சேர்த்து டிபனை செய்துவிட்டு, பெண்ணுக்காக தொட்டுக்கொள்ள நாலு வகை சட்னிகளைத் தயாரித்து, பழங்களை நறுக்கி ஃப்ரூட் சாலட் போல் செய்து வைக்கிறாள்.

வேலை முடிந்து இன்னும் பெண் வராதது, கணவன் வராதது இருப்புக் கொள்ளாமல் தவிக்க ஆரம்பித்தாள் செல்வி. இரவு ஒரு எட்டு மணி போல் கணவன் முகமெல்லாம் சிவந்து போக எரிச்சலுடன் வந்து நிற்கிறார். கூடவே லேசாக கலங்கிய கண்களுடன் பெண்.

செல்வி விஷயத்தை ஊகித்துக் கொண்டாள். பெண் வந்ததுதான் கணவனின் கோபத்திற்குக் காரணம். கணவனின் கோபம்தான் பெண்ணின் கலக்கத்திற்குக் காரணம்.

''இப்ப திருப்தியா உனக்கு? பொண்ணையா வளத்து வச்சிருக்கே?'' கணவனின் வாயிலிருந்து இந்த வார்த்தைகளைக் கேட்டவள் அதிர்ந்து போகிறாள். என்ன சொல்கிறான் கணவன்?



கணவன் தன்னை எத்தனையோ திட்டி இருக்கிறான். ஏன் அடித்தும் இருக்கிறான்? ஆனால் பெண்ணைப் பற்றி ஒரு வார்த்தை கூடத் தப்பாகப் பேசாதவன். மற்றவர்கள் பேசினாலும் விட மாட்டான். அப்படிப்பட்டவனே எப்படியோ பேசுகிறானே?

''என்னடி பாக்கறே? அங்கே துடிச்சுகிட்டு இருக்கறவ என் கூடப் பிறந்தவ. போதாக் குறைக்கு இவ அந்த வீட்டு மருமக. ஒரு கஷ்டம்னா அங்கே போய் தூண் மாதிரி தாங்க வேண்டாமா? இப்படியா ஓடி வரும். இந்த டி.வி. சீரியல் பாக்கலைன்னு யார் அழுதாங்க? இதை பாக்கலைன்னா குடி முழுகிப் போயிடுமா?''

செல்வி செய்வதறியாது திகைத்து நிற்க,

''சொல்லுடி... ஒண்ணு இவ அந்த வீட்டுக்குப் போகணும். இல்லேன்னா இனிமே நான் இங்க இருக்க மாட்டேன். நீயே தீர்மானம் பண்ணிக்க.''

தேன்மொழி பிழியப் பிழிய அழ ஆரம்பித்தாள். பரசு மனம் இளகவில்லை. விருட்டென்று திரும்பி ஒரு சூட்கேசில் தன் துணிகளை அடைத்தவாறு அவர் கிளம்ப,

''ஏங்க நில்லுங்க, நீங்க என்ன சின்ன குழந்தை மாதிரி பிடிவாதம் பண்றீங்க? நான் சொல்றதைக் கேளுங்க. பேசாம உங்க தங்கையையும், தங்கைப் பையனையும் இங்கே கூப்பிட்டுகிட்டு வந்திடலாம். யாருக்கும் எந்தப் பிரச்சனையும் இருக்காது.''

''என்னடி உளர்றே? அவளால நிரந்தரமா இங்கே இருக்க முடியுமா?''

''நிரந்தரமா இல்லீங்க. கொஞ்ச நாள். அப்புறம் யோசிச்சு ஒரு முடிவு எடுக்கலாம்.''

சிறிது மௌனம் சாதித்த பரசு, ''நீ வேணா ட்ரை பண்ணு. மகா வருவான்னு எனக்குத் தோன்றவில்லை.''

அடுத்த நிமிடம் செல்வி மகாவின் வீட்டிற்கு கிளம்பிச் சென்று விடுகிறாள். ஒரு மணி நேரம் சென்றபின் மகா, அர்ஜுனுடன் வந்து இறங்குகிறாள். தற்காலிகமாக அந்தப் பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைக்கிறாள் செல்வி.

அடுத்த ஒரு மாதமும் செல்வியின் வீட்டில்தான் இருக்கிறாள் மகா. அர்ஜுனும் அங்கிருந்தபடியே தன் தொழிலை கவனித்துக் கொண்டு இருக்கிறான். ஏற்கனவே முயற்சித்தது பலன்தர வடக்கே ஒரு கிளையைத் திறக்க அர்ஜுன் செல்ல வேண்டி இருக்கிறது.

''அர்ஜுன் போகட்டும் மகா. நீ இங்கே நிம்மதியா இருக்கலாம்'' என்கிறாள் செல்வி. ''நீ போயிட்டு வாப்பா. எந்தக் கவலையும் படாதே. அம்மாவை நான் கவனிச்சுக் கறேன்.''

''இல்லை... அண்ணி என் பையனை தனியா அனுப்ப எனக்கு இஷ்டமில்லை. அவன் பொண்டாட்டியைக்கூட அழைச்சுகிட்டுப் போகட்டும்.'' மகா சொலல, எரிச்சலுறுகிறாள் செல்வி.

''மகா நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. நீ செய்யறது ஏதாவது நல்லா இருக்கா. உங்க வீட்டுக் காரருக்காக பொம்மைக் கல்யாணம் மாதிரி ஏதோ ஒரு



கல்யாணம் ஆச்சு. இந்தக் கல்யாணத்துக்கு எதுக்கு இவ்வளவு இம்பார்டன்ஸ். ரெண்டாவது முறைப்படி எதுவுமே நடக்கலை. அவுங்க ஒண்ணா போகணும்கறீங்க.''

''இப்ப நடத்திட்டா போச்சு.''

''என்ன மகா இப்படி பேசறே? கல்யாணமே முறை இல்லாத கல்யாணம்.''

''அண்ணி முறையோ முறை இல்லையோ எனக்குத் தெரியாது. அவுங்க ரெண்டு பேரும் சட்டப்படி கணவன், மனைவி. இவுங்களுக்கு எதுவும் ஆகாம இருந்திருந்தா எல்லாத்தையும் நானே பண்ணி வச்சிருப்பேன்'' என்றவள். ''அர்ஜுன் நீ தனியா போகக் கூடாது. பொண்டாட்டியை அழைச்சுகிட்டு கிளம்பு.'' என்கிறாள்.

''மகா என்ன பேசறே?'' அடிக்குரலில் செல்வி கத்த, பரசு வந்து விடுகிறார். பரசு தன் தங்கையை ஆமோதிக்க செல்வி ருத்ர தாண்டவம் ஆட, வீடே அமளிப்பட்டது.

''கிளம்பு'' அதிகாரத் தோரணையோடு அர்ஜுன் தேன்மொழியைப் பார்த்து கத்துகிறான்.

## 11



தேன்மொழி விழிக்கிறாள். இதுவரை அவளிடம் பழகியவன் உதட்டுப் புன்னகை பிரியாத கை சுண்டு விரலைப் பிடிக்கக் கூட தயங்கும் ஆண் மகன். சதா

புன்னகையை உமிழும் உதடுகள். கண்கள் கூட புன்னகையை சிந்திற்று. பேச்சு ரொம்ப மரியாதையோடு இருக்க, அவனைப் பற்றி ரொம்ப உயர்வாகத்தான் நினைக்கத் தோன்றியது. புருஷன் என்ற ஹோதாவை அவன் என்றுமே காட்டியதில்லை. இப்போது அதிகாரத்தோடு அர்ஜுன் பேச, திகைப்போடு அவனையே பார்க்கிறாள் தேன்மொழி.

''மாப்பிள்ளை கூப்பிடறார் இல்லே கிளம்பு'' பரசு சொல்ல தேன்மொழி விழிக்கிறாள்.

''என்னங்க பேசறீங்க? எதுவும் முறைப்படி நடக்கலே? எதுக்கு அவளை அனுப்பணும்னு சொல்றீங்க. இத பாரு மகா உனக்கு நடந்தது ரொம்பப் பாவமான விஷயம்தான். அதுக்காக நீ சொல்றதை எல்லாம் கேக்கணும்னு இல்லே. உம் பையனைப் போகச் சொல்லு.''

''அண்ணி அவன் தனியா போகக்கூடாது. பொண்டாட்டியை அழைச்சுட்டுப் போகட்டும்.''

''மகா... போதும்... உம் புள்ளையை கிளம்பச் சொல்லு. இல்லைன்னா நடக்கற விஷயமே வேற.''

இந்த வார்த்தைகள் அர்ஜுனின் பொறுமையைச் சுண்டி விட அடுத்த நிமிடம் தேன்மொழியின் கையைப்பற்றி காருக்குள் தள்ள. காரை வேகமாக ஓட்டிக் கொண்டு போகிறான் அர்ஜுன்.

செல்வி அதிர்ந்து போகிறாள்.

''என்னங்க இது. கூப்பிடுங்க. அநியாயம். இருக்கறது ஒரு குழந்தை அவளோட வாழ்க்கையை யாராவது



கெடுப்பாங்களா? கூப்பிடுங்க. கூப்பிடுங்க.'' கத்தியவள் பின்னாலேயே ஓடுகிறாள். ''தேனு... தேனு... '' கத்துகிறாள். ஆனால் இதற்கு முன்பே கார் புறப்பட்டுப் போக, ஏய்யா நீ மனுஷனா? யாராவது சொந்த பொண்ணுகிட்டே இப்படி நடப்பாங்களா? முன்னே பின்னே தெரியாது. எதுவுமே முறைப்படி நடக்காம பொண்ணை அனுப்பறியே. நீ எல்லாம் மனுஷனா?'' அழுகிறாள். கத்தித் தீர்க்கிறாள். மௌனமாக அமர்ந்திருக்கும் நாத்தனாரைப் புார்க்க பார்க்க எரிச்சல் வந்தது. ''சீ.... நீ.... எல்லாம் என்ன பொண்ணு? பாவம் அப்பாவியான எம்பொண்ணை மாட்டவச்சு, அநியாயம் பண்ணிட்டியே. உம்பொண்ணா இருந்தா இப்படி செய்திருப்பியா?'' மகாலட்சுமி அண்ணியை கூர்ந்து பார்த்து விட்டு, ஒரு பெருமூச்சோடு பேசுகிறாள்.

''எம் பொண்ணாயிருந்தா என்னிக்கோ புருஷன் வீட்டிற்குப் போயிருக்கும்.'' சொன்ன மகாவையே எரிச்சலோடு பார்க்கிறாள். செல்வி.

''உனக்கு நல்லது செய்யணும். பிரிஞ்சு போன குடும்பம் நல்லா இருக்கணும்னு நெனைச்சேனே. அது என் தப்பு. உனக்கு நல்லது பண்ண என் வீட்டையே நாசப்படுத்திட்டியே.''

''மகா நீ எழுந்துவா. அது கத்திட்டு அடங்கட்டும்.'' பரசு மகாவை கூப்பிட்டுக் கொண்டு மாடிக்குப் போய்விட, திட்டித்தீர்க்கிறாள். கத்தி தீர்க்கிறாள் செல்வி.

தன்னை இழுத்து காரில் தள்ளியவாறு காரை வேகமாக எடுத்த அர்ஜுனையே சற்று அதிர்ச்சியோடும், ஆச்சரியத்

தோடும் பார்த்துக் கொண்டிருக்கிறாள். எதுவும் பேசக் கூடத் தோன்றவில்லை. மாற்றுத் துணி கூட எடுத்துக் கொள்ளாமல், தன் பர்ஸை கூட எடுத்துக் கொள்ளாமல், முக்கியமாக செல் போனைக் கூட இங்கேயே விட்டு விட்டு ஒன்றும் புரியாமல் அமைதியாக அமர்ந்திருந்தாள். அவளைப் பொறுத்தவரை அர்ஜுன் மிக மிக நல்லவன். அவன் இப்படி எல்லாம் நடந்து கொள்வான் என்பதே நம்ப முடியாமல் இருந்தது. பார்ப்போம். தன்னை மீறி என்ன நடந்து விடும்? சில வேளைகளில் முற்றிய சிந்தனை அவளுக்கும் வந்து, வந்துதான் போகிறது. தன் தாய் செல்வி போல் கத்தாமல் உணர்வுகளைக் காட்டாமல் அமைதிகாக்கிறாள்.

ஒரு மூன்று மணி நேரம் போல் காரை ஓட்டுகிறான். தேன்மொழி பொறுமையாக முன் சீட்டில் அமர்ந்திருக் கிறாள். முதலில் அவளை இழுத்து வந்து காரில் தள்ளி விட்டு விட்டு, டென்ஷனோடு காரை ஓட்டியவனின் டென்ஷன் கொஞ்சம் கொஞ்சமாக குறைய, தன் செயலுக்கும் மனம் அசிங்கப்பட்டது. ஓரக்கண்ணால் மனைவியைப் பார்க்க, அவள் எங்கோ பார்த்தவாறு அமர்ந்திருக்கிறாள்.

அர்ஜுன் வெட்கப்பட்டவாறே வண்டியை ஓட்டு கிறான். அவனுக்குத் தேன்மொழியைப் பார்த்ததுமே பிடித்து விட்டது. தன் தந்தைக்கு உடம்பு சரியில்லை. என்று சொல்ல வந்த போதுதான் மிக மிக அருகில் தேன்மொழியைப் பார்த்தான். பார்த்தவுடனேயே இவள் மட்டும்தான் தன் மனைவியாக இருக்க முடியும் என்று தோன்றியது. அப்பா இவளைத் திருமணம் புரிய



வேண்டுமென்று சொன்னபோது உடனே சம்மதித்து விட்டான். செல்வி அத்தையைப் போல் கர்வமில்லாது எல்லோரிடமும் நன்றாகப் பழகிக்கொண்டு, ஆசையாக எல்லாவற்றையும் செய்து கொண்டு இருந்த அவளைப் பார்த்த போது இவளைத் தவிர வேறு யாருமே தன் மனைவியாக இருக்க முடியும் என்றே தோன்றவில்லை. அவளை மென்மையான பூவைப் போலத்தான் நடத்த வேண்டும் என்றுதான் எண்ணி இருந்தான். செல்வி அத்தையின் முறைப்பும், அம்மாவின் கட்டளையும் சேர்ந்து மனதை உசுப்பிவிட, தான் இப்படி நடந்து கொள்ள வேண்டியது ஆயிற்று. மனம் தன்னைக் கடிந்தது. தேன்மொழியிடம் பேச மனம் வரவில்லை. சற்று பயமும், தயக்கமும் ஏற்பட்டது. இருந்தாலும் கூட அழைத்து வந்து விட்டு பேசாமல் இருப்பது தவறு அல்லவா? அவள் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வாள். காலையில் காபி குடித்ததோடு சரி. தான் மட்டும் அல்ல, அந்தப் பெண்ணும் அல்லவா பட்டினி கிடக்கிறாள். பெண் என்று நினைக்கும் போதெல்லாம் மனைவி என்ற ஞாபகம் அல்லவா வருகிறது. எத்தனையோ, யுகம், யுகமாக அவளோடு பழகியதைப் போன்ற ஒரு உணர்வு. தன் உணர்வுகளை எப்படி புரியவைப்பது. லேசாக திரும்பிப் பார்க்கிறான். மறுபடியும், மறுபடியும் திரும்பிப் பார்க்கிறான். தேன்மொழி இவற்றை எதையும் கவனித்தவள் போல் இல்லை. அவள் பார்வை, இலக்கு எல்லாம் எங்கோ போய்விட்டது.

சிறிது நேரம் திரும்பித் திரும்பிப் பார்த்து ஓட்டியவன், ஒரு மெதுவாக வண்டியை நிறுத்துகிறான்.

"தேன்மொழி இறங்கறாயம்மா. கொஞ்சம் டிபன் சாப்பிட்டுட்டு போகலாமா?" குரல் கெஞ்சும்படி இறைஞ்சுதலாக எழ, தூக்கத்திலிருந்து விழித்தவள் போல் விழிக்கிறாள் தேன்மொழி.

"என்ன..." நிலமை புரிந்ததும் "எனக்கு வேண்டாம்..." என்கிறாள். வாய் சன்னமாக ஒலித்து, வயிற்றுப் பசியை எடுத்துக் காட்டியது. முகம் வாடிக் கிடந்தது.

"ப்ளீஸ் வாம்மா, ரொம்ப பசிக்குது. உன்னை விட்டுட்டு சாப்பிட முடியாது வாயேன்."

'வேண்டாம்' என்று மறுக்க வேண்டும் என்று எண்ணியவள் வயிற்றை பசி இழுக்க, அதற்கு மேல் வேண்டாம் என்று சொல்லாமல் மெதுவாக இறங்கி வருகிறாள்.

ஒரு நல்ல உணவு விடுதியின் முன் காரை நிற்க வைத்து அர்ஜுன் தேன்மொழிக்காக காத்திருந்து உள்ளே செல்ல, குடும்பத்திற்கான அறைக்குச் சென்று சற்று ஒதுக்குப் புறமான மேசைக்கு சென்று தான் ஒன்றில் அமர்ந்து தேன்மொழிக்கு எதிர்ப்புறமான நாற்காலியை காண்பிக்கிறான்.

"என்னம்மா சாப்பிடறே?" சற்று பரிவுடன் கேட்க,

"எது வேணும்னாலும்." மெதுவாக தேன்மொழி சொல்ல, மனம் சந்தோஷப்பட்டது. தேன்மொழி தன் மேல் கோபமாக இல்லை என்று தோன்றுகிறது. இல்லை என்றால் இப்படி சாதாரணமாக பேச முடியுமா? காலையிலிருந்து உளைந்த மனம் சந்தோஷப்பட்டது. எப்போதுமே சந்தோஷமோ, துக்கமோ நம் கோணத்திலிருந்து



தான் பார்க்கிறோம். அடுத்தவரின் கோணத்தை அறிந்து கொள்ள நாம் முற்படுவதே இல்லை. தான் அவளை மிரட்டியது தவறோ என்று நினைத்து, வலுக்கட்டாயப் படுத்தியது முறையல்ல என்று நினைத்து நினைத்து, மறுகி, மறுகி தவித்துக் கொண்டிருந்த போது நடந்தது ஒன்றுமே அல்ல என்பது போலல்லவா தேன்மொழி நடந்து கொண்டிருக்கிறாள்.

மனப்பாரம் போன பின் வயிற்றுப்பசி அதிகமாக எடுக்க, சாப்பிட ஆரம்பித்தனர். இட்லி, தோசை, பூரி என்று வயிறு ரொம்பும் வரை சாப்பிட்டு வெளியே வந்தனர்.

மறுபடியும் கார் புறப்பட்ட போது மெதுவாக கேட்கிறாள் தேன்மொழி. "எங்க போகப் போறோம்?"

"இன்னும் ஒன் ஹவர் ஜர்னி தான். எனக்கு இங்கு பிஸினஸூக்கான ஆர்டர் கிடைச்சிருக்கு. பாக்கறாயா? வீடு, கார் எல்லாம் உண்டு. அவன் சொல்ல, சொல்ல அவனையே யோசனையாக பார்க்கிறாள்.

அதற்கு மேல் பதில் பேசாமல் தான் வருகிறாள். அந்த இடத்தை சென்று அடையும்போது தேன்மொழி லேசாக உறங்கி இருந்தாள். "தேன்மொழி..." இடத்தை அடைந்ததுமே அவளை எழுப்புகிறான். தங்களுக்கு என்று பார்த்திருந்த அபார்ட்மென்டில் வண்டியை நிறுத்தி பெட்டிகளை அவன் உள்ளே வைக்க, மிக, மிக நாகரீகமாக இருந்த அபார்ட்மென்டையே பார்க்கிறாள் தேன்மொழி. வீடு மிக, மிக வசதியாகவும் இருக்க, ஒரு நிமிடம் மலைத்துதான் போய் விடுகிறாள். சுபாவமான பேச்சு

அவளுக்குள் எழும்பி வர பிளாட்டைப் பற்றி மிக, மிக ஆர்வமாக கேட்டுக் கொள்ளுகிறாள்.

''தேன்மொழி வெந்நீர் ரெடி. கெய்ஸர் போட்டு வச்சிருக்கேன் குளிச்சிட்டு வாயேன்.''

''விளையாடறீங்களா? ஒரு மாத்து டிரஸ் கூட எடுத்துட்டு வரலை. என் டிரஸ் எடுத்து வைக்கற அளவுக்கு எனக்கு டைம் தந்திருக்கக்கூடாதா?'' தேன்மொழி சலித்துக் கொள்ள, ''அந்த பொட்டி புல்லா உனக்காக வாங்கினது தாம்மா. அவன் மலர்ச்சியாகக் கூற ''எனக்காக எப்ப வாங்கினீங்க?'' தேன்மொழி ஆச்சரியமாய் கேட்கிறாள். ''நம்ம மேரேஜ் பிக்ஸ் ஆனதுலேந்து வாங்க ஆரம்பிச்ச கலெக்ஷன்.''

பெட்டியைத் திறந்த தேன்மொழி அதிசயப்பட்டாள். கிட்டதட்ட எல்லா நிறங்களிலும், சுடிதாரும், புடவைகளும், அழுத்தமான நீல, பச்சை, மஜந்தா, ரோஸ், கறுப்பு நிறங்களும், வெளிர் நிறங்களான வெளிர் மஞ்சள், கனகாம்பர கலர், ஐஸ்கிரீம் கலர், ராமர் ப்ளு என்று அவையும் பார்க்க பார்க்க மிகவும் அழகாக இருக்க மலைத்துப் போகிறாள்.

அன்று குளித்து உண்டு முடித்து உறங்க வந்த போது, கணவன் தந்த முத்து செட்டும், கறுக மணி செட்டும் கண்ணைப் பறிக்க மலைத்துப் போகிறாள். அவன் மிருதுவான பேச்சுக்களும், அவள் ஏதேனும் நினைத்தாலே சட்டென்று செய்யத்துடிக்கும் பாங்கும். அவள் மேல் ஆசையை அள்ளித் தெளித்த பாங்கும் மனதை அசைத்து தான் விடுகிறது. பார்ப்பதற்கு கிரேக்க சிலை



போல் இருக்கும் அவன் தோற்றம் மனதில் வந்து படிந்து விட தன்னையும் அறியாமல் அவனை நேசிக்கிறாள் தேன்மொழி. ஒரு வாரத்திற்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு கணவன் மனைவியாக வாழ ஆரம்பித்த போது தான் யாரை சந்திக்கக் கூடாதோ அவனை சந்திக்கிறாள் தேன்மொழி. தேவை இல்லாத மனிதர்கள், தேவை இல்லாத விஷயங்களை பேசுவதால் தேவை இல்லாத நிகழ்வுகள்தானே நிகழும். தேன்மொழியின் விஷயத்திலும் அது தான் நடந்தது.

## 12



தேன்மொழியோடு புறப்பட்டு வந்து ஒரு வாரம் ஆனது. மனதுக்கு உகந்த வாழ்க்கை. மாலையில் வரும் போதே தேன்மொழிக்கு மிகவும் பிடித்த குண்டு மல்லிப்பூ, அது இல்லாத போது, ஜாதி என்று ஒரு மூன்று முழம் அல்லது நான்கு முழம் வாங்கிக் கொண்டு வருவான். அவளுக்குப் பிடித்த பால்கோவா, ரசகுல்லா, ரசமலாய், பாசந்தி என்று எதையாவது கையில் வாங்காமல் வந்ததே இல்லை, தேன்மொழி, தேன்மொழி என்று முழுப் பெயரைத்தான் கூப்பிடுவான். காலையில் தேன்மொழி எழுந்தால் கூடவே எழுந்து விடுவான். காபி போடுவதிலிருந்து டிபன் செய்வதுவரை கூடமாட செய்வான். ''இதெல்லாம் நீங்க ஏன் செய்யறீங்க?''

செல்லமாக தேன்மொழி சிணுங்கினால். ''என்னடா உன்னை செய்ய வச்சு நான் எப்படி பாத்துகிட்டு இருக் கிறது?'' என்பான்.

''நீ காபி குடிச்சியா கண்ணம்மா? '' கேட்பான். ''நீ என் கூட உக்காந்து டிபன் சாப்பிடேன். நீ.... இல்லேன்னா சாப்பிட்ட மாதிரியே இருக்காது.'' என்பான்.

கணவன் கொஞ்ச, கொஞ்ச, ஆசையைக் கொட்ட, கொட்ட மனம் பிரகாசித்தது. இருந்தாலும் காலை ஒன்பது மணிக்கு போய் விட்டு மாலை ஐந்து மணிக்கு கணவன் வர போரடித்தது. ஒரு நாள் வாய் விட்டு தன் கவலையை சொல்லவும், பதறிப் போகிறான் அர்ஜுன். ''கிளாஸ் எதுக்காவது போறியா?'' கணவன் கேட்க, தையல் கிளாஸுக்கு போவதாக சொல்லி விட்டு தையல் கிளாஸில் சேர்ந்தாள் தேன்மொழி.

இரண்டு நாட்களாக கிளாஸுக்கு போய்விட்டு வருவது மனதுக்கு ஒரு மாறுதலாக இருந்தது. வந்ததும் காபியைக் குடித்து விட்டு டிவியில் இறங்கி விடுவாள் தேன்மொழி. பிறகு கணவன் வரும் நேரத்திற்கு சிறிது நேரம் முன்பு சமைக்க ஆரம்பிப்பாள். சமைத்துவிட்டு அலங்காரம் செய்து கொண்டு அவன் வருகைக்கு காத்திருப்பாள். அன்றும் கிளாஸை முடித்து விட்டு வந்த போது லேசாக மழை பெய்திருந்ததால் ரோடுகளில் தண்ணீர் தேங்கி யிருக்க, அந்த பக்கமாக வந்த வண்டி பள்ளத்தில் ஏறி இறங்க மொத்த அழுக்குத் தண்ணீரும் புடவையில் பட்டு விட, எரிச்சலுறுகிறாள் தேன்மொழி.



''ஐயையோ சாரி மொத்தமும் சேறாயிடுச்சே, உள்ளே வாங்க. சாரியைக் கழுவி விட்டு போகலாம். இல்லேன்னா கறை போகாதுங்க.''

பதறிப்போய் கூப்பிடும் பெண்மணியைப் பார்க் கிறாள் தேன்மொழி. சற்று வெள்ளையான குண்டான உருவம். பெரிய குங்குமப் பொட்டை வைத்துக் கொண்டு வாயில் வெற்றிலையை போட்டு மென்றவாறே, சிவந்த உதடுகளோடு சிரிக்கிறாள் அந்தப் பெண்மணி.

''இல்லே.... பரவாயில்லை.''

''நீங்க என்னை விட சின்னவங்க தானே நீ, வான்னு, கூப்பிடலாம் இல்லே. வாம்மா.'' வலுக்கட்டாயமாக உள்ளே அழைத்துச் செல்கிறாள் அந்தப் பெண்மணி. புடவையை நன்றாக சுத்தம் செய்த போது ''கொஞ்சம் சோப்பு போட்டுக்கம்மா.'' ரின் சோப்பை எடுத்துக் கொடுக்க,

''இல்லை வேண்டாம்...'' மறுக்க மறுக்க அவளின் புடவையை தானே சோப்பு போட்டு அலசித் தருகிறாள்.

''எந்த வீட்டிலே இருக்கேம்மா.''

''இதுக்கு அடுத்த தெரும்மா.''

''எதுக்கு என்ன அம்மாங்கறே, அக்கான்னு சொல் லேன். நான் மஞ்சரி'' என்று சொல்லிவிட்டு சிரிக்கிறாள் மஞ்சரி.

''காபி குடிச்சிட்டுப் போம்மா. அங்கே போய்தான் காபி போடணும் இல்லே.''

''இல்லேக்கா போகணும்.''

''இல்லேம்மா நீ சாப்பிட்டுட்டுதான் போகணும். அக்காங்கறே. தங்கச்சியை யாராவது சாப்பிடாம விட்டிருவாங்களா?''

அவசரம் அவசரமாக உள்ளே சென்று காபியைக் கலக்கினாள். அதற்குள் ஒரு தட்டில் கொஞ்சம் கை முறுக்கு, பால் கோவா எல்லாவற்றையும் கொண்டு வந்து தருகிறாள்.

''சாப்பிடும்மா. அதுக்குள்ளே, நான் காபியைக் கலக்கறேன்.''

''ஐயோ அக்கா வேண்டாம்.''

''நீ சாப்பிட்டுதான் ஆகணும். இல்லேன்னா இந்த அக்கா மனசு வருத்தப்படும்.''

மறுபடியும் மஞ்சரி உள்ளே போக வீட்டை நோட்டம் விடுகிறாள் தேன்மொழி. சற்று பெரியதான ஹால். மார்பிள் போன்று வெள்ளை கற்கள் ஒட்டப்பட்டு பளபளவென்று மின்னிக் கொண்டு இருக்கிறது. நன்றாக பெரிய, பெரிய சோபாக்களும், சுவற்றில் தொங்கும் அழகான படங்களும், மூலையில் சார்த்தி வைக்கப்பட்டிருக்கும் பெரிய நைட்லாம்பும் பார்ப்பதற்கே அழகாக இருந்தது. இவள் சற்று பணக்கார வீட்டைச் சேர்ந்தவள் போல் தான் தோன்றுகிறது. காதுகளில் ஒரு பெரிய வைரத்தோடு, கழுத்தை ஒட்டிய அட்டிகை போன்ற ஒரு நகை. கைகளில் கல் வளையல்கள். காதில் பெரிய பொன் மாட்டல் என்று பார்ப்பதற்கே சற்று அழகாகத்தான் இருந்தாள்.



சாதாரணமாக தேன்மொழியைப் பொறுத்தவரை பணம் இருந்தால் பரந்த மனது இருக்காது என்பது அவள் எண்ணம். எங்களிடத்தில் எத்தனையோ பணம் இருக்கிறது. இருந்தாலும் ஒரு பைசா கொடுக்க அம்மா ஆயிரம் யோசிப்பாள். அப்பா தனக்குக் கொடுத்தாலும் கொடுப்பாரே. வெளி ஆளுக்கு எதையும் பெரிசாக கொடுத்ததில்லை. ஆனால் எத்தனையோ ஏழைகள் வீட்டில் தங்களுக்கு இல்லை என்றாலும் இருப்பதை எடுத்துக் கொடுப்பதைப் பார்த்திருக்கிறாள்.

ஏதோ ஏழை என்ன? தான் சின்ன வயதாக இருக்கும் போது மகா அத்தை வீட்டிற்கு ஒருமுறை சென்றது ஞாபகத்திற்கு வந்தது. அத்தை மிக மிக சிறிய வீட்டில் இருந்த நேரம். தாங்கள் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று போய்விட, தங்களுக்கு என்று சமைத்து வைத்திருந்ததை வந்தவர்களுக்கு போட்டு அனுப்பினார் அத்தை.

''உங்க அத்தை பாவம். இருப்பதை எல்லாம் நமக்கு போட்டுட்டா பாரு...''அப்பா சொல்லி சொல்லி மாய்ந்தது ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் இந்தப் பெண்மணி வசதியானவளாக இருக்கிறாள். கொடுக்கும் மனம் இருக்கிறது போலிருக்கிறது. ஆச்சரியம்தான். புடவை உலருவதற்காக ஃபேனை வேறு போட்டுவிட்டுப் போனாள் மஞ்சரி.

முறுக்கு சாப்பிடும்போதே வாயில் தேனாகக் கரைந்தது. பால்கோவாவும் மிக மிக அருமை. முதலில் வேண்டாம் என்றாலும் அந்த பண்டங்களின் ருசி தேன்மொழியை சாப்பிட வைக்கிறது.

''ஆமா நீங்க எந்த ஊரு?'' காபியைக் கொடுத்தவாறே கேட்கிறாள் மஞ்சரி.

''நாங்க சென்னை.''

''அங்கேந்தா இத்தினி தூரத்திலே வந்திருக்கீங்க...''

''அவருக்கு வேலை இங்கதான் மாத்திட்டாங்க.''

''ஓஹோ எந்த கம்பெனிலே இருக்கார்?''

''கம்பெனி எல்லாம் இல்லேக்கா. ஒரு பிஸினஸ் கான்ட்ராக்ட். எங்க கடை திறக்கற வரைக்கும் ஒரு மூணு, அல்லது நாலு மாசம் போல இருப்போம். அப்புறம் கிளம்பிடுவோம்.''

''என்ன கடை?''

''பைப்பெல்லாம் இருக்குங்களே அந்தக் கடை?''

இதைச் சொல்ல மஞ்சரி தேன்மொழியையே ஆழமாகப் பார்க்கிறாள்.

''உங்கப்பா சாதாரண வேலையிலே இருக்கறவரா?''

அந்தக் கேள்வியில் ஆச்சரியமடைகிறாள் தேன்மொழி.

''ஏன் இப்படிக் கேக்கறீங்க?''

''தப்பா நினைக்காதேம்மா. ஏதோ பிஸினஸ் ஆளை பண்ணிகிட்டு இருக்கேன்னு சொல்றியே.''

தேன்மொழிக்கு ஆச்சரியமான ஆச்சரியம்.

''இது என்ன இது? இந்த அம்மா என்னவோ தப்பா பேசுகிறாற் போல் இருக்கிறதே.''

''என்ன பேசறீங்க? எங்க அப்பாவுக்குப் பிஸினஸ். பெரிய பணக்காரர்.''



சாதாரணமா சொத்து கைவிட்டுப் போகக்கூடாதுன்னு தானே இப்படி கல்யாணம் பண்ணுவாங்க. தவிரவும் பிஸினஸ்ஃலே எக்கச்சக்க லாபம் வருமேக்கா.''

''அதெல்லாம் மாறிடுச்சும்மா. முன்னைப் போல எதுவுமே இல்லைம்மா. ஆயிரம் இருந்தாலும் மாதா மாதம் சம்பளம் வாங்கற மாதிரி உண்டா. வேலை செஞ்சோம். வெளியே வந்தோம். மாதம் ஆனா சொள்ளை சொள்ளையாக துட்டு. அதுவும் ஐ.டி. கேள்விப்பட் டிருக்கியா. எம்புருஷன் அதுலேதான் வேலை செய்ய றாரு. மாசம் அம்பதுக்கு மேலே வருமானம். டேக்ஸ் பிராப்ளம் வரும்னு இரண்டு பேமண்ட் தராங்க. அது உனக்குத் தெரியுமா?''

தேன்மொழி சிறிது நேரம் விழிக்கிறாள். ''பிஸின ஸிலும் அந்த அளவு வருங்க்கா.''

''வரலாம்மா. ஆனா கட்டாயம் வரும்னு என்ன இருக்கு?

திடீர்னு குபேர லாபம் அடிக்கும். இல்லைன்னா ஒண்ணுமே இல்லாமே எல்லாம் நஷ்டம் ஆயிடும்.''

தேன்மொழி யோசிக்கிறாள். மஞ்சரி அக்கா சொல்வ தெல்லாம் உண்மைதான். ஒரு முறை தன் தந்தைக்கு பிஸினஸ் படுத்துவிட அம்மாவின் நகை தன் நகை எல்லாவற்றையும் கூட அம்மா அடகு வைத்தது ஞாபகத்திற்கு வந்தது. ஏன் அப்போதிருந்த காரையும் கூட அப்பா விற்றது ஞாபகத்திற்கு வந்தது. இப்போது இருக்கும் வீட்டில் இல்லாமல், சின்ன வீட்டிற்கு தாங்கள் சென்றது ஞாபகத்திற்கு வந்தது.

''நீங்க சொல்றது எல்லாம்... உண்மைதாங்க.'' மெதுவாக ஒத்துக்கொள்ள,

''அதுதாம்மா கேக்கறேன். இப்போதெல்லாம் வேலைக்குப் போறவங்க நம்மளவங்கள்ளேயே நிறைய இருக்காங்க. நீ உம் பேரைக் கேட்டவுடனே நீ நம்மளவங்கன்னு தெரிஞ்சுது. நீ ஏன் போய் பிஸினஸ்காரனை திருமணம் செய்துகிட்டே. வாழ்க்கை ஈஸியா போகாதும்மா. மேடு, பள்ளம், மேடு பள்ளம்னு ஆயிடும். நீ என்ன பண்ணுவே? பார்த்தா சின்ன பொண்ணா இருக்கே?''

மஞ்சரி வாய்ப்பந்தல் போட மெதுவாகத் தன் வீட்டு விஷயத்தைப் போட்டு உடைக்கிறாள் தேன்மொழி. எப்போதுமே நம் பலவீனங்களை அடுத்தவர் (கணவர் உட்பட) தெரிந்து கொண்டாலே நமக்கு இழிவுதான். இதைத்தான் கபீர்தாஸர் என்ற துறவி மிக மிக அழகாக சொல்லி இருக்கிறார்.

''காக்கையும், குயிலும் ஒரே கூட்டில் இருக்குமாம். வாயைத் திறந்தவுடனேயே காக்கை எது குயில் எது என்று தெரிந்து விடுமாம். அதனால் வாயைத் திறக்கவே திறக்காதே. (வாயைத் திறந்து உன் பலவீனங்களை சொல்லாதே) என்பாராம்.''

இங்கே தேன்மொழியும் மஞ்சரியின் பேச்சுக்கு உட்பட்டு தன் கதையைச் சொல்ல ஆரம்பிக்கிறாள்.

''இதெல்லாம் திடீர்னு நிச்சயமான சங்கதிக்கா'' என்றவாறே தன் கதையைச் சொல்லச் சொல்ல கண்களை அகல விரித்தவாறு கேட்டுக் கொண்டிருக்கிறாள் மஞ்சரி.



''அடப்பாவமே. இது என்ன அநியாயம்? குருவி தலைல பனங்காய் வைக்கற மாதிரி யாராவது நடந்துப் பாங்களா? பாவம்மா நீ.

உன்னைப் பாக்கும்போது கூடப் பிறக்காத தங்கச்சியைத்தான் பார்க்கறதா நினைக்கறேன். தங்கச்சி புருஷனுக்கு உதவ வேண்டியதுதான். அதுக்காக சொந்த பொண்ணை யாராவது அடகு வைப்பாங்களா? எத்தனை சின்னவளா இருக்கே. இந்தச் சின்ன வயசுலே எதுக்குக் கல்யாணம்? கொஞ்ச நாள் ஜாலியா இருக்கலாம் இல்லே. இந்தக் காலத்துலே இருபத்து நாலு வயசு இல்லாம பொண்ணுகளுக்குக் கல்யாணமே பண்றதில்லே. அது தெரியுமா உனக்கு?''

''அவர் நல்லவர் தாங்கா.''

''நல்லவரா இருக்கலாம்மா. ஆனா வயசு வித்தியாசம் நிறைய இருக்கு போல இருக்கே. இந்தக் காலத்து படிச்ச பொண்ணுங்க மூணு அல்லது நாலு வயசு வித்தியாசத்துக்கு மேலே கல்யாணம் பண்ணிக்கறதே இல்லே. அது தெரியுமா உனக்கு. பத்தொன்பது வயசு குழந்தையை இருபத்து ஒன்பது வயசு தடியனுக்கா கட்டிக் கொடுப் பாங்க.

பத்து வயசு வித்தியாசமா? அம்மாடியோவ்... உனக்கு சொந்த அப்பாதானே. எதுக்கு உன் வாழ்க்கைலே இப்படி விளையாடிட்டாரு.''

மஞ்சரி கேட்க, கேட்க... தேன்மொழிக்கு ஒன்பது வித்தியாசம் உறுத்த, தன்னை வயது மிகுந்த கிழவனுக்கு

அப்பா கொடுத்துவிட்டார் என்ற உணர்வு எழ, நெஞ்சில் துக்கம் போக, ''நான் வரேங்க்கா'' என்றவாறு எரிச்சலோடு வீட்டிற்குப் போகிறாள்.

## 13



**போ**ய் டிபனோ, சமையலோ செய்யும் நிலையில் இல்லை அவள். சமையலைப் பற்றி அதிகமாகத் தெரியாது. எப்போதுமே இட்லி மிக்ஸ், வடை மிக்ஸ், தோசை மிக்ஸ், பஜ்ஜி மிக்ஸ் என்று எல்லா மிக்ஸ்களையும் வாங்கி வைத்து சமையல் செய்து கொண்டிருக்கிறாள். இன்று மனம் ஏனோ வேதனைப்பட அதைக் கூட செய்ய மனம் ஒப்பவில்லை.

செல்லும் வழியில் இருந்த கடையில் நாலு சூடான சமோசாக்களையும் கூடவே சட்டினி எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டாள். காலையில் போட்ட டிகாஷன் இருக்கு. பாலைச் சுட வைத்துக் கொடுத்தால் போதும். நினைத்தவாறே சற்று வேகமாக நடக்கிறாள். நெஞ்சு வலிப்பது போல் இருந்தது. தலையும் வலிக்க ஆரம்பித்தது. 'அந்த மஞ்சரி அக்கா சொன்னது மிக மிக சரி தான். எதற்கு தன்னை இத்தனை வயதானவனுக்கு திருமணம் செய்திருக்க வேண்டும்? அப்பாவிற்கு இதில் என்ன அவசியம் வந்திருக்கு? அம்மாவிற்குக்கூடத் தெரிவிக்காமல், அவசரம் அவசரமாக ரிஜிஸ்தர் ஆபீசில் தன்



திருமணத்தை நடத்த வேண்டிய அவசியம் என்ன? அப்பா தனக்கு என்று சேர்த்து வைத்த துட்டை எனக்கு செலவழிக்க வேண்டுமே என்ற எண்ணமா?'

அப்பாவின் மேல் இருந்த கோபம் கொஞ்சம் கொஞ்சம் அதிகமாகிப் போனது. அந்தக் கோபம் நிரம்பி இப்போது புருஷன் மேல் வழிந்தது. 'இவர் எதுக்கு இத்தனை வயசில் திருமணம் புரிந்து கொள்ள வேண்டும். மஞ்சரி சொன்னது போல் ஒரு அலுவலகத்தில் வேலையில் இருந்தால் மாதம் கை நிறைய சம்பளம் வந்திருக்கும். மாதம் ஐம்பதாயிரத்துக்கு மேல் சம்பளம் என்று சொன்னாளே மஞ்சரி அக்கா. 'மனம் ஏனோ அழுதது. தன் வாழ்க்கையை யாரோ பாழடித்து விட்ட உணர்வு.' அம்மா 'வேண்டாம்' என்று தலைபாடாக அடித்துக் கொண்டாள். அப்பாதான் எதையும் கேட்கவில்லை. மனம் பொறுமியது. சற்று நேரம் படுக்க வேண்டும். மனம் வேறு சரியில்லை.

கணவன் வருவதற்கு எப்படியும் ஐந்தாகி விடும். சற்று படுத்து எழுந்திருப்போம். விறுவிறுவென்று வீட்டிற்குச் செல்கிறாள்.

வீட்டை நெருங்கும் போதே கணவன் வாயிலில் அமர்ந்திருப்பது தெரிய வந்தது. ஒரு நிமிடம் தூக்கி வாரிப் போட்டது. இப்போது கணவனை சந்திக்கவே விருப்பமில்லை. மனது படபடக்க, வருகிறாள்.

''என்ன சீக்கிரம்?'' கேட்கிறாள்.

''இல்லை... பாவம்... நீயே போரடிச்சுப் போயிருக்கே. இன்னிக்கு சூபர்வைசர் யாருமே வரலை. சரி உனக்கு

கம்பெனி தரலாம்னு ஓடி வந்துட்டேன்.'' சொல்லும்போது கண்கள் மலர்ந்து, முகம் மலர்ந்து சிரிக்கிறான்.

தேன்மொழிக்கு அவனைப் பார்க்கவே சங்கடமாக இருந்தது. சாதாரணமாக இருந்தால் அவன் வந்ததையே பெருமையாக எண்ணுவாள். முகத்தில் சிரிப்பும், ஆனந்தமும் மகிழ்ச்சியும் களைகட்டி இருக்கும். இன்று ஏனோ மனம் வெறுமை அடைந்திருந்தது.

'மஞ்சரி அக்கா சொன்னது நிஜம் போலத்தான் தோன்றுகிறது. தன்னை எதற்காக மணம் புரிய வைத்து, அதுவும் யாருக்கும் தெரியாமல் இத்தனை வயசு வித்தியாசத்தோடு திருமணம் செய்து கொடுக்க வேண்டும். அநியாயம் தான்.'

புருஷனுக்கு சமோசாவை தட்டில் எடுத்து வைக்கிறாள். பாலைக் காய்ச்சி புருவைக் கலந்து தருகிறாள். முகம் மட்டும் வாட்டமாக இருக்க, ''என்னம்மா ஒரு மாதிரி இருக்கே?'' பரிவுடன் அவளின் தலையைத் தடவ,

''ஒண்ணும் இல்லே தலைவலி'' என்றவாறே திரும்புகிறாள்.

''என்னது தலைவலியா?'' தவித்துப் போகிறான் அர்ஜுன்.

''ஏம்பா மாத்திரை ஏதாவது சாப்பிடறியா? அமிர்தாஞ்சனம் ஏதாவது தடவிக்கிறியா?'' துடித்துப் போய் அவன் கேட்க,

''ஐயோ அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். என்னைக் கொஞ்சம் பிரியா விடுங்க. தலைவலி சரியாயிடும்.''



''நீ போய் படு போ.'' டிபனைக் கூட சாப்பிடாமல், படுக்கையைத் தட்டிப் போட்டு, தலையணையை சற்று உயரமாக வைத்து, ''வாடா... படுத்துக்க'' கரிசனமாகக் கூப்பிட, அவன் கரிசனம் மனதில் ஒட்டாமல் மஞ்சரியின் பேச்சே காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. பேசாமல் போய் படுத்துக் கொண்டு கண்களை மூடி படுத்துக் கொள்கிறாள்.

முதலில் சற்று வேறு சிந்தனையில் இருந்தாலும் பின் கணவனைப் புரிந்து கொண்டு வாழ்க்கையை சந்தோஷமாக்கிக் கொண்டவள்தான் தேன்மொழி. இனிமேல் சொர்க்கம்தான் என்று சிந்தித்திருந்தவனுக்கு, தேன்மொழி இருந்த நிலை மனதைக் கசக்கிற்று. பாவம் வீட்டிற்கு ஒரே பெண். மிக மிகச் செல்லமாக வளர்ந்தவள். இப்ப அலண்டு போனதால் உடம்பு வந்துவிட்டதோ தான் கூட சாப்பிடாமல்,

''ஏம்மா கொஞ்சம் காபி குடுக்கிறியா?'' பாசமாகக் கேட்கிறான்.

''வேண்டாங்க. என்னைக் கொஞ்சம் டிஸ்டர்ப் பண்ணாதீங்க.''

தேன்மொழியின் பதிலில் காயப்பட்டவனாய் மௌனமாக அமர்ந்து இருக்கிறான்.

'இவள் என் மனைவி அல்லவா? இவள்மேல் நான் உயிரையே வைத்திருக்கிறேன் அல்லவா? இவளுடைய துன்பம் என்னவென்று எனக்குச் சொல்லக் கூடாதா? என்னால் முடிந்தால் துன்பத்தை எப்பாடு பட்டும் சரி

செய்ய மாட்டேனா?' மனது நினைத்து, நினைத்து வருத்தப்பட்டது. தன்னை இன்னும் அவளின் ஒரு பகுதியாக நினைக்க மறுக்கிறாள் என்ற உணர்வு அவன் நெஞ்சையே வருத்தியது.

''என்னவாகும்? ஏம்மா டாக்டர்கிட்டே வர்றியா?''

''ஐயோ ப்ளீஸ் ஒண்ணும் வேண்டாம்,'' திரும்பி படுத்துக் கொள்கிறாள். ஒரு பெருமூச்சு விட்டபடி அவளின் படுக்கைக்கு அருகிலேயே ஒரு நாற்காலியில் அமர்ந்து கொள்கிறான். அவனின் நினைவுகள் எல்லாம் வடிந்து விடுகிறது.

எத்தனை ஆசை, ஆசையாக இன்று ஓடி வந்தோம்.

தேன்மொழி ஏதோ கவலையால் படுக்கையில் படுத்தபடி அப்படியே உறங்கிப் போய் விடுகிறாள். திடீரென்று கண் விழித்தபோது அவளின் அருகில் நாற்காலியில் சற்று சாய்ந்தவாறு அவளின் கணவன் அவனும் பாதி கண்களை மூடியபடி உறங்கிப் போயிருக் கிறான். அந்த நிலையில் அவனைப் பார்க்கையில் அவளுக்குப் பாவமாக இருந்தது.

'சீ... பாவம்... திருமணம் எப்படியோ நடந்திருக்கலாம். எதற்காகவும் நடந்துருக்கலாம். ஆனால் கணவன் என் பவன் நல்லவன்தான். இன்றைக்கு எத்தனை ஆசையாக ஓடி வந்தானோ. பாவம் அவன்.' மணியைப் பார்த்தால் எட்டைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது.

'ஐயையோ இன்னும் சமைக்கக்கூட இல்லையே. பாவம் மதியமும் ஏதோ மூன்று சமோசாக்களை கொடுத்



தேன். இப்போது இன்னும் சமைக்கவே ஆரம்பிக்க வில்லை. கணவன் எழுந்திருக்கு முன் சமைக்க வேண்டும்.'

விறு விறுவென்று சமையல் அறையில் நுழைந்தவள் சாப்பிடும் மேசையின் மேல் டிபன் காரியரில் எடுத்து வந்த எடுப்பு சாப்பாட்டைப் பார்க்கிறாள். கணவன் கொஞ்ச நேரம் முன்பு வாங்கிக் கொண்டு வந்து வைத்திருக்க வேண்டும் என்று தோன்றியது. 'பாவம் என் கணவன் அப்பாவி. நல்லவன் எத்தனை அனுசரணை யாக இருக்கிறான். அவனைப் போய்' தன்னையே உள்ளூர திட்டிக் கொண்டவள் ''ஏங்க... சாப்பாடு ஆறிடும்.'' கூப்பிட வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந் திருக்கிறான். இங்க வந்த ஒரு வாரமாகப் பார்க்கிறாள். ஒரு குரல் கொடுத்தால் போதும். ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாலும் பட்டென்று எழுந்து விடுவான்.

''ஒண்ணும் இல்லேங்க. நேரம் ஆவுது. சாப்பிட வாங்க'' என்றவாறு அவனுக்கும் தட்டை போட்டு, அவனுக்கு எதிரில் தனக்கும் போட்டுக் கொண்டு சாப்பிட ஆரம்பிக்கிறாள். தேன்மொழியும் அவனுடன் அமர்ந்து உண்ணுகிறாள். அவனைப் பார்க்க, பார்க்க குற்ற உணர்வு குடைகிறது. பாவம் அவன் நல்லவன். முகம் சரளமாக மறுபடியும் அவனிடம் சகஜமாகப் பேசுகிறாள். ஒன்றுமே நடவாதது போல் பழையபடி அவனிடம் தான் படித்தவைகள், கற்றவைகள், கேட்டவைகள் எல்லா வற்றையும் சொல்லி சிரித்துக் கொண்டு இருக்கிறாள். ஏனோ மஞ்சரியைப் பற்றி மட்டும் மூச்சு விடக் கூட மறுக்கிறாள்.

அர்ஜுனுக்கும் எந்த சந்தேகமும் ஏற்படவில்லை. பாவம் ஏதோ உடம்பு சரியில்லை என்று நினைத்துக் கொள்கிறான். ஏனோ அதன் பிறகு மஞ்சரி வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்றே தோன்றவில்லை. தோன்றும் போதெல்லாம் தவிர்த்து வருகிறாள்.

வந்து இருபது நாட்களாகி விட்டது. அம்மாவிட மிருந்து பலமுறை போன் வந்தது. அம்மா அழுதழுது விசாரிக்கும்போது மனதை என்னவோ செய்தது. அப்பாவும் வாரத்திற்கு ஒரு முறையாவது தொலை பேசியில் தொடர்பு கொள்கிறார். அத்தையும் வாரத்திற்கு ஒருமுறை தன்னுடனும், பிள்ளையுடனும் பேசுகிறாள். வந்த நாட்களில் தன்னை இருமுறை படத்திற்கு அழைத்துச் செல்கிறான் அர்ஜுன்.

அவளுக்கு எந்த ஹீரோவை மிகவும் பிடிக்கும் என்று கேட்டுக் கொண்டு அந்த ஹீரோவின் படத்திற்கு அழைத்துச் செல்கிறான் அர்ஜுன். வெளியில் சென் றாலே அன்று வெளியிலேயே சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்து விடுவார்கள். இந்த ஊரிலும் அவளுக்கு ஆசை ஆசையாக சூடிதாரும், ஆசைப்பட்ட நிறத்தில் புடவையும், வாங்கித் தந்தான்.

கண்ணாடி வளையல்கள் என்றால் தேன்மொழிக்கு மிகமிகப் பிடிக்கும். வளையல்களுக்கு என்று ஏற்பட் டிருக்கும் தனிக் கடைக்கு அவளை அழைத்துப் போய் அவளுக்கு வேண்டிய வளையல்களை வாங்கித் தந்தான் கணவன். தேன்மொழி சந்தோஷத்தின் உச்சியில் இருந்தாள்.



தினம் கணவன் வேலைக்குச் சென்ற பின் வேறு வழியாக தையல் கிளாஸுக்குச் சென்று கற்றுக் கொண்டு திரும்பி விடுவாள். மஞ்சரி இருந்த தெருவையே தவிர்த்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள். கணவனுக்கு டிபன் செய்து, இரவு சமையல் முடித்து, அவன் வந்து சாப் பிட்டதும் இருவரும் வெளியே கிளம்பி விடுவார்கள்.

''அம்மா... அம்மா...'' என்று அவளிடம் உருகிக் கிடந்தான் கணவன். கணவனின் நடவடிக்கைகளில் மஞ்சரி சொன்னது கூட மறைந்து போனது. அவனோடு ஆனந்தமாகத்தான் வாழ்வதாக எண்ணுகிறாள். ஆனாலும் அவ்வப்போது அம்மாவின் தொலைபேசி வந்து பயமுறுத்துகிறது.

''வேணா கண்ணு நீ புறப்பட்டு வந்திடு. இந்த வாழ்க்கை வேணாம்.'' அம்மா மட்டும் அடிக்கடி அழுது புலம்பும்போது எதுவும் சொல்லத் தோன்றாமல் மௌனமாக இருப்பாள். சில நேரங்களில் அம்மா அழுதால், ''அம்மா என்னம்மா நீங்க? நான் இங்கே ரொம்ப நல்லா இருக்கேன். இவரு என்னை ரொம்ப நல்லா பாத்துக்கறாரு. கவலையேப் படாதீங்க'' என்பாள்.

''இன்னும் இரண்டு மாசம் தானே ஓடி வந்துடறேன்'' என்பாள்.

அன்று தையல் கிளாசுக்குப் போய் விட்டு வந்தபோது மனம் ஏனோ அம்மா சொன்னதில் ஆழ்ந்திருந்தபோது மஞ்சரி எதிர்ப்படுகிறாள்.

''என்ன ஆளையே காணோம்.''

''இல்லே. உன்னைப் பார்த்து எத்தனை நாளாச்சு? வாம்மா வீட்டுக்கு, வா.''

''இல்லே போகணும்.''

''வா தேனு...'' அவளின் பதிலை எதிர்பார்க்காமல் கையைப் பிடித்துத் தர தரவென்று இழுத்துப் போனாள் மஞ்சரி.

## 14



''என்னங்க நீங்க அவுங்க சீக்கிரம் வருவாங்க வீட்டுக்குப் போகணும்.''

''போகலாமே... இரு... என்னிக்கோ ஒரு நாள் உன்னைப் பாக்கறேன். நம்ப மனுஷங்களா இருக்கி யேன்னு தானே உங்கிட்டே பேசணும்னு ஆசைப் படறேன். உன்னைப் பாத்தா என் கடைசி தங்கை ஞாபகம் வருது தேனு...'' சொல்லிவிட்டு சட்டென்று அழ,

''என்னக்கா ஆச்சு?'' தேனு பதறிப் போய் கேட்க,

''என் கடைசித் தங்கை மேனகா ஆக்ஸிடண்ட்லே போயிட்டா. அவ பார்க்கறதுக்கு உன்னையே உரிச்சு வச்சிருப்பாம்மா. உன்னிலே அவளைத்தாம்மா பாக் கறேன். தேனு தினமும் ஒரு அஞ்சு நிமிஷம் என்னைப் பாத்துட்டுப் போவியா? என்னை உன் கூடப் பிறந்தவளா நினைச்சிட்டு செய்வியா?'' தேன்மொழியின் மனம்



இளகியது. ஒவ்வொரு வாழ்க்கையிலும் ஒவ்வொரு சோகம்.

''தேனு இதை என் ஞாபகார்த்தமா வச்சுக்கயேன்.'' விடுவிடுவென்று அறைக்குள்ளே போய் இரண்டு மூன்று முத்து வரிசைகள் கோர்க்கப்பட்ட குடை போன்ற அந்த ஜிமிக்கியைக் கொடுத்தாள்.

''ஐயையோ என்னக்கா இது, வேண்டாம்.''

''இது ஒண்ணும் காஸ்ட்லி இல்லேம்மா. இமிடேஷன் தான். ஆனா வேலைப்பாடு அழகா இருக்குன்னு வாங்கி னேன். முத்து கடைசியிலே சின்னச் சின்ன அன்னம் போட்டு ரொம்ப அழகா இல்லே.''

தேன்மொழி பார்க்கிறாள். அவளுக்குத் தங்கத்தில் வித விதமான செட்டுகளோடு நகைகள். அது மட்டுமில்லாமல் முத்து செட்டு, கெம்பு செட்டு, கருகமணி செட்டு என்று நிறைய நகைகளை அம்மா செய்து வைத்திருந்தாள். இருந்தாலும் இமிடேஷன்களில் வித விதமான நகைகளில் அவளுக்கு மயக்கம்தான். முத்துக் குடை ஜிமிக்கியும் பளபளவென்று மின்ன,

''ரொம்ப அழகாகவே இருக்கு. அக்கா'' குதூகலிக் கிறாள். சின்னக் குழந்தையாக பரவசப்படுகிறாள்.

''இரு தேனு சாப்பிட முள்ளு முறுக்கு இருக்கு. சாப்பிடேன். நெய்யிலே செய்த மைசூர் பாக்கு இருக்கு சாப்பிட்டிடு'' ஒரு தட்டில் கொண்டு வந்து வைக்க,

''அக்கா என்னக்கா? ஒண்ணும் வேண்டாம். அவுங்க வந்திடுவாங்க.''

''வரட்டுமேம்மா. தங்கச்சிக்குக் கொடுத்தா தங்கச்சி புருஷனுக்குத் தரமாட்டேனா?''

''ஐயையோ அதெல்லாம் வேண்டாங்க்கா.''

''பேசாம இரு நீ.''

தேன்மொழி மறுக்க மறுக்க ஒரு தட்டில் முறுக்கு களையும் இரண்டு மைசூர் பாக்குகளையும் வைக்கிறாள்.

''அக்கா ஸ்வீட் காரம் எல்லாம் எங்க வாங்குவீங்க? ரொம்ப டேஸ்டா இருக்கே.'' வைத்த ஒன்றைக்கூட விடாமல் எல்லாவற்றையும் சாப்பிட்டு முடித்தாள்.

''நீ வேற எங்க வாங்கறீங்கன்னு எங்க வீட்டுக்காரரை கேட்டாத்தான் தெரியும். எதையும் அத்தனை கரெக்டா செய்வாரு. அந்த மாதிரி மனுஷனையே பாக்க முடியாது தெரியுமா?''

''அப்படியா?'' ஆச்சரியப் படுகிறாள் தேன்மொழி.

''சொன்னா யாரும் நம்ப மாட்டாங்க தேனு. வேலையிலே அத்தனை கரெக்ட். இருந்தும் வீட்டுக்கு வந்துட்டா ஆபீஸ் வேலையே மறந்துடுவாரு. வீட்டுலே என்னென்ன செய்யணுமோ. எப்படி செய்யணுமோ அவருக்கு மட்டும்தான் தெரியும்'' சட்டென்று நெகிழ்ந்து போகிறாள்.

''தேனு அவர் எனக்கு புருஷனா வரதுக்கு நான் எத்தனை கொடுத்து வச்சிருக்கணும் தெரியுமா?'' சொல்லும் போதே மறுபடியும் கண்கள் கலங்கிப் போய் அழுகிறாள்.



''என்னக்கா அழறீங்க?'' தேனு சற்று வியப்புடன் கேட்க,

''இல்லைம்மா அந்த மாதிரி ஒரு கம்பானியன்ஷிப்பை வேறு யாருமே தர முடியாது. எம்புருஷன் மாதிரி உலகத்துலே யாராவது இருக்காங்களா அப்படிங்கறதே சந்தேகம்தான். என் கதையை மொத்தமும் சொன்னாத் தான் உனக்கு நான் சொல்றதே முழுமையா புரியும்.''

தேன்மொழி சற்று இருப்பு கொள்ளாமல் நிற்க,

சட்டென்று இரண்டு முறுக்கு மைசூர்பாக்கை கட்டிக் கொடுக்கிறாள்.

''உங்க வீட்டுக்காரருக்கு கொடும்மா.''

''இன்னொரு நாளைக்குப் பேசலாம். நீ கிளம்பும்மா'' என்கிறாள்.

பழகுவதில் மிக மிக நல்லவளாகத் தெரிகிறாள். ரெண்டு நாள் தான் பார்த்தேன். அதற்குள் என்ன ஒரு பாசம். என்ன ஒரு ஆசை. கணவன் ஆசை, ஆசையாக வாங்கிக் கொண்டு வந்த ஸ்வீட் காரத்தை எப்படி தாராளமாகத் தருகிறாள். முத்துக்களால் ஆன அந்த ஜிமிக்கு எப்படியும் முப்பது நாற்பது ரூபாய் பெரும். வந்த ரெண்டாவது சந்திப்பிலா எடுத்து தருவாள். மிக மிக நல்ல பெண்மணி தான். தேனு, தேனு என்று எப்படி ஆசையாகப் பேசுகிறாள்?

வீட்டிற்குச் சென்று, காபியைப் போட்டு இரவு சமையல் செய்யும்போதும் மஞ்சரியின் ஞாபகமே தோன்றியது. இப்போதே பார்ப்பதற்கு வெள்ளையாக

பளபளவென்று இருக்கிறாள். இன்னும் தன் வயதில் எப்படி இருந்திருப்பாள். சற்று பெரிய குங்குமப் பட்டும், முகமெல்லாம் பூரிப்பும் தலையை அழுந்த வாரி லேசாகப் போடப்பட்ட கொண்டையும் சற்று பூசினாற் போன்ற உடலும், பம்மென்ற கன்னங்களும் மஞ்சரி மேல் ஒரு நல்ல அபிப்ராயத்தை ஏற்படுத்தியது. மஞ்சரியைப் பற்றி சிந்தித்ததில் கணவன் வந்ததைக்கூட கவனிக்கவில்லை. வழக்கம்போல் ஒரு அல்வா பொட்டலமும், கொஞ்சம் கனகாம்பரமும் வாங்கி வந்திருந்தான் கணவன்.

தட்டில் கணவனுக்கு முறுக்கு, மைசூர் பாக்கு தர, எடுத்துச் சாப்பிட்டவன்.

''சூப்பரா இருக்கே? எங்கே வாங்கினே?'' என்கிறான்.

மஞ்சரியைப் பற்றி சொல்லலாமா என்று யோசித்தாள் ஏனோ பேச்சை மாற்றுகிறாள்.

''எங்க கிளாஸ்லே ஒருத்தங்க எடுத்துட்டு வந்தாங்க.'' என்றவள் ''ஆமா நீங்க என்ன வாங்கிட்டு வந்திருக் கீங்க?'' என்றவாறே பொட்டலத்தைப் பிரித்தவள் ''அல் வாவா? என்ன அல்வா'' என்றவள் ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டவள் சட்டென்று முகம் சுளித்தாள். தூ என்று துப்புகிறாள்.

''என்னம்மா ஆச்சு?'' அர்ஜுன் சற்று பதறியவாறு கேட்கிறான்.

''ஐய... அல்வாவா இது? ஒரே டால்டா நாத்தம். கலர் பவுடர் ரொம்ப போட்டிருக்கான் போலருக்கு. கசக்குது.''

அர்ஜுன் ஒன்றும் புரியாமல் விழிக்கிறான். 'இது என்ன இவள் இப்படி சொல்கிறாள்? கடந்த பல



நாட்களாக அவன் தினமும் இதே அல்வா வாங்கி வருவதும் அவள் சுவைத்துச் சாப்பிடுவதும், 'ஆஹா எக்ஸலண்ட்டா இருக்கு' என்று சொன்னதும், மனதை நெருடியது. இப்போது என்ன ஆகிவிட்டது?

''நான் வாங்கிட்டு வந்தேனே அந்த ஸ்வீட் சாப்பிட் டீங்களா?''

''ம்...''

''எப்படி இருக்கு?''

''நல்லாதான் இருக்கு.''

''அது மாதிரி இருந்தா சாப்பிடலாம்.''

''சரிம்மா அது எங்க கிடைக்குது?''

''தெரிஞ்சவங்க யாரோ கொண்டுட்டு வந்து கொடுத் தாங்க.''

''அப்படியா'' என்றவன் வாய் மூடிக் கொண்டான். மனம் ஏனோ ஏமாற்றத்தில் விழுந்தது. 'இந்தக் கடை எங்கிருக்குன்னு கேட்டுகிட்டு வரமாட்டாளா? தானாவது இவளுக்கு பிடித்ததை வாங்கிக் கொடுக்கலாமே.' யோசனையில் ஆழ்கிறான்.

அந்த அல்வாவை தூர வைக்கிறாள். அர்ஜுன் தான் போட்டுக் கொண்டு சாப்பிடுகிறான்.

கணவனின் மனதை காயப்படுத்திட்டோமோ என்ற உணர்வு கூட இல்லாமல் சந்தோஷமாகத்தான் இருந் தாள் தேன்மொழி. கணவனை ஏனோ லட்சியம் செய்ய வில்லை. 'ஒரு நல்ல ஸ்வீட், காரம் கூட வாங்க துப்

பில்லை' மனம் முணுமுணுத்தது. அவளுடைய கணவன் பணத்தைக் கொட்டிக் கொட்டித் தான் வாங்குவான். எத்தனையோ முறை ''என்னங்க இத்தனை பணம் கொடுத்தா வாங்கிட்டீங்க'' என்பாள்.

''ச்சு... பரவாயில்லைம்மா. உனக்கு பிடிக்கும் இல்லை'' என்பான்.

அன்று சந்தோஷமாக இருந்தது; இன்று சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. கணவனைப் பார்த்தாலே முட்டாளைப் போலத் தோன்றியது. மனதிற்குள் ஏமாற்றமாக இருந்தது. இன்றுவரை சொர்க்கம் போல் தோன்றிய உறவு இப்போது ஏமாற்றத்தைக் கொடுத்தது. வருத்தத்தைக் கொடுத்தது.

அடுத்த நாளும் மஞ்சரி வீட்டிற்குப் போகிறாள்.

''வா... தேனு... நீ எப்ப வருவேன்னு காத்துகிட்டு இருக்கேன்.''

தேன்மொழியின் கையைப் பிடிக்க, தேன்மொழி இளகிப் போகிறாள்.

இது என்ன விதமான பாசம். இவள் என்ன ஒட்டா உறவா? எத்தனை ஆசை? தன் தங்கையாக என்னை நினைத்துப் பழகும் விதம் மனது நெகிழ்ந்தது.

''தேனு அப்...பா பாக்கும்போதே கண் திருஷ்டியே பட்டுடும் போ. இது என்ன புடவை? ரொம்ப அழகா இருக்கே. கிளிப் பச்சையில் மஜந்தா பார்டர் போட்ட புடவை. மஜந்தாவில் ரவிக்கை அழகு தூக்கிக் கொண்டு போனது.



சட்டென்று தேன்மொழிக்கு கண்கள் கலங்கின. ஒரு நல்ல புடவை கட்டி விட்டால் போதும். அம்மா இப்படித் தான் வந்து நெட்டி முறிப்பாள். கற்பூரம் கொளுத்தி சுத்திப் போடுவாள். திடுமென்று அம்மா ஞாபகம் வந்து மனதை என்னவோ செய்தது. கண்கள் லேசாகக் கலங்கிப் போக நிமிர்ந்து பார்க்கும் போது மஞ்சரி கற்பூரத்தை எடுத்து சுத்தி போட்டுக் கொண்டிருக்கிறாள்.

''அக்கா என்ன இது என்ன பண்ணிட்டு இருக்கீங்க?''

''போம்மா கண் திருஷ்டி படும்'' என்றவாறே திருஷ்டி கழித்து ஏற்றி இறக்குகிறாள்.

தேன்மொழிக்கு மனது நிறைந்து போனது. 'யார் சொல்லி இப்படி செய்யத் தோன்றியது. எத்தனை நல்ல மனது? என்ன அன்பு? என்ன கருணை?' மெய்மறந்து போய் அமர்ந்திருக்கிறாள்.

''ஆமா தேனு எங்கே படிச்சே? என்ன முடிச்சிருக்கே?'' மஞ்சரி கேட்கிறாள்.

''அதை ஏன் கேக்கறீங்க ப்ளஸ் டூ மட்டும்தான். முடிச் சிருக்கேன். பி.காம் கரெஸ்லே பண்றேன். அதுக்குள்ளே மேரேஜ் ஆகிப்போச்சு.''

''என்னவோ போ? நீ ஆயிரம் சொன்னாலும் என்னால மட்டும் ஒத்துக்கவே முடியாது. படிக்கிற சின்னக் குழந்தையைக் கொண்டு போய் யாராவது கல்யாணம், கார்த்தின்னு தள்ளி விடுவாங்களா? முகத்திலே மழலையே மாறலையேம்மா.

ம்... யாரை சொல்றது? மேலே இருந்து ஆட்டறான் எல்லாம் அவன் வேலைதான். சரி போ அதைப் பத்தி ஏன்

பேசணும்? நல்ல விஷயத்தைப் பத்தி பேசுவோமா? நேத்து எங்க வீட்டுக்காரரு ஊருக்குப் போயிருந்தாரு. இதை வாங்கிட்டு வந்தாரு. சாப்பிட்டு பாரு.''

ஒரு பாக்கெட்டில் சீடைகள் இருக்க அதைத் தருகிறாள். அவள் தட்டில் சீடைகளை வைக்க, சீடைகள் நாக்கில் ஒவ்வொன்றாக கரைந்தன. ''உன்னோட பேவரிட் ஐட்டம்'' என்று ரசமலாயைத் தருகிறாள்.

''ஹாய்... உங்களுக்கு எப்படித் தெரியும்? ரசமலாய் எனக்கு புடிச்ச ஐட்டம்னு.''

''என்ன தேனு முதல் நாள் பேசிக்கிட்டு இருக்கும் போது நீ சொன்னியே. நல்ல வேளை எங்க வீட்டுக்காரர் போன் செய்தபோது சொல்லவே ப்ரஷ்ஷா வாங்கிட்டு வந்தார்.''

தேன்மொழி நன்றிப் பெருக்கோடு மஞ்சரியைப் பார்த்து விட்டு சாப்பிட ஆரம்பிக்கிறாள். ரசமலாய் உண்மையிலேயே மிக மிக அருமையாக இருக்க உற்சாகமாக இருக்கிறாள். சிறு குழந்தைகளின் உற்சாகம் அவளின் தாய் தந்தைதான் அவளின் குறிப்பறிந்து செய்வார்கள். இப்போது மஞ்சரி அக்கா. சாப்பிட்ட பின் அவளின் கணவனுக்குத் தர ''வேண்டாங்கா'' மறுக்கிறார் ''பிடிம்மா'' என்றபடி அவளின் கையில் திணித்து தலையில் ஒரு இரண்டு முழ ஜாதியைச் சூட்டி அனுப்புகிறாள். அன்று கணவன் வீட்டிற்குள் நுழையும் போதே ''வாசனைப் பூவே இல்லைம்மா. சீசன் முடிஞ்சு போச்சாம்'' என்றவாறே கதம்பத்தை அவள் கையில் தர முகம் மாறுகிறாள் தேன்மொழி.



## 15



தலையில் இரண்டு முழம் ஜாதி சூடிக் கொண்டு கம்மென்ற வாசனையுடன் இருந்தவளைப் பார்க்கிறான் அர்ஜுன்.

''ஏய் ஜாதிப்பூவா நல்ல வாசனையா இருக்கு. யார் கொடுத்தாங்க?'' ஆச்சரியத்துடன் கேட்கிறான்.

''ம்... எங்க கிளாஸ்கிட்டே வித்துகிட்டு இருந்தாங்க'' என்றவள். சற்று எரிச்சலோடு அவனுக்கு தட்டு வைத்து சீடைகள், ரசமலாய் கொடுத்தபோது மிக மிக ஆச்சரியப் பட்டான்.

''இதென்ன தெனம் வாங்கிட்டு வரே? யார் கொடுத் தாங்க?''

''ம்ஹூம் யார் தினம் கொடுப்பாங்க. வழக்கமா தருவாங்களே அந்த அம்மாகிட்டே தான் வாங்கினேன்.''

இன்று அல்வா வாங்காமல் சூடாக ஜிலேபி வாங்கி வந்திருந்தான் அர்ஜுன்.

''ஏய் ஜிலேபி ஆறிடப் போவுது எடுத்துக்க.'' அவன் கூற,

''ஐயோ அங்கேயே நான் சாப்பிட்டேன். இப்ப எனக்கு எதுவும் வேணாம்'' என்கிறாள் தேன்மொழி. அர்ஜுன் சற்று ஏமாற்றத்தோடு ஒரு ஜிலேபியையும் சேர்த்துச் சாப்பிடுகிறான்.

தேன்மொழி லேசான அதிருப்தியோடு கதம்பத்தை எடுத்து சுவாமி படங்களுக்குப் போடுகிறாள்.

'மஞ்சரி அக்கா எத்தனை கொடுத்து வைத்தவள் ஆக இருக்கணும். என்ன ஆசை? ஆசை மட்டுமல்ல. அவள் கணவன் செய்யும் செயல் எல்லாம் எத்தனை நேர்த்தி. ஒரு ஸ்வீட் வாங்குவதிலிருந்து, பூ வாங்குவது வரை பயங்கர புத்திசாலிக் கணவனாகத்தான் இருக்கணும். ஜாதியில் லேசான ரோஸ் நிறம், வெள்ளை ஜாதியாக இல்லாமல், வெள்ளையும் சிவப்பும் கலந்த நிறம். அப்பா... என்ன வாசனை. புத்திசாலியைத் திருமணம் புரியவும் கொடுத்துதான் வைத்திருக்கணும். ஏனென்றால் அந்த புத்திசாலித்தனத்தால் வரும் பலன் முழுவதையும் பெண்டாட்டி தானே அனுபவிக்கப் போகிறாள்.'

தேன்மொழி பெருமூச்சு விடுகிறாள். தான் ஏதோ தவறிப் போய் அதள பாதாளத்தில் விழுந்தது போல் தோன்றியது. வீட்டில் ஆள், அம்பு, டிரைவர் எல்லாம் உண்டு. இங்கே மூன்று மாதங்கள் தானே இருக்கப் போகிறோம் என்று எடுத்து வந்த காரை திருப்பி அனுப்பி விட்டான். ஸ்கூட்டரை எடுத்து வந்திருந்தான் அர்ஜுன்.

வீட்டில் ஒரே பெண்ணாக எங்கேயாவது போக வேண்டும் என்று நினைத்தாலே அப்பாவின் கார் வந்து விடும். போதாத குறைக்கு ஏதாவது வேலை என்றாலும் அப்பாவின் கடையிலிருந்து ஆள் வந்து விடும். ஏதோ ஒரு நாளில் வேலை செய் என்றாலும் லட்சியம் செய்யாமல் டி.வி.யைப் பார்த்துக் கொண்டிருப்பாள். புதுப்பட சி.டி. கேசட்டுகள் படம் வந்தவுடன் கைக்கு



வந்து விடும். போட்டுப் போட்டுப் பார்ப்பாள். நல்ல படங்கள் என்றால் இரண்டு முறை, மூன்று முறை கூட பார்ப்பாள். அம்மா திட்டினாலும் குழந்தைக்கு குழந் தைக்கு என்று அவளுக்குப் பிடித்தவைகளைத் தட்டில் கொண்டு வந்து வைப்பாள். டி.வி. பார்த்துக் கொண்டே உருளைக்கிழங்கு சிப்ஸ், பாப்கார்ன் பக்கோடா, முறுக்கு என்று எதையாவது கொறித்துக் கொண்டிருப்பாள் தேன்மொழி. ஜாலியாக இருக்க வேண்டும் என்று நினைப்பாளே தவிர, அதற்காக அடுத்தவரை கஷ்டப் படுத்திதான் வாழ வேண்டும் என்று நினைத்துக் கூட பார்க்காதவள். எல்லோரும் சந்தோஷமாக நல்லபடியாக இருக்க வேண்டும் என்று நினைப்பவள். அடுத்தவர் நலத்திற்காக சிறு சிறு தியாகங்கள் செய்யலாமே தவிர ஒரேயடியாக தன் சுகத்தைக் குறைத்துக் கொள்ள மனம் வரவில்லை.

அதனால் ஒவ்வொரு சிறு செயல்களும் பெரும் ஏமாற்றத்தைத்தான் கொடுத்தது. மஞ்சரி நேர்த்தியாக சேலை உடுத்துவதும், இத்தனை வயதுக்கு மேலும் கண்களில் மையைத் தீட்டிக் கொண்டு காதுகளில் புதிது புதிதாக தோடுகளும் கழுத்தில் புதிது புதிதான நெக் லஸ்களும் மனதை அறுத்தது.

போதாத குறைக்கு மஞ்சரியின் வீட்டில் நிரந்தரமான ஒரு பெண் ஆள் வேறு. கடை கண்ணிக்கு போவதி லிருந்து எல்லா வேலையும் செய்வாள். எப்போது வேண்டுமானாலும் ஒரு டிரைவர் வீட்டிற்கு வந்து எங்கே போக வேண்டுமோ அங்கே அழைத்துச் செல்வான்.

வந்த புதிதில் மூன்று, நான்கு மாதங்கள் தானே இருக்கப் போகிறோம் என்று வேலைக்காரியை வேண்டா மென்று தேன்மொழிதான் கூறி விட்டாள். அர்ஜுன் சீக்கிரம் வந்து விட்டால் பாதி வேலைகளை அர்ஜுன் பகிர்ந்து கொள்வான். இப்போது அதுவும் ஒரு குறையாகத் தென்பட்டது. எப்போதுமே வாழ்க்கையை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு போராட தைரியம் வேண்டும். அப்படிப்பட்ட வாழ்க்கையில் கிடைக்கும் மகிழ்ச்சியே தனிதான். ஒவ்வொரு சின்ன விஷயத் திற்கும் சோர்ந்து போய், என்ன ஆகுமோ என்று வேதனைப்பட்டு தானும் வாழாமல் அடுத்தவரையும் வாழ விடாமல் இருக்கும் வாழ்க்கையை நரகமாக்கிக் கொண்டு அப்படி எதற்காக வாழ வேண்டும்?

ஆனால் நம்மில் முக்கால்வாசி பேர் அப்படித்தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். வாழ்க்கையில் இன்பத்தைத் தொலைத்து விட்டு, இன்பத்தைத் தேடி அலைந்து கொண்டு இருக்கிறோம்.

இப்போது மஞ்சரி வீட்டில் இருக்கும் சின்னச் சின்ன சௌகரியங்கள் கூட வாழ்க்கையில் தான் ஏதோ இழந்ததைப் போல் துன்பப்பட வைக்க, தேன்மொழிக்கு மனம் சோர்ந்து போனது. தொட்டதற்கெல்லாம் அழுகை வந்தது கணவன் இல்லாதபோது வீட்டில் தனியே அழுகிறாள். எதற்கு அழுகிறோம் என்று தெரியாமலேயே அழுகிறாள்.

முதலில் அம்மா தொலைபேசியில் தொடர்பு கொண்ட போதெல்லாம் அம்மாவைத் தேற்றுவாள்.



"என்னம்மா நீ? அவரு எம்புருஷன். ஏதோ தப்பு பண்ணிட்ட மாதிரி இல்லே பேசறே!"

அம்மா மீண்டும் அழுது கொண்டே கேட்க,

"நல்லாதாம்மா வச்சிருக்காரு. கவலைப்படாதே" என்று தேற்றியவள் இப்போதெல்லாம் அம்மாவின் போன் வந்தால் தானும் கூடச் சேர்ந்து அழுகிறாள்.

"வந்திடுடா கண்ணு. எனக்குத் தெரியும். இதெல்லாம் நிக்காதுன்னு. இனிமே அவன் சங்காத்தமே வேண்டாம்" போனில் சொல்லிவிட்டு அம்மா குலுங்கிக் குலுங்கி அழுகிறாள்.

அன்று ஏனோ மனதே சரியில்லை. காலையில் எழுந்திருக்க லேட்டாக, கணவன் பூஸ்ட் கலந்து குடித்து விட்டு அவளுக்கும் கலந்து வைத்துவிட்டுப் போனான். சோம்பேறித்தனமாக எழுந்தவளுக்கு, இரவு கணவன் சற்று பயந்து போய் தன்னைக் கொஞ்சி கொஞ்சி அணைத்தது எல்லாம் ஞாபகத்திற்கு வர மனது எதிலும் போகவில்லை. ஒரு நிமிடம் அவனை நினைத்தாலும் மனது இளைந்தது. பாவம் தன் மேல் மிக மிக ஆசைதான். காலைப் பிடித்துவிட்டு, நெற்றியைப் பிடித்து,

"என்னடா ஆச்சு? இந்த வீக் எண்ட் எங்கேயாவது போகலாமா?" என்று தவித்தது எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

'பாவம் மிக மிக நல்லவன்தான்.' அதற்கு மேல் எல்லாவற்றிலும் வெறுப்பு வர அவள் தையல் கிளாஸுக்கு மட்டம் போட்டாள். நேரே மஞ்சரி வீட்டிற்குச்

சென்றாள். மஞ்சரி தலைக்குக் குளித்துவிட்டு தலையைத் துவட்டிக் கொண்டிருந்தாள்.

''ஐ... தேனு... நம்பவே முடியலை. என்ன இன்னிக்குக் காலைலே திடீர் விசிட்.''

''ஏங்க்கா டிஸ்டர்ப் பண்ணிட்டேனா.''

''என்னம்மா இப்படிச் சொல்றே? நீ எப்பவுமே எங்கூட இருந்தா கூட சந்தோஷம்தான். ஆமா என்ன மூஞ்சியெல்லாம் டல்லா இருக்கு? உடம்பு சரியில்லையா?''

சட்டென்று அவளின் வார்த்தையில் கண்கள் கலங்கின.

''தேனு என்னம்மா ஆச்சு?''

''என்னமோ ஒண்ணும் பிடிக்கலைக்கா டல்லா இருக்கு.''

''என்ன ஏதாவது விசேஷமா?'' கண்களைச் சிமிட்டிக் கொண்டு கேட்கிறாள் மஞ்சரி.

''அதெல்லாம் ஒண்ணுமில்லைக்கா? என்னமோ?''

''உங்க வீட்டுக்காரர்கிட்டே சொன்னியா டாக்டர் கிட்டே போய் பார்க்கறதுதானே.''

''அப்படி ஒண்ணும் உடம்பு இல்லேக்கா. அவுங்களும் கூட பாவம்தான். ராத்திரி கால்கூட பிடிச்சு விட்டாரு. திடீர்னு உடம்புன்னவுடனே கொஞ்சம் துடிச்சுதான் போயிட்டாங்க.''

சட்டென்று பலமாக மறுக்கும் விதமாகத் தலையை அசைக்கிறாள் மஞ்சரி.

''நான் இந்த விஷயத்திலே என் வீட்டுக்காரரைத் தவிர வேற யாரையுமே துடிச்சுப் போறாங்கன்னு ஒத்துக்க



மாட்டேன்.'' மஞ்சரி சொல்ல, தேன்மொழி ஆச்சரியப் படுகிறாள்.

''ஏன் அப்படிச் சொல்லறீங்க?'' கண்களைப் படபடத்த வாறே அவள் கேட்க,

''என் புருஷன், புருஷன் மட்டுமல்ல. ஒரு பெஸ்ட் கம்பேனியன். அந்த மாதிரி பொண்டாட்டிக்கு கம்பெனி வேறு யாரும் குடுக்க முடியுமான்னு கூட சந்தேகம்.''

''எத வச்சு அப்படிச் சொல்லறீங்க?''

''உன்னை மாதிரி கல்யாணம் ஆன புதுசு. திடீர்னு வயித்து வலி வந்திடுச்சு. தவிச்சுப் போயிட்டாரு அவரு. விளக்கெண்ணெயை விட்டு மசாஜ் பண்ணி பாக்கறாரு. தொப்புள்ளே எங்கிருந்தோ முட்டை சாம்பல் வாங்கிட்டு வந்து கொஞ்சம் ஈரப்படுத்தி வச்சாரு. எனக்கு ஒண்ணும் சரியாகலைன்னவுடனே டாக்டரை அழைச்சிட்டு வந்து அவர் எனக்கு ஊசி போடறாரு. இவரு ஒன்னு கத்தறாரு. டாக்டர் போனப்புறம் எனக்கு மருந்து கொடுத்து, மாத்திரை கொடுத்து வயிற்றை அமுக்கி விட்டு, காலை அமுக்கி விட்டு ராத்திரி மொத்தமும் தூங்காம அப்படியே உக்காந்துட்டு இருக்காரு. 'அம்மா உனக்கு எப்படி இருக்கு? அம்மா உனக்கு எப்படி இருக்கு?' இப்படித்தான் பேசிட்டே இருப்பாரு. காலைலே அசந்து தூங்கிட்டேன். எனக்கு காபி போட்டு என்னை எழுப்பி பல் விளக்க வச்சு காபியை ஊட்டி, 'எப்படிம்மா இருக்கு? எப்படிம்மா இருக்குன்னு' புலம்பி 'ஒண்ணும் இல்லே சரியாப் போச்சுன்'னாலும் கேக்கலை. அன்னிக்கு லீவே போட்டுட்டாரு.''

''காலையிலே எங்க வீட்டுக்காரர் கூடத்தான் பூஸ்ட் கலக்கினார்னு சொல்ல வந்தவள், மஞ்சரியின் புருஷன் லீவு போட்டான் என்று சொன்னதும் மனம் பாரமானது, சொல்வது போல் தான் காலையில் எழுந்திருக்கவே இல்லை. இது சொந்த பிஸினஸ். ஒரு நாள் போகாமல் இருந்திருக்கலாமே. எத்தனையோ முறை முக்கியமான வேலை என்றால்கூட தப்பித் தவறி அவளுக்கு ஒரு சின்ன உடம்பு என்றாலும் அப்பா லீவு போட்டு விடுவார். வேறு யாரையோ பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு பெண்ணின் கூடவே இருப்பார்.

மஞ்சரி அக்கா நினைப்பது போல் தன் புருஷனுக்கு தன் மேல் அத்தனை ஆசை இல்லை என்று தோன்றியது.



16

மனம் முழுவதும் ரணமானது. ஒரு பெண்ணிற்கு பணம், நகை, வீடு, வாகனம் இதை எல்லாவற்றையும் விட உயர்ந்தது புருஷனின் அன்பு. அதுவும் இவளை வலுக்கட்டாயமாக திருமணம் புரிந்து கொண்டவன், சம்பிரதாயப்படி எதுவுமே நடக்காமல் இவனின் மனைவி யானவள். தன் மனைவி புதுசு பாவம் என்று புருஷன் நினைக்க வேண்டாமா?' தான் மனதாலும் உடலாலும் ஓய்ந்து இருக்கும்போது இவனுக்கென்ன வெளியில் வேலை? மஞ்சரி தன் புருஷனைப் பற்றி எப்படி எல்லாம்



பேசுகிறாள். தனக்கும் அப்படி ஒரு வாய்ப்பு வருமா? தான் அப்பா சொன்னதால் தவறான முடிவு எடுத்து விட்டோமா? அம்மா அழுததெல்லாம் நிஜமா?

அன்று மஞ்சரி அக்காவின் வீட்டிலேயே சாப்பிட்டு வந்தவள், புருஷன் வரும்போது உடம்பு சரியில்லை என்று போர்த்திக் கொண்டு படுத்துக் கொண்டு விட்டாள். பெரிய இது? அன்பில்லாத புருஷனோடு வாழ்வதை விட, பேசாமல் தனியாகவே இருக்கலாம். தினமும் ஐந்து மணிக்கு வரும் புருஷன் அன்று ஆறு மணிக்குத்தான் வந்தான். அது வேறு எரிச்சலைக் கிளப்பியது. இன்று எனக்கு உடம்பு சரியில்லை என்று தெரியாதா? வேண்டுமென்றே லேட்டாக வருகிறான்.

உள்ளே வரும்போதே ''என்னடா இது இப்படி படுத்துட்டே? என்னம்மா ஆச்சு?'' அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்து அவளை அப்படியே மடியில் சாய்த்துக் கொண்டு அணைத்து ''என்னம்மா ஆச்சு?'' கொஞ்சுகிறான்.

அவன் கைகளை மெதுவாகத் தள்ளியவள் ஏற்கனவே சிவந்து போன முகத்தில் ஆத்திரம் வந்து பின்னும் சிவக்க லேசாகக் கத்துகிறாள்.

''எனக்கு உடம்பு சரியில்லைன்னு தெரியும் இல்லே. இன்னிக்கு ஒரு நாள் எங்கூட இருந்திருக்கலாம் இல்லே. அப்படி என்ன வேலை? நம்ப சொந்த பிஸினஸ் தானே. ஒரு நாள் போகாம இருந்தா என்ன?''

''என்ன தேன்மொழி சின்னக் குழந்தை மாதிரி பேசறே. வேலைக்குப் போனா கூட லீவு போட்டுறலாம். ஆனா சொந்த பிஸினஸ் அப்படி இல்லேம்மா. சீக்கிரம்

முடிச்சாத்தான் மூணு மாசத்துக்குள்ளே நாம ஊர் திரும்ப முடியும். அப்புறம் நான் போன் பண்ணலைன்னு யார் சொன்னாங்க'' என்றவாறு அவள் கன்னத்தைத் தடவிய வாறே கேட்கிறான்.

''பொய் சொல்லாதீங்க? எப்ப போன் பண்ணீங்க?''

''ஏம்மா இதுக்கெல்லாம் போய் யாராவது பொய் சொல்வாங்களா? நான் போன் பண்ணினப்ப ரிங்கா யிட்டே இருந்தது? என்னவோன்னு பயந்து போய் பக்கத்து வீட்டு சுசீலாவுக்குப் போன் பண்ணி கேட்டேன். காலைலேயே நீ வெளியே போனது சொன்னாங்க. மறுபடியும் பன்னண்டு மணிக்கு போன் செய்தேன். நீ இன்னும் வரலைன்னாங்க. அப்புறம் மூணு மணிக்கு மறு படியும் போன் செய்தேன். நீ இன்னும் வரவே இல்லைன் னாங்க. பயந்து போய் உன் தையல் கிளாஸுக்குப் போன் பண்ணேன். அங்கேயும் நீ வரலைன்னாங்க. அப்புறம் தான் நீ ஏதோ ஒரு ஃப்ரண்ட் வீட்டுக்குப் போனதை பாத்ததா ஒரு பொண்ணு சொன்னா. அப்பாடான்னு இருந்தது எனக்கு. பாவம் உனக்கும் போர்தான். சரி இன்னிக்கு எனக்கும் வேலை இருந்தது முடிச்சிட்டு மெதுவா வரலாமேன்னு மெதுவா வந்தேன்.''

''ஆமா நான் எந்த ஃப்ரண்ட் வீட்டுக்குப் போனேன்னு கேக்க மாட்டீங்களா?''

''பைத்தியம் உனக்குன்னு பர்ஸனல் கிடையாதா என்ன? நீ எங்க போயிருந்தாலும் யூ ஆர் வெல்கம்'' கள்ளமில்லாமல் அவன் சிரிக்க,



''பாய் பிரண்ட் இருந்தா கூடவா...'' சற்று நிறுத்தி நிதானமாகக் கேட்க,

''ஸோ... வாட்...'' என்கிறான் அர்ஜுன்.

''உங்களுக்குக் கோபமே வராதா?''

''எதுக்கும்மா வரணும்?''

''இப்படிச் சொல்லாம கொள்ளாம பொண்டாட்டி போயிருக்காளே என்ன பண்ணாளோன்னு ஆத்திரம் வரலியா?''

''ஏய் பைத்தியமா நீ... தன்னை நம்பாதவன்தான் பொண்டாட்டியை சந்தேகப்படுவான். எனக்கு எம் மேலே ரொம்ப நம்பிக்கை இருக்கு. அதை விட உம் மேலே நம்பிக்கை ரொம்ப அதிகம்.''

தேன் மொழி பெருமூச்சு விடுகிறாள். கட்டாயம் எங்கே போனாய் என்று கேட்பான். அவனை நன்றாக சீண்ட வேண்டும். பெண்டாட்டி என்று அவனைத் துடிக்க வைக்க வேண்டும் என்று நினைத்தவளுக்கு சப்பென்றாகி விட்டது. அதற்கு மேல் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

அன்று அவன் வாங்கி வந்த பால்கோவா எதையுமே 'உடம்பு சரியில்லை' என்று தொடாமலேயே படுத்து விட்டாள். 'ஒரு நிமிடம் பெண்டாட்டி என்று ஆசை யில்லை. அதுதான் பொறாமைப் படவில்லையோ' என்று நினைக்கிறாள். 'இன்னொரு புறம் எத்தனை பெருந் தன்மையான மனிதன்' என்று சிலாகிக்கிறாள்.

அடுத்த நாள் வேலை ஒன்று ரத்தாகிவிட பெண்டாட் டியை அழைத்துக் கொண்டு சற்று தொலைவில் உள்ள

ஒரு கோவிலுக்கும் கடை கண்ணிக்கும் அழைத்துச் செல்கிறான் அர்ஜுன். இத்தனை நாட்கள் இருந்த மனத்தாங்கல்கள் மறைந்து சற்று கலகலவென்று பேசுகிறாள் தேன்மொழி.

அர்ஜுனும் உள்ளுக்குள் மிகுந்த ஆனந்தப்பட்டான். நதியில் படகு சவாரி போனார்கள். கோவிலைப் பார்த்து விட்டு, பார்க்கில் சற்று நேரம் இருந்துவிட்டு அருகில் இருந்த தியேட்டரில் படம் பார்த்தார்கள். தேன்மொழிக்குப் பிடித்த ஐஸ்கிரீமும், பாப்கார்ன் வாங்கித் தர, ''என்னங்க பாப்கார்ன் நமுத்திருக்கு'' என்கிறாள் தேன்மொழி.

''வேற எதுவுமே இல்லே'' என்றவாறு அவனும் ஒன்றை வாங்கிக் கொண்டு தங்களை மறந்து படம் பார்க்கின்றனர். அன்று வீட்டிற்கு வந்தபோது மனதில் உள்ளே இருந்த மனத்தாங்கல்களை மறந்துவிட்டு அவனோடு குலாவுகிறாள் தேன்மொழி.

கணவன், மனைவி நெருக்கத்திற்கு இந்த மாதிரியான பிரயாணங்களும், வெளிப்படையான பேச்சுக்களும் ரொம்ப ரொம்ப அவசியம். இத்தனை நாள் இதெல்லாம் தெரியாதவனாக இருந்திருக்கிறேன். இந்த பத்து நாட்களாக பார்க்கும் தேன்மொழிக்கும் இப்போது பார்ப்பவளுக்கும் எத்தனை வித்தியாசம்? பழைய தேன்மொழி திரும்பி வந்து விட்டாள் போலல்லவா இருக்கிறது. நாள் மொத்தம் வீட்டில் இருப்பவளுக்கும் ஒரு பொழுது போக்கு தேவை அல்லவா மனம் புழுங்கி புழுங்கிக் கொஞ்சம் கொஞ்சமாக மன அழுத்தம் ஏறி



தொட்டதற்கெல்லாம் சிணுங்கி சண்டை போட அல்லவா தோன்றுகிறது? நல்ல வேளை அவளை ஒரு நாள் வெளியே அழைத்துச் சென்றது வாடிய பயிருக்குத் தண்ணீர் ஊற்றிய வேலையை அல்லவா செய்து விட்டது.

முதல் நாளே வரும் போதே லஷ்மி கடை தோசை மாவை வாங்கிக் கொண்டு வந்தனர். இப்போது பெண்களுக்கு எல்லாமே சுலபமாகி விட்டது. காலையில் அரிசி, உளுந்தை ஊறப் போட்டு கல்லுரலில் அரைத்து உப்பு போட்டு அடுத்த நாளைக்கு டிபனுக்குத் தயார் செய்யும் பழக்கம் எல்லாம் பெரிய பெரிய நகரங்களில் இல்லாமல் தான் போய்விட்டது. பஜ்ஜி வேண்டுமா, பஜ்ஜி மிக்ஸ், புளியோதரை மிக்ஸ், உப்புமா மிக்ஸ், வடை மிக்ஸ், முறுக்கு மாவு இப்படி எது வேண்டுமானாலும் கடையில் வாங்கி வந்து ஐந்து நிமிடங்களில் செய்து விடலாம். இப்போது இன்னும் முன்னேறி வேலைக்குப் போகும் பெண்களுக்காக, தோசை மாவு, இட்லி மாவு விற்கிறார்கள். வாங்கி வந்து ரெடியாக இட்லியோ, தோசையோ செய்து கொள்ள வேண்டியதுதான்.

இப்போது தேன்மொழியும் அதைத்தான் செய்கிறாள். அம்மா வீட்டில் இருந்த வரைக்கும் அம்மா அரிசி, உளுந்தை ஊறப் போட்டு கிரைண்டரில் அரைத்து விடுவாள். என்றாவது கிரைண்டர் ரிப்பேர் ஆகி விட்டால் கிரைண்டர் அரைக்கும் கடையில் கொடுத்து விடுவார்கள். தான் மாவே வாங்கி வந்து விட்டோம். அம்மா பார்த்தால் கட்டாயம் திட்டத்தான் போகிறாள். அடுத்த நாள் மாவை எடுத்து தோசை வார்க்கும்போது தேன்மொழி நினைத்துக்

கொள்கிறாள். தக்காளி, வெங்காயம், தேங்காய், வர மிளகாய் சேர்த்து சட்னி அரைத்து வைக்கிறாள். சட்னி நன்றாக இருக்கவே அர்ஜுன் விரும்பிச் சாப்பிடுகிறான். பெண்டாட்டியை ஆசையோடும், பெருமையோடும் பார்க்கிறான்.

கணவனுக்கு டிபனைத் தந்துவிட்டு பூஸ்டைக் கலந்து தருகிறாள் தேன்மொழி. மனமெங்கும் மகிழ்ச்சி துள் ளல்கள். கணவன் தன்னை ஆசையாகக் கொஞ்சியது. தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தது. இப்படி எதை நினைத்தாலும் மனதிற்கு இனிமையாக சுவையாக இருந்தது.

கணவனை அலுவலகத்திற்குக் கிளம்பிய பின் போன் அடித்தது. யாராக இருக்கும்? போனை எடுத்தவுடனே அம்மா என்று தெரிந்தது.

''என்ன கண்ணு வந்துடுவேன்னு நினைச்சேன். என்ன பண்றே அங்கே?'' சொல்லும்போதே குரல் தழுதழுக்க அம்மா அழுகிறாள் என்பது புரிந்தது.

''என்னம்மா நான்தான் என் சிச்சுவேஷன் சொன்னேன் இல்லே. நான் நல்லாதாம்மா இருக்கேன். நீ கவலைப் படாதே.''

''உன்னைப் பாக்காம என்னால இருக்க முடியலைடீ. ரொம்ப வேதனையா இருக்கு. உன்னைத் தேடிக்கிட்டு உன் மாமனுங்க எல்லாமே வந்தானுங்க. உன் கல்யாண விஷயம் கேட்டு எல்லாருக்கும் அதிர்ச்சி. மகேஷ் குதிக்கவே ஆரம்பிச்சிட்டான். அவன் உன்னைப் பாக்



கணும்னான். லீவு போட்டு முக்கால்வாசி இந்த வாரமே வந்துடுவான்.''

''ஓகேம்மா. நீங்க ஏன் கவலைப்படறீங்க? இந்த பிராஜக்டே மூணு மாசம் தானே. அப்புறம் இங்கே என்ன எனக்கு வேலை? ஓடி வந்துர மாட்டேன். மகேஷ் வந்தா வரட்டும். நீங்களும் வாங்களேன்.'' தேன்மொழி கொஞ்ச, லேசாக விசும்பலுடன் போனை வைக்கிறாள் செல்வி.

தானும் டிபன் சாப்பிட்டு விட்டு நேராக கிளாஸுக்குப் போகிறாள். வழக்கம் போல் மஞ்சரி வீட்டிற்குப் போன போது, மஞ்சரி பெங்கால் காட்டன் புடவையில் கலக்கலாக இருந்தாள். கறுப்புக் கலரில் தங்க ஜாரி வொர்க்கில் முந்தானையும் பார்டருமாக அசத்தலாக இருந்தாள்.

''வாவ் அக்கா... என்ன அசத்தறீங்க? இத்தனை அழகா இருக்கீங்க.''

''வா... தேனு நீ உன்ன பாக்கணும்னு துடிச்சுகிட்டு இருந்தேன். நல்லா இருக்கா?'' என்கிறாள் மஞ்சரி.

கருகமணி தோடு, கருகமணி நெக்லஸ், வளையல் என்று பார்ப்பதற்கே ரம்மியமாக இருந்தாள்.

''என்னக்கா விசேஷம்?''

''ஆமா நீ ஏன் ரெண்டு நாளா வரலை. இன்னிக்கு நீ வரலைன்னா நாளைக்கு நானே தேடி வந்திருப்பேன்.''

''இல்லைக்கா கொஞ்சம் வெளியே போயிட்டோம். அவுங்களுக்கும் பிஸினஸ் அது இதுன்னு டைட்டா இருக்கா. இப்பதான் கொஞ்சம் ப்ரீயா போனோம். ரொம்ப

என்ஜாய் பண்ணினோம். போட்டிங் போனோம். நல்லா சுத்தினோம். சினிமா போனோம். எல்லாம் சூப்பரா இருந்தது. ஆனா அந்த பாப்கார்ன் தான் நல்லாவே இல்லை. அவுங்க ரொம்ப ஆசையாக நடந்துகிட்டாங்க'' சொல்லும்போதே முகத்தில் வெட்கத்தின் திவலைகள் படிய.

''ஏன் பாப்கார்ன் நல்லாவே இல்லே?''

''அக்கா பாப்கார்ன் கிரிஸ்பா இருந்தாதான் நல்லா இருக்கும். எனக்கு அப்படி சாப்பிடத்தான் ரொம்பப் பிடிக்கும். அதுக்குதான் அவர் ரொம்ப தேடினாரு கிடைக்கவில்லை.''

''அப்படி அவனை சும்மாவா விட்டுட்டீங்க? எந்த இடத்துலே அப்படி நடந்தது?''

''அக்கா இது சின்ன விஷயம் ஒரு அஞ்சு ரூபா பாப்கார்னுக்காக சண்டை போட முடியுமா? போகட்டும் விடுங்க. தியேட்டர்லே விக்கிறானுங்க என்ன செய்ய முடியும்?''

''எந்தத் தியேட்டர்?''

''உத்திரா.''

''என்னம்மா இப்படிச் சொல்றே? இன்னிக்கு என்ன விசேஷம் தெரியுமா? எங்க வெட்டிங் டே காலைலேந்து காபி போட கூட அடுப்பை மூட்டலே. அவரோட ஓட்டல் போட்டிங் எல்லாம் போயிட்டுத் தியேட்டருக்கு போனோம். நேத்துதான் இந்த கருகமணி வளையல், மோதிரம் இந்தப் புடவை எல்லாம் வாங்கித் தந்தாரு.



இதை நான் கட்டணுமாம். உன்னைப் போலத்தான் எனக்கும் பாப்கார்ன் பைத்தியம். அதே உத்ரா தியேட்டர்லேதான் எனக்கு வாங்கித் தந்தார். கௌன்டர்லே விக்கிறவனை விட வெளியே கடை வச்சிருக்கான் பாரு அவன் சூப்பர். இதைச் சாப்பிடுவது யாரு?'' மஞ்சரி பாப்கார்ன் பாக்கெட்டைத் தர, பிரித்து வாயில் போடுகிறாள் தேன்மொழி. மொறு மொறுவென்றிருந்த பாப்கார்ன் உள்ளே போய் மனம் கசந்தது.

## 17



''எங்க வீட்டுக்காரர் மாதிரி நீ உலகத்துலே பாக்க முடியாது. பொண்டாட்டிக்கு என்ன பிடிக்கும்னு மொத்தமும் பட்டியல் போட்டு வாங்கிட்டு வந்திடுவார். எனக்கே என் விருப்பம் மறந்திருக்கு. ஆனா அவருக்கு. ஒரு நாள் போட்டிங் போனோம். எனக்கு படகு ஓட்டறதுன்னா ரொம்பப் பிடிக்கும். சட்டென்று ரோயிங் போட் வாங்கிட்டு வந்துட்டாரு.''

''உனக்குப் பிடிக்குமில்லை கண்ணு'' என்று கொஞ்சறார்.

''ஒரு முறை சீம இலந்தைப் பழம் பிடிக்கும்னு சாப்பிட்டுப் பார்த்து தித்திப்பான இலந்தைப்பழம் வாங்கிட்டு வந்து சாப்பிட்டு பாருன்னு ஒரே பிடிவாதம். பெரிசு, பெரிசா இருந்தாலும் பாதி பழம் சப்புன்னுதான்

இருக்கு. அவருக்கு எல்லாத்திலும் ரொம்ப ரொம்ப நன்றாக இருக்கனும். யோசிச்சு, யோசிச்சு வாங்குவார்.

எனக்கு ஏதாவது பிடிக்கும்னு எப்பவாவது சொல்லி இருந்தாலும் உடனே ஞாபகம் வச்சுகிட்டு வாங்கிட்டு வந்துடுவார்.

''இது எனக்குப் பிடிக்கும்னு எப்ப சொல்லி இருக்கேன்னு'' கேட்டா.

''நம்ப கல்யாணம் ஆன புதுசிலே நீ சொல்லியிருக்கேன்னு சொல்லுவார். அது மட்டுமில்லே தேனு. நான் உட்காருகிற இடத்துலே கொஞ்சம் அழுக்கு படிஞ்சாலும் அது சாதாரண பாறையாக இருந்தாலும் துடைச்சு உக்கார வைப்பார். ஒரு முறை வெளியிலே போயிருக்கோம். வெயில் காலம். தார் ரோடே உருகிப் போயிட்டு இருக்கு. என் செருப்பு அறுந்து போச்சு. அதை எடுத்து பிளாஸ்டிக் பைலே வச்சுகிட்டு, தன் செருப்பை எனக்குக் கொடுத்து தான் வெயில்லே கால் வைக்க முடியாம நடந்து வந்தார். அந்த மாதிரி அன்பு, கம்பானியன்ஷிப் யாருமே தர முடியாது தெரியுமா? ஒரு தாய்க்கு இருக்கற பாசம், தந்தைக்கு இருக்கற கண்டிப்பு, கணவன்கிட்டே இருக்கற லவ் இதெல்லாம் சேர்ந்த கலவைதான் அவர்.''

காதுகள் திகட்ட, திகட்ட வாய் ஓயாமல் பேசுகிறாள் மஞ்சரி. மஞ்சரி தன் கணவனைப் பற்றிப் பேசப் பேச, தன் கணவனிடம் ஏதோ குறை இருப்பதாகத் தோன்றியது தேன்மொழிக்கு. எப்போதும் மனதில் நல்ல எண்ணங்களும், நல்ல செயல்களும் வருவது ரொம்பக் கடினம்தான்.



தேவையில்லாத எண்ணங்களும், அடுத்தவரைக் கெடுக்கும் எண்ணங்கள் களைச் செடிகள் போல் எந்த உரமும் போடாமல் மனதில் ஒட்டிக் கொள்ளும். அதைக் களை எடுப்பதுதான் கடினம். மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறியது. மஞ்சரி அக்காவின் கணவன் அவளை அப்படி ஆசையாக வைத்துக் கொள்வாராம்மே. தனக்குப் புருஷன் என்று ஒன்று வந்திருக்கிறது பார். நகையும், புடவையும் சாப்பிடும் பொருள்களும் இத்தனை நன்றாகக் கூட ஒருவரால் வாங்கித் தர முடியுமா? எல்லாவற்றையும்விட கணவனின் ஆசையைப் பற்றிச் சொல்றாளே. கேட்கும் போதே நமக்கே பொறாமை வருகிறதே. முகம் வாடிப் போக, ''கிளம்பறேன்க்கா'' கிளம்பி விடுகிறாள்.

இப்போது கணவன் தத்தி போலவும், அவன் ஆசைகள் எல்லாம் அசட்டு ஆசை போலவும் தோன்ற, கணவனை நினைத்தாலே எரிச்சல் வருகிறது. புடவையைக் கூட எத்தனை அழகாக வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான் மஞ்சரியின் கணவன். மஞ்சரி சற்று வயதானவள் தான். இருந்தும் எத்தனை பாந்தமாக புடவைகள் இருக்கின்றது. இப்போது கணவன் வாங்கித் தந்த புடவைகள் அத்தனை நன்றாக இல்லை போல் தோன்றியது. ஏதோ கடனே என்று வாங்கியது போல் தோன்ற எரிச்சலும், ஆத்திரமும் வந்தது.

வழக்கம் போல் அவள் கணவனுக்கும் சேர்த்து பாப்கார்ன், ஸ்வீட் எல்லாம் கொடுத்து அனுப்புகிறாள் மஞ்சரி.

''வேண்டாங்க்கா. தினமும் எடுத்துகிட்டுப் போறதுக்கு என்னவோ போல் இருக்கு. உங்க வீட்டுக்கு வச்சுக்கங்க.''

''ஏய் என்ன நீ... எனக்கும் உங்க வீட்டுக்கும் சேத்து தான் எங்க வீட்டுக்காரர் வாங்கிட்டு வராரு.''

''என்னக்கா சொல்றீங்க?''

சட்டென்று அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டாள் மஞ்சரி.

''என்னக்கா?''

''நீ என் தங்கை மாதிரி. மாதிரி என்ன தங்கையே தான். உன்னை விட்டு நான் என்ன சாப்பிட முடியும் சொல்லு? தவிரவும் எனக்கு ஏதாவது பிடிச்சிடுத்துன்னா எம் புருஷன் எத்தனை கஷ்டப்பட்டாவது எல்லாத்தையும் செய்துடுவார். வேண்டாம்னாலும் கேக்க மாட்டார். உன் தங்கச்சி, தங்கச்சி வீட்டுக்காரருக்குன்னு சொல்லி தான் வாங்கிட்டே வரார். இந்த ஸ்வீட் கட்டாயம் எடுத்துட்டு போ. இந்த பெங்காலி ஸ்வீட் ரொம்ப அருமையா இருக்கும். ரசகுல்லா நடுவிலே கோவா வச்சு மேலே செரி வச்சு, எத்தனை டேஸ்டியா இருக்கும் தெரியுமா? உங்க வீட்டுக்காரரையும் கட்டாயம் ஒரு நாள் கூப்பிட்டுகிட்டு வா.''

''ஸ்வீட் எல்லாம் வேண்டாங்கா'' சொல்லச் சொல்ல ஒன்றைப் பிரித்து தேன் மொழியின் வாயில் போட, ரொம்ப ரொம்ப நன்றாக இருக்க, அசந்து போகிறாள் தேன்மொழி.

''ரொம்ப நல்லா இருக்குக்கா'' சொல்ல சிரிக்கிறாள் மஞ்சரி.



''எங்க வீட்டுக்காரர் எது வாங்கிட்டு வந்தாலும் அது தி பெஸ்டாதன் இருக்கும். அவரை உனக்கு இன்டிரடியூஸ் பண்ணிவிடணும். அந்த மாதிரி ஆம்பிளையை உலகத்துலே பாக்க முடியாது. மனுஷத்தனம் நிரம்பிய மனுஷன் அவராகத்தான் இருக்க முடியும். சில பேர் வெளி மனுஷங்களுக்கு விழுந்து விழுந்து செய்வாங்க. வீட்டுக்கு ஒரு துரும்பு கூட போட மாட்டாங்க. ஆச்சரியமா இருக்கு. எப்படி இவுங்களால இப்படி முடியுதுன்னு தோணும்? சில பேர் வீட்டுக்காக சொந்த தாய் தகப்பனாரைக் கூட சுருட்டி முழுங்கி ஏப்பம் விடுவாங்க. ஆனா எங்க வீட்டுக்காரர் மாதிரி ஒரு மனுஷனைப் பாத்ததே இல்லை. கடவுள்ல கூட ஏதேனும் குறை இருக்கலாம். ஆனா அவர் அந்தக் கடவுளை விட உசத்தி'' சொல்லும் போது மஞ்சரி மனம் உருகிக் குரல் உடைந்து முகம் இளகி, கண்கள் பனிக்க, நிற்க,

''என்னக்கா'' தேன்மொழி இளகிப் போய் கேட்க,

''இல்லைம்மா அவரைப் பத்தி என்ன சொல்றதுன்னு தெரியலை. இப்பேர்ப்பட்ட துணை உலகத்துலே எத்தனை பேருக்கு கிடைக்கும் தெரியலை. நான் எத்தனை பெரிய பாக்கியசாலி'' குரல் தழுதழுக்க, மஞ்சரி சொன்னபோது,

''கட்டாயம்ங்க்கா'' என்று ஒருவித பிரமிப்போடு ஆற்றாமையோடு மஞ்சரியையே பார்க்கிறாள் தேன்மொழி.

மஞ்சரியிடம் விடை பெற்று வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் இந்த நினைவுகள்தான் மனம் ஆற்றாமையால் துடித்தது. எத்தனை வெற்றிகரமான வாழ்க்கை அவளோடது. உண்மையாய் தன் வாழ்க்கை அப்படியா?

ஏதோ வெளியே போனோம். வந்தோம் சுற்றினோம். ஆனால் இந்த அளவு நெருக்கமும் பாசமும் தங்களுக் குள் இருக்கிறதா? யோசித்ததில் அத்தனை பிடிப்பு இருவருக்குள்ளுமே இல்லை என்றுதான் தோன்றியது. ஆசையும் இல்லை பாசமும் இல்லை. தனக்குத் திருமணமாகி ஒரு மாதம் ஆகப் போகிறது. திருமணம் ஆன புதிதில் எப்படி எப்படியோ இருப்பார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறாள். தாங்கள் ரொம்ப சாதாரணமாக இருப்பதாகத்தான் தோன்றியது. மஞ்சரி அக்கா சொல்வது போலெல்லாம் தன் வீட்டில் நடக்கவே இல்லையே. இன்னும் பேசினால் நிறைய விஷயங்கள் கிடைக்கும். ஏதோ அழைத்துப் போகிறான். வாங்கித் தருகிறான். இருந்தும் அந்த நெருக்கம் வராதது போல் தான் தோன்றுகிறது. அதற்கு மேல் வீட்டிற்கும் போகப் பிடிக் காமல் இருப்பும் கொள்ளாமல் மிக மெதுவாக நடந்து கொள்கிறாள். மஞ்சரி அக்காவுடன் பேசியதெல்லாம் தேவை இல்லாமல் ஞாபகத்திற்கு வந்தது.

''ஒரு தடவை தலைவலி என்று துடிச்சுகிட்டு இருந் தேன். கேட்டதும் அப்ப தான் உள்ள வந்தவர், தான் காபி சாப்பிடாம எனக்கு ஊட்டி விடறார். டாக்டர்கிட்டே வாம்மா, வாம்மான்னு கெஞ்சறார்.

''வேண்டாம்னு கெஞ்சினப்புறம், அப்படியே என்னைத் தூக்கிட்டுப் போய் டாக்டர்கிட்டே அழைச்சிட்டுப் போறார். டாக்டரே அவுங்களுக்கு ஒண்ணுமில்லேன்னு சொல்லி சிரிக்கிறாரு. எனக்கு தலைவலி சரியாப் போச்சுன்னாலும் நம்பாம 'என்ன பண்ணுது, என்ன



பண்ணுதுன்னு?' உருகி, உருகி தான் சாப்பிட வேண்டிய எதையும் சாப்பிடாம இன்னும் டிபன் காபி வாங்கித் தந்து ஊட்டி... ஒரே ரகளை போ'' சிரித்தது ஞாபகத்திற்கு வந்தது.

தனக்கும் தலைவலி வந்தது. கணவன் காபி, டிபன் சாப்பிடாமலே இருந்தானா தெரியவில்லையே. தானும் பக்கத்தில் ஒரு நாற்காலியில் அமர்ந்து அப்படியே கண் அயர்ந்து விட்டான். மஞ்சரி அக்கா சொன்னது போல் தன் வாழ்க்கையில் எதுவுமே நடந்ததில்லை.

அன்று வீட்டை அடையும்போதே கணவன் வாயிலில் அமர்ந்திருப்பது தெரிந்தது.

'என்ன இது இன்னிக்கு வேலை இல்லையா என்ன?' நினைத்தவாறே அவன் அருகே வந்த போது,

''என்னம்மா லேட்'' என்று சகஜமாகக் கேட்கிறான்.

''நான் லேட் இல்லை. நீங்க சீக்கிரம்.. என்னாச்சு'' என்கிறாள் தேன்மொழி.

''வழக்கமான கதைதான் சரக்கு வரவேண்டிய இடத் தில் வரவே இல்லை. வேலை நின்னுபோச்சு. சரி உன்னை கூப்பிட்டுகிட்டு எங்கேயாவது போலாம்ன்னு தான் ஓடிவந்தேன்.''

''எங்க போகணும்?''

''என்னம்மா.. நீ போன தடவையே அந்த ஏரியிலே படகுச்சவாரி இன்னும் கொஞ்ச நேரம் போகணும்னு ஆசைப்படலே. இன்னிக்கு நேரம் இருக்கு போயிட்டு வருவோம்.''

தேன்மொழி பதில் பேசாமல் உள்ளே போகிறாள், வழக்கம் போல் எல்லாவற்றையும் கொண்டு வந்து கணவனுக்குத் தர.

''ஹை பாப்கார்ன் சூப்பரா இருக்கே? வழக்கமாக ஒங்க கிளாஸ்லே இருக்கவுங்கதான் இதை வித்தாங் களா?'' கணவன் கேட்க, ஆமென்று தலையை ஆட்டி விட்டு உள்ளே போகிறாள் தேன்மொழி.

ஒரு வழியாக அவன் சாப்பிட்டு முடித்தவன் முகத்தைக் கழுவி தலையைச் சீவி வேறு பேன்ட், ஷர்ட்டுக்கு மாறி ''கிளம்பும்மா டைம் ஆயிடும் இல்லே'' சொல்ல சொல்ல உள்ளே போய் படுத்துக் கொள்கிறாள் தேன்மொழி.

சிறிது நேரம் மனைவிக்காக காத்திருந்தவன், ''தேன்மொழி டைம் ஆயிடுச்சு வா'' கூப்பிட பதில் வராது போகவே

''என்னாச்சம்மா'' என்றவாறே உள்ளே நுழைய தேன்மொழி குப்புறப் படுத்துக் கொண்டு ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து படித்தவாறே டு இன் ஒன்னில் சினிமா பாடல்களைக் கேட்டுக் கொண்டு இருக்கிறாள்.

''என்ன தேன்மொழி வெளியே கிளம்பலாம்னா படுத்துகிட்டு இருக்கே?''

''எனக்கு போகணும்னு தோணலே.''

''ஏம்மா?''

''ஏம்மான்னா? எனக்கு பிடிக்கலை. உங்களுக்கு வேணும்னா நீங்க போயிட்டுவாங்க.''

முகம் காயம்பட்டது போல் ஆனது. பெண்டாட்டி ஆசையாக காத்திருப்பாள் அவளோடு சந்தோஷத்தை



அனுபவித்து விட்டு வரலாம் என்று நினைத்தவனுக்கு மனைவியின் அலட்சியம் மனதை என்னவோ செய்தது.

சற்று பொறுமையாக அவளருகில் அமருகிறான்.

தேன்மொழி அவனை திரும்பிப் பார்க்காமல் பாட்டைக் கேட்டபடி புத்தகத்தை படித்தபடி இருந்தாள். சிறிது நேரம் வரை என்ன செய்வது என்று தெரியாமல் அங்கேயே அமர்ந்திருந்த அர்ஜுன் அவமானப்பட்டவனாய் எழுந்து வெளியே வந்து ஹாலில் அமர்ந்து கொள்ள, வாசல் கதவு தட்டும் ஒலி கேட்க, எழுந்து சென்று திறக்கிறான். அர்ஜுன்.

''ஹாய் அர்ஜுன் என்னைத் தெரியலே நான் மகேஷ்'' கையை நீட்டுகிறான் மகேஷ்.

''உங்களை ரொம்ப சின்ன வயசுலே பார்த்தது.'' அர்ஜுன் சொல்ல,

தோள்களைக் குலுக்கியவன் ''ஹனி எங்கே'' என்கிறான்.

''தேன்மொழி...'' அர்ஜுன் குரல் கொடுக்க அவள் எழுந்து வராமல் போக ''மகேஷ் வந்திருக்காரு பாரு'' சொல்ல ஓடி வருகிறாள் தேன்மொழி.

''ஹாய் மகேஷ் எப்ப வந்தீங்க?''

''இப்பத்தான் வந்துகிட்டே இருக்கேன். ஆமாம் உனக்கு கல்யாணம் ஆயிடுச்சாமே என்ன இதெல்லாம் சரி... சரிவா... இங்கே போட்டிங் சூப்பரா இருக்கும். வா போய்கிட்டே பேசலாம்.''

''ஐ ஆம் ரெடி'' என்று தேன்மொழி சிரிக்க தேன்மொழியையே வெறிக்கிறான் அர்ஜுன்.



## 18

அடுத்த நிமிடம் உடம்பு தலைவலி எல்லாம் பறந்து விட சிரித்தபடி கிளம்புகிறாள் தேன்மொழி.

"ஹாய்... நீங்க வறீங்களா?" மகேஷ் கேட்க,

"நோ தேங்க்ஸ்..." என்றவாறே மெதுவாக நாற்காலியில் அமர்கிறான் அர்ஜுன்.

தேன்மொழி ஒரு மரியாதைக்கு கூட கணவனிடம் சொல்லாமல் மகேஷோடு சிரித்தபடி இறங்கிப்போக, அர்ஜுன் இறுகிப் போய் அமர்ந்து இருந்தான். சாதாரணமாக ஆண் பிள்ளைகளிடம் இருக்கும் சந்தேகம், பொறாமை, வெறுப்பு இது எதுவுமே அவனிடம் கிடையாது. பெண்டாட்டி மேல் அளவு கடந்த பாசம். அவளுக்கு முழு சுதந்திரம் கொடுத்து அவளைப் பார்த்து மகிழ்ந்தவனுக்கு அவளின் இந்த அலட்சியம் மனதை நொறுக்கிவிட, நொறுங்கிப் போனவனாய், ஆடாது, அசங்காது அமர்ந்து இருந்தான்.

போட்டிங்கில் மகேசுடன் சிரிக்கப் சிரிக்கப் பேசுகிறாள் தேன்மொழி, வழக்கம் போல் அவர்கள் பேச்சு எங்கெங்கோ சென்றது. சிரித்து, சிரித்து அவனுடன் மணிக்கணக்காக பேச முடிந்தது.

"ஆமா.... என்ன ஹனி இது? என் ஹார்ட்டே பர்ஸ்ட் ஆயிடுச்சு ஏன் இந்த மேரேஜ்?"



"நீங்க வேற. என்னைக் கேட்டா செய்து கொடுத்தாங்க? போதாத குறைக்கு அப்பா கூட, போய்த்தான் ஆகணும்னு சொன்னார் எனக்கு எதுவுமே பிடிக்கலை..."

மகேஷின் கண்கள் பளபளத்தன. "டோன்ட் வொரி ஹனி நான் இருக்கேன். நான் என்னிக்குமே உன்னை விட்டுற மாட்டேன்."

இங்கே அர்ஜுன் யோசிக்கிறான்.

இவளுக்கு என்ன ஆயிற்று? சில நாட்கள் எத்தனையோ ஆசையாகத்தானே இருக்கிறாள். கொஞ்சி கொஞ்சி பேசி தன்னுடன் அனுசரணையாகப் பேசி மனைவியாக வாழ்ந்து. சின்னச் சின்ன விஷயத்துக்கும் கோபித்து அப்படி இருந்தவளுக்கு என்னதான் ஆயிற்று. கணவனை லட்சியம் செய்யாமல் போகக் கூடியவள் எல்லாம் இல்லை அவள். இப்படி போகக் காரணம்? தன்னிடம் என்ன குறை இருக்கு? குறை இருந்தால் தன்னிடம் பெண்டாட்டி பழகியே இருக்க மாட்டாளே. ஒன்றுமே தெரியவே இல்லையே.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. அவள் தையல் கிளாசுக்கு போய் விட்டு வந்தால் மாறி விடுவதாகத் தோன்றியது. அங்கே அப்படி என்ன இருக்கும்?

யார் இருக்கிறார்கள்? கையில் தினமும் ஸ்வீட் காரம் வாங்கிக் கொண்டுதான் வந்தாள். அந்த பொருள்களை எல்லாம் யார் கொடுத்திருப்பார்கள்? அது அன்று பெரிய தாக தோன்றவில்லை.

ஆனால் இன்று அதுவே பெரிய பிரச்சினைக்கு அடிகோலாகிவிட்டதோ? ஒருவேளை அவளின் பாய்

ஃபிரண்ட் ஏதேனும் இருக்குமா? அப்படி இருந்தால் மகேஷின் பின்னால் ஏன் ஓடுகிறாள். ஒரு வேளை மகேஷ்தான் அந்த ஆளா?'

யோசித்து, யோசித்து தலை வலித்தது. ஆசைப்பட்ட பொருள் கிடைக்காத குழந்தையின் நிலையில் இருந் தான் அர்ஜுன். மனம் ஊமை அழுகை அழுதது.

அவளை எத்தனையெல்லாம் நேசித்தான். அவள்தான் உலகம் என்று நினைத்தான். அவளை நேசித்ததால் தானே அப்பா கேட்டதுமே திருமணத்திற்கு ஒத்துக் கொண்டான்.

மனைவியாக வந்தவள் ஏதாவது முரண்டு பிடித் தாலும், தன்னைப் பிடிக்கலை என்று நினைத்துக் கொள்ள லாம். ஆனால் அவள் தன்மேல் ஆசையாகத்தானே இருந்தாள்.

திருமணம் ஆனாலும் தன் மனைவியாக ஆவாளா? என்றெல்லாம் எண்ணினானே. அவனுக்கு உடன்பட்டு, அவனோடு அவளுமல்லவா கொஞ்சிக் குலாவிக் கொண் டிருந்தாள். என்னவாயிற்று? எதுவும் புரியாமல் பொங்கி வரும் உணர்வுகளை அடக்க முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறான்.

இங்கே எந்தவிதமான உறுத்தலும் இல்லாமல் மகே ஷோடு சிரித்து சிரித்து பேசுகிறாள் தேன்மொழி. பழைய தேன்மொழியாக சந்தோஷத்தோடு பேசுகிறாள்.

அந்த ஏரியின் ஒரு பகுதியில் வெள்ளையும், சிவப்பு மான தாமரைகள் மலர்ந்திருக்க, அதைப் பார்த்து



பரவசத்தோடு "மகேஷ் எத்தனை அழகா இருக்கு இல்லே." அவள் சிலாகிக்க.

சட்டென்று குனிந்து பறிக்க முற்பட அவன் உடல் பாதி தண்ணீரைத் தொட்டது.

"ஐயோ... மகேஷ் பத்திரம்" அவள் கத்த, அதற்குள் மகேஷ் இரண்டு தாமரைப் பூக்களைப் பறிக்கிறான்.

"என்ன மகேஷ் இது? உங்க ட்ரஸ் எல்லாம் நனைஞ்சு போச்சு."

"ஏம்மா நீ ஆசைப்பட்டே இல்லே. அப்புறம் என்ன?"

தண்ணீரில் பார்த்த பூக்கள் கைக்கு வர, ஆச்சரியமாய் கண்களில் உற்சாகத்தோடு ஒருவித அன்போடு மகேஷை நோக்குகிறாள்.

அன்று அவளை வீட்டில் இறக்கி விட்டு விட்டு மறு நாள் வருவதாகக் கூறிவிட்டு புறப்பட்டான் மகேஷ்.

எதுவுமே நடக்காதது போல் தேன்மொழி உள்ளே வருகிறாள்.

மகேஷோடு வெளியே சாப்பிட்டு விட்டு வந்ததால் தேன்மொழி எதையும் செய்யவேண்டும் என்று தோன்றா மலேயே உள்ளே போய் படுக்கிறாள். இரவு வரை கணவன் அங்கேயே அமர்ந்திருப்பது தெரிந்தது.

ஒரு நிமிடம் மனம் கவலைப்பட்டது. அடுத்த நிமிடம் தன்னால் இவனோடு இருக்க முடியாது என்று தோன்ற, மனதில் எந்த உணர்ச்சிக்கும் இடம் கொடுக்காமல் உள்ளே செல்கிறாள்.

அர்ஜுன் இந்த நடவடிக்கையால் கலங்கிக் போய் அமர்ந்திருக்கிறான்.

அடுத்த நாள் எழுந்தவள் கணவனுக்கு டிபன் செய்து பூஸ்ட்டைக் கொண்டு வந்து வைக்கிறாள். இன்று ஒன்றும் கிடைக்காது இன்று வேலைக்குபோய் விட்டு வந்து பெண்டாட்டியிடம் பேச வேண்டும் என்று எண்ணியவனுக்கு இனிய அதிர்ச்சி.

ஒரு நிமிடம் சாப்பிடாமல் கிளம்பி விடலாம் என்று நினைத்தான்.

அடுத்த நிமிடம் மனதை மாற்றிக் கொள்கிறான்.

'எந்தப் பிரச்சினையும் செய்யக் கூடாது. அவள் வயதில் மிக மிகச் சிறியவள் பத்தொன்பது வயதிற்கு மன முதிர்ச்சியை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.

வீட்டில் செல்லமாக வளர்ந்தவள். மாமாவின் செல்லப் பெண். தான் நினைத்தது எல்லாம் செய்து கொண்டிருந்தவள். அவளைப் போய் கட்டுப்படுத்தினால் எல்லாம் விபரீதமாகிவிடும்.' டிபன் செய்து பூஸ்ட் கொடுத்தது சந்தோஷத்தை ஏற்படுத்த, மெதுவாக சாப்பிடுகிறான்.

ஒன்றும் நடவாததுபோல் அவள்பேச, அவனும் பேசுகிறான். அவன் அலுவலகத்திற்கு கிளம்பிவிட்ட, தேன்மொழி உற்சாகமாக கிளம்புகிறாள். ''மஞ்சரி அக்கா... மஞ்சரி அக்கா...''

சற்று குரல் உயர்த்தி கூப்பிட ''ஹாய் தேனு... என்ன இன்னிக்கு தையல் கிளாசுக்கு போகலே, ஜாலியா இருக்கற மாதிரி இருக்கு ஆச்சரியமா இருக்குப்பா..''



ஒருவித நாணமும், மகிழ்ச்சியுமாக சிரிக்கிறாள்.

''என்னாச்சு?'' மஞ்சரியும் சிரித்தபடி கேட்க,

''நேத்து போட்டிங்குக்குப் போயிருந்தேன். ரொம்ப ஜாலியா இருந்தது.

எதிர்பார்க்கவே இல்லை.

சட்டென்று மஞ்சரி கண்களை விரித்து கனவு காணுவது போல் தொலை தூரத்திற்கு பார்த்தவாறே பேசுகிறாள்.

''போட்டிங் போகணும்னா அது என் புருஷனோடு தான் போகணும், எப்ப வந்தாலும் இரண்டு ஹவருக்கு போட்டு எடுத்துடுவார். ஏன்னா எங்களுக்கு யாரும் இடைஞ்சல் பண்ணக் கூடாதாம்...'' குபீரென்று சிரிக்கிறாள் மஞ்சரி. ''போட்டிங் போகும்போதே, உருளைக் கிழங்கு சிப்ஸ், பாப்கார்ன், பிஸ்கட், ஐஸ்கிரீம் கூட வாங்கிட்டு வந்துடுவார்.

கொஞ்ச நேரம் ஓட்டிட்டு பிறகு விட்டுடுவார். போட் தானா போகும்.

கொஞ்சம் பயத்தோட சாப்பிட்டு விட்டே கிண்டல் பண்ண ஆரம்பித்து பிறகு அந்த ஏரித் தண்ணியை எடுத்து மூஞ்சில் அடிச்சு விளையாடுவார். ஒரு முறை பார்த்தியான்னா, ஒரே ஒரு தாமரைப் பூ ரொம்ப அழகா மலர்ந்து கிடக்குது. எனக்கு ரொம்ப பிடிச்சுது. சும்மா வாய் விட்டு சொன்னேன்.

நீ நம்பவேமாட்டே. எக்கிப் பிடிக்கப் போனவர், பொதேல்னு தண்ணியிலே விழுந்துவிட்டார். பயந்து போயிட்டேன். பறிச்சிட்டு மேலே ஏறி வந்துட்டார். அதுவரைக்கும் நான் பட்டப்பாடு.

''ஏன் இப்படி பண்ணீங்கன்னு?'' கேட்டா

''நீ ஏம்மா ஆசைப்பட்டே?''ன்னு கேக்கறாரு.

''எப்படி இருந்தது தெரியுமா?''

''அதே தாங்க்கா.. நேத்து தாமரை எனக்கு கிடைச்சது...''

''கிடைச்சிருக்கலாம். ஆனா என் ஹஸ்பண்டு மாதிரி யாருக்குமே கிடைக்காது. அந்த ஆசை எத்தனை ஆம்பளைங்களுக்கு இருக்குன்னு நெனச்சுக்கூட பார்க்க முடியலே. ஆசைன்னா அப்படி இப்படி ஆசை இல்லே அந்த மாதிரி புருஷன் கிடைக்க நான் எத்தனை கொடுத்து வச்சிருக்கணும் தெரியுமா?''

தேன்மொழியின் மனமும் பேசியது. பொண்டாட்டிக்கு என்று விழுந்து, விழுந்து செய்யும் மஞ்சரியின் கணவன் உண்மையிலே அற்புதமான கணவன்தான். தனக்கு பூவை புருஷனா பிடுங்கிக் கொடுத்தான். அந்த மகேஷ் அல்லவா தாமரையை பிடுங்க முயற்சி செய்து தாமரையைப் பறித்து கொடுத்தான். மொத்தத்தில் தன் கணவன் வேஸ்ட் என்பது நிச்சயமாகவே தெரிந்தது.

"வேண்டாம்மா எங்கியானா விழுந்து வைக்கப் போறே?"

நான் தாமரை மலரில் ஆசைப்பட்டதும் கணவன் சொன்னது இதுதான்.

வழக்கப்படி மஞ்சரி சாப்பிட கொண்டு வந்தாள். புளியோதரை, சர்க்கரைப் பொங்கல் என்று விதவிதமாக கொண்டு வந்தாள். புளியோதரை மிக மிக அருமையாக இருந்தது. சர்க்கரைப் பொங்கலில் சுத்தமான பசு நெய்யை மணக்க வைத்தது.



''அக்கா... புளியோதரை யார் வீட்டிலேந்து வாங்கிட்டு வந்தீங்க?

சக்கரைப் பொங்கல் ரொம்ப அருமையாக இருக்கு எப்படி செய்தீங்க? இல்லை எங்கேயாவது வாங்கிட்டு வந்தீங்களா?''

''நான் எங்கே செய்யறது? சமையல் அறையிலே அரை மணி நேரத்திற்கு மேல் இருந்தாலே அவருக்கு கோபம் வந்திடும். எதுக்கு இத்தனை வேலை செய்யறேன்னு கோபிச்சுக்கிடுவாரு எல்லாம் வெளியே வாங்கிக்கலாம்னு சண்டை போடுவார். உனக்கு வாய்க்கு நல்லா இருக்கிற மாதிரி வாங்கித் தரேன்னு சொல்லுவார். தப்பித் தவறி நான் செய்ய ஆரம்பிச்சா சண்டை போடுவார். ரெண்டாவது நான் செய்தா சாப்பிடமாட்டார் எனக்குத் தேவையில்லைன்னு உக்காருவாரு.''

தேன்மொழி ஆச்சரியத்துடன் மஞ்சரியையே பார்க்கிறாள்.

''இன்னிக்கு புளியோதரை சாப்பிடணும்னு நெனச்சுகிட்டு இருக்கேன். நேத்து வாய் வார்த்தையா சொன்னேன். அப்புறம் மறந்து கூட போயிட்டேன். இன்னிக்கு காலைலே அவுங்க பிராமின் ஃபிரண்ட் வீட்டுக்குப் போய் வாங்கிட்டே வந்துட்டார். பார்த்தியா எத்தனை வாங்கிட்டு வந்திருக்கார். ''

ஒரு பெரிய பாத்திரம், முழுவதும் புளியோதரையும், இன்னொன்றில் சர்க்கரைப் பொங்கலும் இருந்தது. பார்க்க மலைப்பாக இருந்தது. மனது ஆனந்தப்பட்டது.

ஏனோ தன் வாழ்க்கையில் தான் அதிகமாக இழந்து விட்டது போல் தோன்றியது. இதற்கு காரணம் தந்தை என்று தோன்றியது. அவர்மேல் ஆத்திரமும் கோபமும் வந்தது.

"என்னம்மா என்னவோ போல் ஆயிட்டே..."

"இல்லேக்கா என் வாழ்க்கையிலே நீங்க சொன்னது எல்லாம் நடக்குமான்னு நினைக்கிறேன்."

"என்ன இப்படி பேசறே? வரும் போது சந்தோஷமா வந்தே?"

"சந்தோஷமாகத்தான் வந்தேன். என் ஃபிரண்டோட நேத்து போட்டிங் போனேன். நீங்க ஹஸ்பண்ட் இதைச் செய்வார், அதைச் செய்வார்ன்னு சொல்வீங்களே அதே போல்தான் அவனும். அந்த சந்தோஷத்தில் வந்தேன்."

"யார் அவன்? என்ன செய்யறான்?"

மெதுவாக தேன்மொழி சொல்ல சொல்ல, அவளையே தீர்க்கமாகப் பார்க்கிறாள். பேசாம அவனையே கல்யாணம் பண்ணிக்கயேன். அவனை பிடிச்சிருக்கு இல்லே."

"என்னக்கா சொல்றீங்க?"

"இதுலே என்ன தப்பு? நாம வாழப்போறது எத்தனை நாளோ? அதுவரைக்கும் நல்லா வாழ்ந்துட்டு போயிடுவோமே. எதுக்கு மனக்கசப்போடு வெறுப்போடு வாழணும்?"

மஞ்சரி சொன்னதை யோசித்தபடிதான் வீட்டிற்கு தேன்மொழி வந்தாள்.



'மஞ்சரி அக்கா சொன்னதில் என்ன தப்பு இருக்கு? மகேஷோடு ரொம்ப ஜாலியாக அவளால் இருக்க முடியும்? அர்ஜுனோடு கொஞ்ச நாட்கள் கூட நல்லபடியாக இருக்க முடியுமா?' யோசித்துப் பார்த்தால் சந்தேகமாகத்தான் இருக்கிறது. அன்று முழுவதும் யோசித்து, யோசித்து இரவு அர்ஜுனை விட்டு விடலாம் என்று முடிவு செய்கிறாள்?' தேன்மொழி.

## 19



அன்று அர்ஜுன் போய் படுத்தும் அவள் அறைக்குள் நுழையவில்லை. அவன் வருமுன் தன் துணிகளை, சாமான்களை பெட்டியில் எடுத்து வைத்திருந்தாள். கணவன் தூங்க ஆரம்பித்ததும், ஹாலின் ஒரு சோபாவிலேயே படுத்துக் கொள்கிறாள்.

இரண்டு நாட்கள் முன்பு கூட அம்மா பேசிய போது தான் நன்றாக இருப்பதாய்தானே சொன்னோம். பாவம் அம்மா தினமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு,

"என்னம்மா நல்லாதானே இருக்கேன்" என்று இவள் சொன்னதால் பதில் பேசாமல் போனை வைத்தவள், இப்போது தேன்மொழி அம்மாவின் போன் வராதது ஏமாற்றமாய் இருக்க தேன்மொழியே பேசுகிறாள்.

மணி இரவு பத்து மணிக்கு மேல் ஆனது "அம்மா..." கூப்பிட சற்று ஈனஸ்வரத்தில் செல்வி பேசுகிறாள்.

''என்னம்மா... இந்த நேரத்துலே?''

''இரண்டு நாளா நீ ஏம்மா போன் பண்ணலே?''

''த்சு... எதுக்கு? நாக்கிடந்து இங்க தவிக்கனும். நான் ரொம்ப நல்லா இருக்கேம்மானு நீ சொல்றதுக்கா? உனக்கே அம்மான்னு அக்கறை இல்லாமல் போயிடுச்சு. இங்கே பெத்தவயிறு பத்திகிட்டு எரியுது. நெனச்சா பேசுவே இல்லேன்னா ஒரு வார்த்தைகூட பேச மாட்டே லட்சியம் செய்யமாட்டே. போனை வை.''

அம்மா கோபத்தோடு போனை வைக்க, தேன்மொழி மறுபடியும் போன் செய்கிறாள்.

''எதுக்குடி மறுபடியும், மறுபடியும் போன் பண்றே?'' எரிச்சலோடு கத்த.

''எங்கம்மாவைப் பார்க்க நாளைக்குள்ளே வரேன். அம்மாகிட்டே சொல்லிடுங்க.. ''அவள் சொல்ல,

''என்னது நாளைக்கு வர்றியா? என்னக்கண்ணு சொல்லவே இல்லை..''

''அதான் இப்ப சொல்லிட்டேனே,''

''எப்படி திடீர்னு?''

''எப்படின்னா? உங்களை பார்க்காம கட்டாயம் இருக்கவே முடியலைன்னு'' அம்மாவிடம் தேன்மொழி சொல்லி விரோதத்தை மறந்து பூரித்து போகிறாள்.

''சாப்பிட வந்திடுவியா கண்ணு?''

''நாளைக்கு நைட் வந்துடுவேன்...''



அம்மாவிடம் பேசிவிட்டு கணவனுக்கு கடிதம் எழுதுகிறாள். நேரடியாக சொல்ல சற்று யோசித்தவாறே கடிதம் எழுதுகிறாள்.

''அம்மா வீட்டிற்குச் செல்கிறேன். ஐ தேங்க் யூ பார் எவ்ரி திங்க் பை'' என்று எழுதிவிட்டு அவனின் பெயரை போட்டுவிட்டு லெட்டரை மடித்து மேஜையின் நடுவில் வைக்கிறாள். தான் எடுத்துக் கொண்ட சாமான்களெல்லாம் சரியாயிருக்கிறதா என்று ஒருமுறை சரி பார்க்கிறாள். பின் சோபாவில் கால் நீட்டி படுத்துக் கொள்கிறாள்.

தான் வரவில்லை என்றதும் கணவன் வந்து விடுவானோ என்று பயந்தபோது, கணவன் எழுந்தே வரவில்லை. கண்களை மூடி லேசான குறட்டையோடு தூங்கிக் கொண்டிருந்தான். ஏனோ ஒரு நிமிடம் மனம் ஏமாற்ற மடைந்தது. மறு நிமிடம் தன்னை பார்க்காததே நல்லது என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அன்று சோபாவில் புரண்டுபுரண்டு படுக்கிறாள். ஏனோ உறக்கம் வர மறுக்க எழுந்து உட்கார்ந்து நேரத்தைக் கடத்துகிறாள். விடியற்காலையில் எழுந்து கணவனுக்கு டிபன் செய்து கொடுத்து, பூஸ்டை கலந்து கொடுத்து விட்டு கணவன் அலுவலகத்திற்கு கிளம்பிச் சென்றபின் கிளம்பிய போது மனம் எனோ வருத்தப்பட்டது. ஒருவித தயக்கம் ஏற்பட்டது' பிறகு மனதை சமாதானப் படுத்தியவாறே முதலில் மஞ்சரி வீட்டிற்கு கிளம்புகிறாள்.

''என்ன தேன்மொழி கிளாசுக்குப் போகலையா?''

''இல்லைக்கா இனிமே கிளாசுக்குப்போகப் போறதில்லை.''

''ஏம்மா?'' பதறியவாறு கேட்கிறாள் மஞ்சரி.

''நான் ஊரை விட்டு போகப்போறேன்க்கா...''

''என்னாச்சு? உங்க வீட்டுக்காரருக்கு ... முடிஞ்சிடுச்சா.''

''இல்லைக்கா நான் மட்டும் தான் போறேன்.''

மஞ்சரியின் முகத்தில் ஒரு வித அதிர்ச்சி ஏற்பட, ''என்னம்மா சொல்றே?''

''என்ன சொல்றதுக்கா? எப்படி சொல்றது?'' தேன்மொழி பெருமூச்சு விடுகிறாள்.

''நீங்க அன்னிக்கு சொன்னதைத்தான் இன்னிக்கு செய்யறேன்...''

''என்ன செய்யறே?''

''இருக்கறவரை நல்லா இருக்கணும்னு, சந்தோஷமா இருக்கணும்னு சொன்னீங்க இல்லே...''

''ஆமாம்...''

''இங்கே இருந்து போனாத்தான் சந்தோஷம் வரும்னு தோணிச்சு...''

''உங்க புருஷனைப் பத்தி எத்தனையோ சொல்லி இருக்கீங்க? அது மாதிரி ஒண்ணுகூட என் வீட்டுலே நடந்ததில்லை...''

''உன் வீட்டுலே இல்லேம்மா... யார் வீட்டிலேயும் நடக்காது...''

''சொல்லும்போதே மஞ்சரியின் கண்கள் கனவுக்குப் போனது. ''நான் திருப்பித் திருப்பி சொல்றேன்னு



நினைக்காதே, எம் புருஷன் மாதிரி உலகத்துலே பார்க்க முடியாது அந்த பாசம், அந்த இழைவு, அந்த கனிவு வேற எந்த ஆம்பிளைக்கும் தன் பெண்டாட்டி மேலே இருந்ததில்லே. ஒரு முறை கை லேசா இடிச்சிடுச்சு. வீங்கிப்போச்சு, ஓடிப்போய் 'ஏம்மா... ஏம்மான்னு' ராத்திரி மொத்தமும் புலம்பல். வலிச்ச நான் கூட அத்தனை சத்தம் போட்டதில்லை. அந்த அளவு எந்த பெண்ணுக்கும் புருஷன் கிடைக்காது. அந்த அளவு வேண்டாம். ஆனா அதுக்காக உம் புருஷன் மாதிரி வயசு வித்தியாசத்தோடும் மனசு ஒட்டாமலும் வாழ முடியாது.

''ஆமா... அன்னிக்கு உம் ஃபிரண்ட் வந்தாரு போட்டிங் போனோம்னு சொன்னியே. அன்னிக்கு உம் முகம் எப்படி மலர்ந்து சிரித்தது. இத்தனை நாட்கள்லே அன்னிக்கு ஒரு நாள்தான் உன் சந்தோஷத்தை பார்த்தேன். அன்னிக்கு சொன்னதைதான் திரும்பியும் சொல்லறேன். வாழ்க்கையிலே நாம் எத்தனை நாள் இருக்கப் போறோம். இருக்கறவரை அனுபவிச்சிட்டு போகணும். எல்லோரும் நாளும் புதிதா பிறந்த மாதிரி நினைச்சுக்கணும். அந்தந்த நாளை நாம அனுபவிச்சிடணும். ஒவ்வொரு நாளும் இன்னிக்குதான் பிறந்தோம்னு நினைச்சுகிட்டு சந்தோஷத்தை அனுபவிக்கணும். தேவையில்லாத சங்கடங்களை மட்டுமல்ல அந்த சங்கடங்களுக்கு காரணமானவங்களையும் ஒதுக்கி வச்சாதான் சந்தோஷமா இருக்க முடியும். அதுவரை அந்தப் பையன் ஒத்துகிட்டா பேசாம அவனைக் கல்யாணம் செய்துக்க.

இவன்கிட்டே டைவர்ஸ் வாங்கிக்க. என் வீட்டுக்காரர் அளவு இல்லாவிட்டாலும் ஓரளவாவது உன்னை நல்லா வச்சிருப்பான்னு நினைக்கறேன்.''

''பாக்கலாம் அக்கா, அப்புறம் எப்பவருவேன்னு தெரியாது...''

மஞ்சரியின் வீட்டில் சாப்பிட்டு விட்டு, கிளம்ப, வெத்தலை பாக்கு, தேங்காய் வைத்து நாகம் ஒன்று தாமரை மலரை தாங்குவது போன்ற வெள்ளி விளக்கை பரிசாகத் தருகிறாள்.

''எதுக்குக்கா இதெல்லாம்?''

''என் ஞாபகமார்த்தமா எடுத்துக்க?''

''இதை கொடுத்தாதான் உங்க ஞாபகம் வருமா என்ன?''

''ஒண்ணும் வேண்டாம்க்கா...''

''பேசாம வச்சுக்க.. ஆசையா தானே கொடுக்கறேன்'' என்றவள் சட்டென்று தேன்மொழியின் கையைப் பிடித்த வாறே அழுகிறாள்.

''என்னக்கா?''

''உன்னை தினமும் பார்க்க முடியாதா? தேன் நீ இல்லாம இருக்க முடியாது.'' சட்டென்று பிழியப் பிழிய அழ. தேன்மொழியும் கண் கலங்குகிறாள். நெகிழ்ந்து போகிறாள்.

''தேனு நீ நல்லபடியா செட்டில் ஆயிட்டப்புறம் கட் டாயம் வா. உன் வீட்டு அட்ரஸை கொடு. போன் நம்பர் சொல்லு.''



எல்லாவற்றையும் எழுதி வாங்கிக்கொண்டு பிரியா விடை கொடுத்து அனுப்பினாள் மஞ்சரி. மனதில் வருத்தத்தோடுதான் தேன்மொழி கிளம்புகிறாள்.

'மஞ்சரி அக்கா பாவம் தன்மேல் எத்தனை ஆசை உள்ளவள். அவளைப் பிரிந்து செல்ல வேண்டுமென்றால் துன்பம்தான்.'

கணவனின் பார்வையில் படும் இடத்தில் கடிதத்தை வைத்து விட்டு, பக்கத்து வீட்டில் சாவியைக் கொடுத்து விட்டு கிளம்பி விடுகிறாள்.

அன்று இரவு வீட்டை நெருங்கும் போதே அம்மா ஓடி வருகிறாள். ''கண்ணா எப்படி இருக்கே?'' அம்மா ஓடிவந்து தழுவிக் கொண்டு நெட்டி முறிக்கிறாள்.

''என்ன கண்ணு இப்படி இளைச்சிட்டே. சாப்பிட வா.'' பெண் வருவாள் என்று பார்த்து, பார்த்து செய்து வைத்திருந்த சாப்பாட்டை தட்டில் போட்டு பெண்ணுக்கு ஊட்டாத குறையாக சாப்பாட்டை பரிமாறுகிறாள். சாப்பிட்டு விட்டு அம்மாவின் மடியில் சிறிது நேரம் படுத்து இருந்து விட்டு ஏஸியைப் போட்டுக் கொண்டு படுத்து உறங்கிப் போகிறாள் தேன்மொழி.

'அப்பாவைப் பார்த்தால் என்ன சொல்லுவாரோ' என்று பயம் இருந்தது. அப்பா வேலை விஷயமாய் பாண்டிச்சேரி போயிருப்பதாகவும் வருவதற்கு நான்கு நாட்களாகும் என்று அம்மா சொன்னது சற்று நிம்மதியைத் தந்தது.

சாதாரணமாக வீட்டிற்கு வந்தாலே அப்பா இருக்க வேண்டும். வெளியே போய் விட்டு வந்து பேசினாலும்

அப்பா இருந்தேதான் ஆகவேண்டும். இன்று திடீரென்று புறப்பட்டு வந்ததில் அப்பா பார்த்திருந்தால் கட்டாயம் திட்டி இருப்பார். அதனால் இன்று அப்பா இல்லாமல் இருப்பதே நல்லது.

நல்லவேளை மகா அத்தையும் தன் வீட்டுக்கே போய் விட்டதாக அம்மா சொன்னாள். நல்ல காலம் தான். ஏஸியைப்போட்டுக் கொண்டு தனக்கு விருப்பமான பாடலை சி.டியில் போட்டுக் கேட்டுக் கொண்டே கண் அயர்கிறாள்.

இங்கே அர்ஜுனின் பாடுதான் திண்டாட்டமாக போய் விட்டது. காலையில் எழுந்து டிபன், காபி ஆசையாக தந்து அனுப்பி விட்டு அவன் வருவதற்குள் அப்பா வீட்டிற்கு போவாள் என்று யார் கண்டது? இரவு எப் போதே ஒரு முறை கண் விழித்துப் பார்த்தான்.

அவள் பக்கத்தில் இல்லை என்பது தெரிந்தது. ஒரு வேளை பாத்ருமிற்கு எழுந்து போயிருக்கலாம் என்று நினைத்து தான் தூங்கியது நினைவிற்கு வந்தது. ஆனால் காலையில் எழுந்து நன்றாகத் தானே இருந்தாள்.

நடுவில் என்னவாயிற்று? இரவெல்லாம் தூக்கமின்றி திரும்பி, திரும்பி படுக்கிறான்.

முதன்முறையாக மனதில் பதற்றம், ஏமாற்றம், துக்கம், சோகம் எல்லாம் தாக்க, தேன்மொழியின் முகம் கண் முன்னே வந்து சிரிக்க, கண்ணீரைத் துடைத்தவாறே தலையணையில் முகம் பதிக்கிறான். தன்னிடம் இருந்த விலை உயர்ந்த பொருளை யாரோ பிடுங்கி விட்டாற் போகிற ஒரு உணர்வு. சாப்பிட எடுத்த பொருள்



வாய்க்கு கொண்டு போகும் போது கையைத் தட்டி விட்ட உணர்வு. தான் என்ன குறை வைத்தோம்?

தன்மேல் என்ன தவறு இருக்கிறது. தன்னை ஒதுக்கி விட்டு போகும் அளவிற்கு இங்கு என்ன நடந்தது? எத்தனை முயன்றும் என்ன ஆயிற்று என்பதை அவ ளால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை.

மனம் இப்படி புலம்பினாலும் அறிவு விழித்துக் கொண்டது. இவனைவிட ஒன்பது வயது சிறியவள். அம்மா - அப்பாவின் ஒரே பெண் வேறு. இந்த ஒரு மாதம் தன்னிடம் ஆசையாக இருந்ததே அதிகம்தான், புதுச்செடியை ஓரிடத்தில் இருந்து இன்னொன்றில் நடும்போது பிழைப்பதற்கே கொஞ்ச நாட்கள் வேண்டு மல்லவா. புது சூழ்நிலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு முளைக்க கட்டாயம் கொஞ்சம் காலம் ஆகத் தான் ஆகும். பேசாமல் விட்டுப் பிடிப்போம். போய் சேர்ந்து விட்டாளா?' என்று ஊர்ஜிதம் செய்து கொள்வோம்.

இப்படி நினைத்ததும்தான் இரவு தூக்கமே வந்தது அடுத்த நாள் காலையிலே பத்திரமாக வந்து சேர்ந்தாளா என்று கேட்டுக் கொள்ளலாம் என்று தொலைபேசியில் தொடர்பு கொண்டால் செல்வி அத்தைதான் தொலை பேசியை எடுக்கிறாள்.

''ம்... ம்... எல்லாம் வந்தாச்சு.. எம்பொண்ணு இங்க யாவது சுகமா இருக்கட்டும்'' என்று டக்கென்று போனை வைத்துவிட காயம்பட்டவனாய் விழிக்கிறான் அர்ஜுன். மாமாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது 'நாட் ரீச்சபிள்' என்று வர மௌனமாகிறான்.

அடுத்த மூன்று நாட்களும் மரண அவஸ்தான். மாமாவைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. மனைவி யின் வீட்டிற்கு போன் செய்தால் செல்வி அத்தைதான் எடுக்கிறாள். இவன் குரல் கேட்டாலே அத்தை தொலை பேசியை துண்டித்து விடுகிறாள். வேறு வழியில்லை. அம்மாவைத் தொடர்பு கொண்டு எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டியதுதான். மனதிற்கு நினைத்துக் கொண்டிருந்தபோது கொரியரில் அவனுக்கு ஒருகடிதம் வந்தது தேன்மொழிதான் அனுப்பியிருந்தாள்.

''தான் மண வாழ்க்கையில் அதிப்தி அடைந்திருப்ப தாகவும் அதனால் சேர்ந்து வாழுதல் கடினம் என்றும், மண விலக்கு பெற விரும்புவதாக'' அதில் எழுதியிருக்க கடிதத்தைப் படித்தவன் அப்படியே இடிந்து போகிறான்.

## 20



அன்று வேலைக்குப் போகவில்லை. அலுவலகத் திற்கு கிளம்பியவன் கொரியரில் கடிதம் வந்ததும் அப்படியே போய் படுக்கையில் விழுகிறான். 'அன்பு செய் அன்பு செய் என்று எல்லா மதங்களும் நூல்களும் சொல்கிறது. அன்பு செய்ததற்கு இத்தனை அடியா இத்தனை வலியா? அவளை தான் நேசித்தோம். அவள் வெறும் காதலில் மட்டுமல்ல அவனின் மனைவி பார்த்த வுடன் காதலி. அவளுடன் நினைவுகளில் வாழுவதற்கு



முன் திருமணமும் ஆகிவிட்டது. மனைவியை யாரும் நேசிக்க மாட்டார்களா? நேசிக்கக்கூடாதா? திருமணம் ஆகி ஒரு மாதத்தில் என்னாகிவிட்டது? தங்களுக்கு ஒரு சிறு சண்டைகூட வந்ததேயில்லையே சிறு சலசலப்பு கூட இல்லை. விவாகரத்து கேட்கும் அளவிற்கு என்னாகி விட்டது. எதுவாயிருந்தாலும் என்னிடம் பேசியிருக்க லாமே. தான் எதையும் கேட்காத ஒரு மனிதனா என்ன? எதையும் புரிந்து கொள்ளக்கூட தெரியாத ஜடமா? இல்லை அவள் சொல்லி தான் எதை கேட்வில்லை. எத்தனை வேலை இருந்தாலும் பெண்டாட்டியை சந் தோஷமா வைத்துக் கொள்ளவேண்டும் என்றுதான் முயலவே இல்லையா? அவளுக்குத் தான் என்ன குறை வைத்தோம்? ஏன் இப்படிப்பட்ட உணர்வு?' யோசித்து யோசித்து மண்டை குழம்பி தலை வலித்தது.

மனம் மட்டும் ரொம்பவே வலித்தது. கைகாலைக் கூட அசைக்க திராணியற்று அப்படியே படுத்துக் கிடந்தான். மன பாரம், உடலுக்கும் பாரமானது. தான் வேலையில் இருந்தால் பத்து நாட்கள் கூட லீவு போட்டுவிட்டு இருக்க முடியும். இப்போது சொந்த பிஸினஸ். மணி பதினொன்றைத் தொட்டுக் கொண்டு இருந்தது. காலை யில் இருந்து எத்தனையோ போன்கள் வந்துவிட்டது எங்கே கிளம்புவது?

பிறகு யோசிக்கிறான். 'அவள் விவாகரத்து கேட்டால் தான் எப்படி தர முடியும்? அவள் தானாக இந்த வேலை செய்யவில்லை என்று தோன்றியது. செல்வி அத்தையின் தூண்டுதலாக இருக்கலாம். இருந்தும் அதற்கும் மேல்

ஏதோ ஒன்று காலையில் சந்தோஷமாக சிரித்துக் கொண் டிருப்பவள், தையல் வகுப்புக்கு போய் வந்து மாறிவிடு கிறாள் என்னவாக இருக்கும்?

ஒரு வேளை இந்த மகேஷ் வந்து தினமும் அவளுக்கு போதனை செய்து இப்படி நடந்து கொள்ளும்படி தூண்டி இருக்கிறானா. இருக்கலாம். தன் மனைவி அப்பாவி. அவளுக்கு ஒன்றும் தெரியாது. சின்ன குழந்தை போன்ற மனது அவள் மனதைக் கெடுத்து எனக்கு எதிராக செய்து இது கட்டாயம் மகேஷின் வேலையாக இருக்கும் முதலில் எக்கச்சக்க வேதனை இருந்தாலும் சற்று நிதா னித்து யோசனை புரிந்ததில் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்தது. மாமா இருக்கும்போது என்ன கவலை? அவரிடம் பேசிக் கொள்வோம்.'

ஏதோ யோசனையில் எழுந்தவன், தன் வேலையை கவனிக்கச் செல்கிறான். மாலை வந்தபோது அம்மா தொலைபேசியில் தொடர்பு கொள்கிறாள். வாரத்துக்கு மூன்று தடவை மகனிடம் பேசிவிடுவாள். "என்னம்மா? நேத்து தான் பேசினீங்க?"

"என்னடா இதெல்லாம்? உம் பொண்டாட்டி அம்மா வீட்டுக்கு வந்துட்டா?"

"யார் சொன்னாங்க?"

"யார் சொன்னாங்கன்னு கேட்டா எதைச் சொல்றது, அவ உங்கூடதான் இருக்காளா?"

"இல்லே."

"காலைலே காலிபிளவர் குருமா செய்தேன். எங்கண்ண னுக்கு பிடிக்கும்னு கொடுத்து அனுப்பிச்சேன். அப்ப



தான் வேலைக்காரி உங்க மாமியார் வீட்டிலே தேனைப் பார்த்தேன்னு சொன்னா. எப்ப வந்தா?"

"நேத்துதாம்" பெருமூச்சு விடுகிறான் - அர்ஜுன்.

"என்னடா ஆச்சு? பொண்ணு அட்ஜஸ்ட் பண்ணிக் கிட்டு நல்லா இருக்கான்னு சொன்னே என்னாச்சு?"

முதலில் சற்று தைரியமாக பேச முற்பட்டவன் உடைந்து போய் அழுகிறான்.

"என்னடா என்ன ஆச்சு. உங்களுக்குள்ளே ஏதாவது சண்டையா? "

"இல்லேம்மா."

"பின்னே அவ அதிருப்தி அடையற மாதிரி எப்ப வாவது நடந்துகிட்டயா?"

"இல்லேம்மா நேத்து மதியத்துக்கு மேலே தான் போயிருக்கா. காலை எனக்கு டிபன் செய்து கொடுத்து எல்லா வேலையும் செய்துட்டுதானே போயிருக்கா..."

"அவ போவான்னு உனக்கு தெரியுமா?"

"இல்லேம்மா கொஞ்சம் கூட நினைச்சுப் பார்க்கலை. ஏன்னா எங்களுக்குள்ளே ஒரு சின்ன அதிருப்திக் கூட வந்ததில்லே. அதுதாம்மா மனசுக்கு சங்கடமா இருக்கு. பின் மெதுவாக கடித வாசகத்தை சொல்லவும் அம்மா அதிர்ந்து போனது புரிந்தது.

"என்னடா இதெல்லாம்? அங்கே என்ன நடக்குது?"

"தெரியலைம்மா." பின் மெதுவாக மகேஷைப் பற்றி சொல்ல சொல்ல அம்மா மௌனமாக இறுகுவது புரிந்தது.

''வெறும் நல்லவனா இருந்து என்ன பிரயோசனம்? உன்னுடையதைக் கூட காப்பாத்திக் கொள்ள முடியாத நிலையிலா இருப்பே? இத்தனை அசமஞ்சமாகவா இருப்பே? மகேஷ் வீட்டுக்கு வந்தவுடனேயே அடிச்சு விரட்டுவியா? வீட்டிலே கூப்பிட்டு வச்சுகிட்டா விருந்து கொடுப்பே? உம்பொண்டாடியை இன்னொருத்தனோடு எப்படி போட்டிங்குக்கு அனுப்புவே?''

''அவ இப்படின்னு... எனக்குத் தெரியாதும்மா?''

''பேசாமா இருடா, அவ ரொம்ப சின்ன பொண்ணு. முகத்துக்கு நேரா புகழ்ந்து ஆ, ஊன்னு பேசினா எந்த பொண்ணுதான் மயங்காது. இத்தனை வயசாச்சு உன்ன துன்னு பத்திரமாக வச்சுக்கத் தெரியலையே...''

பையன் மௌனமாக இருக்க, உடனே இளகிப் போகிறாள் மகா.

''சரி... சரி வருத்தப்படாதே. அழாதே. நம் கைமீறி எதுவும் நடக்காது. அந்தப் பெண்ணை நினைச்சு அழுது கிட்டு இருக்காதே! நான் அண்ணன் கிட்டே பேசிக்கி றேன். பொண்டாட்டியை ஆடி மாசம் அம்மா வீட்டுக்கு அனுப்பினதா நினைச்சுக்க, விஷயத்தை என் காதிலே போட்டுட்டே இல்லே கவலைய்யை தூர ஒதுக்கி வச்சிட்டு வேலையை முடிச்சு வீட்டுக்கு சீக்கிரம் வர வழியைப் பாரு...''

சொன்னாலும் மனம் முழுவதும் மறுபடியும் வேதனை நிரம்பியது. இந்த ஒரு மாதமாக கையில் ஸ்வீட், காரம், என்று ஏதோ வாங்கிக் கொண்டு வந்து தன்னை சாப்பிட வைத்தது ஞாபகத்திற்கு வந்தது. தன்னோடு பிக்னிக்



வந்து மிகவும் ரசித்து, ரசித்து ஒவ்வொரு வேலை களையும் செய்துவிட்டு அவனோடு கொஞ்சிக் குலா வியதும் ஞாபகத்திற்கு வந்தது. மனம் மீண்டும் பிறாண்ட, மறுபடியும் வேதனை எழுந்தது. அம்மா பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னதால் மீண்டும் சமாதானம்.

தேன்மொழிக்கு ஒரு பெரிய பாரம் இறங்கியது போல் இருந்தது. கணவனிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் சென்றது மனதை உறுத்திக் கொண்டிருக்க, உண்மையை எழுதியதில் ஒரு நிம்மதி கிடைத்தது.

இருந்தாலும் அவனிடம் உண்மையை எழுதியதால் மனது வேதனைப் பட்டது. தன் கணவன் மிக மிக நல்லவன் எல்லாவற்றிற்கும் தனக்கு சுதந்திரம் கொடுத் தவன். அவன் மனது கஷ்டப்படும் வகையில் தான் எழு தியது தவறுதான். அது மட்டும் மனதை உறுத்த யோசிக் கிறாள். பாவம் அர்ஜுன் அவனிடம் இப்படி நடந் திருக்கக் கூடாது. நேரில் பார்க்கும்போது கட்டாயம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம்.

அன்று சற்று நேரம் கழித்து எழுந்து, அம்மா கொடுத்த டிபனை விழுங்கிவிட்டு டி.வி.யில் ஆழ்ந்திருந்த போது, வழக்கப்படி மகேஷ் வருகிறான்.

''ஏய் ஹனி எப்ப வந்தே?'' சற்று ஆச்சர்யமாக கேட்ட வாறு அருகில் வந்து அமர்கிறான்.

''ஆமா நீங்க எங்கே இப்படி? நான் வந்திருக்கேன்னு எப்படி தெரியும்?''

''ஏன் தெரியாது? உன் ஊருக்கு நேத்து போயிருந்தேன். நீ இல்லே. ராத்திரி எட்டு மணி வரைக்கும் வெயிட் பண்ணினேன்.

உன் ஹஸ்பண்டையும் காணோம். அப்புறம் பக்கத்து வீட்டிலேதான் சொன்னாங்க, நீ ஊருக்கு கிளம்பிட்டதா சொன்னாங்க அதான் ஓடி வந்துட்டேன்.''

ஒரு நிமிடம் மௌனமாக இருக்கிறாள். என்ன செய்வது என்று தெரியவில்லை. ''ஆமா எப்படிம்மா இருக்கே!'' கரிசனமாக அவன் பேசியது மனதிற்கு ஒத்தடம் கொடுத்தது போல் ஒரு உணர்வு. சந்தோஷப் படுகிறாள் தேன்மொழி.

பழையபடி அவனோடு பேசிச் சிரித்து மகிழ்ந்து கும்மாளமிட்டு மனம் சந்தோஷத்தோடு இவற்றை செய்ய அம்மா கூட ஒன்றும் சொல்லாமல் எல்லா வற்றையும் ஆமோதிக்கிறாள். இதே அப்பாவாக இருந் தால் ஒருத்தரையும் வர விட்டிருக்க மாட்டார்.

அயிற்று அடுத்த ஒரு வாரமும் மகேஷோடுதான் வெளியே சுற்றுகிறாள். மனம் பட்டாம்பூச்சியாக சுற்ற அவனோடு கடைத் தெரு, சினிமா என்று சுற்ற அப்பா இல்லாதது வசதியாகப் போய் விட்டது.

தினமும் காலையில் வந்து விடுவான். மதியம் சுற்றப் போவார்கள் மாலை ஐந்து மணிக்கு கொண்டு வந்து விடுவான். முதலில் இவன் வருகையும், பெண் அவ னோடு சுற்றுவதையும் சாதாரணமாக எடுத்துக் கொண் டாலும் இப்போது செல்வியே கேட்கிறாள். ''என்ன தேனு அவனுக்கு ஆபீசெல்லாம் இல்லையா? ஒரு வாரமா வந்துகிட்டு இருக்கான் என்னாச்சு?''

''இல்லேம்மா மகேஷ் வேற ஆபீசுக்குப் போறார். நான் கொஞ்சம் மூட் அவுட்டா இருந்தேன் இல்லையா. அதுக்காகத்தான் தினம் வந்திட்டுப் போறார்.''



தேன்மொழி இருக்கும்போது வரும் அவளின் சகோதரரின் புதல்வர்கள் இப்போதெல்லாம் வருவ தில்லை. மகேஷைத் தவிர வேறு யாருமே வருவ தில்லை. ''அத்தை.. அத்தை'' என்று வந்த சேது கூட இந்தப் பக்கமே வருவதில்லை. மகேஷின் வரவு செல்விக்கு மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்தியது. தன் பெண்ணுக்கும் மகேஷுக்கும் மறுமணம் செய்து வைத்து விடலாம். எப்படியோ மஹாவின் சொந்தம் இருந்தபோது முன் பெல்லாம் மகேஷ் வந்தாலே எரிச்சல் அடைவாள். இப்போதெல்லாம் அவனையும் விழுந்து விழுந்து கவனிக்கிறாள்.

''சாப்பிடப்பா'' என்று விழுந்து, விழுந்து உபசரிக்கிறாள். கணவன் வருவதற்குள் தன் பெண் ஒத்துக் கொண்டு விட்டால் சண்டை இட்டாவது பின் இந்தத் திருமணத்தை நடத்தி விடலாம். பெண் விருப்பப்பட்டு விட்டால் கண வனால் ஒன்றும் செய்ய முடியாது. தன் தம்பியைப்போய் பார்க்க வேண்டும். எப்படியாவது இந்த திருமணத்தை முடிக்க வேண்டும்.' மனம் அவசரக் கணக்கு போட்டது. 'எப்படியாவது இந்த திருமணம் நடக்காதா?' மனம் ஆதங்கப்பட்டது. தெரிந்த கடவுளுக்கெல்லாம் நேர்ந்து கொண்டது.

ஒரு வாரம் கழிந்து வீட்டிற்கு வந்தார் பரசு எப்போது வந்தாலும் ஏதோ ஒரு யோசனையில் இருப்பவர் இன்று சற்று தெளிவுடன் வருகிறார். பெண்ணின் அறை திறந்து கிடந்ததைப் பார்க்கிறார். சாதாரணமாக பெண் இல்லை என்றால் அறை மூடப்பட்டு இருக்கும். அவருக்கு லேசான அதிர்ச்சியோடு கோபமும் எழுந்தது.

''ஏய்... என்ன இது தேனா வந்திருக்காளா என்ன?''

செல்வி கணவனை இத்தனை சீக்கிரமாக எதிர் பார்க்கவில்லை. இன்னும் ரெண்டு நாளாகும் அதற்குள் மகேஷுடன் பேசி அவன் ஒத்துக் கொண்டால் அவர்கள் வீட்டிலும் பேசி திருமணத்தை ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நிலையில் கணவன் வந்துவிட பயத்தின் உச்சியில் இருக்கிறாள்.

''என்னடி கேக்கறேன் பதில் இல்லே தேனு வந்திருக்காளா?''

''ஆமாம்'' என்று செல்வி தலை அசைக்க,

''என்னடி சொல்றே? எங்க அந்தக் கழுதை அர்ஜுன் வரலை இல்லே...''

''அவளுக்கு என்னைப் பார்க்கணும்னு ஆசையா இருந்திச்சாம் மருமகப் பிள்ளைகிட்டே கேட்டுகிட்டு தான் வந்திருக்கா. ஒரு வாரம் போல இங்கே இருந்துட்டு திரும்பிடுவா'' மெதுவாக சொல்கிறாள் செல்வி,

''ஆமா அவ எங்கே போயிருக்கா? மஹாவைப் பார்க்க போயிருக்காளா?''

''இல்லே... கோவிலுக்குப் போயிருக்கா? நீங்க முகம் கழுவிட்டு வாங்களேன். சாப்பாடு செய்துடறேன்.''

''காபி மட்டும் தா'' அவர் சொல்ல காபி கலக்க உள்ளே போகிறாள் செல்வி.

சற்று அசதியாக சோபாவில் உட்கார்ந்தபோது, வாசவில் மகேஷோடு இருந்தபடி உள்ளே வரும் பெண்ணைப் பார்த்து அதிர்ச்சி அடைகிறார்.



# 21



உரிமையோடு உள்ளே வந்த மகேஷ் மாமாவைப் பார்த்ததும் சட்டென்று வெளியே போகிறான்.

''என்னம்மா இது?'' கேட்கும் போதே எரிச்சல், ஆத்திரம் எல்லாம் எழும்பியது. அப்பாவைப் பார்த்ததுமே தேன்மொழியின் முகத்தில் ஈயாடவில்லை. சாதாரணமாக இருந்தாலும் தெரிந்திருக்காது. தான் மகேஷுடன் வந்ததை அப்பா பார்த்துவிட்டார். என்னென்ன நடக்கும்? கண்களை இமைக்காமல் ஒரு நிமிடம் அதிர்ச்சியோடு அவரைப் பார்க்க, பெண்ணின் அருகில் வந்து பட்டென்று கன்னத்தில் அடிக்கிறார்.

''என்ன செய்யறே? அறிவில்லே?''

''என்னங்க'' தடுக்கும் விதமாக கூப்பிட்ட செல்விக்கும் ஒன்று விழுந்தது.

''அப்பா'' பெண் கத்த,

''என்னடி என்ன நினைச்சகிட்டு இருக்கே? அன்றைக்கே சொன்னேன் இல்லே. கட்டின கணவனை விட்டுட்டு இன்னொருத்தனோடவா போவே...''

''அப்....பா சும்மா கடைக்கு போயிருந்தோம் ஃபிரண்டா...''

அவளை முடிக்கவிடாமல் கத்துகிறார்

''என்னடி பெரிய பிரண்ட்ஷிப். கட்டினவனை விட்டுட்டு கண்டவனோட என்ன பிரண்ட்ஷிப் வேண்டிக் கிடக்கு...''

இதற்குள் தங்கையிடமிருந்து தொலைபேசி வர பேசியவரின் முகம் மாறத் தொடங்குகிறது.

மகா கருக்கமாக எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லுகின்றாள்.

''அண்ணா எல்லாத்தையும் விட்டுக் கொடுத்த என் அசட்டு பிள்ளையை குறை சொல்றதா? இல்லை கல்யாணம் பண்ணிகிட்டு ஒரு மாசத்துல உதறிட்டுப் போன உன் பொண்ணை குறை சொல்வதா?''

''என்ன சொல்றே... உங்க அண்ணியை பார்க்கணும்னுட்டு வந்தான்னு சொன்னாங்க...''

''அப்படி வந்திருந்தான்னா நான் ஏண்ணா இப்படி பேசப்போறேன்?''

''என்னம்மா சொல்றே?''

''அண்ணா என் பிள்ளைகூட வாழ விருப்பமில்லேன்னு உங்க பொண்ணு லெட்டர் எழுதி வச்சிட்டு வந்திட்டாளாம். பிள்ளை உடைஞ்சு போய்கிடக்கிறான்.'' சொல்லும் போதே தேம்பித் தேம்பி அழுகிறாள் மகா.

''அண்ணா என் பையன் அப்பாவி. அவங்க அப்பா சொன்னாங்கன்னு கல்யாணம் செய்துகிட்டான். ஒரு வேளை உங்க பொண்ணு முதல்லேயே புருஷன் பிடிக்கலைன்னு சொன்னா பேசாம இருந்திருப்பான். அவ விலகிப் போறதுக்கு கூட ஒத்துகிட்டு இருப்பான். ஆனா



அவ அவக்கூட நல்லாதான் குடித்தனம் நடத்தினான்னு சொல்றான்?''

''அவங்களுக்குள்ளே நடுவிலே ஏதாவது சண்டை வந்திருக்குமா?''

''அப்படி எல்லாம் ஒண்ணுமில்லேண்ணா. இவ போரடிக்குதுன்னாளாம் தையல் கிளாஸுக்கு சேர்த்து விட்டானாம். அங்க தான் ஏதோ ஆகுது அப்படீன்னு சந்தேகப்படறான். அங்க போயிட்டு வந்தப்புறம் ஒரு மாதிரி ஆயிடுவாளாம். அப்புறம் எப்படியோ சரி ஆகி எம்பிள்ளையோடு நல்லா இருந்தாலும் மறுநாள் அந்த வகுப்புக்கு போயிட்டு வந்தவுடனேயே ஒரு மாதிரி ஆகிவிடுவாளாம். போதா குறைக்கு அண்ணியோட தம்பி பையன். அவன் வேற வந்து எரிகிற கொள்ளிக்கு எண்ணெய் வாத்துட்டு போனான். சொல்லி ரொம்ப வருத்தப்பட்டான். ஒண்ணும் ஆகாது கவலைப்படாதே. மாமா கிட்டே நான் பேசறேன்னு சொல்லி சமாதானம் படுத்தினேன். இப்ப என்ன அண்ணா செய்றது?'' லேசான அழுகையோடும் வருத்தத்தோடும் அவள் கேட்க,

''என்கிட்டே சொல்லிட்டே இல்லே. நான் பார்த்துக்கிறேன் நீ பேசாம இரு'' என்றவர்.

அங்கிருந்து நகர்ந்து தன்னறைக்குச் செல்கிறார். செல்லில் மருமகனைத் தொடர்பு கொள்கிறார்.

''சொல்லுப்பா அர்ஜுன் என்னாச்சு?'' - முதலில் சற்று கலங்கியவன் பிறகு மெதுவாக சற்று துயரம் தோய்ந்த குரலில் நடந்தவைகளை சொல்லிவிட்டு, தான் மாமனை இரண்டு முறை தொடர்பு கொண்டதையும் 'ஞாபகப்

படுத்துகிறான். அப்போதுதான் மிஸ்ட் காலில் இருமுறை அவனுடைய தொடர்பு எண் வந்ததும் தெரிய அமைதியாகி சொல்லுகிறார்.

''எல்லாம் சரியாயிடும் கவலைப்படாதே...''

''உங்க மேலே இருந்த நம்பிக்கையிலேதான் மாமா பேசாம இருக்கேன்.''

பரசு யோசிக்கிறார். பெண்ணை இன்னும் இரண்டு அடி அடித்து மிரட்ட முடியும் ஆனால் மிட்டலில் விரோதம் தான் வளரும். பெண்ணின் பிடிவாதம் அதிகமாகும். ஒன்றும் பேசமுடியாது. இது முள்ளுக் கம்பியில் படர்ந்த சேலை. பதமாகத்தான் எடுக்கவேண்டும். வெகுநேரம் யோசிக்கிறார். பிறகு ஏதோ முடிவு செய்தவராக ஒன்றும் நடவாதது போல் கீழே இறங்கிப் போகிறார்.

''செல்வி டிபனை எடுத்துவை. ''டிபன் வந்ததும் சாப்பிடுகிறார். பிறகு வீட்டைப் பற்றி மனைவியின் உடல் நிலை பெண்ணின் உடல் நிலை என்று எப்போது வந்தாலும் விசாரிப்பது போல் விசாரிக்கிறார். செல்விக்கு அப்பாடா என்று ஆறுதலாக இருந்தது. கணவனுக்கு நிமிஷ நேரக் கோபம்தான். சரியாகிவிட்டது போலும். நினைத்துக் கொள்கிறாள்.

எப்போது ஊருக்கு போய்விட்டு வந்தாலும் பெண்டாட்டிக்கு புடவை, பெண்ணுக்கு சூடிதார் வாங்கி வருவார். இப்போதுதான் அப்பாவே வாங்கி வந்திருந்தார். பெண்டாட்டியிடம் புடவையைக் கொடுத்து விட்டு பெண்ணைக் கூப்பிடுகிறார்.



கூப்பிட்டுவிட்டு மாடிக்கு போய்விட, ''ஏய் தேனு அப்பா கூடப்பிடறாரு போ. உனக்கு ட்ரஸ், ஸ்வீட் எல்லாம் வாங்கிட்டு வந்திருக்காரு போ. வாங்கிட்டு வந்திடு.'' செல்வி உலுக்க, ''எனக்கு வேணாம் அடிச்சிட்டு புடவை கொடுப்பாரா?''

''த்சு பேசாம இருடி. சண்டை வேணாம், போய் ட்ரஸ்ஸையும் ஸ்வீட்டையும் வாங்கிட்டு வா போ.''

அதற்குள் ''தேனு... '' பரசு கூப்பிட, செல்வி கட்டாயப் படுத்தி பெண்ணை மாடிக்கு அனுப்பி வைக்கிறாள்.

'அடிதடியில் ஒன்று புரியவைக்காது. அன்பாக பெண்ணுக்கு புரிய வைப்போம்' எண்ணமிட்டவாறே பரசு மறுபடியும் கூப்பிட சற்று வேகமாக வருகிறாள் தேன்மொழி. உம்மென்று இருக்கிறாள். எதிலும் நாட்டமில்லாமல் இருக்கிறாள். அப்பா அடித்ததால் ஆத்திரம் வேறு.

''இங்கே வாம்மா உக்காரு என்ன வாங்கிட்டு வந்திருக்கேன் பாரு.''

சந்தனக்கலர் சூடிதாரில் அரக்கு மணிகள் வைத்து பூவேலைப் பாடுடைய சூடிதார் கை, எல்லாம் எம்பிராய்டரி மணிகள் என்று ரொம்ப அமர்க்களாக இருந்தது.

''ஹை ஸூப்பர்ப்'' தன்னையும் அறியாமல் தேன்மொழி கத்திவிட, வாஞ்சையாக சிரிக்கிறார்.

''இங்கே வாடா'' என்றவர், ''இந்தா உன் பேவரிட்.'' தலையைத் தடவ ரஸகுல்லாவில் உள்ளே பால்கோவா வைத்து, மேலே குங்குமப் பூ தூவி.

''ஹை தேங்க்யூபா..'' தேன்மொழி குதித்து ஆனந் தப்படுகிறாள்.

அப்பா அடித்தது கூட மறைந்தது. ஆசையா எடுத்து ஒன்றை வாயில் போட்டுக் கொள்கிறாள். ''ரொம்ப நல்லாயிருக்குப்பா...''

பரசு மெதுவாக பேச ஆரம்பிக்கிறார். ''சாரிம்மா உன்னை அடிச்சுட்டேன் சாரி...''

''பரவாயில்லப்பா... அப்பா தானே அடிச்சீங்க...''

மெதுவாக பேச்சை ஆரம்பிக்கிறார்.

''அர்ஜுன் எப்படிம்மா?''

ஒரு நிமிடம் அப்பாவையே தீர்க்கமாக பார்த்தவள் பின் மெதுவாக சொல்கிறாள்.

''ரொம்ப நல்லவருப்பா?''

''பின்னே... என்ன பிரச்சினைம்மா உங்களுக்குள்ளே? ஏன் தனியா வந்தே?''

''வரக்கூடாதா?''

''அப்படி இல்லேம்மா... புருஷனோட வந்தா கல் யாணம் ஆனவங்களுக்கு அது மரியாதைம்மா.''

''அப்பா வீட்டிலே என்னப்பா மரியாதை வேண்டிக் கிடக்கு?''

''இங்க இல்லைம்மா பாக்கறவங்களுக்கு...''

''அப்பா மத்தவங்களைப்பத்தி நமக்கு என்ன கவலைப்பா...''



''மத்தவங்களைப் பத்தி இல்லேம்மா உன் வாழ்க்கையைப் பத்தி எனக்கு கவலை உண்டும்மா... வருத்தமாக இருக்கும்மா.''

தேன்மொழி மௌனமாக இருக்கிறாள்.

''சொல்லும்மா என்ன பிரச்சினை?'' தேன்மொழி மௌனமாகிவிட,

''தேனு... சொல்லுடா கல்யாணம் வேணும்னா என் இஷ்டப்படி நடந்ததா நினைக்கலாம். ஆனா பண்ணிக் கறதுக்கு முன்னாலகூட உன்னை கேட்டேன் இல்லே. சாரிப்பான்னு நீ சொல்லி மறுத்திருந்தா இந்தக் கல் யாணம் நடந்திருக்காது. ஏம்மா நீ ஒத்துகிட்டு ஒரு மாதம் வாழ்ந்த வாழ்க்கை தானேம்மா. என்னம்மா ஆச்சு? அர்ஜுனுக்கு ஏதாவது கெட்டபழக்கம் இருக்கா?''

''சே...!... சே!... அதெல்லாம் இல்லேப்பா... அவர் ரொம்ப நல்லவர்ப்பா.''

''இல்லே உன்னை எங்கேயும் அழைச்சுகிட்டு போகலையா? வேலை வேலைன்னு இருந்திட்டானா?''

''இல்லைப்பா வெளியே கூட்டிகிட்டு போனாரு...''

''உனக்கு ஏதேனும் வாங்கி கீங்கி கொடுத்தானா?''

''நான் புடவைகூட எடுத்துட்டு போகலைப்பா. வெறும் கையோடதான் போனேன். அவர் எல்லாம் வாங்கி வச்சிருந்தார். ஒரு பொட்டி ஃபுல்லா எனக்கு வாங்கி வச்சிருந்தார்.''

''பின்னே என்னம்மா உனக்கு பிரச்சினை?'' கண்களில் வருத்தத்துடன் கேட்கிறார் பரசு.

''தெரியலைப்பா...''

''என்னம்மா சொல்றே?''

''எனக்கும் அவருக்கும் சரிவரும்ன்னு எனக்குத் தோணலைப்பா...''

''என்னம்மா முட்டாளாட்டம் பேசறே? சினிமாவிலே வர ஹீரோ மாதிரி இல்லேன்னு பீஃல் பண்றியா?''

தேன்மொழி அப்பா கண்டு பிடித்து விட்டாரே என்று அவரையே சற்று திகைப்புடன் பார்க்க,

''என்னம்மா முட்டாளா இருக்கே? சினிமாவிலே ஹீரோயிஸம் காட்டற ஒரே ஒரு ஹீரோவையாவது வீட்டிலே எப்படி இருப்பாங்கன்னு கேட்டுப்பாரு. சினிமா இல்லாததை இருப்பதாக காண்பிக்கிறது? அதையா நிஜம்னு நினைச்சுப்பே? இத்தனை அசடா நீ. ஒரு ஹீரோ பத்து பேரை அடிப்பான். எங்கேயாவது அடிக்க முடியுமா? அடிச்சாத்தான் பத்து பேரும் விழுந்திடுவாங்களா? உன் புருஷன் நிஜ ஹீரோம்மா. இத்தனை அசட்டுத்தனம் பண்ணியிருக்கே. உன்னை பத்தி தப்பா பேச அவனுக்கு மனசு வரலை. நீ வந்திட்டதை நினைச்சுதான் வருத்தப் படறானே தவிர உன்னைப் பத்தி ஒரு வார்த்தை கூட தப்பா பேசலே. அவன் அன்பை நினைச்சு பாரு. உனக்கு கொடுத்திருக்கிற சுதந்திரத்தை நினைச்சு பாரு எல்லோருடைய நினைவுகளும் ஒரே மாதிரியா இருக்காது. அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு வாழ கத்துக்கனும். அவனுக்கு சம்பாதிக்க தெரியலையா? இல்லை உன்னை வெளியிலே எங்கேயும் கூப்பிட்டுகிட்டு போகாமால் வீட்டிலேயே அடைச்சு வச்சிருக்கானா? உனக்கு



சாப்பிடக் கொடுக்காம இருக்கானா? இல்லை வார்த்தையாலே உன்னை வறுத்து எடுக்கிறானா? இல்லை உன்னை அடிச்சு நொறுக்குறானா? இதிலே ஏதாவது இருந்தாலும் நீ வந்தது சரின்னு சொல்வேன். கண்டதை நினைச்சுகிட்டு ஒரு நல்ல மனசை எப்படிம்மா நீ உடைப்பே?''

தேன்மொழி மௌனம் காக்கிறாள் ''ஒண்ணும் சொல்லத் தெரிலையா? அனுபவிக்கறதுலே இருக்கற சுகத்தைவிட கொடுக்கறதுலே இருக்கற சுகம்தான் அதிகம். அது தெரியுமா உனக்கு? பெண்டாட்டி புருஷனுக்கு, பிள்ளைக்கு, புருஷன் பெண்டாட்டிக்காக வாழும் போது தான் வாழ்க்கையே முழுமை பெறுதும்மா என்னமோ பாக்கறே? அப்பா இந்தக் காலத்தை சேர்ந்தவர். பெண் எல்லாத்தையும் விட்டுக் கொடுக்கனும்னு சொல்றார்னு நினைச்சுக் கறியா? உங்கம்மா நான் சாப்பிடாம சாப்பிட்டதே இல்லை. அது தெரியுமா உனக்கு? அவ முன்னாடி சாப்பிட்டா யாராவது அடிச்சுடுவாங்களா என்ன? எனக்கு கொடுத்துட்டு சாப்பிடறதிலேதான்மா அவளுக்குத் திருப்தி. கல்யாணம்ங்கறதே விட்டுக் கொடுத்தல் தாம்மா. முதல்ல நமக்காகத்தான் நாம வாழறோம். திருமணத்திற்கு அப்புறம்தான் அடுத்தவர்களுக்காக வாழ ஆரம்பிக்கிறோம். குழந்தை பிறந்தப்புறம் சுயநலம் கம்ப்ளீட்டா போயிடுது. குழந்தையின் நலன், குழந்தையின் விருப்பு, வெறுப்பு, குழந்தைக்கு வேண்டியது செய்தல் என்று ஒரு பெண் தன்னை கம்ப்ளீட்டா மாத்திக்கறா? ஏன் புருஷன் மட்டும் தியாகம் செய்யறதில்லையா? முதல்லே தனக்காக மட்டும் வாழுவான் அப்புறம் பொண்டாட்

டிக்கு பாதி இடத்தைக் கொடுப்பான். குழந்தை பிறந்தப் புறம் எல்லாமே மாறிடும். அதுவரைக்கும் வேலைக்கு ஒரு டிரஸ்ஸும், நல்ல சாப்பாடும் சாப்பிட்டுகிட்டு இருப்பவன் குழந்தை பிறந்த பிறகு தன் தேவைகளை எல்லாம் குறைச்சிக்கறான். எத்தனையோ ஆண்கள் மனைவி குழந்தைகளுக்கு தீபாவளி, பொங்கல் என்றதும் நல்ல துணிகளை எடுத்துக் கொடுத்துவிட்டு தனக்கு வெறும் பனியனும் துண்டும் எடுத்துக் கொள்வதில்லையா?

தான் கஷ்டப்பட்டு சம்பாதிப்பதை எல்லாம் பிள்ளைகளின் படிப்புக்காகவும், பெண்களின் திருமணத்துக்காகவும் செலவழித்து விடுவதில்லையா? அடுத்தவருக்காக வாழும்போது தாம்மா உண்மையான சுகம் கிடைக்கும். அது புரிஞ்சுக்க. எதை எதையோ நினைச்சுகிட்டு அவனை விட்டு வந்தது தப்பும்மா. நீ உடனே கிளம்பினாத்தான் எனக்கு சந்தோஷம்மா...''

தேன்மொழிக்கு பட்டென்று ஏதேனும் சொல்ல வேண்டும்போல இருக்கிறது. ஆனாலும் மௌனிக்கிறாள். 'எதையும் பேசக்கூடாது இப்போது கேட்பது போல் நடிப்போம். பிறகு பார்ப்போம்.' நினைத்துக் கொண்டவள் மௌனம் சாதிக்க, ''என்னடா எம்பேச்சுக் கேட்பியா? அப்பா உன் நல்லதுக்கு தான் சொல்லுவேன்.''

மௌனமாக அவள் தலையை அசைக்க,

''ரொம்ப தேங்க்ஸ்டா'' என்றவாறே அவள் தலையைத் தடவுகிறார். ''ஓ.கே.டா நாளைக்கு காலையில் ரெடியாக



இரு நானே கொண்டு போய் உன்னைவிட்டு விட்டு வந்துடறேன்.''

''அப்பா... என்னாலே அம்மாவையும், உங்களையும் பார்க்காம இருக்கவே முடியலே. தயவு செய்து ஒரு பத்து நாள் கழிச்சு போறேனே..''

கொஞ்ச நேரம் பெண்ணையே வாஞ்சையாக பார்த்தவர், ''ஓ.கே... நான் மாப்பிள்ளைக்கிட்டே சொல்லிடறேன்.'' என்றவாறு அர்ஜுனைத் தொடர்பு கொள்கிறார்.

''ஒண்ணும் பயப்படாதே எல்லாம் சரியாப் போச்சு. ஒரு பத்து நாள் அவளை வச்சுகிட்டு அனுப்பறேன்னு அவ அம்மா ஆசைப்படறா. நீ கவலைப்படாதே நானே கொண்டு வந்து விட்டுட்டுப் போறேன்.''

''தேங்க்ஸ் மாமா'' அர்ஜுன் குரல் சுரத்தில்லாமல் ஒலித்தது.

மெதுவாக கீழே இறங்கி வந்தவள் அம்மாவிடம் விஷயத்தை சொல்ல, ''நீ கவலைப்படாதேடி அந்த மகேஷைப் போய் பாரு. அவனுக்கும் உனக்கும் நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்.'' செல்வி சொல்ல மகளின் பின்னே வந்த பரசு இதை கேட்டு அதிர்ந்து போகிறார்.

## 22



பெண்கள் கெட்டுப்போவதற்கு முக்கால்வாசி அவர்களின் தாயார்தான் காரணம் என்று சும்மாவா

சொன்னார்கள். தவறான வழியில் தன் பெண் சென்றால் அதட்டி, மிரட்டி சரி செய்ய வேண்டாமா? தான் கஷ்டப் பட்டு பெண்ணை தன் வழிக்கு வரவழைத்தால் எல்லா வற்றையும் கெடுக்கிறாளே நினைத்தவுடனே முணுக்சென்று கோபம் வந்தது பரசுவுக்கு.

''ஏய் என்ன பேசறே? ஒருத்தனோடு கல்யாணம் ஆன வளை தப்பான வழியிலே போகச் சொல்லுறே. அறி வில்லே உனக்கு.'' ஒன்றும் பதில் பேசாமல் கணவனையே பார்க்க, ''என்னடி முறைக்கறே? பெண்ணை தூண்டி விட்டு எதையாவது செய்தே நம்ப மூன்று பேரும் கூண் டோடு மேலே போகவேண்டியதுதான் மறந்துடாதே.''

கொக்கரித்து விட்டு தன் அலுவலகத்திற்கு கிளம்பி விடுகிறார் எதுவும் பேசாமல் நின்ற மகளின் தலையைத் தடவுகிறாள் செல்வி.

''என்னம்மா பார்க்கறே? கவலைப்படாதே எல்லாம் சரியாயிடும். உனக்கு மகேஷை பிடிச்சிருக்கா?''

''தெரியலைம்மா...''

''என்னடி குழப்பறே? அவன் தினம் பேசறான். நீயும் பேசிகிட்டு இருக்கே.''

''அம்மா அவர் என் ஃபிரண்ட், நான் வருத்தமா இருக்கேன்னு தெரிஞ்சப்புறம் என் வருத்தத்தை போக்க வருகிறார். அலுவலகத்தில் லீவு இருக்கறதுனால என் கூட இருக்காங்க. அவ்வளவுதான்.''



''இருக்கட்டும்டி... வழித்துணையே வாழ்க்கைத் துணையாகக் கூடாதா?

''எனக்கு புரிலையம்மா... நீ சொல்றது நடக்கும்னு தெரியலைம்மா.''

''சரி உன்னை கேக்கறதுலே பிரயோசனமில்லே. எது கேட்டாலும் உனக்குத் தெரியாதுன்னு முழிப்பே. நான் சொல்றதை மட்டும் கேளு. அவன்கூட பேசினா கவலை மறந்து போகுது இல்லே. சந்தோஷமா இருக்கு இல்லே...''

தேன்மொழி மெதுவாக தலை ஆட்ட, ''அதுபோதும். நான் சொல்றதை மட்டும் கேளு. மகேஷ் வீட்டிலே என்ன நினைக்கிறாங்கன்னு தெரியும் - என் சொந்தம் தான். ஆனாலும் பேச முடியாது. உனக்கு கல்யாணம் ஆகாமல் இருந்திருந்தால் நானே போய் பேசி இருப்பேன். இப்ப எந்த முகத்தை வச்சிக்கிட்டு பேசுறது? உங்கப்பனின் பேச்சைக் கேட்டியே எத்தனை அவஸ்தை பார்த்தியா? ஏன் நான் அன்னிக்கு கத்தும்போது உனக்கு தப்பாதானே தோணிச்சு. இப்ப என்ன சொல்றே?''

அம்மாவின் பேச்சுக்கு எந்த பதிலையும் சொல்ல வில்லை தேன்மொழி.

''இதபாரு தேனு நாளைக்கு அப்பா ஆபீசுக்கு போனவுடன் மகேஷ் வீட்டுக்கு கிளம்பிட்டுப்போ. அவுங்க வீட்டுலே உனக்கு என்ன வரவேற்புன்னு தெரிஞ்சுக்க,

நல்லபடியா இருந்தா நானே போய் பேசறேன். அப் புறம் மேலே என்ன நடக்குதோ அதைப் பார்ப்போம்.

அடுத்த நாள் அம்மா சொன்னபடி தேன்மொழி பத்து மணிக்கு மகேஷின் வீட்டிற்கு கிளம்பி போகிறாள். மகேஷ் இந்த நேரத்தில் வீட்டில்தான் இருப்பான். இரண்டு மணிக்குதான் அவளை அழைத்துச் செல்ல வருவான்.

ஆட்டோவில் போய் இறங்கி, கேட்டைத்திறந்து உள்ளே செல்கிறாள். சொந்த மாமனின் வீடுதான். இருந்தாலும் இங்கெல்லாம் வந்ததில்லை. இதற்குள் எங்கிருந்தோ கூர்க்கா வந்து விடுகிறான். யாரோ என்று அதட்ட வாயெடுத்தவன் பிறகு குரலை குழைத்துக் கொண்டு "எப்பம்மா வந்தீங்க?" என்கிறான்.

"என்னை எப்படி தெரியும்" தேன்மொழி ஆச்சரியமாகக் கேட்க,

"ஐயாவோட நிறைய தடவை பார்த்திருக்கேம்மா" என்கிறான் கூர்க்கா.

"ஐயா இருக்காரா?"

"இருக்காரு உள்ளாற போங்க..."

விறு விறுவென்று உள்ளே சென்றவள், பேச்சுக் குரல் கேட்க, தயங்கி அங்கே நின்று விடுகிறாள்.

"என்னடா நினைச்சுகிட்டு இருக்கே? அந்த கல்யாணம் ஆன பொண்ணோட எப்படி சுத்துவே?"

"கல்யாணம் ஒழுங்காவா நடந்தது? அவ புருஷனை விட்டுவிட்டு வந்துட்டாப்பா?"



"என்னடா பேசறே நீ" அப்பா பாய்கிறார்.

"ஒழுங்கா நடந்ததோ, நடக்கலையோ கல்யாணம் கல்யாணம்தான். புரிஞ்சுக்க, இன்னொருத்தர் கூட வாழ்ந்துட்டு வந்தவகூட என்னடா உறவு?"

மகேஷ் மௌனம் சாதிக்க, "என்னடா லவ்வா "அப்பா கேட்க,

"அப்ப திவ்யா கதி. ஏம்பா மகேஷ் கூட வேலை செய்யற திவ்யாவை ரொம்ப லவ் பண்றேன்னு நீ சொன்னதுனாலேதானே நானும், அம்மாவும் அவங்க வீட்டுக்குப்போய் ஏற்பாடு செய்தோம். இப்ப கதையை என்ன மாத்தறே?"

"யார்மா மாத்தினாங்க? நான் லவ் பண்ணது திவ்யாவைத்தான் அவளைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்."

"பின்னே இந்த பொண்ணு கூட ஏன் சுத்தறே?"

"சும்மா மா அது கொஞ்சம் கவலையாயிருக்கு. மனசு சமாதானப் படுத்தணும்னு போறேன்..."

"ஏண்டா எது ஓசியா கிடைச்சாலும் எடுத்துப்பியா?"

"ஏம்மா அவளே எதைப் பத்தியும் கவலைப் படலே உங்களுக்கு என்ன?"

"ஆமாம்பா நீ சொல்றது கரெக்ட்டுதான். இந்த காலத்துலே பொண்ணுங்க ரொம்பதான் கெட்டு போச்சு."

"கல்யாணம் வரைக்கும் அதுகூட சுத்து, அப்புறம் நிறுத்திடு. அப்பதான் உனக்கு கெட்டப் பெயர் வராது."

சொன்ன மகேஷின் தந்தை கெக்கலிக்கிறார்.

''எங்க அக்கா புருஷன் எத்தனை வக்கணையா பேசுவான் தெரியுமா? எங்களையெல்லாம் அவன் மனுஷனாகவே மதிச்சதில்லை. அவுங்க பணக்காரங் கன்னு திமிரு. என்ன பெரிய பணம் இப்ப உன் திவ்யா இருக்காளே அவுங்க எத்தனை பணக்காரங்க தெரியுமா? ஆறு கார் வீட்டிலே இருக்கு. பெரிய பெரிய பங்களா நாலு இருக்காம். 'ஒரே பொண்ணு' உன் நிச்சயதார்த் தத்திற்கே கார் பிரசண்ட் பண்ணப் போறாங்க.'' சந் தோஷமாக சொல்லி சிரிக்கிறார் அவனின் தந்தை.

''தெரியும்பா. எனக்குத் தெரியாதா? அவளை லவ் பண்றவன் நானு. எல்லா விஷயமும் எனக்குத் தெரியும்.''

''ஏண்டா எனக்கு ஒண்ணு புரியவே இல்லே'' ஆரம் பிக்கிறாள் அம்மா. ''திவ்யா நீ சுத்தறியே அந்த தேனை விட வெள்ளை. தேனைவிட பணக்காரி. அவளை விட ரொம்ப நாகரீகமானவ. உனக்கு சரிசமமா படிச்சவ. தேனு மாதிரி ப்ளஸ் டூ வா என்ன? உன் கூடயே வேலை பாக்கறா? அவளை விரும்பி கல்யாணம் கட்டிக்கும் போது இந்த மாதிரி கழிசடையோட எப்படி சுத்தறே? ரெண்டாவது அது எச்ச பழம். உனக்கே அருவறுப்பா இல்லே...''

''என்னம்மா எல்லாத்தையும் பெரிசா எடுத்துக்கறே? அந்தப் பெண்ணே எதையும் லட்சியம் பண்ணலே வலிய வந்து சுத்துது. நான் அதை எனக்கு சாதகமாக எடுத்துகிட்டா என்ன தப்பு? நான் என்ன அது கூடயா



வாழப் போறேன்? கொஞ்ச நாள் ஜாலியா சுத்திட்டு விட்டுற வேண்டியதுதான்.''

கேட்டுக் கொண்டிருந்த தேன்மொழிக்கு திகைப்பான திகைப்பு. மகேஷா இப்படி பேசுகிறான்? எப்பவுமே நுனி நாக்கு ஆங்கிலத்தில் பேசுவான்.

'ஹனி, ஹாய்' என்பவன் சுத்த தமிழில் அதுவும் மட்டமான எண்ணங்களோடு பேசுகிறான். கடற்கரை மணலில் குழந்தை கட்டிய அழகான மணல் வீடு சடசடவென்று முறிந்து விழுந்ததைப் போன்ற ஒரு உணர்வு. மகேஷை எப்போதுமே மிகவும் உயர்ந்த மனிதன் என்று நினைத்துவிட்டு, இப்படி சின்னத் தனமாகப் பேசினதைக் கேட்டால் எரிச்சல்தான் வந்தது. அடுத்த நிமிடம் அங்கே நிற்காமல் விடுவிடுவென்று இறங்கிப் போகிறாள். வாட்ச்மேனை மறுபடியும் காண வில்லை. மனம் முழுவதும் கொந்தளித்துக் கொண் டிருந்தது.

'என்னை என்னவென்று நினைத்துக் கொண்டு இருக் கிறான். நான் என்ன தெருத் தெருவாக எல்லோருடனும் சுற்றுகிறவளா? நானா இவனை என் வீட்டிற்குக் கூப்பிட்டேன். தானே வந்து இழைந்து இழைந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு எப்படி எல்லாம் பேசுகிறான். போதும்... அப்பா சொல்வதெல்லாம் நிஜம்தான். இவர் களோடு மணிக்கணக்காக பேசினாலே அப்பாவிற்கு கோபம் வந்து விடும்.

அவர் சொன்னதெல்லாம் உண்மையாக அல்லவா ஆகிவிட்டது. ஓரளவிற்கு மேல் யாரோடும் பேசாதே

என்பார். எல்லாம் பலித்து விட்டதே.'' நினைச்சு, நினைச்சு ஆற்றாமையில் அழுகை பொத்துக் கொண்டு வந்தது. 'எத்தனை பெரிய அவமானம்' இவன் என்ன பெரிய துணை என்று நினைத்து எல்லோரையும் உதறித் தள்ள நினைத்தேன். கணவனின் எதிரே கூட மகேஷோடு வெளியே சென்றோம். கணவர் ஒரு வார்த்தைகூட தப்பாகப் பேசியதில்லை. திரும்பி வந்த போதும் தப்பாகப் பேசாமல் நன்றாகத்தானே பேசினான். தான் மஞ்சரி அக்கா வீட்டிற்குப் போய் விட்டு லேட்டாக வந்தபோது 'எங்கே போயிருந்தேன் என்று கேக்க மாட்டீர்களா?' என்று கேட்டதற்கு,

'உனக்கு பர்சனல் இல்லையா?' என்றல்லவா திருப்பிக் கேட்டான். எத்தனை பரந்த மனம். உயர்ந்த உள்ளம், தாமரைப் பூவை பறித்துக் கொடுக்கவில்லை என்றால் என்ன? உயர்ந்தவன், உயர்ந்தவன் தானே. பூவைப் பறித்துக் கொடுத்தவன், எத்தனை கீழ்த்தரமாகப் பேசு கிறான். இவனிடம் நான் என்ன தவறாக நடந்து விட் டேன். என் சுண்டு விரல் அவன் மேல் பட்டிருக்குமா? எப்போதும் வருபவன் ஆயிற்றே என்று அவனுடன் போனது எத்தனை பெரிய தவறாகப் போய் விட்டது. அர்ஜுனை திருமணம் புரிந்து கொண்டு இவனோடு சுற்றி விட்டு வரவில்லையா?

'கணவன் தன்னை தவறாக நினைக்கவே இல்லையே. மாறாக தனக்கு முழு சுதந்திரம் அளித்து, தன் தந்தையை யும் ஒன்றும் கேட்கக் கூடாது என்று சொன்னாரே.



'அர்ஜுனின் உயர்ந்த மனது புரிய ஏனோ அழுகை வந்தது. அவனுடைய சாதுவான நடவடிக்கைகளும், எல்லாவற்றையும் பொறுத்துப் போகும் தன்மையும் மனதை அலைக் கழித்தது. இருந்தாலும் ஏதோ ஒரு உறுத்தல், தான் பெற்றோருக்கு ஒரே பெண் தானே. மஞ்சரி அக்கா புருஷன் போல, தனக்கு புருஷனைப் பார்த்திருக்கக் கூடாதா? மஞ்சரி அக்கா புருஷனை நினைத்து எப்படி எல்லாம் உருகி இருப்பார். எத்தனை பெண்டாட்டி பெண்டாடி என்று உருகி இருந்தால் இப்படி எல்லாம் சொல்லத் தோன்றும்?

'திருமணமான புதிதில் பெண்கள் புருஷனைப் பற்றியே பேசிக் கொண்டு இருப்பார்கள். பிள்ளைகள் பிறந்ததும் புருஷனைப் பற்றி வாயைத் திறப்பதைக் கூட விட்டு விடுவார்கள். பிள்ளைகள் பெருமைதான் பெரிய பெருமையாக இருக்கும். தேன்மொழி எத்தனையோ வீடுகளில் இந்த நிகழ்வுகளைப் பார்த்திருக்கிறாள். ஆனால் மஞ்சரி அக்காவிற்குக் கட்டாயம் ஐம்பது வயது இருக்கலாம். இன்னும் புருஷனை நினைக்கும் போதே கண்களில் நெகிழ்வு, கண்ணீர், குரல் தழுதழுப்பு. இப்படி எல்லாம் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் புருஷன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்? அர்ஜுன் மிக மிக நல்லவன்தான். ஆனால் மஞ்சரி அக்காவின் புருஷன் போல் இருப்பானா என்பது சந்தேகம்தான். திருமணம் என்பது ஆயுட்காலம் தொடர்ந்து வருவது. தக்க துணை இருத்தல் வேண்டாமா?

'மகேஷின் விஷயத்தை அம்மாவிடம் சொன்னால் புரிந்து கொள்வாளா? ம்... ஹூம் போட்டாள். மகேஷைத்

திட்டுவாள். தன் தம்பியைத் திட்டுவாள். அவன் இப்படி ஆனதுக்கு காரணமே உங்க அப்பா தான் என்று தன் தந்தையைத் திட்டுவாள். யாரைத் திட்டி என்ன பிரயோஜனம்? தனக்குத் தீர்வு வேண்டுமே.

'மஞ்சரி அக்காவின் வீட்டிற்கு ஒருமுறை போய் வந்தால் என்ன? எல்லா குழப்பங்களும் விலகி விடும். அக்கா கட்டாயம் ஒரு வழி சொல்லுவார்கள். ஆனால் எப்படிப் போவது? இந்நிலையில் அப்பா தன்னை அனுப்புவது கடினம். அம்மாவும் ஒத்துக் கொள்ள மாட்டாள். எப்படிப் போவது?' யோசனையில் ஆழ்கிறாள்.

பேசாமல் சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுந்தால் என்ன? எதுவாக இருந்தாலும் அர்ஜுன் தன்னை மன்னித்து விடுவான். அந்த நம்பிக்கை இருக்கிறது. பேசாமல் அர்ஜுன் வீட்டிற்கே போகலாம். பிறகு... அதைப் பிறகு பார்த்துக் கொள்வோம்.'

அன்று தந்தை வந்தபோது, தான் கணவன் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று சொல்ல, பரசு ஆனந்தப்பட, செல்வி விசனப்பட்டு திடுக்கிட்டுப் போகிறாள்.

## 23



அர்ஜுன் செய்தி கேட்டதிலிருந்து மலர்ந்து காணப் பட்டான். முகம் விரிந்து, விரிந்து விகசித்தது. பாவம் தன்



பெண்டாட்டி மிக மிக நல்ல பெண் தான். மிகவும் சின்னப் பெண். அனுபவம் இல்லை. அதனால் ஏதோ தவறான நினைவில் மாட்டிக் கொண்டது. தான் செய்வது தவறு என்று தெரியவில்லை பாவம். தன் மனைவி வருவதை அம்மாதான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொல்லுகிறாள். ஆனந்தமாக இருக்கிறது. மாமாவும் வருவதற்கு முன் தொடர்பு கொள்ள, மனைவி பேச வில்லையே என்று ஆதங்கமாக இருந்தது.

இருந்தாலும் இப்படி செய்து விட்டோமே என்று மனைவிக்கு ஆதங்கமாக இருக்கும். அதனால்தான் பேசவில்லை. தன்னையே சமாதானப்படுத்திக் கொள் கிறான். மனைவிக்கு அரக்கு கலர், மஜந்தா நிறம், கிளிப் பச்சை நிறம் மிகவும் பிடித்த நிறங்கள். கிளிப் பச்சையில் மஜந்தா பார்டர் உள்ள சூடிதார். எல்லாவற்றிலும் குஜராத்தி எம்பிராய்டரி செய்யப்பட்டு பிரமாதமாக சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட சூடிதாரை மனைவிக்காக ஆசையாக வாங்குகிறான். மனைவிக்குப் பிடித்தமான இனிப்பு வகைகளை நான்கு கடைகளில் அலைந்து திரிந்து, சாப்பிட்டு பார்த்து வாங்கி வைக்கிறான்.

அவள் வருவதற்கு அரை மணி நேரம் முன்னதாகவே ஸ்டேஷனுக்குப் போய் இருப்பு கொள்ளாமல் தவித்துக் கொண்டு இருக்கிறான். மாமாவோடு, மனைவி இறங் கியதைப் பார்த்ததும் தான் மூச்சே வந்தது. நல்ல காலம் மனைவி எழுதிய கடிதத்தை தான் பெரிசு படுத்தவில்லை. அதில் உள்ளது மொத்தத்தையும் அம்மாவிடம் கூட

சொல்லவில்லை. ஏதோ கொஞ்சம் சொன்னான். சின்னஞ் சிறியவள் தானே. ஏதோ ஒரு மூடில் எழுதியிருக்கலாம். வந்து இறங்கிய மாமாவைப் பார்த்து பூரிப்பாகச் சிரிக்கிறான். பரசு மாமா கண்களை லேசாகச் சிமிட்டு கிறார். மகளுக்குத் தெரியாமல் மருமகனின் கையைப் பிடித்தவாறே "எல்லாம் சரியாயிடும். கவலைப்படாதீங்க" என்று மெதுவாக கிசுகிசுக்கிறார். மருமகனின் தோளை ஆதரவாகத் தட்டிக் கொடுக்கிறார். அர்ஜுன் மனை வியைப் பார்த்துப் பெரிதாக புன்னகைக்கிறான். எதுவும் நடவாதது போல் ஒரு பாவனை. ஒரு சிரிப்பு ஒரு சந்தோஷம்.

தேன்மொழியும் அவனைப் பார்த்து சற்று பலவீனமாக சிரிக்கிறாள். வெட்கப்படுகிறாள். இந்த வெட்கம் தவறு செய்து விட்டோம் என்பதனால் அல்ல. வேண்டாம் என்று தள்ளியவனுடன் மறுபடியும் சேர வேண்டியது போல் நடிக்க வேண்டியிருக்கறதே என்பதால் ஏற்பட்ட வெட்கம்.

"வா... தேன்மொழி. எப்படி இருக்கே? இளைச்சிட்ட மாதிரி இருக்கே." தாய் பேசுவது போல் பேசுகிறான். தேன்மொழிக்கு பழைய சிரிப்பு குமிழிடுகிறது. 'இவன் நல்லவன்தான். இருந்தாலும் வல்லவன் அல்ல. தான் என்றும் சினிமாவில் இருக்கும் ஹீரோக்களைப் போல் எல்லாம் எதிர்பார்க்கவில்லை. அப்பா சொல்வது போல் அந்த ஹீரோக்கள் கூட சினிமாவில் மட்டுமே அப்படி நடக்க முடியும். நடைமுறை உலகம் என்பது வேறு. ஆனால் தான் எதிர்பார்ப்பது இன்னும் துடிப்பாக,



ஆசையாக, பாசமாக, புதுமணத் தம்பதியின் நெருக்கத் தோடு...' பெருமூச்சு விடுகிறாள் தேன்மொழி. அப்பா விற்கு சொன்னால் புரியாது. மனது வேதனைப்பட்டது. இதற்கெல்லாம் ஒரே தீர்வு மஞ்சரி அக்கா.

மஞ்சரி அக்காவின் புருஷன் எப்பேற்பட்ட மனிதன். அவன் முகம் தெரியவில்லை ஒழிய, தனக்காகக் கூட ஸ்வீட், சேவரி எல்லாம் வாங்கி வந்திருக்கிறான். எதற்காக மஞ்சரி அக்காவின் தோழி என்பதற்காகத் தானே? இந்த மனது எத்தனை பேருக்கு வரும்? அவளின் புருஷனைப் பற்றி சொல்லச் சொல்ல கேட்பவர்களுக்கே ஆசையாக இருக்கிறது. அக்கா அனுபவசாலி. தனக்கு ஒரு நல்ல தீர்வை சொல்லுவாள்.

அன்று போய் சமைக்க வேண்டிய அவசியம் இல்லாமல் அர்ஜுன் எல்லாவற்றையும் ஓட்டலிலிருந்து தருவித்திருந்தான். அன்று சாப்பிட்டுவிட்டு பரசு கிளம்பியபோது "இருந்துட்டுப் போங்க மாமா" தடுத்து விட்டான்.

'நாளையாவது அப்பா கிளம்ப வேண்டுமே. அவர் பாட்டுக்கு இப்படியே இருந்து விட்டால் ஒன்றுமே செய்ய முடியாது.' தேன்மொழி தவிக்க ஆரம்பித்தாள். அடுத்த நாள் பரசு ஒன்பது மணிக்கு கிளம்ப, எட்டு மணிக்கே அர்ஜுன் ஓட்டலிலிருந்து டிபன் வாங்கி வந்து விட்டான்.

"என்ன மாப்பிள்ளை இது. அவ செய்யட்டுமே. தினம் ஓட்டல்ல சாப்பிட்டா கட்டுப்படியாகுமா என்ன?"

''இல்லை... பாவம் நேத்து தான் டிராவல் பண்ணிட்டு வந்திருக்கா. இனிமே அவ தானே செய்யப் போறா'' சிரித்தபடி அவன் கூற,

''பாத்தியா எப்பேறபட்ட பிள்ளை பாரு.'' மகளிடம் சொல்லிவிட்டு கிளம்புகிறார் பரசு.

தேன்மொழி நிம்மதி அடைகிறாள். 'அப்பா இருந் தால் கட்டாயம் எங்கேயும் போக முடியாது.' நல்ல வேளை கடவுள் காப்பாற்றினார்.' கணவன் அப்பாவை விட்டு வரப் போக,

''போப்பா... கல்யாணம் ஆன புதுசு வேலை எல்லாம் தூக்கிப் போடுங்க. மனைவி குடும்பம் குழந்தைன்னு வாழ்ந்தா அது பேரின்பம் இல்லையா? போங்க சீக்கிரம் கிளம்புங்க. அடுத்த வருஷம் ஒரு பேரனையோ, பேத்தியையோ பாக்க வேண்டாமா?'' சொல்லிவிட்டு பரசு சிரித்தபடி கிளம்ப அர்ஜுனின் கன்னங்கள் வெட்கத்தில் சிவந்து போயிற்று.

விறுவிறுவென்று வந்தவன் மனைவிக்கு பிடித்த ஜாதிப்பூவை வாங்குகிறான். லேசாகத் தனக்குள் சிரித்தபடி வீட்டை அடைந்தபோது மனைவி புதுப் புடவைக்கு மாறி வெளியே போவதற்குக் காத்திருப் பதைப் போலத் தோன்றியது. அவன் உற்சாகம் லேசாக வடிந்து போனது போல் தோன்றியது.

நான் ஏன் அவளைத் தப்பாக நினைக்க வேண்டும்? ஒரு வேளை இவளும் எனக்காகத்தான் காத்திருக் கிறாளோ?



இந்த நினைப்பு ஓடியவுடன் ''என்னம்மா வெளியே போக ரெடியாயிருக்கியா? இதோ நானும் ரெடி.'' கண்களை சிமிட்டிவிட்டு பேசுகிறான். ''இன்னிக்கு ஐயாவும் லீவு தான். இன்னிக்கு முழுக்க உங்கூடத்தான்'' அவன் மலர்ந்து சிரிக்க, ஒரு நிமிடம் யோசிக்கிறாள் தேன்மொழி.

''இன்று வேண்டாம் மஞ்சரி அக்காவை நாளைக்கு போய் பார்க்கலாம்.''

''ம்... உங்களுக்காகத்தான் காத்துட்டு இருக்கேன்.''

''கொஞ்சம் லேட்டாயிடுச்சு. இதோ அஞ்சு நிமிஷத் துலே ரெடியாயிடுவேன்.''

சொன்னதுபோல் அவன் சீக்கிரம் தயாராக, வேறு வழியின்றி கணவனுடன் புறப்படுகிறாள். வழக்கப்படி அவளையும் அழைத்துக் கொண்டு எல்லா இடத்தையும் பார்த்து விட்டு மதிய உணவையும் ஒரு ஹோட்டலில் முடித்துக் கொண்டு இரவு உணவையும் அங்கேயே முடித்துக் கொண்டு வரும் போதே மிக மிக லேட்டாகி விட்டது. தேன்மொழி தயக்கத்தை விட்டொழித்து அவனிடம் உள்ள வேற்றுமைகளை மறந்து, சற்று சகஜமாக பேசுகிறாள்.

அர்ஜுனுக்கு மிகவும் நன்றாகவே பொழுது போக மனைவி வேறு பழையபடி சிரித்துப் பேச, எல்லாமே மறந்து போனது. அன்று இரவு அவன் அறையிலேயே தேன்மொழி இருந்தாலும் அர்ஜுன் தயங்குகிறான்.

தங்களுக்குள் நல்ல உறவு ஒன்று ஏற்பட்டு இருககிறது. அது என்னாளும் கெடக்கூடாது என்று எண்ணுகிறாள்.

''தேன்மொழி நீ தாராளமா கட்டில்லே படுத்துக்க, உனக்கு இடைஞ்சலாக இருந்தால் நான் சோபாவிலேயே போய் படுக்கறேன்.''

''இல்லேங்க. அதெல்லாம் வேண்டாம். நீங்களும் இங்கேயே படுங்க.'' தேன்மொழி கூறவே கற்பனை சிறகடித்துப் பறந்தது.

அடுத்த நாள் எதுவும் நடவாதது போல் தேன்மொழி காலை டிபன் காபி முடித்து விட்டு, கணவனுக்கும் மதிய உணவு தயாரித்து விட்டு அப்போதே அதையும் கையில் கட்டிக் கொடுத்து அவன் சென்றபின் மஞ்சரி வீட்டிற்குக் கிளம்ப ஆயத்தமாகிறாள்.

பக்கத்து வீட்டில் கூட சாவி கொடுக்காமல், யாரிடமும் சொல்லாமல் கிளம்பி விடுகிறாள். நேரே மஞ்சரியின் வீட்டிற்குப் போய் கதவைத் தட்டியபோது எப்போதுமே வீட்டில் இருக்கும் வேலைக்காரிதான் வருகிறாள்.

''ஓ நீங்களா? ஊருக்குப் போயிருந்தீங்களா?'' கேட்டவள், ''அம்மா இல்லீங்களே'' என்கிறாள்.

''அம்மா எங்கே போயிருக்காங்க?''

''தெரியலீங்களே.''

''ஒருவேளை அவுங்க வீட்டுக்காரரோட எங்கேயாவது போயிருக்காங்களா?''

''வீட்டுக்காரரா?''

''என்னம்மா எப்படியோ பேசற? அவுங்க புருஷன். அவர் எங்கேயாவது அழைச்சகிட்டுப் போயிருக்காரா?''



''அப்படி யாரும் கிடையாதும்மா. நான் இவங்க வீட்டிலே பத்து வருஷமா வேலை செய்யறேன். ஒரு புருஷனைக்கூட இந்த வீட்டிலே கண்டதில்லே.''

## 24



தேன்மொழிக்கு திக்கென்றது. 'என்ன பேசுகிறாள் இவள். ஒரு வேளை அவர் அலுவலகத்தில் இருந்து இரவு வருவதனால் இவள் பார்த்திருக்க மாட்டாளோ. எது எப்படி இருந்தாலும் இப்போ வெளியே போயிருக்கும் போது, எங்கே போயிருக்கிறாள் என்று கூடத் தெரியாது.'

''ஏம்மா இந்த வீட்டிலே வேலை செய்யறே? எங்கே போறேன், வரேன்னு கூடவா சொல்ல மாட்டாங்க.''

''ம்.. ஹூம்... அது எதுவும் சொல்லாதே. தான் தான் உலகத்திலே உசத்தின்னு நினைப்பு. எது எடு.. அடுத்தவங்களை மட்டம் தட்டும். உப்புக்குப் பெறாத பொம்பளை'' என்று கடுகடுத்தவள்,

''சரி கிளம்புங்க. என் வேலையை முடிச்சிட்டு நான் கிளம்பணும்'' என்றவள் கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாகத் துரத்த, 'மஞ்சரி வந்தால் இவளைப் பற்றிக் கட்டாயம் சொல்ல வேண்டும்' என்று நினைத்த தேன்மொழி பக்கத்து வீட்டு மாமி நின்று கொண்டிருப்பதைப் பார்க்கிறாள்.

சில நாட்களில் மஞ்சரியுடன் அவள் பேசுவதையும் பார்த்திருக்கிறாள் தேன்மொழி.

மெதுவாக அவள் அருகில் போய் புன்னகைக்க,

''என்ன மஞ்சரி இல்லையா?'' என்கிறாள் மாமி,

தன் மனதில் ஏற்பட்ட அதிர்ச்சியை பகிர்ந்து கொள்கிறாள் தேன்மொழி.

''மஞ்சரி அக்கா இல்லையா?''

''ஏன் வேலைக்காரி சொல்லலே?''

''இல்லீங்க. அது அக்காவை கன்னா பின்னான்னு திட்டுது. அவுங்க வீட்டுக்காரரோட வெளியே போயிருக் காங்களான்னு கேட்டா? இங்கே அது மாதிரி யாரும் இல்லேங்கறா?''

''அவ நிஜத்தைதான் சொன்னா?'' மாமி சொல்ல,

''என்ன சொல்லறீங்க? அவுங்க வீட்டுக்காரர் வாங் கிட்டு வந்ததா தினமும் ஸ்வீட், காபி எல்லாமே தந்தாங் களே.''

''மஞ்சரிக்கு வீட்டுக்காரரே கிடையாது.''

''என்ன மாமி சொல்லறீங்க.''

''நான் முப்பது வருஷமா இங்கே இருக்கேன். நாங்க கட்டினபோது தான் மஞ்சரியும் வீடு கட்டிட்டு வந்தா. ஒத்தையிலே தான் வந்தா. கல்யாணமாகி மூணு மாசத் துலே புருஷன் அவகூட இருக்க மாட்டேன்னு டைவர்ஸ் வாங்கிட்டானாம்? புருஷன் பெரிய பணக்காரன். நிறைய



துட்டை கொடுத்துட்டான். அதை வச்சுகிட்டுதான் இங்கே தனியா வந்துட்டா. பிறந்த வீட்டிலேயும் ஒத்துப் போகலே. அப்பலேந்து அவளுக்கு வேலைக்காரிதான் துணை.''

''என்ன சொல்லறீங்க மாமி? புருஷன் வாங்கிட்டு வந்துருக்காருன்னு சொல்வாங்களே. எந்த சாமான் வாங்கினாலும் ரொம்ப அருமையா இருக்கும். எல்லாமே புருஷன் வாங்கிட்டு வந்தாருன்னுதான் சொல்வாங்க.''

''நீ சொல்றது வாஸ்தவம் தான். இந்த பக்கத்து வீடுகளைத் தவிர வேறு யாருக்குமே அவளுக்கு புருஷன் இல்லைங்கறதே தெரியாது. இந்த உலகத்துலே தனியா இருக்கறது கஷ்டம்தாம்மா. ஒரு ஸேப்டிக்கு புருஷன் இருக்கற மாதிரி தான் காண்பிச்சிருப்பா.''

''அப்படியா'' தேன்மொழிக்கு ஏதோ ஒன்று உரைத்தது.

''தன்னிடம் புருஷன் இருக்காருன்னு சொன்னது சேப்டிக்கு அல்ல. அதுக்கும் மேலே ஏதோ ஒரு காரணம், நினைத்தாள், தேன்மொழி.

''கேக்கறேன்னு தப்பா நினைக்காதீங்க. பழகறதுக்கு தங்கமானவங்களா இருக்காங்க. இவுங்களை ஏன் புருஷன் விடணும்?''

மாமி இவளையே பாவமாகப் பார்க்கிறாள்.

''உங்களுக்கு சின்ன வயசு. அனுபவம் பத்தாது'' என்று சிரித்தவள்,

''அவகூட பழகினேன்னு சொல்றியே, அவளைப் பத்தி நீ புரிஞ்சுக்கலையா? எல்லாமே வாய்தான் காரணம். நாக்குலேந்து வர சொல் ரொம்ப ஆபத்தானதுன்னுதான் கடவுள் முப்பத்திரண்டு பற்களுக்கு நடுவிலே நாக்கை சிறை வச்சான். அப்படியும் நமக்கு எங்கே புரியுது? இல்லாத புருஷனை புகழ்ந்து தள்ளிடுவா. குழந்தை இருக்கறவங்க கிட்டே இல்லாத தன் குழந்தையைப் பத்தி சகட்டு மேனிக்கு புகழ்ந்து தள்ளிடுவா. ஐயோ நமக்கு இப்படி ஒரு பிள்ளை இல்லையேன்னு தோணும்.'' சொல்லிவிட்டு மாமி சிரிக்க,

''ஆனா மாமி ஏன் அப்படிச் சொல்லணும்?'' தேன் மொழி கேட்க,

''என்னம்மா ஒண்ணும் தெரியாத பொண்ணா இருக்கே. திமிர்தான். கர்வம்தான். தான் பெரிய ஒசத்தி நீ மட்டம்னு காமிக்கணும்ங்கற கொழுப்பு. விஷயம் தெரிஞ்ச யாருமே இது கிட்டே பேச்சே கொடுக்க மாட்டாங்க. பத்து நிமிஷம் பேசினாலும் கேட்டவங்களுக்கு ஐயோன்னு ஆயிடும். நாம வாழறது வாழ்க்கையான்னு தோன்றும். நாங்கதான் உலகத்துலே இருக்கறதுக்கு லாயக்கானவங்கன்ற மாதிரி அந்த பொம்பளை பேசும். அப்பப்பா! பக்கத்துலேதானே இருக்கோம். பேச்சே வச்சுக்க மாட்டோம்.''

தேன்மொழிக்கு எல்லாமே புரிந்தது. 'தான் எத்தனை பெரிய முட்டாள். தனக்கு விவாகரத்து கொடு என்று கேட்கும் தன் மேல் அன்பைப் பொழியும் கணவன். தான்



மட்டுமே உலகம் என்று வாழும் துணைவன். அவனைப் போய் வேண்டாமென்று சொல்லி அவன் மனதைக் கஷ்டப்படுத்திய தனக்கு விமோசனமே கிடையாது. மஞ்சரி சொன்னதைக் கேட்டு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு எப்படி எல்லாம் நடந்து கொண்டோம். சே! இல்லாத புருஷனின் புகழ் பாட, அதை நிஜம் என்று நினைத்து சே!'

அதற்கு மேல் பதில் பேசாமல் விடுவிடுவென்று வீட்டிற்குப் போகிறாள். முதல் முதலில் தனக்கு பிடித்த நிறம் என்று மஜந்தா நிறத்தில் மஞ்சள் கலர் சம்கி வைத்த டாப்ஸ் மஞ்சள் பைஜாமா மஞ்சள் துப்பட்டா என்று அவன் ஆசையாக வாங்கி வந்தது. தேன்மொழிக்கு மஞ்சள் நிறம் அத்தனை பிடிக்காது. போதாத குறைக்கு மஞ்சரி சொல்லிக் கொடுத்ததன் விளைவு. அதைக் கட்டாமல் தூக்கிப் போட்டாள். இன்று முகத்தைக் கழுவி ஆசையாக அதை எடுத்துப் போட்டுக் கொண்டு, மஜந்தாவும் மஞ்சளும் கலந்த கண்ணாடி வளையல்கள். காதில் மஜந்தா நிறத்தில் ஒரு தோடு, கழுத்தில் மஞ்சள் கயிரில் மஜந்தா பதக்கம் வைத்த கழுத்தணி என்று அணிந்து கொண்டு ஒப்பனைகள் செய்து கொண்டு கணவனின் வரவிற்காகக் காத்திருந்தாள் ஐந்து மணி அடித்ததும் அர்ஜுன் டாணென்று வந்து நிற்கிறான். மனைவியைப் பார்த்ததும் அசந்து போகிறான். இந்த நிறமே பிடிக்காது என்றவள் இதை எப்படிக் கட்டிக் கொண்டாள்.

அவனுக்கு டிபன், காபி எடுத்து வைத்தவள், ''எங்கே யாவது போயிட்டு வரலாமா?'' கொஞ்சலாகக் கேட் கிறாள்.

''கட்டாயம்...'' என்றவன் ''இத பாரு'' புதுப்பட டிக்கட்டைக் காண்பிக்க,

''முன்னாடியே வாங்கிட்டு வந்துட்டீங்களா? தேங்க்யூ.'' என்கிறாள்.

''நாம படம் பாத்துட்டு ஹோட்டல்லே சாப்பிட்டு வந்துடுவோம்.''

''வேணாங்க. ராத்திரிக்கு எல்லாம் சமைச்சு வச்சுட்டேன். வந்து சாப்பிட்டுக்கலாம்.''

அவனும் கிளம்ப ஆயத்தமானபோது அழைப்பு மணி அழுத்த ஓடிப் போய் கதவைத் திறக்கிறான் அர்ஜுன். அங்கே மகேஷ் சிரித்தபடி நிற்க வெறிக்கிறான் அர்ஜுன்.

'ஒரு வேளை தன் பெண்டாட்டி இவனோடு செல்லத் தான் இப்படி எல்லாம் டிரஸ் செய்து கொண்டிருக் கிறாளோ' நினைத்தவன்.

''வாங்க'' என்றவாறு தேன்மொழிக்குக் குரல் கொடுக்கிறான்.

ஒவ்வொரு அறையாக கூட்டிக் கொண்டு வந்தவள் கணவன் கூப்பிட்டதும் ஓடி வந்து பார்க்க, அங்கே மகேஷ் நிற்க தேன்மொழியின் முகம் கூம்பிப் போனது.



''ஹாய் ஹனி. எங்கே கிளம்பிட்டிருக்கே? எனக்கு பிடிச்ச எக்ஸிபிஷனுக்கு போகலாம்னு நினைச்சு இருக்கேன் வர்றியா'' என்கிறான்.

''தேன்மொழி நீ போறதுன்னா கிளம்பு. நாம இன்னொரு நாளைக்கு கிளம்பலாம்'' கணவன் கூற,

தேன்மொழியின் முகத்தில் சினம் ஏறுகிறது.

''இன்னும் லீவு முடியலையா உங்களுக்கு? அதுதான் யார் கிடைப்பாங்கன்னு பின்னாலேயே அலைஞ்சுகிட்டு வர்றீங்களா?''

மகேஷின் முகம் மாறுகிறது. ''ஹனி'' அவன் கூப்பிட, ''ஹனியுமாச்சு, கனியுமாச்சு. கிளம்பறீங்களா'' சொல்லி அவன் வாசல்படியில் நிற்கும்போது படாரென்று தள்ளி கதவைச் சாத்துகிறாள்.

அர்ஜுனின் முகம் பளபளக்கிறது. ''என்னம்மா.. ஆயிரம் இருந்தாலும் மாமா பையன். எதுக்கு இப்படிப் பிஹேவ் பண்றே?''

''த பாருங்க மாமா பையன்னா அந்த லிமிட்டோட இருக்கணும். இவனுக்கு இங்க என்ன வேலை? நானே முக்கியமா உங்களோட வெளியே போகணும்னு தவிச்சுகிட்டு இருக்கேன். இவன் வேற'' அவள் கூறக் கூற மலர்ந்து போய் சிரிக்கிறான் அர்ஜுன்.

''ஏம்மா நான் உன் வாழ்க்கையிலே அத்தனை முக்கியமானவனா ஆயிட்டேனா?''

''என்னை மன்னிச்சிடுங்க. நீங்கதான் எனக்கு எல்லாம். அதை இப்ப உணர்ந்துட்டேன். சிறு பிள்ளைத்தனமா நடந்து கிட்டதையும் மறந்திடுங்க.'' அவள் கூற,

''சிறுபிள்ளைத்தனமா இங்கே கிஸ் அடிச்சியே அதையும் மறந்துடணுமா?''

''சீ...'' என்றவாறே வெட்கிச் சிரிக்கிறாள் தேன்மொழி.

வாழ்க்கையை உணர்ந்த சிரிப்பு அது.

R 2.16
6/3/06

கன்னிமாரா (மாநில (ம) மைய) நூலகம்
-6 மார 2015
சென்னை-600 008